# மருந்து செய்
# இயலும் கலையும்

ஆசிரியர்
தேவ ஆசீர்வாதம் சாமுவேல்
எம்.டி.[சித்தா]

வெளியீடு:
இந்திய மருத்துவம்
மற்றும்
ஹோமியோபதி துறை
சென்னை.

# மருந்துசெய் இயலும் கலையும்

ஆசிரியர் :
மருத்துவர். தேவ ஆசீர்வாதம் சாமுவேல்
எம். டி. (சித்தா)

இந்திய மருத்துவம் – ஓமியோபதித்துறை
சென்னை – 600106
2016

## நூலடைவு

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மருந்துசெய் இயலும் கலையும் |
| ஆசிரியர் | : | மருத்துவர். தேவ ஆசிர்வாதம் சாமுவேல் எம்.டி. (சித்தா) |
| வெளியிட்டோர் | : | இந்திய மருத்துவம் – ஓமியோபதித் துறை, சென்னை – 600 106. |
| பதிப்பு ஆண்டு | : | முதல் பதிவு : 1992<br>மறு அச்சு : 2014<br>மறு அச்சு : 2016 |
| பதிப்புரிமை | : | © தமிழ்நாட்டரசு |
| நூல் வடிவம் | : | 1/8 |
| அச்சுத் தாள் | : | 70 GSM Maplitho – வெள்ளை |
| அட்டைக் கட்டுமானம் | : | கடின அட்டை |
| மொத்த பக்கங்கள் | : | vi + 346 |
| பிரதிகள் | : | 1000 |
| நூலின் விலை | : | ₹ 110/- |
| அச்சிட்டோர் | : | |

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அளவை | 1 - 9 |
| தற்கால மெட்ரிக் அளவைகள் | 10 |
| அளவை மாற்ற விதிகள் | 11 - 12 |
| மருந்து | 12 - 25 |
| மருந்து செய் நிலையம் | 25 |
| மருந்து செய்யப் பயன்படும் கலங்களும் கருவிகளும் | 33 |
| பொதுக் கருவிகள் | 33 - 54 |
| சிறப்புக் கருவிகள் | 55 - 56 |
| மருந்து செய்முறைகள் | 66 - 69 |
| சாறு | 70 - 87 |
| கியாழம் | 91 - 99 |
| கற்கம் | 99 - 101 |
| உட்களி | 102 |
| அடை | 103 |
| பொடி | 103 - 115 |
| பிட்டு | 116 |
| வடகம் | 116 - 122 |
| வெண்ணெய | 123 - 125 |
| மணப்பாகு | 126 - 130 |
| நெய் | 131 - 133 |
| சுவைப்பு (இரசாயனம்) | 133 - 135 |
| இளகம் | 135 - 143 |
| எண்ணெய் (தைலம்) | 143 - 164 |
| மாத்திரை | 165 - 175 |
| கடுகு | 176 |
| பக்குவம் | 176 |
| தேனூறல் | 176 |
| ஓமத்தீநீர் | 179 |
| சாராயம் | 180 |
| மெழுகு | 181 - 189 |
| குழம்பு | 190 - 192 |
| பதங்கம் | 192 - 194 |

| | |
|---|---|
| செந்தூரம் | 194 - 214 |
| பற்பம் | 214 - 229 |
| கட்டு | 229 - 233 |
| களங்கு | 233 - 234 |
| சுண்ணம் | 234 - 235 |
| கற்பம் | 235 - 237 |
| சத்து | 237 |
| புது மருந்துகள் | 238 |
| பொடிவகை | 238 - 239 |
| நெய்வகை | 240 |
| பற்பம் | 241 |
| கரைசல் வகை, காடிக்கார நீர் | 242 |
| உப்புநீர் | 243 |
| தேன்வகை | 243 - 245 |
| பற்பசை | 245 - 246 |
| களிம்பு | 246 - 249 |
| புறப்பயன்பொடி | 249 |
| முப்பூ | 250 |
| வாத-வைத்திய முப்பூ | 251 |
| ஞான - யோக முப்பூ | 259 |
| முப்பூ செய்முறை | 261 |
| பூநீற்றின் பிறபபு | 264 |
| செயற்கைப் பூநீறு | 268 |
| முப்பூவின் கூட்டுப் பொருளகள் | 269 |
| முப்பூ செய்தல் ஆயவு | 271 |
| வைத்திய முப்பூ (எளிய முறை) | 281 |
| சரக்குத் தூய்மை செய்முறைகள் | 283 - 299 |
| மருந்தாளுமுறை | 300 |
| மருந்துச் சீட்டு எழுதுமுறை | 301 - 304 |
| மருந்தினளவு. | 304 - 321 |
| மருந்தூட்டும் புறவழிகள் | 322 |
| கொத்திக்கட்டலும் கீறிக்கட்டலும் | 323 - 326 |
| மருந்துகளின் கேடுகள் | 326 - 327 |
| மருந்தூட்டுங்கால் ஒழுக வேண்டியன | 327 - 329 |
| நாட்டு மருத்துவங்களுக்குள்ள தற்கால இடர்ப்பாடுகள் | 329 - 337 |
| சரக்குக் கூட்டுப்பெயர் விளக்கம் | 338 - 341 |

மோகன் பியாரே, இ.ஆ.ப.,
கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர்,
இந்திய மருத்துவம் (ம) ஓமியோபதித் துறை,
சென்னை - 106.

# பதிப்புரை

அரிய மருத்துவமாய் தொன்மை மிகு மருத்துவமாய் தமிழ் மருத்துவமாய் ஏடுகளில் வாழும் ஏற்றமிகு மருத்துவம் சித்த மருத்துவம் சரியான பயன்பாடும் முறையான மருந்துச் செடிகளின் அறிவு இல்லாமையும் பிறர்க்குணர்த்தாது தமக்குள் தாமே புதைத்துவிட்டமையும் இம்மருத்துவத்தின் வளர்ச்சியைப் பெரிதும் குலைத்துவிட்டது.

இந்திய- முறையல்லாத பிற மருத்துவர்களுக்கு நோயறிதலும் அதற்கான மருந்தையுணர்தலும் மட்டுமே போதுமானதாக அமைகிறது ஆனால் சித்த மருத்துவர்கள் மருந்தை மட்டுமல்லாது மருந்து செய்முறையையும் முழுமையாக அறிய வேண்டியவராகின்றனர். அந்த மருந்து செய்யும் முறையை ஒரு கலையாக்கி விளக்கமாக இந்நூல் உங்களுக்குத் தருகிறது. மிகச சாதாரண செயதிகளிலிருந்து அதிநுட்பம் வாய்ந்த கருத்துகள் உடபட ஒன்றுவிடாமல தொகுத்து பகுத்து நிரல்பட நமக்கு அளித்துள்ளார் மரு. **தேவ ஆசீர்வாதம் சாமுவேல்** எம்.டி (சித்தா) அவர்கள்.

இந்நூல் பல கோணங்களிலும் சிநதித்து திறம்பட உருவாக்கப்பட்டுளளது. எனவேதான் இந்நூல மாணாக்கர், மருத்துவர், மருந்து செய்வோர, மருநது செய்கலையை அறிய விழைவோர் ஆகிய அனைவருக்கும் பயன்படும் நூலாய் அமைகிறது. ஒரு சிறந்த கையேடான இந்நூல் சிதத மருத்துவத்தைப் பயன்படுத்தும் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டிய நூல் என்பதில் மிகையில்லை

ஆசிரியர் குறிப்பிட்ட பொருள் பற்றிய விளக்கம் தர விழையும் போது மிகத் துல்லியமாகவும் பொருத்தமாகவும் மிகசசாதாரண குறிப்புகளோடு சேர்த்து கூறுவது சிறப்பாக உள்ளது இவா பயன்படுத்தும் பல சொறகள் புதியனவாக இருப்பினும் பொருத்தமாக அமைகிறது. இத்துணை சிறப்புகள் மிகுந்த இந்நூலை வெளியிடுவதில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை மகிழ்ச்சியடைகிறது: பெருமிதம் கொள்கிறது

இப்படி ஒரு அரியநூலை படைத்தளிதத ஆசிரியர் மரு.**தேவ. ஆசீர்வாதம் சாமுவேல்** எம்.டி (சித்தா) அவர்களுக்கு எங்கள் நன்றி என்றென்றும் உரியது.

சித்த மருத்துவத்துறையின் வளர்ச்சிக்கும் இந்நூற் பணிக்கும் உறுதுணையாய் நிற்கும் இணை இயக்குநர் மரு.பி.பார்த்திபன் (சித்தா) அவர்கட்கு எங்கள் நன்றி உரித்தாகுக. இந்நூற்பணி சிறக்க பல்வேறு படிகளிலும் தொடர்ந்து உதவி புரிந்துவரும் அரசு அலுவலர் அனைவர்க்கும் நன்றி.

மோகன் பியாரே, இ.ஆ.ப.,
கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர்.

# அளவை

எது ஒருபொருளை அளந்தறிகிறதோ அஃது அளவை எனப்படும். இது பொருட்களின் சரிநுட்பமான தன்மையைக் கணிப்பதற்காம்'. அளவையாவது நிறுத்தளத்தல், பெய்தளத்தல், சார்த்தியளத்தல், நீட்டியளத்தல், தெறித்தளத்தல், தேங்க முகத்தளத்தல், எண்ணியளத்தல் என ஏழு வகையாகும். மேலும் எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல், தெறித்தல் என ஐவகையாய்க் கூறுவதுமுண்டு. பின்னும் காண்டல், கருதல், உரை போன்ற பிற அளவைகளும் உண்டு. இவை மொத்தம் பத்து.

அவை

"காண்டல் கருதல் உவமம் ஆகமம்
மாண்டய அருத்தா பத்தியோ(டு) இயல்பு
ஐதிகம் அபாவம் மீட்சி ஒழிபறிவு
எய்தி உண்டாம்நெறி என்றிவை தம்மால்
பொருளின் உண்மை பலன்கொளல் வேண்டும்"

என்று மணிமேகலையில் கூறப்பெறுகின்றன. பலதிறத்துடைய சமயக் கணக்கர் இப்பத்தினுள் சிலவற்றையே முக்கியமெனக் கொண்டனர். அளவைகள் மூன்றெனக் கொண்டவர் சித்தாந்திகள். இவர் காண்டல், கருதல், உரை ஆகியவை மூன்றனுள்ளும் பிறயாவும் அடங்கும் என்றனர். இம்மூன்றோடு அருத்தா பத்தியைச் சேர்த்து நான்கென பௌத்தர்கள் கொண்டனர். இந்நான்கொடு இன்மை, உவமை இரண்டனுங்கூட்டி சைவரும் இவ்வாறொடு ஒழிபு, உண்மை, உலகுரை, இயல்பு ஆய நான்கும் சேர்த்து வைஷ்ணவரும் கொண்டனர். வேதாந்திகள் பிரத்தியட்சம், அனுமானம், உவமானம், ஆகமம், அருத்தாபத்தி ஐதீகம், சம்பவம் எனும் எட்டினையும் அஷ்டப் பிரமாணம் என்று கூறினர்.

இவ்வளவை பற்றி ஓரளவு அனைவரும் தெரிந்திருத்தல் வேண்டும் என்பதால் அவை ஈண்டு சுருக்கமாகக் கூறப் பெறுகின்றன.

**1. காண்டல் அளவை** (காட்சி, புலனறிவு, பிரத்தியட்சம் Perception) என்பது ஐம்பொறிவாயிலாக அதனதன் புலன்களால் நேரேயறிவதாம். 'மருவில் காட்சி ஐவகையாகும்' என மணிமேகலை இதை ஐந்தாகக் கூறுகிறது. அவை கண்ணால் வண்ண உரு காணல், செவியால் ஓசை கேட்டல், மூக்கால் நாற்றம் உணர்தல், நாவால் சுவை உண்ணல், மெய்யால் உணரல் என்பன.

சித்தாந்தம் இக்காட்சியளவையை நான்கென வகுத்துக் கூறும். அவை -

1 வாயிற் காட்சி - இது பொதுக்காட்சியாம் நிருவிகற்பம். இதனை இந்திரியப் பிரத்தியட்சம் எனலாம். ஐந்து பொறிகளாலும் அறியப்படுவன இதனுள் அடங்கும்.

2 மானதக் காட்சி - இது சவிகற்பம். ஐந்து இந்திரியங்களாலும் அறிந்தனவற்றை மனதின்பால் இருத்தி பெயர், சாதி, குணம், தொழில், உடைமை (தேசம், இடம்) எனும் ஐந்தால் திரிபு, ஐயம் நீக்கி அறிவதாம்.

3. தன்வேதனைக் காட்சி - மேற்கண்டவாறு அறிந்தவற்றால் ஏற்படும் இன்ப, துன்ப நுகர்ச்சி இதனுள் அடங்கும்.

4. யோகக் காட்சி - மும்மலமும் நீங்கினார் யோகநிலையில் பொதுவாய் மக்கள் காணமாட்டாதவற்றையும், தொலைவிற் காணலையும் குறிக்கும்.

வேதாந்தம் பிரத்தியட்ச அளவையை சந்தேகப் பிரத்தியட்சம், விபரீதப் பிரத்தியட்சம், யதார்த்தப் பிரத்தியட்சம் என மூன்றாய்க் கூறும்.

காண்டல் அளவை சரியாய் அமைய உயிர், ஐம்பொறி, புலன், மனம் ஆகியவை நன்னிலையில் இருத்தலும் ஒளி (ஞாயிறு, திங்கள், தீ) யின் துணையும் வேண்டும். பொருளும் இடமும் பழுதின்றியிருத்தலும் தப்பெண்ணம், திரிபு, ஐயம், பொருந்தாமை, இசைவன்மை, முரண் ஆகிய இழுக்குகள்

இல்லாமல் இருத்தலும் வேண்டும். ஒரு பொருளின் பெயர், சாதி, குணம், தொழில், தேசம் இவற்றால் சிறப்பறிந்து அறிய வேண்டும்.

2. கருத்து அளவை (கருத்து, அனுமானம், உய்த்தறிவு (Inference) என்பது பொருளினின்றும் நீங்காத காரண காரியங்களைக் கொண்டு அப்பொருளை அறிவதாகும்.

"கருத்தளவாவது......மூவகையுற்றது பொதுவெச்சம் முதலாம் என, மணிமேகலை இதனை மூன்று வகையாகக் கூறுகிறது. அவையாவன

பொது - உடன் நிகழ்வு - (Inference by Co-existance)

எச்சம் - பயன் (Inference by effect)

காரிய அனுமானம் - வெள்ளங்கண்டு மழை பெய்துள்ளதெனல் போலவாம்.

முதல் - முதல் (Inference by Cause)

காரண அனுமானம். முகில் கருக்கொண்டது கண்டு மழை பெய்யுமெனல் போலவாம்.

சித்தாந்தம் கருதல் தன்பொருட்டும், பிறர் பொருட்டுமென இருவகைத்தென்றும் வேதாந்தம் அது பிரதிக்கினை, ஏது, திருஷ்டாந்தம் என மூவகைத்தெனவும் கூறும்.

இவ்வளவையான் காரண காரியங்கள், இறந்த, நிகழ், எதிரென்ற முக்காலத்துள் எதனில் நிகழ்ந்தாலும் காணப்படாத ஒன்றைக் காணப்படும் அதனொடு தொடர்புடைய ஒன்றின் வாயிலாகத் தப்பெண்ணத்திற் கிடமின்றி உய்த்துணரலாம். இதனை "கண்டார் பொருளால் கண்டிலதுணர்த்தல்" என மேகலை கூறுகிறது.

3. ஆகம அளவை (உரை, மேற்கோள், வேதம், (authority) என்பது பண்டு முன்னோரான ஞானிகள் கூறியவற்றை அவர் எதை எப்படிக் கூறினாலும் அது அவ்வாறேயென ஏற்றலாம், "ஆகம அளவை அறிவுநூலார் போக புவனம் உண்டெனப் புலம் கொளல்" என்று மணிமேகலை இவ்வளவைக்கு விளக்கம் தருகிறது.

சித்தாந்தம் இவ்வளவையை மந்திரக்கலை, தந்திரக்கலை, உபதேசக் கலை என்று மூன்றாகக் கூறும்.

மேகலைப்படி ஏனைய அளவைகளாவன :-

4) உவம அளவை (ஒப்புமை, Comparison)
"உவமம் ஆவது ஒப்புமை அளவை
கவயமா ஆப்போலும் எனல் கருதல்"

5) அருத்தா பத்தி அளவை (அவாவுநிலை, குறிப்பு, implication பொருட்பேறு)

அருத்தா பத்தி ஆயக்குடி கங்கையில்
இருக்கும் என்றால் கரையில் என்று எண்ணல்

6) இயல்பளவை (தகுதி, Propreity)

இயல்பு யானைமேல் இருந்தோன் தோட்டிக்கு
அயலோன் றியாது அதுவே கொடுத்தல்

7) ஐதீக அளவை (உலகுரை, மண்ணுரை, மரபுரை, (Romous)

"ஐதீகம் என்பது உலகுரை இம்மரத்து

எய்திய தோர்பேய் உண்டெனத் தெளிதல்"

8) அபாவ அளவை (இன்மை, கூடாமை, impossibility
அபாவம் என்பது இன்மை ஒர் பொருளை
தவாதன் விடத்து தாவிலை என்றல்"

9) மீட்சியளவை (ஒழிபு, மறிநிலை, மெய்மை, reversion
மீட்சி என்பது இராமன் வென்றால் என
மாட்சியில் இராவணன் தோற்றமை மதித்தல்

10) உள்ள நெறியளவை (சம்பவம், தொடர்பியைபு, association

உள்ளநெறி என்பது நாராகத் திரியில்
கொள்ளத் தருவது காந்தம் எனக் கூறல்

அளவையிற் குற்றங்கள் - பொருட்களை மேலுள்ள அளவைகளால் அறியும்போது குற்றங்கள் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும், குற்றமுற்ற அளவை பிழைபடும், அளவையில் ஏற்படக்கூடிய குற்றங்களாவன,

1. சுட்டுணர்வு - எல்லாப் பொருட்களையும் அவற்றின் பொருளுண்மை மட்டுமே சுட்டி அத்துடன் அமைந்துவிடல், நிமிளையைப் பொன் எனக் கூறுதல் போலாம்.

2. திரிபு - ஒன்றை மற்றொன்றாய்க் கொள்ளல், கயிற்றினைப் பாம்பெனவும் இப்பியை வெள்ளி எனவும் அறிதல் போல்வது.

3. ஐயம் - நிச்சயிக்க இயலாது மயங்குதலாம், தூர உள்ள ஒன்றினை சிற்பமோ மனிதனோ என ஐயுறல், இது இருவகை.

உடன்பாட்டு வகை - சங்கற்பம்

எதிர்ப்பாட்டு வகை - விகற்பம்

4. ஆராயாது தெளிதல் - குற்றியை மனிதனென்று துணிந்து கூறுதல்போல

5. கண்டுணராமை - புலி நெருங்கி வரினும் ஆபத்து அறிந்து காத்துக்கொள்ள வேண்டும் என்று அறியாமல் மயக்குமுற்றிருப்பது போல இருத்தல்.

6. இல் வழக்கு - முயற்கொம்பு என்று கூறுதலின் இச்சொல்லின் அளவானே கருத்தில் ஒரு பொருள் தோன்றலன்றி சொற்பொருள் உண்மைப் பொருளைக் குறியாநிற்பதாம்.

7. உணர்ந்ததுணரல் - மிக்க பனியில் நெருப்பருகே இருத்தல் மருந்தாகும் என்றாற் போன்ற செய்திகளை உளம் கொள்ளுமாறு உய்த்து எண்ணுதல்,

8. நினைப்பு - நினக்கு இவர் தாயும் தந்தையும் என்று பிறர் காட்டிச் சொல்ல காரண ஆய்வின்றி அங்ஙனமே ஏற்றல்.

மேற்கூறிய அளவைகளாலே பொருளுண்மை உணர்ந்து பொருட் பண்பு நூலின் பொருளனைத்தும் தெரிந்து கொள்ளுவது ஐயத்துக்கிடமளிக்காது, நடைமுறையில் இவ்வளவை நூற்படியாலே நாம் எண்ணாவிடினும் அவை நமது அன்றாட எண்ணங்களோடு ஒன்றியே வருகின்றன.

இவ்வளவையின்றி பிற அளவைகள் இனிமேல் சுருக்கமாகக் கூறப்படும், அவை பழங்காலத்துப் பொருட்களை நிறுத்தல், அளத்தல், முகத்தல் ஆகியவற்றுக்குப் பயன்பட்டனவும், இக்கால அளவைகட்கு அவற்றைச் சரிப்படுத்தும் முறைகளும் ஆகும்.

பழங்கால நிறைகள்

பொன்நிறை

மிகச் சிறிய துவாரத்தின் வழியாக வரும் சூரியன் கதிரில் தெரிகின்ற மிக நுண்ணிய துகளின் அளவுக்கு திரிசரேணு என்று பெயர்.

| | | |
|---|---|---|
| 8 திரிசரேணு | - | ஈர் |
| 3 ஈர் | - | மன் கடுகு |
| 3 மன் கடுகு | - | வெண் கடுகு |
| 6 வெண் கடுகு | - | நடுத்தர யவம் |
| 3 நடுத்தர யவம் | - | குன்றி |
| 5 குன்றி | - | மாடம் (கருவும், அக்ஷம்) |
| 6 மாடம் | - | பொன் |
| 4 பொன் | - | 1 பலம் (நிட்கம்) |
| 10 பலம் | - | 1 தரணம் |

வெள்ளி நிறை

| | | |
|---|---|---|
| 2 குன்றி | - | வெள்ளி மாடம் |
| 16 வெள்ளி மாடம் | - | 1வெள்ளித்தரணம் (புராணம்) |
| 10 வெள்ளித் தரணம் | - | 1 பலம் (சதமா) |

செம்பில் நிறை

4 காருடிகம் அல்லது காடோபணம் அல்லது பணம் என்பது ஒரு பொன்னிறைப் பலமாகும்.

(வேறு)

| | | |
|---|---|---|
| 10 குன்றி | - 1 | மாடம் |
| 10 மாடம் | - 1 | கருடம் |
| 10 கருடம் | - 1 | பதார்த்தம் |
| 10 பதார்த்தம் | - 1 | பிரத்தம் |
| 5 பிரத்தம் | - 1 | ஆடகம் |
| 8 ஆடகம் | - 1 | அருமணம் |
| 20 அருமணம் | - 1 | காரிகை |

நிலத்தின் அளவு

5000 பிரசாபதி முழம் - 1 குரோசம்

4000 மதுமுழம் - 1 குரோசம்

நடுவிரலின் நடுவிலுள்ள இரண்டு கணுக்களுள் நடுப்பாக நீளம் ஒரு அங்குலம்,

யவம் எனும் தானியத்தின் நடுப்பாகம் போல 8 மடங்கு நீளமும் 5 மடங்கு அகலமும் ஒரு அங்குலம்

| | | |
|---|---|---|
| அங்குலம் | - 1 | முழம் |
| முழம் | - 1 | கோல் |
| 5 முழம் | - 1 | இலகு |
| யவம் | - 1 | கோல் (பிரஜாபதி) |
| 100 யவம் | - 1 | கோல் (மது) |
| 25 கோல் | - 1 | நிவர்த்தனம் |
| கோல் | - 1 | பரிவர்த்தனம் |
| 25 கோல் | - 1 | புயம் |
| புயம் | - 1 | உழவு நிலை பரிவர்த்தனம் |

(அபிதான சிந்தாமணி)

நிறுத்தல் அளவை

---

| | |
|---|---|
| 32 குன்றி | - 1 வராகன் எடை |
| 10 வராகனெடை | - 1 பலம் |
| 8 பலம் | - 1 சேர் (கச்சா) |
| 5 சேர் (40 பலம்) | - 1 வீசை |
| 50 பலம் | - 1 தூக்கு |
| 2 தூக்கு | - 1 துலாம் |

---

| | |
|---|---|
| 8 / 7 கிரெயின் | - 1 குன்றி |
| 180 கிரெயின் | - 1 தோலா |
| 2.5 தோலா | - 1 அவுன்ஸ் |
| 437.5 கிரெயின் | - 1 அவுன்ஸ் |
| 8 குன்றி | - 1 மாஷா - 15 கிரெயின் |
| 12 மாஷா | - 1 தோலா - 180 கிரெயின் |

---

முகத்தல் அளவை

---

| | |
|---|---|
| 360 நெல் | - 1 செவுடு |
| 5 செவுடு | - 1 ஆழாக்கு |
| 2 ஆழாக்கு | - 1 உழக்கு |
| 2 உழக்கு | - 1 உரி (அரை நாழி) |
| 2 உரி | - 1 நாழி (படி) |
| 8 நாழி | - 1 மரக்கால் (குறுணி) |
| 2 மரக்கால் | - 1 பதக்கு |

4 மரக்கால் - 1 தூணி (இரண்டு பதக்கு)

5 மரக்கால் - 1 பறை

12 மரக்கால் - 1 கலம் (மூன்று தூணி)

400 மரக்கால் - 1 கரிசை (80 பறை, 100 / 3 கலம்)

2.5 ஆழாக்கு - 1 பயின்ட்

3.5 ஆழாக்கு - 1 புட்டி

20 ஆழாக்கு - 1 காலன்

6 காலன் - 1 டின்

------------

திரிகடி - மூன்று விரல் கொள்ளளவு

வெருகடி - ஐந்து விரல் கொள்ளளவு (பூனையின் காலளவு)

சிரங்கை - உள்ளங்கை கொள்ளளவு

----------

1 மண்டலம் - 45 நாள் (40,48 என்று கொள்வாரும் உண்டு)

1 பட்சம் - 15 நாள்

தமிழ் எண்கள்

| | | | |
|---|---|---|---|
| க | 1 | சா | 6 |
| உ | 2 | எ | 7 |
| ங | 3 | அ | 8 |
| ச | 4 | கூ | 9 |
| ரு | 5 | ய | 10 |

## தற்கால மெட்ரிக் அளவைகள்

### நிறுத்தல் அளவை

| | |
|---|---|
| 200 மில்லி கிராம் (மி.கி) | - 1 காரட் |
| 1000 மில்லி கிராம் | - 1 கிராம் (கி) |
| 1000 கிராம் | - 1 கிலோகிராம் (கி.கி) |
| 100 கிலோ கிராம் | - 1 குவிண்டால் |
| 1000 கிலோ கிராம் அல்லது 10 குவிண்டால் | - 1 டன் |

### நீட்டல் அளவை

| | |
|---|---|
| 10 மில்லி மீட்டர் (மிமீ) | - 1 சென்டி மீட்டர் (செமீ) |
| 100 சென்டி மீட்டர் | - 1 மீட்டர் (மீ) |
| 1000 மீட்டர் | - 1 கிலோ மீட்டர் (கிமீ) |

### முகத்தல் அளவை

| | |
|---|---|
| 1000 மில்லிலிட்டர் (மி.லி.) | - 1 லிட்டர் (லி) |
| 1000 லிட்டர் | -1 கிலோலிட்டர் (கி.லி) |

### நில அளவை

| | |
|---|---|
| 100 சதுர மீட்டர் | - 1 ஏரா |
| 200 ஏரா | - 1 ஹெக்டேர் |
| 100 ஹெக்டேர் | - சதுர கிலோ மீட்டர் |

# அளவை மாற்ற விதிகள்

## எடை

1 தோலா - 11.6632 கிராம்

3 தோலா (அ) 1 பலம் - 35.9896 கிராம் (சுமார் 35 கிராம்)

1 வீசை - 1399.584 கிராம் (சுமார் 1400 கிராம்)

1 இருத்தல் - 453.594 கிராம் (சுமார் 454 கிராம்)

1 சேர் (அ) 80 தோலா - 930 கிராம் - 28 பலம் 2 தோலா (86 தோலா)

1 கிலோ கிராம் - 2.205 இருத்தல்

## நீளம்

1 அங்குலம் - 25 மி.மீ

1 கி.மீட்டர் - 1093.63 கெஜம்

- சுமார் 5 பர்லாங்கு

## முகவை

1 லிட்டர் - 4.5 உழக்கு (சுமார்)

1 காலன் - 4.546 லிட்டர்

1 லிட்டர் - 0.220 காலன்

பணவெடை - சுமார் 4 குன்றி எடை

வராகனெடை - 10 பணவெடை (அ) 32 குன்றி எடை

பலம் - 10 வராகனெடை (அ) 3 ரூபாய் எடை (அ) 16 சல்லி எடை

சேர் - 8 பலம் (அ) 24 ரூபாய் எடை

சேர் (திரவம்) - 1/6 பட்டணம்படி

கழஞ்சி எடை - 40 குன்றி எடை

இருத்தல் - 40 ரூபாய் எடை

நாழி - 16 பலம்

# மருந்து

மருந்து என்பது அவிழ்தம், உறை மந்து (தெலு), மெடிசன் (ஆங்) தவா (உருது) பெஹெத் (சிங்) ஔடதம் என்றும் பெயர் பெறும். இது பெறும்வகை, செய்வகை, பண்பு வகை போன்றவற்றால் பல்வேறு விதங்களாக வகுத்து உணரப்படுகிறது. பொதுவாய் மருந்துகள், பிணிபட்டபோது அவற்றினால் ஏற்படும் துன்பங்களைப் போக்குவனவாயும், பிணியுண்டாக்கிய ஏதுக்களைக் களைவனவாயும், பிணிகள் ஏற்படாது தடுப்பனவாயும், உடலில் குறைந்த சத்துக்களை ஈடுசெய்வனவாயும் உடல் உறுப்புகளின் செயலைத் தூண்டுவனவாயும், குறைப்பனவாயும் பலவாறு அகவழி புறவழிகளால் தொழிற்படுவனவாகும், மருந்துக் கலவை தனி ஒரு பொருளாலோ அல்லது பல பொருட்களின் கலவையாலோ உண்டாக்கப்படலாம், இவை மருந்துச் சரக்குகள் அல்லது மருந்துப் பொருட்கள் எனப்படும். பரும்பூதங்கள், சூடு, ஒளி, மின்சாரம் ஆகியனவும் மருந்துப் பொருட்களாகப் பயன்படும்.

மருந்துப் பொருட்கள் பெரும்பாலும் தாவரங்களும், அவற்றின் உறுப்புகளும் அவைகளினின்று கிடைப்பனவு மேயாகும். இவைகளுக்கு அடுத்ததாக உலோகங்கள், பாடாணங்கள், கற்கள் உயிரிகள், உயிரிகளின் பொருட்கள் ஆகியனவும் பயன்படுத்தப்படுகின்றன. சித்தர்முறை மருத்துவத்தில் உலோகங்களும் பாடாணங்களும் அதிகமாகப் பயன்படுவதோடு சிறப்பிடத்தையும் பெறுகின்றன. 'சூதகெந்தி தாதுபற்பம் சொன்ன நாட்டார் சிகிச்சை' என்றும் இது 'தேவர் மருத்துவம்' என்றும் புகழப் பெறுகிறது. இதற்கு அடுத்தபடியாகவே 'மூலிகை இம்மண்ணோர் சிகிச்சை' எனக் கூறப்பட்டுள்ளது.

எனினும் மூலிகை பெரும்பாலான பற்ப சிந்தூரங்களும் உயர் மருந்துகளும் செய்யப்பயன்பெறுகின்றன. இன்றைய மருந்தறிஞரின் கோட்பாட்டின்படி தீர்க்க முடியாத நோய்களாயுள்ளவற்றிற்கு ஏதாவது பெறுமாயின் அது மூலிகை இனத்திலிருந்தே ஆகும் என்பதாகும். எனவே மருந்தாகப் பயன்பெறும் எல்லாவிதப் பொருட்களையும் ஒரே நிலையில் வைத்துச் சிறப்பப்படுத்துவதே நன்றாகும். மேலே கூறப்பட்ட பொருட்களன்றி தற்காலத்தில் பல மருந்துப் பொருட்கள் சோதனைக் கூடத்தில் வேதியல் முறையிலும் தயாரிக்கப்பெறுகின்றன. இவைகளை சிந்தெடிக் மருந்துகள் என்று குறிக்கின்றனர். இவ்வகையாக வீரம், இலிங்கம் போன்ற பல மருந்துப் பொருட்கள் செய்யப்பெறும் வழிகள் சித்தர் முறைகளில் கூறப்பெற்றுள்ளன. இவ்வாறு செய்வதால் கிடைப்பவை 'வைப்புச் சரக்குகள்' என்றழைக் கப்படும். இன்னும் சீரம், வாக்சின், அன்டி டாக்ஸின் போன்ற நோய்த்தடுப்பு மருந்துகளும் நச்செதிர்ப்புப் பொருட்களும் பல விலங்குகளில் உண்டாக்கப்பெற்று பெறப்படுகின்றன. பல சுரப்பிகளின் சத்துக்கள் முன்னர் விலங்குகளின் உறுப்புகளிலிருந்தே பிரித்தெடுக்கப்பெற்றன. தற்கால உயிர்வேதியல் வளர்ச்சியினால் இவைகளுட் பல இன்று தேர்வகத்தில் செய்யக்கூடியதாக ஆகிவிட்டன.

மருந்துகளுக்குப் பலவித நற்குணங்கள் இருப்பதுபோல அவற்றினுக்குச் சில தீக்குணங்களும் உண்டு. சில மருந்துகள் கொள்ளும் அளவுக்கு மிஞ்சினாலோ அல்லது நாளளவில் மிஞ்சினாலோ கெடுதிகளை உண்டாக்கலாம். வேறுசில மருந்துகள் நஞ்சாகவே உள்ளன.

இன்னும் சில ஒருவருக்கு ஒத்துக் கொள்ளுவது போல மற்றவருக்கு ஒத்துக் கொள்வதில்லை. இதனால் ஒவ்வாமை (அலர்ஜி)க் குறிகுணங்கள் உடலில் ஏற்படுகின்றன. இக்குறி குணங்கள் சாதாரண சிறு தடிப்பு முதல் சாக்காடு வரையி லாவதாகும். மற்றும் சில மருந்துகள் கொடுக்கப்பட்ட காரணத்துக்கான பிணிகளைப் போக்கினாலும் பின்னர் வேறு பிறகுறிகுணங்களைத் தோற்றுவிக்கக் கூடியவனவாக உள்ளன. எ.டு. கெந்தகக் கூட்டு மருந்துகள் இவ்வாறானவை. இவை நாட்பட இரைப்பை அழற்சி போன்ற நோய்களை வருவிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதுபோலவே இரசம்,

ஏனைய உலோகங்கள் போன்றவை பிருக்கத்தைக் கேடுறச் செய்யக்கூடும். எனினும் சித்தர் முறைப்படி இம்மருந்துப் பொருட்கள் பலவாறு நட்பு பகைச் சரக்குகள் சேர்த்து மாரணிக்கப்பட்ட பின்பு பற்ப செந்தூரங்களாக மாற்றப்பெற்று வழங்கப்படுவதாலும், தகுந்த துணை மருந்துகளோடும் பத்தியவிதிகளோடும் கொடுக்கப்பெறுவதாலும் இவ்வகையான கேடுகள் தவிர்க்கப்படுகின்றன. எனினும் பச்சை வெட்டு மருந்துகள் வாய்பிடிக்கச் செய்வது கண்கூடு. இவைதவிர சில மருந்துகள் விடமுடியாத பழக்கத்தை உண்டாக்குவனவாகும். அபினி, கஞ்சா போன்றவை இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாம். இவை சேர்ந்த மருந்துகளைத் தொடர்ந்து பயன்படுத்தினால் அவற்றை நிறுத்த முடிவதில்லை. சிலர் இவைபோன்றவற்றைப் போதைக்காகப் பயன்படுத்தி இன்பங் கண்டு பின்னர் விடமுடியாதபடி அதற்கு அடிமையாவதுமுண்டு. இவ்வாறான மருந்துப் பழக்கம் ஆகிவிட்டால் பல இன்னல்கள் அடுக்கடுக்காக ஏற்படலாம். திடீரென்று இம்மருந்துகளை நிறுத்தினாலும் உடல் நடுக்கம், வலி, வாந்தி, பிரமை, இழுப்பு போன்ற துன்பங்கள் நேரிடலாம்.

மேற்கூறப்பட்ட நோய்க்கான மருந்துகளன்றி சித்தர் மருத்துவத்தில் முப்பு, காயகற்பம், வசிய மருந்து, இடு மருந்து, முறிப்பு மருந்து, மோகன மருந்து, தம்பன மருந்து, வேதியல் மருந்து, மாந்திரீக மருந்து என்பனபோன்ற பலவகை மருந்துகள் உண்டு. அல்லாமலும் ஆடு, மாடு, யானை, குதிரை, நாய், கோழி போன்ற வீட்டு விலங்குகளின் பிணி தீர்ப்பதற்கான முறைகளும் சித்தர் மருந்துகளில் அடங்கும்.

முப்பூ எனப்படுவது மூன்று உப்புக்கள் அல்லது மூன்று பூதியங்களின் குணம் பொருந்திய மருந்துப் பொருட்கள் அல்லது தீட்சை செய்த பூநீறு இவற்றுள் ஏதாவதொன்றால் செய்யப்படுகின்ற உயர்ந்த மருந்தாகும். இதைக் கொண்டு பல சிறந்த மருந்துகளை முடிக்கலாம். இதையே மருந்தாகவும் கையாளலாம். மேலும் வேதியல் செய்யவும் காய சித்திக்காகவும் இது பயன்படும்.

சாதாரணமாக மனித உடல் மூப்பெய்தி நரை, திரை, பிணி இவற்றால் சாவடைவது திண்ணமாகும். உடலில் இவ்வகைக் கேடுகள் ஏற்படுவதால் உயிர் நலிவுறுகிறது. பிறப்பின்

பயனை இவ்வுயிரினால் அனுபவிக்க முடிவதில்லை. எனவே இவ்வுடலை முன்சொன்ன கேடுகளின்று காக்கவும் கல்லைப்போல அழிவுறாது வைத்திருக்கவும் பயன்படுகின்ற மருந்துகள் கற்ப மருந்துகள் அல்லது காய கற்ப மருந்துகள் (காயசித்தி மருந்துகள்) என அழைக்கப்படும். இவை பிணி ஏற்படாது உடலைக் கற்பமாக்கவும், பிணிபோக்கி உடலைக் கற்பமாக்கவும் செய்வனவாக இரண்டுவகை. இம்மருந்துகளில் தாது தாவர உபரசப் பொருட்கள் சேரும். இவையல்லாது இயமநியமாதி எண்வகை ஏதுக்களாலும் காயம் வலுப்பெறும்.

ஒருவர் மற்றொருவரை தன் காரியம் கைகூடச் செய்வதற்காய் கவருவதற்காகக் கொடுக்கும் மருந்து வசிய மருந்து - தன்வயப்படும் மருந்தெனப்படும். இது ஆண், பெண்ணையும், பெண் ஆணையும் ஒருவன் சத்துருக்களையும் அரசாதி உயர் மனிதரையும் மிருகங்களையும் வசப்படுத்துவதற்கான மருந்துகள் தனித்தனியாக உண்டு. மூலிகைகள் பல இதற்குப் பயன்படுகின்றன. அவை வசிய மூலிகைகள் எனப்படும். தவிர புனுகு, கோரோசனை, சவ்வாது போன்ற உயர்மணப் பொருட்களும் அபினி, கஞ்சா போன்ற போதைப் பொருட்களும் விந்து, தீட்டுக்குருதி, குறிக்கசிவுகள் போன்றவைகளும் இம்மருந்தில் சேருகின்றன.

முன் சொன்னபடி வசியம் செய்வதற்கன்றி ஒருவரைக் கெடுக்கு முகத்தான் கொடுக்கப்படும் மருந்து இடு மருந்து எனப்படும். இவ்வாறு செய்வது மருந்தீடு ஆகும். இதற்கு போதைப்பொருட்கள், நச்சுப்பொருட்கள், உடலின் மலப்பொருட்கள், பிராணிகளின் பிச்சுகள் கண் போன்ற உறுப்புகள் ஆகியவை சேர்க்கப்பெறும்.

நஞ்சுப் பொருட்களை உட்கொண்டகாலத்திலாவது நச்சுக் கடிகள் ஏற்பட்ட காலத்திலாவது, நஞ்சோடு தொடுபட்ட காலத்திலாவது இடுமருந்து போன்றவைகளினால் பாதிப்பு ஏற்பட்டபோதாவது, மருந்துகள் அளவு, பத்தியம் முதலிய கிரமம் தவறி உண்டகாலத்தாவது ஒவ்வாமையினாலாவது இதுபோன்ற பிறநிலைகளிலாவது ஏறபடும் தீக்குறி குணங்களை மாற்றுவதன் பொருட்டுக் கொடுக்கப்படும் மருந்துகள் மாற்று மருந்து அல்லது முறிப்பு மருந்து என்று சொல்லப்பெறும். பொதுவாய் ஒவ்வொரு பொருளுக்கும் நேரிடையான சிறப்பான

முறிவுப் பொருள் உண்டு. அல்லாமலும் பொது முறிவுப் பொருட்களான அவுரி, மிளகு, அருகு, நஞ்சறுப்பான், நிலம்புரண்டி போன்றவைகளும் சிறியாணங்கை போன்ற கடிநஞ்சுப் பொது முறிவுப் பொருட்களும், சிறப்பான விடத்திற்குரிய மையான சோதிரிஷித்தைலம் போன்ற மருந்துகளும் உண்டு.

மோகன மருந்தெனப்படுவவை மோனநிலையை ஊட்டு வனவும், இன்பமாய் தன்னை மறந்து இருக்கச் செய்வனவுமாம். சாதாரணமாய் இது சொக்குப் பொடி என்றும் கூறப்படும். கள்ளு, சாராயம், கஞ்சா போன்றவை இத்தகையன. சம்மோகினி என்ற மருந்து சத்திர சிகிச்சை (கருவிகளாடல்) சுட்டிகை செய்தல் போன்றவிடத்துப் பயன்பெற்றுள்ளது. இதுபோன்ற மருந்துகளின் கெடுதிநோக்கி முன்னவர்கள் இதை மறைத்து விட்டனர். இதன்றி உடலின் குறிப்பிட்ட பகுதியை உணர்விழக்கச் செய்யும் மருந்துகளும் உண்டு. மேனாட்டு மருத்துவத்தில் இத்தகைய மருந்துகள் மிகுந்த பயனளித்து வருகின்றன.

தாதுக்கள் அனைத்தையும் திறமாக்கி கடைத்தாதுவை வன்மையாக்கும் மருந்துகளும், சிற்றின்பத்தை நீடித்து இருக்கச் செய்வனவுமாய மருந்துகளும் நூல்களில் இடம் பெறுகின்றன. இவ்வகை மருந்துகளிற் சில சுக்கிலத்தை வெளியேறாது தடுப்பனவாகும். இப்பகுதியில் வாதுமை, முருங்கை, வெங்காயம், மதனகாமப்பூ, கஞ்சா போன்றவை சேரும் மருந்துகள் அடங்கும்.

உபலோகங்களைக் களங்கு, கட்டு, செந்தூரம், பற்பம் சுண்ணம் போன்றவைகளாக்குவதும், கீழ்வகுப்பு உலோகங்களைப் பொன்னாக்குவதும், அழியும் தன்மையுள்ள உடலைக் காயசித்திபெற்று அழியாமல் இருக்கச் செய்வனவுமான மருந்துகள் வேதியல் மருந்துகளாகும். இதில் முப்பு குருச்சுண்ணம், குருமருந்து, செயநீர், பலவகைச் சுண்ணங்கள், இரசச் சுண்ணம் போன்றவை அடங்கும்.

இவையன்றி மாந்திரீகத்துக்குப் பயனாகும் மருந்துகள், காயசித்தி, யோகசித்தி போன்றவற்றை உண்டாக்குவன போன்ற பிறவும் உண்டு.

ஒரு மருந்தினைக் கொடுக்கும்போது அதற்குத் துணையாகவும் அம்மருந்து செல்லுவதற்கு ஏதுவாகவும். கொடுக்கப்படும் மருந்து துணை மருந்து அல்லது அனுபானம் எனப்படும். மருந்துக்குத் தக்கவும் பிணிக்குத் தக்கவும் இது மாறுபடும். சாதாரணமாக நீர், பால், தேன், நெய் போன்றவையும் சில இளகங்களும், சூரணங்களும் துணை மருந்துகளாகும். ஒரே மருந்து வேறுபட்ட துணை மருந்தோடு கொடுக்கப் பெறும்போது வெவ்வேறான பிணிகளைப் போக்கக்கூடியதாய் ஆகிவிடும். இதனாலேயே பழங்கால சித்த மருத்துவர்கள் சில கட்டு மருந்துகள், செந்தூரங்கள் இவற்றை மட்டுமே வைத்து அனேகமான பிணிகளை நீக்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இனி மருந்துக்கும் பிணிக்கும் தக்கவாறு அவற்றுக்கு ஆகும் பொருட்கள், ஆகாப் பொருட்கள் என்பவையும் உண்டு. பொதுவாக மருந்து கொடுக்கும் காலத்தில் புகையிலை, அகத்தி போன்ற பொருட்கள் மருந்துகளின் வீரியத்தைக் கெடுப்பதினால் இவை விலக்கப்பட வேண்டும். இது போலவே உணவுப் பொருட்களிலும் சில ஆகும் என்றும் சில ஆகா என்றும் கூறப்பட்டுள்ளது. ஆகுமெனக் கூறிய பொருட்கள் நோயின் வன்மையைக் குறைக்க மருந்துக்குத் துணையாய் நிற்பனவும், தாமே ஓரளவு அந்நோயைக் குறைப்பனவும், நோய்க்கான மருந்தைக் கேடுறச் செய்து அல்லது வன்மை இழக்கச் செய்து அல்லது மாறுபடச் செய்து முறிக்காதெனவும் மருந்து அதிக வீரியமும் நச்சுத் தன்மையும் உடையதாக இருந்தால் அத்தன்மைகளைக் குறைப்பனவும் ஆகும். இக்காரணங்களுக்கு எதிரிடையான பொருட்கள் ஆகாதவையாம்.

இவ்வாறன்றி மருந்துகள் அவை உடலில் செய்யும் செய்கை, குணம் ஆகியவற்றைக் கொண்டும் பலவாறு பிரித்தறியப்படும். இவை ஏனைய நூற்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளனவாதலின் அவற்றில் கண்டுகொள்ளக் கூடியன என்பதாலும் விரிக்கின்மிகும் என்பதாலும் ஈண்டு கூறாது விடப்பட்டன.

மேனாட்டு மருத்துவம் மிக வேகமாக முன்னேறி வருவதால் மருந்தியல் பலவாறான பிரிவுகளை உடையதாக ஆகியுள்ளது. பழைய பொருட் பண்பியல் அல்லது மருந்துகளின்

குணபாடம் என்பது பல உட்பிரிவுகளைப் பெற்று மாறுபாடடைந்து ஒவ்வொன்றும் தனித்தனியான பாடமாய் வளர்ச்சி பெற்று வருகிறது. அவையாவன :

பொதுவான மருந்துகளைப் பற்றிக் கூறும் இயல் மருந்து முறையியல் (Pharmacology)

மருந்துகள் கொடுக்கப்பட்டதும் அவை எவ்வாறு உடல் தாதுக்களிலும் இழையங்களிலும் வேலை செய்கின்றன எனக் கூறுவது மருந்து வேலையியல் (Parmacodynamics)

மருந்துப் பொருட்களின் தன்மை, பௌதீக ரசாயனப் பண்புகள், உள், வெளி அமைப்புகள் போன்றவற்றை விவரிப்பது மருந்துப் பண்பியல் (Pharmacognosy)

மருந்துகளைப் பிணிகளுக்கு வழங்கப்படும் விதத்தில் உருவாக்குவது பற்றிக் கூறுவது மருந்து செய்யியல் (Pharmaceutics)

மருந்துகளை நோய்க்குத் தக்கவாறு கலந்தும் அளவுபடுத்தியும் கொடுப்பது மருந்தாளு கலை (Pharmacy)

மருந்துகளைப் பற்றிய அறிவைக் கொண்டு அவற்றை நோய்களுக்குத் தக்கவாறு கொடுப்பது மருத்துவ இயல். (Pharmacology)

மருந்துகளினால் ஏற்படும் கேடுகளை ஆராய்வது மருந்து நஞ்சியல் (Toxicology)

இவையன்றி வேதியியல் (இரசாயன) மருத்துவ இயல் (chemotherapy) என்ற ஒரு பிரிவு அண்மைக் காலத்தில் உருவாகி வளர்ந்து வருகிறது.

மருந்து முறையியல் நோயைக் குணப்படுத்தும் நோக்குமுடையதாக உயிரியலில் உடலியல், உடல் இயங்கியல், நோயியல் இவற்றோடு தொடர்புடையது. பிணி இல்லாத ஒரு ஆளுக்கு ஒரு மருந்து கொடுக்கப்பட்டால் அது அவரில் சில குறிகுணங்களை உண்டாக்கும். இவ்வறிவைப் பயன்படுத்தி அம்மருந்து பிணியாளரில் எவ்வாறு வேலை செய்யும் என்பதை அறியலாம். விலங்குகளில் சீமை இன சுண்டெலி (Mice) வெள்ளெலி (Albinarates) குறும்பன்றி (Guinea Pig)

நாய், குரங்கு போன்றவைகளின் உடல் நன்னிலையிலும், பிணிகளை உண்டாக்கியும் மருந்துகளைக் கொடுத்து அவற்றின் செயல்திறன்களை ஆராய்ந்து அறியலாம். இது தேர்வு மருந்து முறையியல் (Experimental Pharmacology) ஆகும். உயிர் வேதியியல் (Bio-Chemistry) வளர்ச்சி காரணமாக தற்போது மருந்துகளின் ரசாயனச் கூறு, ரசாயன அமைப்பு அவை ரசாயன மாறுபாடடையும் விதம், ஏற்படுத்தும் மாறுதல்கள் போன்றவற்றை அறியும் அறிவும் பெருகி வருகிறது. மருந்துகள் இவ்வாறு ஆராயப்படும்போது ஒரு உயிருள்ள பிராணியின் முழு உடலில் எவ்வாறு என்னென்ன வேலை செய்கிறதென்றோ, அதாவது, இதயம், குடல் இழைகள், மூச்சுக் குழல் பகுதி போன்ற உறுப்புப் பகுதிகளில் என்ன மாறுதல்களை உண்டாக்குகிறதென்றோ ஆராயப்படலாம். மருந்தைப் பிணியாளிக்கு அல்லது நல்ல உடல் நலமுடன் உள்ள ஆளுக்குக் கொடுத்துத் தேர்வு நடத்துமுன் அந்த மருந்தின் செய்கைகளோடு அது கொடுக்கத்தக்க அல்லது குணமுண்டாக்கத்தக்க அளவு, உடலில் அது ஏற்படும் மாறுதல் (வீரியமாதல், வீரியம் குன்றல், மாறுபடல், நச்சாதல்) ஏற்படுத்தும் மாறுதல், பக்கப் பண்புகள் (Side effects) நச்சு நிலைகள் (Toxicity) அது உட்கொள்ளக்கூடியதா அல்லது பிறவழிகளில் பயன்படுத்தக் கூடியதா? உடலில் எவ்வாறு அது ஏற்கப்படுகிறது, எவ்வாறு மாறுதல்களை அடைந்து மாறுதல்களை உண்டாக்குகிறது, எவ்வளவு காலம் உடலில் செயல்படத்தக்கது, உடலை விட்டு வெளியேறுகிறதாயின் எந்த வழியாக நடக்கிறது, உடலில் தேக்கமடைகிறதா என்பனபோல பல நிலைகள் ஆராயப்பெறுகின்றன.

இத்தனை ஆய்வுகளுக்குப் பின்னரும்கூட மருந்தைப் பற்றிய சரியான அறிவு உண்டாகக் கூடாமல் இருப்பதும் உண்டு. சில மருந்துகள் நோய்நிலையில் நோயற்ற நிலையில் காட்டுவதைவிட மாறுபட்ட பண்புகள் காட்டும் தன்மையுடையன. ஒரு சில விலங்கில் காட்டுவதுபோல மற்றொன்றில் குணங்களைக் காட்டுவதில்லை. ஒரு மருந்து கொல்லக்கூடிய தன்மையுடையதாயின் அது எந்த அளவில் கொல்லும் (lethal dose LD) என்று ஆளின் எடை, வயது ஆகியவற்றுக்குத் தக்க கணிக்க வேண்டும். இதேமருந்து

நோயைக் குணப்படுத்தும் அளவில் (effective dose E. D) இருந்து எத்தனை மடங்கு அதிக அளவில் கொல்லக்கூடியது என்று கணித்து, இந்த அளவு மிக அதிகமாய் இருந்தாலேயே நல்லதென்று பயன்படுத்தப்படும்.

மருந்துப் பொருட்களில் என்னென்ன ரசாயனங்கள் அடங்கியுள்ளன என்றும், அவற்றுள் எது பயன்படுகிறதென்றும் அறிந்து, அதைப் பிரித்து தற்காலம் கையாளுகின்றனர். இவ்வாறு பிரித்தெடுப்பது சில சரக்குகளில் மட்டுமே கூடுமானதாகிறது சித்தர் முறைப்படி மருந்துச் சரக்குகளின் கூறுபாடு மட்டுமல்லாது, அதற்கென உள்ள அதிருட்டமான குணம் போன்றவைகளும் நோக்கப்படுவதால் இது இவ்வகை அறிவியல் நமக்கு உதவாமற் போய்விடுகிறது. பசுவின்பாலும் எருமையின் பாலும் ஆய்வகத்து ஆராயுமிடத்து ஒரேவிதமான ரசாயனப் பொருட்களையே சில அளவு மாறுபாடுகளில் கொண்டுள்ளதென அறிகிறோம். ஆனால் சித்தர், பசும்பால் சத்துவகுணமுடையதென்றும், எருமையின்பால் தாமத குணமுடையதென்றும் கூறுவதை அவற்றை உட்கொண்ட காலத்து ஏற்படும் உணர்வுகளால் அறிகிறோமன்றி ஆய்வு செய்து காரணம் சொல்ல முடிவதில்லை. இதுபோலவே மூலிகைகளும் வகுக்கப்பெற்றுள்ளன.

மருந்துகள் வேலை செய்கின்ற முறையைச் சித்தர் வழியில் மிகுந்த அல்லது குறைந்த குற்றங்களை அல்லது தன்னிலைப்படுத்துகிறதென்று பொதுவாகச் சொல்லிவிடலாம். இது முடிவிற்கு முடிவாயிருந்தாலும் மருந்து கொடுக்கப் பெற்றதிலிருந்து ஒவ்வொன்றாகவும் படிப்படியாகவும் இம்முடிவில் ஏற்படும் மாறுதல்கள் நவீன மருத்துவத்தில் ஆராயப்படுகின்றன. எரிகுன்மநோயில் காவிக்கல் போன்றவை அங்கு மிகுந்துள்ள அமிலத்துவத்தை தனது காரத்தன்மையால் சமனப்படுத்துவதால் நோயின் தீவிரம் குறைகிறதென்று எளிதாகச் சொல்லிவிடமுடியும். ஆனால் வேறு பலவான மருந்துகள் எவ்வாறு வேலை செய்கின்றன என்பது இன்னும் முடிவாகக் கூறப்பட முடிய வில்லை. காக்கை வலிப்பு, நீரிழிவு போன்ற நோய்களைத் தீர்க்கும் மருந்துகள் இன்னின்ன வழிகளில் தீர்க்கின்றன என்று கூறும் பல கருத்துக்கள் உண்டு. அவற்றுள் எது திட்டமானதென்று சொல்லக் கூடுமானதாய் இல்லை. உடலின்

தாதுக்களின் கூறுபாடுகளோடு அவற்றைத் தொழிற்படுத்தும் உயிரினைப் பற்றி நாம் இதுவரை அறிந்ததும், உடலின் சத்துக்கள் (Enzymes) இயக்கம் போன்றவற்றின் அறிவும் நமக்குப் போதுமானதாக இல்லை என்பதாலேயே இக்குறைபாடு உண்டாகிறது.

மருந்துகளில் சில மூளை நரம்பு மண்டலத்தையும் சில இயக்கு பேசிகளையும் சில தானியங்கி பேசிகளையும், சில குருதி விலங்களையும், சில உடலிலுள்ள சுரப்பிகளையும் அடைந்து தொழிற்படுகின்றன. இவ்வாறு தொழிற்படும்போது அவைகளின் இயக்கங்களை ஊக்குவிப்பதாகவோ (Stimulant) மந்தப்படுத்துவதாகவோ தடைப்படுத்துவதாகவோ (Depressent) அமைகிறதன்றி புதியதொரு வகை இயக்கத்தை அவைகளுக்குக் கொடுப்பதுமில்லை, முற்றிலும் புதியதொரு இயக்கத்தை எவ்வித இழையங்களும் பெறுவதுமில்லை. சில மருந்துகள் எவ்வித தொழிலையும் நடத்துவதோ அல்லது குறைப்பதோ செய்யாமல் வெறும் (Machanical) கவசமாகச் செயல் படுகின்றன.

மருந்துகளை தாவரம், தாது, சங்கமமென்ற மூன்று பெரும் பிரிவில் அடக்கலாம். இவற்றின் உட்பிரிவுகள் பொருட்பண்பு நூலில் விளக்கமாயுள்ளன.

இவற்றின் ரசாயனத் தன்மைகளை வைத்து Alkaloids glycerides, Acids, Jannius Volatile oils Resins என்றும் மருந்துகள் வகுக்கப்படும்.

ஒரு மருந்து அது தரப்படுகிற எல்லா ஆளிடமும் ஒரேவிதமான குணங்களைக் காட்டுவதில்லை. பலரிடம் பொதுவாய்க் காணும் குணங்களை வைத்தே ஒரு மருந்து இன்ன குணத்தைக் கொடுக்கும் என்று கூறுகிறோம். சேராங்கொட்டை சேர்ந்த மருந்துகள் சில நல்ல குணங்களைக் கொடுக்கிறது. வேறுசில உடல் தடிப்புகளை உண்டாக்கி விடுகிறது. வாளம், முத்துநெய் போன்ற பேதி மருந்துகள் சிலரிடம் குறைந்த அளவிலேயே மிகுந்த கழிச்சலை உண்டாக்குகின்றன. வேறு சிலரிடத்து குறைந்த அளவில் கழிச்சல் உண்டாவதும் மிகச் சிறுபான்மையினரிடத்து எந்தவித தொழிலையும் அது ஏற்படுத்தாமலிருப்பதும்

பொதுவாய்ப் பார்க்க முடிகிறது. அபினிப் பழக்கமுள்ளவரிலும் பிறபோதைப் பொருட்பழக்கமுள்ளவரிலும் மயக்கமூட்டிகள் கண்தாரைபெருக்கிகள் போன்றவை தாமதமாய் குணம் காட்டுகின்றன. சில மருந்துகள் தனியாகக் கொடுப்பதைவிட மற்றொன்றோடு கலந்து கொடுத்தால் நல்ல குணம் காட்டுகின்றன. பொன்னாலான பற்பங்கள் தனித்து வழங்குவதை விட முக்கடுகுச் சூரணத்தில் கலந்து கொடுக்கையில் நற்பலன் தருகின்றன. சில வேளைகளில் ஒரு மருந்து பல தடவைகள் திருப்பிக் கொடுக்கப்பெற்றாலும் எந்தவித குணத்தையும் காட்டாது திடீரென்று குணத்தைக் காட்டவும் கூடும்.

மருந்து செய் கலை - பழங்காலத்தில் மருத்துவம் செய்வோரே மருந்து செய்பவராயும் இருந்தனர். இன்றைய நிலையில் மேனாட்டு மருந்து, ஒப்பு மருந்து முறைகளில் இந்நிலை பெரும்பாலும் மாறிவிட்டது. மருந்துகள் அனேகமாக அதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களால் ஒத்துக்கொள்ளப்பட்ட அளவுப்படி தயாரிக்கப்பெறுகின்றன. நம்நாட்டு மருத்துவங்களிலும் இம்முறை சிறிது சிறிதாக பரவிக் கொண்டு வருகிறது. இது தற்போதைய ஆட்பெருக்கம், கூடிவரும் தேவை, நாகரிகம் போன்றவற்றால் ஏற்பட்டதாயினும் மருந்துகளைத் தயாரிக்கும் முறைகள், நோயாளியைப் பரிசோதனை செய்து இன்ன மருந்து இதைத் தீர்க்குமென்ற கணித முறைகள், மருந்து களைச்சேர்த்துக் கொடுக்கும் கலைகள் போன்றவை தனித்தனியாய் நுட்ப மிகுந்தனவாய் வளர்ந்து கொண்டே வருவதாலும் ஆகும்.

ஆராயுமிடத்து சித்தர் மருத்துவப்படி மருந்துசெய் கலையை , மருத்துவக் கலையிலிருந்து பிரிப்பதில் பல இடர்கள் ஏற்படுவதை உணரலாம். இதில் இதுவரை சித்த மருத்துவத்திற்கென்று ஒப்புக்கொள்ளப்பெற்ற அலகுடன் கூடிய தரநிர்ணயம் செய்யப்பட்ட மருந்து நூல் இல்லாமை முதற் காரணமாகும். தற்போது மருந்து நூல் என்ற பெயரில் வழங்கப்படும் ஒரு குறுநூல் உள்ளதென்றாலும் இதில் தற்கால விதிமுறைகளுக்கு ஏற்ப அமைந்த முறைகளும் தரநிர்ணய விதிகளும் இல்லை என்பதோடு சித்த மருத்துவத்தில் வெகுவாகப் பயன்படும் பல நூற்றுக்கணக்கான மருந்துகள் இதில் சேர்க்கப்படவில்லை என்பதும் இதை நல்லதொரு

மருந்து நூலாக ஏற்க முடியாமற் செய்கின்றன. மேலும் சித்தர் மருத்துவ முறைப்படி நோய்களைத் தீர்க்கின்றபோது காமாலைக்கென்றோ சுரப்பானுக்கென்றோ மருந்துகளை ஒதுக்க முடிவதில்லை. இவற்றிற்காகப் பொது மருந்துகள் உண்டெனினும் அவைகளின் உட்பிரிவு ஒவ்வொன்றுக்கும் சிறப்பான தனிமருந்துகள் உண்டு. பொதுவாக மருத்துவனிடம் அத்தனை மருந்துகளும் கையிருப்பில் இருப்பதில்லை. அவ்வாறு கையிருப்பு வைத்துக் கொள்வதும் கூடுமானதல்ல. எனவே ஒரு பிணியாளியைக் கண்டதும் அவனுக்கு 'வரட்கணம்' என்று தீர்மானமானதும் முதலில் கணத்துக்கான பொது மருந்தை அவ்வேளை, கொடுத்துவிட்டு, மறுபடி வரட்கணத்துக்கான சிறப்பு மருந்தை செய்து கொடுத்தல் நடைமுறை.

இதுவுமன்றி ஒரே பற்ப செந்தூரத்தை முடிக்கப் பல வழிகள் உண்டு. உதாரணமாக பவளத்தை, தேன், பழச்சாறு, முசுமுசுக்கை குப்பைமேனி, முயல்ரத்தம் போன்ற பல பொருட்கள் நீற்றும். இவ்வாறு செய்யப்பட்டவை அனைத்துமே பவளபற்பமாய் இருப்பினும் ஒவ்வொன்றும் வேறுபட்ட நோய்களில் வழங்கக் கூடியனவாகும். நிறுவனங்களில் செய்யப்படும் மருந்தில் வெறும் பவள பற்பம் என்று குறிக்கப்படுமாயின் அது எந்த முறையிற் செய்தது எந்த நோயைப் போக்கும் என்பனவற்றில் ஐயப்பாடு உண்டாகலாம். இதுபோலவே கட்டுவகைகளும் செந்தூர வகைகளும் ஆகும்.

மேலும் நிறுவனங்களில் பெருமளவாயும், வியாபார நோக்கோடும் மருந்துகள் செய்யப்படுகின்றன. இவற்றில் தனியொரு மருத்துவன் தன்னை அண்டிய பிணியாளிக்கு மருந்து செய்கையில் இருக்கின்ற கவனம் நிச்சயமாய் இராது. அரைப்பு விதி, எரிப்புத் திட்டம், மருந்துகளின் சேர்க்கை யாவும் மாறுபடலாம். அன்றியும் தானே மருந்துகளைச் சேர்க்கும்போது நல்ல கேடுறாத முதல் தரமான மருந்துப் பொருட்களையே மருத்துவன் சேர்ப்பான். ஆனால் பெருமளவில் செய்யும்போது தரமற்றதும், கேடுள்ளதுமான பொருட்கள் சேரக்கூடும். அன்றியும் மருந்துப் பொருளுக்கு மாற்றுப் பொருள் (Substitute) அல்லது போலிப் பொருள் (Adulterant)

சேருவதும் நிறையக் காணலாம். இவ்வகையால் செய்யப்படும் மருந்துகள் வன்மையில் குறைவானதாயும் சில வேளை தேவையில்லாத குணங்களுடையனவாயும் இருக்கலாம்.

சித்த மருத்துவத்தில் சிறப்பாக உலோக பாடாண மருந்துகளில் அரைப்பு விதிகள் பின்பற்றப்பட வேண்டும். குறிப்பிட்ட நேரம் அரைக்கப்பட்டாலும் கூட தற்காலம் நிறுவனங்களில் மின்சார எந்திரங்கள் பயன்படுத்தப்படுவதால் அதன் விரைவு, ஏற்படும் சூடு முதலியவை மருந்துகளுக்கு வேறுபட்ட குணத்தைக் கொடுக்கக்கூடும். இவ்வாறே சூரணங்கள் தற்காலத்தில் சிதைப்பான்களாலும் (Disintegrator) பொடிப்பான்களாலும் (Pulverizer) செய்யப்படுகின்றன. இவையும் மேற்கண்ட மாறுதல்களை உண்டாக்கத் தக்கவையே. இதுவன்றி குறிப்பிட்ட விறகால் எரிக்க வேண்டும் என்றும், குறிப்பிட்ட கலங்கள், அகப்பைகள், தள்ளுவான்கள் போன்றவை பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறுமிடங்களிலெல்லாம் அவ்விதி முறைகள் பயன்படுத்தப்பெறாமல் விடப்படலாம்.

பற்ப செந்தூரங்கள் செய்ய ஒவ்வொன்றும் இன்ன வகை புடத்தில் போடவேண்டும் என்று கூறப்பெற்றுள்ளது. இதில் எடுக்கப்படும் எரிபொருள் (வரட்டி, கரி, உமி, ஆட்டெரு) அவற்றின் அளவு ஆகியவை குறிப்பிடப்பெற்றிருக்கும். இவைகளையும் நிறுவனங்களில் கையாளுவது கடினம். தற்காலம் மின் உலை (Furnace) களும் பற்ப செந்தூரம் செய்ய பயன்படுகின்றன. இவற்றில் தேவையான அளவு சூட்டை ஏற்றியும் இறக்கியும் கொடுக்க முடியும் என்றாலும் வரட்டி போன்றவற்றினால் கொடுக்கப்படும் அளவுக்கு படிப்படியாக ஏறும் சூடும், நிற்கும் சூட்டின் அளவும் நேரமும், பின் குறையும் தன்மையும் சீராகக் கொடுக்க முடிவதில்லை.

நிறுவனங்களில் பலரை வேலைக்கமர்த்துவதாலும் அவர்கள் ஒவ்வொருவரும் மருந்து செய்கலையை அறியாதவர்கள் என்பதாலும் யாரேனும் சிலர் மேற்பார்வை செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவ்வாறு கண்காணிப்பது பல நிலைகளில் போதுமானதாக இருப்பதில்லை. அதோடு மருந்தில் கலக்கப்படும் உயர்விலை மருந்துகள் களவாடப்படும் நிலையும் உருவாகிவிடுகிறது.

இவ்வாறன்றி வேறு பல நிலைகளிலும் பெருமளவில் நிறுவனங்களால் மருந்து செய்யப்படும்போது சில சிரமங்கள் உண்டாகின்றன. இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து மருத்துவன் தானே தனது பிணியாளருக்கு மருந்துகளைச் செய்து கொடுக்கும் முறையே நாட்டு மருத்துவங்களுக்கு உகந்தது என்ற முடிவுக்கே வர வேண்டியுள்ளது. எனவே, நாட்டு மருத்துவர்கள் அதிலும் குறிப்பாக சித்த ஆயுள்வேதியர் மருந்து செய்கலையை தெளிவாகத் தெரிந்திருத்தல் வேண்டும்.

## மருந்துசெய் நிலையம்

மருந்துசெய் நிலையம் எவ்வாறு அமைய வேண்டும் என்றும் அதில் பயன்படும் கலங்கள், கருவிகள் பற்றிய பழங்கால அமைப்புகள் பற்றியும் தேரையர் தைலவருக்கச் சுருக்கத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அதில் கூறப்படும் பல பொருட்கள் சிறப்பாயுள்ளன. அவற்றை அந்நூலில் கண்டு கொள்ளலாம். தற்காலத்தில் பல வசதிகளையும் மனதில் கொண்டு ஏற்படுத்தப்படும் மருந்துசெய் நிலையம் அமையும் விதத்தை இங்கு சுருக்கமாகக் காணலாம்.

மருந்துசெய் நிலையம் (1) மருந்துச் சரக்குப் பண்டக சாலை (Raw Drug store) 2) பாகசலை - (சுத்திச்சாலை, அளவைச் சாலை, பலவித புடச்சாலை, உலைச்சாலை, எரிப்புச் சாலை, உலர்த்துசாலை, உரற்சாலை, அம்மிச் சாலை, கொழிசாலை, வடிகட்டுஞ்சாலை, அரை எந்திர சாலை, பொடியாக்கு எந்திர சாலை, மாத்திரை எந்திர சாலை, சல்லடை எந்திர சாலை, கருவிச் சாலை என்பன போன்ற பல அடங்கியது) 3) மருந்துப் பண்டகசாலை (Prepared Medicine Store) ஆகியவைகளைத் தன்னுள்ளடக்கியது. பிணியாளி பரிசோதனைச் சாலை, மருத்துவச் சாலை, சத்திரச் சாலை, மருந்து விநியோக சாலை என்பன இதைத் தவிர்த்து தனியாய் இருக்கும்.

மருந்துச் சரக்குப் பண்டகசாலையில் பல்வேறு வழிகளிலும் சேகரிக்கப்பட்ட மருந்துப் பொருட்களும், விலைக்கு வாங்கப்பட்ட மருந்துப் பொருட்களும் காப்பாக வைக்கப்படுகின்றன. இங்கு எலி, பாச்சை, போன்றவைகளினால் அவைகள்

சேதப்படாதபடியும் ஒன்று மற்றொன்றோடு கலக்காதபடியும் வைக்கப்பட வேண்டும். மருந்துச் சரக்குப் பண்டக சாலையில் வைக்கப்படும்போது ஒவ்வொரு பொருளும் அது இன்னதென்று எழுதப்பட்ட அடையாளச் சீட்டுடன் வைக்கப்படுவது மிக அவசியமாகும். முடிந்தால் அச்சீட்டில் சேகரிக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட நாளையும் அதன் அளவு, எடை போன்றவற்றையும் குறித்து வைத்தல் நன்று.

மருந்துச் சரக்குகளைப் பத்திரப்படுத்தும்போது கூடுமான வரை வெளியிலோ அல்லது சணற் பைகளிலோ வைப்பதைத் தவிர்க்கலாம். ஆனால் பொருட்கள் மிக அதிக அளவில் உள்ளபோது இது கூடுமானதாய் அமையாது. அவ்வாறான நிலையில் முடிந்தவரை சீராயும் இடைவெளிவிட்டும் பைகளை வைத்திருக்கலாம். இதனால் கெடுதிவிளைவிக்கும் உயிரிகளின் தொல்லை சிறிது குறைக்கப்படலாம். எக்காரணத்தைக் கொண்டும் சரக்குப் பண்டகசாலைக்குள் பூச்சிகொல்லி மருந்துகளைக் கையாளக் கூடாது.

தாவரங்களில் காய்ந்ததும் அதிகளவு உள்ளவைகளைச் சீராகத் தறித்துக் கட்டி ஒழுங்காக அடுக்கி வைத்துக் கொள்ளலாம். நீர்முள்ளிச் சமூலம், வில்வவேர், வெள்ளிலோத்திரப்பட்டை போன்றவைகளை இவ்வாறு பத்திரப்படுத்தலாம். சுக்கு, கடுக்காய் போன்ற பொருட்களை அவை கொள்ளுமளவு பெரிய பெட்டிகளுக்குள் போட்டு வைப்பது நன்று. தாளிசம், திப்பிலி, ஓமம், மல்லி, மிளகு போன்ற சரக்குகளை மூடியுள்ள தகரப் பெட்டிகளுக்குள் சேமிக்கலாம். இவ்வகைப் பெட்டிகள் சரக்குகளின் அளவுக்குத் தக்கதாக பெரிது சிறிதாகச் செய்யப்பட்டு ஒரே தரமானவைகளை ஒரு நிரையிலும் மற்றவைகளை வெவ்வேறு நிரையிலுமாக அடுக்கி வைத்தால் பார்ப்பதற்கு நன்றாய் இருக்கும். புனுகு, கோரோசனை, இலிங்கம், பூரம் போன்ற சரக்குகளை வாயகன்ற கண்ணாடிப் புட்டிகளுக்குள்ளும், கிராம்புத்தைலம், இரசம் போன்றவைகளைக் குறுகலான வாயுள்ள கண்ணாடிப் புட்டிகளுக்குள்ளும் வைத்திருக்கலாம். பச்சைக்கர்ப்பூரம் போன்ற காற்றில் கரைவனவற்றை காற்றுப் புகாதபடி அடைத்து வைக்க வேண்டும். எண்ணெய்கள் குறைவான அளவுகளாய் இருந்தால் குறுகலான வாயுள்ள கண்ணாடிப்புட்டிகளில்

அடைத்தும் அதிக அளவில் இருந்தால் தகரக்கலங்களில் அல்லது பீங்கான் ஜாடிகளில் பத்திரப்படுத்தியும் வைக்கலாம். வெண்ணெயை ஒரு பெரிய ஜாடியில் சுத்தமான நீரை ஊற்றி அதில் போட்டு வைக்கவேண்டும். பால், பச்சை மூலிகை போன்றவைகளை குளிர்பதனப் பெட்டிகளில் வைத்துக் கொள்ளலாம்.

பொதுவாக உயர்ந்த விலையுள்ள புனுகு, கோரோசனை, குங்குமப்பூ போன்றவைகளையும், நச்சுத்தன்மையுள்ள வீரம், வெள்ளைப் பாடாணம், போன்றவைகளையும் தனித்தனியாக அதற்கேற்ற கலங்களிலிட்டு மூடி அடையாளச் சீட்டொட்டி பூட்டுள்ள பெட்டகங்களில் வைத்து பொறுப்புள்ள ஒருவர் கையில் ஒப்படைக்க வேண்டும்.

நச்சுத் தன்மையுள்ள பொருட்களுக்கு எழுதப்படும் அடையாளச் சீட்டு சிவப்பு மையில் எழுதப்படலும் மேலே "நஞ்சு" (Poison) என்று குறிக்கப்படலும் கட்டாயமானது.

பாகசாலை என்பது மருந்துச் சரக்குகளை அளவுப்படி சேர்த்து மருந்துகளைச் செய்யும் இடமாகும். ஒவ்வொரு தொழிலுக்கும் தனித்தனியான இடங்களை அமைத்துக் கொள்ளுவது சிறப்பென்றாலும் இருக்கின்ற இடவசதியை மனதில் கொண்டு இதை மாற்றியமைத்துக் கொள்ளலாம். பொதுவாக அளவைச்சாலை, நறுக்கல், பிளத்தல் கொழித்தல் உலர்த்தல், சலித்தல் போன்றவை செய்யக்கூடிய இடம், உலைச்சாலை, உரற்சாலை, அம்மிச்சாலை, சூரிய புடச்சாலை, தானிய புடச்சாலை, எருப்புடச்சாலை, எரிப்புச்சாலை, வைப்புச் சாலை, எந்திரங்களின் சாலை, கருவிச் சாலை என்பவைகள் தனித்தனியாய் இருப்பது நல்லது.

அளவைச் சாலையில் நிறுத்தலுக்குப் பயன்படுகின்ற பலவித துராசுகளும், அதற்கான எடைக்கற்களும், அளத்தலுக்கான கலன்களும் உயரம், நீளம் போன்றவைகளை அளக்கும் குச்சிகளும் நாடாக்களும் இருத்தல் வேண்டும். இவைகள் ஒரு அளவை செய்யும்போது ஏனையவற்றால் இடையூறுண்டாகாதபடி அமைக்கப்பட வேண்டும். உலர்த்தல் செய்ய நன்றாக வெயில் படும்படியும் தரையில் கற்கள் பாவப்பட்டதுமான ஒரு இடம் அமைய வேண்டும். இதை ஒட்டி, நிழலில் உலர்த்தல்,

கொழித்தல், சலித்தல் போன்றவைகளைச் செய்யுமிடத்தை கூரையுடன் அமைத்துக் கொள்ளலாம். நறுக்கல், உடைத்தல், பிளத்தல் போன்றவை செய்ய உடையாத கல்தரை பாவப்பட்ட இடம் நன்று. துருத்திகள் (Blowers) உலைகள் (Furnace) போன்றவைகளை நல்ல காற்றோட்டமுள்ள ஒரு விசாலமான அறையில் அமைத்துக் கொள்ளலாம். இதில் மிகுந்த வெப்பம் ஏற்படுவதால் அது அங்கு வேலை செய்பவர்களைத் தாக்காதவாறு அமைய வேண்டும். எரிப்புச் சாலையில் பல்வேறு அளவுகளுள்ள அடுப்புகள் போட்டு வைத்திருக்கலாம். எருப்புடச்சாலையில் புடத்தின் அளவுக்குத் தக்கனவாய் குழிகள் அமைத்து அதன் சுவர்களைச் சுட்ட செங்கற்களால் மணல் சரிந்து விழாதவாறு அமைத்துக் கொள்ளலாம். உலை, எரிப்பு, புடச்சாலைகளில், மிக்க உயரத்தில் தகரத்தினால் அல்லது தீப்பிடிக்காத சிமண்டு தகடுகளாலான கூரை வேய்ந்து கொள்வதும் எரியுமிடத்தில் வெளிக்காற்று மோதி தீயை அலைக்காதபடி சுற்றிலும் சுவர் எழுப்பி மேற்பகுதியில் நிறையத் திறப்புள்ள சாளரங்கள் அமைத்துக் கொள்வதும் சிறப்புடையது. உரல்கள், அம்மிகள், கல்வங்கள் போன்றவற்றை தனித்தனியான நிரைகளாக வைத்துக் கொள்ளலாம். தானிய புடம், உமிப்புடம் போன்றவற்றுக்கு ஒரு அறையை ஒதுக்கி தானியம், உமி போன்றவற்றை நிரப்பிக் கொள்ளத்தக்க தொட்டிகள் அமைத்துக் கொள்ளலாம். சிதைப்பான், பொடிப்பான், அரைப்பான் போன்ற எந்திரங்கள், குளிகை உருட்டி, மாத்திரையாக்கி எந்திரங்கள், மின் உலைகள் போன்றவை பயன்படுத்தப்பட்டால் அவைகளுக்கு தனித்தனியான விசாலமான இடங்களை அமைப்பதுமட்டுமன்றி, அவற்றில் சுழலும் சக்கரங்கள், பற்சக்கரங்கள், வார்கள் போன்றவைகள் வேலை செய்வோருக்கு கேடு விளைவிக்காதவாறு பாதுகாக்கப்படல் வேண்டும். மின்சாரக்கம்பிகள், இணைப்புகள், இயக்கிகள், விசைகள் போன்றவைகள் யாவும் விதிப்படி அமைக்கப்பட வேண்டும்.

சில மருந்துகள் செய்தபின் பல நாட்கள் பழக வைக்கப்பட வேண்டும். இதற்கும் அரிட்டாசவ மருந்துகளைப் பாண்ட வைப்பு செய்வதற்காகவும் ஊறல் வைப்பதற்காகவும் ஒரு இடத்தை ஒதுக்க வேண்டும். இவ்விடம் சாதாரணமாக

அடிக்கடி பழகாத இடமாக அமைதல் வேண்டும். இவையன்றி வசதிப்படி ஒவ்வொரு தொழிலுக்குமாக இடங்களை விரிவாய் அமைத்துக் கொள்ளலாம்.

மருந்து செய்வதற்குப் பயன்படும் பாத்திரங்கள், அகல்கள், சிறப்புக் கருவிகளான தீநீர் வாலை, மெழுகுத் தைலக்கருவி, இடுக்கிகள், அகப்பைகள், கரண்டிகள், தள்ளுவான்கள் போன்ற பொருட்கள் பயன்படாத வேளைகளில் பத்திரப்படுத்தத்தக்க ஒரு இடத்தை அமைத்து அக்கருவிகளையும் கலன்களையும் சீராக வைத்துக் கொள்ளும் விதங்களில் நிறுத்துவான்கள், தட்டுகள் போன்றவைகளை அமைத்துக் கொள்ளுமிடம் கருவிச்சாலை எனப்படும்.

முடிவுற்ற மருந்துளைப் பத்திரப்படுத்துமிடம் மருந்துப் பண்டக சாலையாகும். இங்கு வைக்கப்படும் மருந்துகள் ஒவ்வொன்றும் தனித்தனியாகவும் பற்ப செந்தூரங்கள், இளகங்கள், தைலங்கள் போன்றவை தனித்தனி நிரைகளாகவும் வைக்கப்பட வேண்டும். மருந்துகள் வைக்கப்படும் ஒவ்வொரு கலமும் கண்டிப்பாய் அது இன்ன மருந்தென்று அடையாளச் சீட்டு ஒட்டப்பட்டதாய் இருத்தல் வேண்டும். அடையாளச் சீட்டில் மருந்தின் பெயர் எந்த முறையில் முடிந்தது, மருந்து முடிக்கப்பட்ட நாள், முடிக்கப்பட்ட மருந்தின் எடை அல்லது அளவு, அதன் வீறுகெடாதிருக்கும் நாள் போன்றவைகள் குறிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு முறையும் செய்யப்படும் ஒரே மருந்தும் வேறுபட்ட கலங்களிலேயே வைக்கப்பட வேண்டும். ஒருமுறை செய்த ஒரு சூரணத்தை ஏற்கனவே செய்த சூரணத்துடன் கலக்கக் கூடாது. இவ்வாறு செய்வதால் அவற்றின் வீறு கெடாதிருக்கும் நாளளவு மாறுவதோடு, ஒன்றில் ஏதாவது கேடு ஏற்பட்டால் அது மற்றதிலும் கலக்க ஏதுவாகும். ஒரு மருந்து நிறைந்த அளவில் செய்யப்பட்டால் அதில் தேவையான சிறு அளவைத் தனிப்படுத்தி அவ்வப்போதுள்ள உபயோகத்திற்கு எடுத்துக் கொண்டு மீதியைப் பத்திரமாக வைக்கலாம்.

மருந்துகளைப் பத்திரப்படுத்தும் கலன்கள் சுத்தமானதாயும் மருந்துக்குத் தக்க செய்பொருள், அளவுகளிலும், தகுந்த மூடிகள் உடையதாயும் எடுப்பதற்கு அல்லது ஊற்றுவதற்கேற்ற அமைப்புடையவையாயும் இருத்தல் வேண்டும். நூற்களில்

கொம்புச் சிமிழ், மூங்கிற் குழல் போன்ற சிறப்பான கலங்களில் வைக்க வேண்டுமென்று கூறிய மருந்துகள் அவ்வக் கலங்களிலேயே வைக்கப்பட வேண்டும்.

சாதாரணமாக சூரணம், மாத்திரை, பற்ப செந்தூரங்கள், இளகங்கள் போன்றவை வாயகன்ற கண்ணாடிக் கலங்களில் வைக்கப்படலாம். உலோகங்கள், பாடாணங்கள் ஆகியவை சேரும் மருந்துகளை வைக்கும் கலங்கள் கண்ணாடியாலான மூடிகளால் மூடப்படல் வேண்டுமென்றாலும் எல்லா மருந்துகளும் கண்ணாடியாலான மூடிகளால் மூடப்படுவது நன்று. தைலம், நெய், தீநீர் போன்றவை சிறிய அளவில் இருந்தால் வாய் குறுகலான கல்மூடி அல்லது தக்கைமூடியிடப்பட்ட கண்ணாடிக் குப்பிகளில் வைக்கப்படலாம். இவை பெருமளவில் இருக்குமாயின் பீங்கான் ஜாடிகள், பிளாஸ்டிக் கலங்கள் பயன்படும். இளகங்கள், சூரணங்கள், களிம்புகள் போன்றவைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். குங்கிலிய வெண்ணெய், போன்ற மருந்துகளை நீரிலிட்டுப் பத்திரப்படுத்த வேண்டும். மருந்துகளின் அளவுக்குத்தக்கதான அளவுள்ள கலங்களை அவ்வப்போது தேவைக்கேற்ப எடுத்துக் கொள்ளலாம். ஒருமுறை பயன்படுத்தப்பட்ட கலம் மறுமுறை பயன்படுத்தப்படும்போது விதிப்படி நன்றாய் சுத்தம் செய்து உலர்த்தப்பட வேண்டும்.

மருந்துகளை முகக்கும் கருவிகள், எடுக்கும் கரண்டிகள் போன்றவை ஒவ்வொரு மருந்துக்கும் தனித்தனியாய் இருப்பது நல்லது. இது கூடாதவிடத்து அவை நன்கு சுத்தமாக்கப்பட்ட பின்னரே மற்றொரு மருந்தில் பயன்படுத்தப்பட வேண்டும். மருந்துகளை எடுத்து ஆளும் போதும் அளக்குமிடத்திலும், நிறுக்குமிடத்திலும் ஒரு மருந்து மற்றொன்றோடு உறவாவதைத் தடுக்கக் கூடிய விதிமுறைகள் அனைத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். தராசுகளில் நிறுக்கும்போது பற்ப, செந்தூர, மாத்திரைகளுக்கு தனித்தனியான எடை தெரிந்து கொள்ளப்பட்ட நெய்த்தாள் துண்டுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். எடுக்கப்படும் மருந்தின் அளவு மிக அதிகமாய் இருப்பின் அது விநியோகிக்கப்படும் கலத்தின் எடையைத் தெரிந்து கொண்டபின் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மருந்துசெய் நிலையம் சுகாதார விதிப்படியான இடவசதி, காற்றோட்டம், நன்னீர்வசதி, நெருப்பு, சூடு, மின்சாரம், எந்திரங்கள் இவைகளின்று பாதுகாப்பு, ஓய்வறை வசதி, கழிவறை, கழுவு சாதனங்கள் (சவுக்காரம், நகத்தூரிகை, துவாலை) குளியலறை வசதி, தீயணைப்பு சாதனங்கள், முதலுதவி மருந்துப் பெட்டகம் போன்ற அனைத்தும் அமைந்ததாய் இருக்க வேண்டும். அடிக்கடி கழுவக்கூடிய இடங்களைக் கழுவி உலரவிட்டுச் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும். கழிவு நீர் வெகு தொலைவுக்குச் செல்வனவாய் அருகில் தேக்கமடையாதவாறு வடிகால்கள் அமைக்கப்பட வேண்டும்.

மருந்துசெய் நிலையத்தில் அமைக்கப்படும் கருவிகள், எந்திரங்கள், தொழிலாற்றிடங்கள் ஆகியவற்றுக்கும் அங்கு வேலை செய்யும் ஆட்களுக்கும் தக்க விகிதத்தில் போதுமான இடவசதி வேண்டும். மிக்க நெருக்கமாகக் கருவிகளை அமைப்பதும் குறுகிய இடத்தில் பலபேரை வேலை செய்ய விடுவதும் பலவிதக் கேடுகளை உண்டாக்கும். எந்திர நெரிசலில் காயம் ஏற்படுதல், உடைத்தல், பிளத்தல் ஆகிய தொழிலில் இடையூறுண்டாதல், உயிர்காற்று குறைவு (பிராண வாயு) போன்ற பல துன்பங்கள் நேரலாம். காற்றோட்ட வசதியுள்ள சாளரங்கள் அமைத்தல் இன்றியமையாதது. மின்சார விசிறிகள் இயற்கைக் காற்றோட்ட சுகத்தைக் கொடுக்க இயலாது. கூரையின் அருகில் காலகற்றி (Exhaust) கள் அமைப்பது நன்மையுண்டாக்கும். எரிப்பு, புடம், ஆகியவை செய்யுமிடத்திலும் உலைச்சாலையிலும் மிகுந்த உயரத்தில் கூரையமைத்து சுவரின் மேல் உயரப்பகுதி முழுதும் காற்றோட்ட வலைகள் அமைப்பது அங்கு நல்ல காற்றோட்டத்தைக் கொடுப்பதுடன் வெளிப்படும் சூட்டையும் வெளிப்படுத்தும். மருந்துகளில் கலப்பதற்கும், கருவி கலங்களைக் கழுவுவதற்கும், ஆட்கள் கைகளைக் கழுவுவதற்கும், குளிப்பதற்கும் நன்னீர் இன்றியமையாதது. அன்றியும் அங்குள்ளோர் பருகுவதற்கேற்றவாறு குடிநீர் வசதி செய்யப்பட வேண்டும்.

நெருப்பு, சூடு இவற்றில் வேலை செய்வோருக்கு அதற்கேற்றவாறான தீப்பிடிக்காததும் சூடு தாக்காததுமான ஆடைகள் கொடுப்பதும், உலைகளில் பணியாற்றுகிறவர்களுக்கு தகுந்த புகைக்கண்ணாடி, கையுறை போன்றவை கொடுப்பதும்

வேண்டும். மின்சாரக் கம்பிகள், மின்சார உபகரணங்கள் யாவும் முறைப்படி காப்புச் செய்யப்பட வேண்டும். எந்திரங்களில் சக்கரங்கள், வார்கள் போன்றவைகளும் ஆட்களுக்கு ஊறு ஏற்படாவண்ணம் மூடப்பட்டு இருக்க வேண்டும்.

மருந்துசெய் நிலையத்தில் வேலை செய்பவர்கள் உணவு உண்ண, ஓய்வெடுக்க வசதியான இடம், கழுவு சாதனங்கள், குளியலறை, கழிவறை போன்றவைகள் அமைந்திருக்க வேண்டும். கழுவு சாதனங்களாக எண்ணெய்ப் பொருள் அழுக்கு போன்றவற்றை நீக்கத்தக்க சவுக்காரம், ஈயம் போன்ற பொருட்கள் பாடாணங்கள் கையாண்டபோது கைகளைத் தேய்த்துக் கழுவ தும்புத் தூரிகை,. நாரித்தூரிகை, கம்பித் தூரிகை, ஈரத்தைத் துடைக்கத் துவாலை ஆகிய பொருட்கள் வைக்கப்பட வேண்டும்.

தற்செயலாய் அடுப்பு, உலை, புடம், மின்சாரம் போன்றவற்றிலிருந்து தீப்பிடிக்கும் அபாயம் மருந்துசெய் நிலையத்தில் உண்டு. தைலங்கள், நெய்கள் காய்ச்சுகையில் தீப்பற்றுவதும், மெழுகுத் தலைக் கருவி தீப்பிடிப்பதும் இயற்கையாகும். தைலம் காய்ச்சுகையில் தீப்பற்றிக் கொண்டால் அடுப்பில் தீயை அகற்றுவதும் காய்ச்சும் கலத்தை ஒரு மேற்கலத்தைக் கொண்டு வாய்பொருந்த மூடுவதும் தீயை அணைக்கும். மெழுகுத் தைலம் செய்யும்போது கருவியின் நுண்துளையினூடாக நெய்ப்புப் புகை வெளி வந்ததும் தீப்பிடிக்கும். இதை அணைக்க நன்றாக நீரில் தொய்த்த சணற்கோணிகளைத் தயாராக வைத்திருந்து அவற்றால் கருவியைப் போர்த்தி மூடவேண்டும். இவ்வாறு செய்ய தீ அடங்கும். மிஞ்சிய தீ ஏற்பட்டக்கால் அதை அணைப்பதற்குத் தயாராக மணல் நிரப்பிய வாளிகள், தீயணைக்கும் வாயுக்கருவிகள் போன்றவை தேவையான எண்ணிக்கையில் தேவையான இடத்தில் வைக்கப்பட வேண்டும். தீயணைக்கும் முறைகள், பொருட்களையும் ஆட்களையும் தீயினின்று மீட்கும் முறைகள் ஆகியவற்றில் இங்கு வேலை செய்வோருக்குப் பயிற்சியும், மீண்டும் நினைவூட்டு வகுப்புகளும் நடத்தப்பட வேண்டும். காயம்படுதல், தீச்சூடு, வேக்காடு, மூர்ச்சை போன்ற திடீர் அபாயங்களும் மருந்துகளின் ஒவ்வாமை, சூடு, அழற்சி இவற்றால் சில கேடுகளும் இங்கு வேலை

செய்பவர்களுக்கு உண்டாகலாம். இதில் உதவும் பொருட்டு முதலுதவி மருந்துப் பெட்டகம் மருந்துசெய் நிலையத்தில் வைக்கப்பட வேண்டும். அங்கு பணி செய்பவர்களில் சிலருக்காவது முதலுதவி சிகிச்சை பற்றிய அறிவைப் புகட்டுவது நன்று.

இங்கு கூறப்பட்டுள்ளவையன்றி வேண்டிய இடத்துக்குத் தகுந்தவாறு மாற்றங்களைப் புகுத்தியும் சிறப்பாக அமைத்தும் மருந்து செய்நிலையத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

# மருந்து செய்யப் பயன்படும் கலங்களும் கருவிகளும்

நாட்டு மருந்துகள் செய்யப் பலவித கலங்களும் கருவிகளும் தேவைப்படுகின்றன. இவற்றைப் பொதுவானவை சிறப்பானவை, புதியவை என்று பிரிக்கலாம். பொதுக் கருவிகள் இன்ன மருந்திற்கென்று குறிப்பிட்டு பயன்படாமல் அனேகமான மருந்துகளின் செய்முறைகளில் பயன்படுவனவாகும். சிறப்பான கருவிகள், அமைப்பு, தன்மை இவற்றால் தனித்து நின்று குறிப்பிட்டதொரு மருந்துக்காவது சில மருந்துகள் செய்வதற்காவது பயன்படுவன. இவைகளின்றி தற்காலம் புதிதாகத் தோன்றியுள்ள பல கருவிகளையும் நாம் மருந்து செய்யும்போது பயன்படுத்துகிறோம். இவைகள் புதிய கருவிகளாகும். இவைகளைப் பற்றிய மிகச் சுருக்கமான விளக்கம் மட்டுமே இங்கு கூறப்படுகிறது.

## பொதுக்கருவிகள்

**அகல் :** இது பற்ப செந்தூரங்களை நீற்றுமிடத்தில் பயன்படும் கருவியாகும். அகல் நல்ல தரமான களிமண்ணால் செய்யப்பட்டு சூளையில் சுட்டு எடுக்கப்பட்டதாகவும், வெவ்வேறு அளவுள்ளதாகவும் இருக்கும். பொதுவாய் இது தட்டையாக அகன்று வட்டித்ததாய் ஓரம் சற்றே மிதக்க விளிம்புகள் சீரானதாயும் சிறிது அகன்று அதே அளவுள்ள மற்றொரு அகலின் விளிம்பு நன்றாகப் பொருந்துவதாயும் அமைய வேண்டும். இவ்வாறான இரண்டு அகல்கள் ஒன்றன்மேலொன்று வாய் பொருந்தும்படிச் சீராய் அமைய

அவற்றைச் சீரான சிமிட்டுத் தரையில் கவிழ்த்து வைத்து விளிம்பைத் தேய்த்துக் கொள்ள வேண்டும். இரு அகல்கள் வாய்பொருந்த மூடப்படும்போது அவற்றுக்கிடையே ஏற்படும் இடத்தில் புடமிட்டு பற்ப செந்தூரமாக்கப்பட தட்டி உலர்த்தப்பட்ட வில்லைகள் வைக்கப்பட்டு, பொருந்திய வாய்கள் அரைத்த புற்றுமண் தடவிய துணி நாடாவால் சுற்றப்படும். இது சீலைமண் செய்தலாகும். மருத்துக்கும் புடத்தின் அளவு, தன்மைக்கும் தக்கதாக சீலை மண்ணின் எண்ணிக்கை அமையும். சாதி, சம்பிரக் குழம்பு செய்வதற்கும், சுரசங்கள் செய்வதற்கும் அகல் பயன்படும்.

சட்டி : அகலைப் போன்ற எல்லா அமைப்புகளுடனும் உள்ளிடம் ஆழமாகவும், ஓரம் உயரமானதுமாய் அமைந்த கருவியாகும். காய்ச்சுதல், சுரசமாக்குதல், எரித்தல், வறுத்தல் போன்ற பல தொழில்களில் தேவைக்கேற்றவாறு இது பயன்படும். இதுவும் பல அளவுகளில் செய்யப்படும்.

பானை : குடிநீர், தைலம் போன்றவை காய்ச்சவும், ஊறல், பாண்ட வைப்பு போன்றவை செய்யவும் பயன்படும். இது ஆழிய அகன்ற உருண்டையான உடலையும் மேலே குறுகலான கழுத்தையும் அதன்மேல் சற்றே விரிந்த வாயையும் உடையது. இக்கழுத்தும் வாயும் மிகக் குறுகலாய் அமைந்தால் அது குடம் எனப்படும். இக்கலங்களும் பல அளவினதாயும், பலவித தோற்றமுடைய உடலைக் கொண்டதாயும், அடித்தூர் வட்டித்தோ அல்லது நிறுத்தக்கூடியவிதமாய் தட்டித்தோ செய்யப்பட்டதாயும் இருக்கும்.

பொதுவாய் குடிநீர், தைலம் போன்றவை காய்ச்சப்படும் பானைகள் நீர் மட்டும் விட்டும், நீரில் சிறிது மண் கரைத்தும் முதலில் அடுப்பேற்றிப் பழக வைக்கப்படும். எனினும் சில மருந்துகள் செய்முறையில் புதிய மட்கலங்களே பயன்படும். பொதுவாக ஒரு மருந்து செய்த மட்கலங்களை அதே மருந்துக்கே ஒதுக்குவது நன்று. முடியாத இடத்து ஒருவகையான மருந்துகளுக்கென்று சில மட்கலங்களை ஒதுக்கிக் கொள்ளலாம்.

மருந்துகளிட்டு பூமியுள் புதைத்து வைத்தெடுக்கும் அய சம்பிரக் கற்பம் போன்றவைகள் செய்யப்படும்போது இக்கலங்கள் பொருத்தமான மூடியால் மூடப்பட்டு சீலை செய்யப்படும். தீநீர்

வடிக்க வைக்கப்படும் ஓம ஊறல், பல நாட்கள் வைத்தெடுக்கும் திராட்சைப் பழப் புளிப்பு, அரிட்ட ஆசவம், பல மாதங்கள் வைத்தெடுக்கும் காடி போன்றவைகள் செய்யப்படும்போது கலங்களின் வாயில் பிற பூச்சிகள் நுழையாதவாறு காப்பாக மூட வேண்டும்.

சட்டி, பானை போன்ற மட்கலங்கள் பயனாகும் சில இடங்களில் தகுந்த வெண்கல, பித்தளைப் பாத்திரங்களும் பயன்படலாம். பித்தளைப் பாத்திரங்கள் களிம்படையும் தன்மையனவாதலின் அவை அடிக்கடி ஈயம் பூசப்பட வேண்டும். இரசாதி மருந்துகள், பாடாணங்கள் போன்றவை சேரும் மருந்துகள் உலோகக் கலத்தொடர்பில்லாமற் செய்வது நன்று மட்டுமன்று; சில இடங்களில் கண்டிப்பானதும்கூட என்றறிய வேண்டும். தற்கால வழக்கிலுள்ள நிலை வெள்ளி (Ever silver) கலங்களையும் பொருத்தமான இடங்களில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**வறு ஓடு** : இது பொருட்களை வறுப்பதற்காகப் பயன்படும் கருவி. பொதுவாய் பானை போன்ற கலங்களின் உடலில் ஒரு சரிவான பாதியை உடைத்துவிட்டு அதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். அன்றியும் அகல், சட்டி போன்றனவும் மண், உலோக கலங்களும் இதற்குப் பயன்படும்.

பொருட்களைச் சிறிது அதன் நீர்த்துவம் வற்ற வறுத்தல் புன்வறலாகும். நன்றாகக் கரியாகு மட்டும் வறுத்தல் கருக்குதலாகும். பொருட்களை வறு ஓட்டுக்குள்ளிட்டு அடுப்பேற்றி அகப்பை அல்லது துடுப்பு கொண்டு அடிக்கடித் துளாவிப் புரட்டிக் கொடுத்து வறுக்க வேண்டும்.

அயவீரச் செந்தூரம் வறுத்துச் செய்யும் சிந்தூரமாகும். இதற்கு சட்டி அல்லது அகல் பயன்படுத்தப்படலாம். துளாவுதற்குத் தென்னை ஈர்க்கைக் கற்றையாகச் சேர்த்துப் பயன்படுத்த வேண்டும். பாடாணங்கள், புகையும் சரக்குகள் போன்றவை வறுக்கும்போது ஏற்படும் புகை, நாசியில் புகாதபடி அப்புகை செல்லும் திசைக்கு எதிர்த்திசையில் நின்று வறுக்க வேண்டும்.

**தாளி** : எண்ணெய் காய்ச்சுதல், இளகம் கிளறுதல், அண்டத் தைலம் செய்தல் போன்றவைகளில் இது பயன்படும்.

அனேகமாய் இது உருக்கு மண்ணால் செய்யப்படும். இது அரை உருண்டை வடிவினதாய்க் குழிந்தும் விளிம்பில் கைப்பிடிகள் பொருத்தப்பட்டுமிருக்கும்.

மூடிகள்: சட்டி, பானை, குடம், பலவகை உலோகக் கலங்கள் போன்றவைகளை மூடும் விதத்தில் அமைந்துள்ள வட்டித்த தகடு போன்ற அல்லது சற்றே குழிந்த விளிம்புடனோ அல்லது விளிம்பற்றோ இருக்கும் கருவிகள் மூடிகளாகப் பயன்படும். இவை மண், உலோகம் போன்றவற்றாலாகலாம். அன்றியும் சிமிழ்கள், குப்பிகள் போன்றவற்றுக்கும் அவற்றுக்குத்தக்க மூடிகள் உண்டு. ஆடிக்கலங்கள், ஆடிக்குப்பிகள் போன்றவை தகடு, தக்கை, கல், மாக்கல், ஆடி போன்ற பலவிதப் பொருட்களால் பலவித அளவுத் தன்மைகளில் மூடிகளைப் பெறும். உள்ளேயிடப்பெறும் பொருட்களைக் காப்பாக வைத்திருக்கவும், கொட்டாதபடியும், ஆவியாகப் போகாதபடியும் காற்று நுழையாதபடியும், நுண்ணுயிர்கள் உட்புகாதவாறும் இம்மூடிகளமையும். சில வேளைகளில் மூடிக்கும் மேலாக காப்புறை, அரக்குக் கவசம், மெழுகுக் கவசம், பலவித கலப்புத் தடுப்பு வழிகள் போன்றவை கையாளப்பட்டிருக்கும். சில மூடிகளில் துளைகளும் போடப்பட்டிருக்கும். பல துளைகளுள்ள தகடு போன்ற மூடி சில்லிடை எனப்படும். பானை அல்லது சட்டியின் உள்ளேயுள்ள கடினப் பொருட்களிலிருந்து நீர்மப் பொருட்களைப் பிரித்தெடுத்து வடிக்க இது உதவும்.

தட்டு : வட்டித்த அல்லது சதுரமான அல்லது பலகோணமுடைய தட்டையான கருவி தட்டாகும். தட்டு விளிம்புடையதாகவோ அல்லது இல்லாமலோ இருக்கலாம். மூடி பயன்படும் இடத்தில் தட்டு பயன்படுவதும் அகலே தட்டாகப் பயன்படுவதும் உண்டு. பொதுவாய் நீர்த்தன்மைப் பொருட்கள், மாத்திரைகள், தட்டிய வில்லைகள் போன்றவற்றைக் காயவைத்துலர்த்த தட்டுகள் பயன்படும். அன்றியும் எடைகாட்டிகளில் பொருட்களையும், எடைக்கற்களையும் வைப்பதற்குப் பயன்படும் உறுப்புகளும் தட்டுகளே. தட்டுகள் மண் அல்லது பலவிதமான உலோகங்களால் ஆக்கப்படலாம்.

அகப்பை : இது மூழி என்று தேரையரால் குறிக்கப்படுகிறது. பொதுவாக இது சிரட்டையின் ஒரு பாதியை மேலுள்ள நார்

நீக்கி இரண்டு துளைகள் செய்து அவற்றுள் தேவைக்கேற்ற அளவு நீளமான குச்சிகளைச் செதுக்கி மாட்டிக் கொள்வதாகும். குடிநீர், தைலம், காய்ச்சுங்கால் கலக்கிவிடவும் நீர்ப்பொருள், கடினப் பொருள் போன்றவற்றை முகந்தெடுக்கவும் அகழ்ந்தெடுக்கவும் இக்கருவி பயனாகும். சிரட்டைக் குச்சிக்குப் பதிலாக உலோகங்களினாலும் இதைச் செய்து கொள்ளலாம். அகப்பையில் தகட்டகப்பை, சில்லியகப்பை அல்லது கண்ணகப்பை, துளைக்கிட்டியகப்பை, குவையகப்பை, முட்டையகப்பை, திரியக்கு அகப்பை, கச்சகப்பை போன்ற பலவகைகளுண்டு.

**கரண்டி** : பொதுவாய் எடுக்க அல்லது முகக்கக் கூடிய ஒரு பகுதியும் அதனோடிணைந்த நீண்ட கைப்பிடியும் உடையது. அகப்பை தகட்டகப்பை முட்டையகப்பை போன்ற பல வடிவங்களில் பலவித அளவுகளில் கரண்டிகள் உண்டு. பொதுவாய் உலோகங்களினாலும், தற்காலம் சுடுகளி (plastic) யினாலும் இவை செய்யப்படும். தங்கம், வெள்ளி, தந்தம் இவற்றாலும் இவை ஆக்கப்படலாம். மருந்துகளைக் கலக்க, எடுக்க பலவிதங்களில் பயன்படும்.

. **துடுப்பு**: படகைச் செலுத்த உபயோகமாவது போன்ற நீண்ட உருண்டையான கைப்பிடியும் சற்றே தட்டித்தகன்ற உடலுடனும் கூடிய கருவி துடுப்பு எனப்படும். இது மரத்தாலும் உலோகத்தாலும் செய்யப்படலாம். களி, இளகம் போன்றவற்றைக் கிளறப் பயனாகும்.

**சலாகை** : இது மெல்லிய நீண்ட உருளை வடிவினதாகும். ஆடி, உலோகங்களால் ஆனது. கலக்கவும், கிளறவும் பயன்படும்.

**மத்து**: இது பொதுவாய் மரத்தாலானது. சுடுகளி, (பிளாஸ்டிக்) உலோகம் இவற்றாலான மத்துகளும் உண்டு. பொருட்களைக் கடைவதற்கு இது பயன்படும். வட்டித்த அரை உருண்டை வடிவ உடல் அல்லது வட்டித்த பகுதியின் மேல் முக்கோண கூம்பு வடிவப் பற்கள் அமைந்த நீளவட்ட உடலும் அதன்மேற்பகுதி நடுவில் அமைந்த நீண்ட உருளைகோலும் இணையப் பெற்றதாகும். முன்வகை கீரை மத்தென்றும் பின்வகை தயிர் மத்தென்றும் பெயர்பெறும். குங்கிலிய வெண்ணெய் செய்வதற்குத் தயிர் மத்து பயன்படும்.

**தள்ளுவான்** : கல்வத்தில் பொருட்களை அரைக்கும்போது ஓரத்தில் ஒதுங்கும் கற்கத்தைத் தள்ளி விடுவதற்காகப் பயன்படும். உலோகம், மரம், மூங்கில், சிப்பி, பனை ஓலை போன்றவைகள் இதற்குப் பயன்படும். சாதாரணமாக உலோகங்களாலான தள்ளுவான்களைப் (Spatula) பயன்படுத்துகிறோம். எனினும் பாடாணம், உப்பு வகை, இரசக் கூட்டுப் பொருட்கள் போன்றவை சேரும் மருந்துகள் அரைக்கும்போது உலோகத்தாலான தள்ளுவான்களைப் பயன்படுத்தலாகாது.

**இடுக்கி அல்லது பற்றுக்குறடு** : இவை தீ அல்லது சூடு சம்பந்தப்பட்ட பொருட்களைப் பற்றி எடுப்பதற்கு உதவுகிற கருவிகளாகும். இடுக்கியைச் சாமணம் என்றும் அழைப்பர். விசேதனத்துக்குப் பயன்படுவது போன்ற அமைப்புடன் அல்லது சிறிது மாறுபட்ட அமைப்புடனும் கனமான பொருட்களைப் பற்றுவதற்கு குறட்டின் அமைப்பிலும் இவை செய்யப்படும். தைலங்களின் கற்கதிரவியங்களைக் கிழிகட்டிப் பிழியவும் இடுக்கி பயன்படும். சாதாரணமாக இரண்டு நீண்ட பட்டையான உலோகங்களை ஒருமுனைகள் ஒரு வில்லோடு இணைத்தும் மறுமுனைகள் விடுபட்டு இருக்குமாறும் அமைத்துக் கொள்ளுவதாகும், விடுபட்ட முனைகளைப் பட்டையாகவோ கூர்மையாகவோ தேவைக்கேற்றவாறு செய்து கொள்ளலாம். விடுபட்ட முனைகளுக்கிடையில் பற்றவேண்டிய பொருளை இருக்கச் செய்து இரண்டு பட்டைகளையும் நெருக்கிப் பிடித்துப் பற்றி எடுக்கலாம். குறட்டமைப்பில் செய்துகொள்ளும் பற்றிகளில் இரண்டு பட்டைகளும் நடுவில் ஒரு ஆணியால் விரிந்து சுருங்கத்தக்க மாறல் அமைப்பில் சேர்க்கப்பட்டிருக்கும். கைப்பிடியாகப் பயன்படும் பகுதி, பொருளைப் பற்றும் பகுதியை விட நீளமானதாய் இருக்கும். அனேகமாக பயன்படும் இடத்துக்குத் தக்கதாக இக்கருவிகள் மாறுபட்ட அமைப்புகளிலும், அளவுகளிலும் வடிவங்களிலும் செய்யப்படும். பரகரை வாங்கி, முள்ளுவாங்கி போன்ற சத்திரங்களும் இவ்வகைப்படுவனவேயாகும்.

**வடிகட்டி**: நீர்மப் பொருட்களைக் கடிமங்களினின்று பிரிக்கவும், நுண் துகள்களைப் பருத்தவைகளினின்று பிரிக்கவும் பயன்படுவது வடிகட்டியாகும். இதைச் சல்லடை, சலிப்பான்,

அரிப்பு என்றும் சொல்லலாம். சாதாரணமாக துணியினூடகம் செலுத்திப் பலவற்றை வடிகட்டிக் கொள்ளலாம். இதற்கு அவ்வப்போது புதியதான துணித்துண்டுகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பொதுவாய் எண்ணெய் போன்றவை துணியினூடு வடிகட்டப்படும் போது அதில் துணி தோய்வதால் கொஞ்சம் எண்ணெய் சேதமாகும். பொடிகளை நுண்ணியதாகச் சலிக்கவும் துணி பயன்படும். இவ்வாறு செய்வதற்குத் துணிச்சலிப்பு அல்லது வஸ்திரகாயம் என்று பெயர், நீர்களைப் பஞ்சினூடாகவாவது அல்லது வடிகட்டும் தாளினூடாகவாவது வடித்துக் கொள்ளலாம். தயாரான வடிகட்டிகள் பலதரத்திலும் பல அமைப்பிலும் உண்டு. நீர்களை வடிகட்டுவதற்கானவை குறுகலாயும் வட்டமாயும் அமைந்திருக்கும். இவைகளில் சலிக்கும் பொருளாக செயற்கை நார்வகைகள் அல்லது உலோகக் கம்பி இழைகள் போன்றவை பின்னப்பட்ட வலையும் அதை இடத்தில் அசையாமல் இறுக்கிப் பிடிக்கத்தக்க சுற்று வளையமும் இருக்கும். சில வேளைகளில் பனை, தென்னை போன்றவற்றில் ஓலையின் மட்டையின் பக்கங்களிலுள்ள வலைபோன்ற சில்லாட்டையும் வடிகட்டுவதற்குப் பயன்படும்.

**குவித்தூற்றி புனல்** : நீர்மப் பொருட்களை வாய் குறுகலான குப்பிகளுக்குள் ஒருமுகப்படுத்தி, வழிந்து சேதமாகாமல் ஊற்றுவதற்குப் பயன்படும் கருவி **குவித்தூற்றி** எனப்படும். ஆடி, சுடுகளி, உலோகம் போன்றவைகளால் இது செய்யப்பட்டிருக்கும். மேலே விரிந்தும் கீழே செல்லச் செல்லக் குறுகிக் கடைசியில் ஒரு குழலாய் முடியும். குழலான பகுதியை குப்பி வாயுள் நுழைத்து நிலைப்படுத்தி வைத்து அகன்ற மேல்வாயினூடாக திரவப் பொருள் ஊற்றினால் அது வெளியில் சிதறாது குப்பிக்குள் சேரும். குழற்பகுதி தொடங்கும் இடத்திற்கு மேலாக குவித்தூற்றியில் உள்ளே பஞ்சு,வடிதாள் போன்றவற்றை நிலைப்படுத்தி நீரை அதனூடாக வடிகட்டலாம்.

**புரிமணை** : பானை, சட்டி, குடம் போன்ற பகுதிவட்டத்தார்களைக் கொண்ட கலங்களை நிறுத்தி வைக்கப் பயன்படுவது புரியணை அல்லது புரிமணை எனப்படும். இது ஆண் தருப்பை , பச்சைக் கொடி, தென்னை நார், வாழை

நார், பிரப்பங்கோரை, தாழை விழுது, ஆலம் விழுது, வைக்கோல், மூங்கில், பிரம்பு, பூங்கொத்து முதலியவைகளால் வட்டமாகக் கலத்தினது தாரைத் தாங்கவும், சுமக்கவும் உதவும். பூமியில் படாதபடியும் உருளாதபடியும் வைக்கவும் உதவும். உலோகங்களாலான புரிமணைகளும்நெகிழுங்களா (Rubber) லான புரிமணைகளும் தற்காலம் கிடைக்கின்றன.

**கத்தி, அரிவாள், வெட்டுக்கத்தி** : இவை பொருட்களை வெட்டவும், சீவவும், தறிக்கவும், பிளக்கவும் பயன்படும் கருவிகளாகும். பொதுவாக தகடான ஒருபகுதியும் கைப்பிடியான மற்றொரு பகுதியுமுடையது. தகட்டுப் பகுதியில் நுனி வட்டித்தோ, சதுரமாகவோ கூராகவோ இருக்கலாம். தகட்டின் ஒரு ஓரம் நன்றாகத் தேய்க்கப்பட்டும் சாணை பிடிக்கப்பட்டும் கூரானதாக இருக்கும். இதுவே வெட்டுவாயாகும். வெட்டுவாய்ப் பகுதியின் பட்டை உருக்கினால் அல்லது எஃகினால் தேவையான நீள அகலங்களில் செய்து கொள்ளப்படலாம். கைப்பிடி அக்கருவியைத் தொழிலில் கையாளுங்கால் அழுத்தாமலும், கையை விட்டு நழுவாமலும் இருக்கத்தக்கதாய் உருளையாய் அல்லது மாட்டுக் கொம்பு, மான்கொம்பு, சுடுகளி (Plastic) போன்றவைகளினால் குழப்பப்பட்டும் இருக்கும். அறுவைச் சிகிச்சை முதல் மரம் வெட்டுவது வரையில், நுண்ணியது முதல் கடுமையான வேலைகட்கு உதவும் வகையில் பலவாறு இது செய்யப்படும். வெட்டுவாய் பல்பல்லாய் அமைத்துக் கொள்ளுவது பற்கத்தி, சத்திரம், அறுவாள் (ரம்பம்) என்று பலவகையானதாகும். அரிவாள் வளைந்த அரைவட்டவடிவானதாய் (கருக்கு அரிவாள்) அமைந்த தானியங்கள், புல் போன்றவைகளை அறுக்கப் பயன்படும்,

**சுத்தி, சம்மட்டி** : உலோகங்களைத் துருத்தி அல்லது உலை முகத்தில் அடிக்கவும், கடுக்காய் , தான்றிக்காய் போன்ற பொருட்களை உடைத்து கொட்டையை நீக்கவும் இவை பயன்படுகின்றன. பொதுவாய் உலோகத்தால் பல அளவுகளில் செய்யப்பட்டாலும் மரத்தாலானவையும் உண்டு, இதைக் கொட்டாப்புளி என்று கூறுவர்.

**உளி:** வில்வவேர் போன்றவைகளைப் பிளக்கவும், சேராங்கொட்டையின் பழப்பகுதி வெட்டி நீக்கப்படவும் உளி பயன்படும். உருக்காலான பட்டையான ஒரு பகுதியும் அதனோடிணைந்த கைப்பிடியும் கொண்டது. வெட்டுமுகப்பகுதி தீட்டப்பட்டுக் கூர்மையாய் தேவைக்கேற்ற அகலங்களில் இருக்கும். திருகாணிகளைக் கழற்றுவதற்குப் பயன்படுவது திருப்புளி எனப்படும். உலோகங்களை வெட்டுவதற்குப் பயன்படுவது வெட்டுளி அல்லது வெட்டிரும்பு எனப்படும்.

**அரம் :** பட்டையாயும் நிறைந்த நிரையான பல் பல்லாயுமுள்ள தட்டையான சற்று குவிந்த, சதுர, முக்கோண குவிந்த அமைப்புகளில் செய்யப்படும் வன்மையான உருக்குக் கருவி. உலோகங்களை ராவித் தூளாக்க உதவுகிறது.

**துருவி :** தேங்காயைத் துருவப் பயன்படும் கருவி துருவியாகும். இது வரிசையான சிறு பற்களுடைய அரைவட்டத் தகடும் அதனோடிணைந்த கைப்பிடி அல்லது காம்புடன் கூடிய நிலைப்படுத்தக் கூடியதாய் இருக்கும்.

**பிழிவான் :** எலுமிச்சம்பழத்தினின்று சாற்றைப் பிழிந்து எடுப்பதற்கு உதவும் கருவி பிழிவான் எனப்படும். இது கீழே அரை உருண்டைக் குழிவான சிறுசிறு துவாரங்கள் உள்ள ஒரு தகட்டையும் மேலே அக்குழியில் பொருந்தும் அளவான சற்று சிறிய அரைஉருண்டைக்குவிவான தகட்டையும் இரண்டையும் விரிந்து சுருக்கத் தக்கதாய் இணைத்த ஒரே கிளை ஒரு பக்கமும் அதன் எதிர்ப்புறத்தில் ஒவ்வொரு தகட்டுடனும் ஒவ்வொன்றாக இணைந்த இரு காம்புகளையும் கொண்டதாகும். இரு காம்புகளையும் விரித்துப் பிடித்து பாதியாக வெட்டப்பட்ட எலுமிச்சம்பழத்துண்டை அரை உருண்டைக் குழியில் வைத்து காம்புகளை ஒன்றோடொன்று சேரும்படி நெருக்க பழத்தின் சாறு பிரிந்து சிறு துவாரங்கள் வழியாய் இறங்கும்.

**கல்வம் :** இது குழியம்மி என்றும் சொல்லப்படும். நன்றாக விளைந்த கருங்கல்லில் நீளவட்டமான குழியமைத்து தேவையான உயர, அகல, நீளங்களில் இது செய்யப்படும். நல்ல கருப்பு நிறமானதும் ஊடே வெள்ளைக் கோடுகளற்றதுமான கல்லாலான கல்வம் மருந்துகள் அரைக்கும்போது தேய்வுற்று

அவற்றுடன் கலவாததால் அதுவே சிறப்பானதாகும். இதை நன்னிக்கல் கல்வம் என்பர். சில மாநிலங்களில் பளிங்குக் கற்களாலான கல்வங்களும் கிடைக்கின்றன. இவை தவிர சிவப்பு, வெள்ளை, மஞ்சள், பச்சை நிறக் கற்களாலான கல்வங்களும் உண்டு.

**ஒரு தலைக் குழவி :** கல்வத்தில் மருந்துகளை அரைக்கப் பயன்படுவது ஒருதலைக் குழவியாகும். பொதுவாக எந்தவகைக் கல்லால் கல்வம் செய்யப்பட்டுள்ளதோ அதே வகைக் கல்லால் இதுவும் செய்யப்படும். கீழே வட்டித்த அரை உருண்டையான முகமும் மேலே போகப்போக கூம்பிய உடலும் கொண்டது. கல்வத்தின் அளவுக்கேற்ப அளவுடையதாகச் செய்யப்படும்.

**இடி கருவி :** இது உரல், உலக்கை ஆகிய இரண்டு கருவிகள் சேர்ந்தது. மரம், கல் அல்லது உலோகங்களில் தேவையான உயரத்துக்கு உருளையாகவும் மேலும் கீழும் வட்டித்த தகட்டுப் பரப்புடனும் எடுத்து மேற்பரப்பின் நடுவில் தேவையான அளவு வட்டப்பரப்பில் தேவையான ஆழமுடையதாகக் குடைந்து எடுத்துக் கொள்ளுவது உரலாகும். உலக்கை, மரம் அல்லது உலோகத்தினால் செய்யப்படும் நீண்ட உருளையான கருவியாகும். உலக்கையின் இரண்டு முனைகளையும் சற்று குழிவான வட்டித்த பகுதியாகவோ, தட்டையாயும் உள்ளீடுள்ள உருளைப்பூண் அமைத்ததாகவோ செய்து கொள்ளலாம். பொதுவாக மருந்துகள் செய்கையில் கல் உரலும், மர உலக்கையும் பயன்படுத்திக் கொள்ளுவதே சிறப்பாகும். உலோக உரல்கள் மருந்துக்கு நிறமாற்றம், குணக்கேடு, இயைபு மாற்றம் போன்றவைகளை ஏற்படுத்தலாம். தற்கால பீங்கான், ஆடி போன்றவைகளாலான சிறிய கருவிகளை மிக இலேசுத்துவம் உடைய மருந்துகளைச் செய்யும்போதும் மருந்தின் அளவு மிகச் சிறியதானபோதும் கையாளலாம்.

அம்மி, குழவி, ஆட்டுரல், திரிகல் ஆகிய வீட்டில் பயன்படும் கருவிகள் பலவும்கூட சில வேளைகளில் மருந்துகள் செய்யப்பயன்படும்.

**மூசை:** இதைக் குகை என்றும் கூறலாம். பொருட்களை உலை அல்லது துருத்தியில் வைத்து ஊதி வறுக்கவும்

கொல்லர் உலையிலும் இது அதிகமாய் பயன்படுகிறது. கீழே தட்டையான அல்லது சற்றுக் குழிவான அடிப்பகுதியும் மேலே செல்லச் செல்ல சற்று விரிவாய் உள்ளீடுள்ள உடலும் கொண்டது. இதன் வாயை மூடுவதற்குப் பயன்படும் மூடி சில்லு என்று சொல்லப்படும், மூசைகள் செய்வகையால் பலவகையாகும். களிமண், மணல், கரி, சாம்பல், தேங்காய் நார் ஆகியவை சேர்த்தரைத்துச் செய்வது மண்மூசையாகும். இவைகளோடு கிட்டக்கல், சுண்ணாம்பு போன்றவையும் சேர்த்துச் செய்வது வச்சிரமூசை எனப்படும். வச்சிரமூசைகள் பெருமளவில் சூட்டைத் தாங்கக் கூடியனவாதலால் சுண்ணம், களங்கு போன்ற மருந்துகள் செய்யப்பயன்படும். உமிக்கருக்கு, கழுதைலத்தி போன்றவைகளோடு களிமண் சேர்த்து கடுக்காய் கியாழம் விட்டரைத்து உருக்கினத்திற்குதவும் குகைகள் செய்யப்படும். நண்டு, நத்தை சங்கு, சிப்பி இவைகளின் ஓடுகளொடு அண்டவோடு சேர்த்து எருக்கம்பாலால் அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து புடமிட்டுச் சுண்ணமாக்கி அச்சுண்ணத்துக்கு வெண்கரு, எருக்கம்பால், கற்சுண்ணநீர் இவை ஒவ்வொன்றும் விட்டரைத்து குகை செய்து கொள்வது பஞ்ச சுண்ணக் குகையாகும். இது கடுங்காரச் சுண்ணங்கள் செய்யப்பயனாகும். கடல் நுரையை கற்சுண்ண நீரில் அரைத்து வைதிச் சுண்ணமாக்கி பின்பு நவச்சாரம் கூட்டியும் அதன்பின் சீனாக்காரம் கூட்டியும் வைதி எடுத்து செய்து கொள்ளுவது பஞ்சபூதக் குகையாகும். இது பாடாணச் சுண்ணங்கள் செய்ய ஏற்றது

**சீலை** : அகல், குகை இவைகளுக்குள் சரக்குகளை வைத்து மூடி அல்லது சில்லிட்டு இடைவாயை அழுத்தமான நீள துணிநாடாவில் ஒரு பக்கம் அரைத்த புற்றுமண் தடவி ஒட்ட வைத்து உலர்த்தி எடுத்துக் கொள்ளுவது சீலை அல்லது சீலைமண் செய்தல் எனப்படும். ஆடிக்குப்பிகளை எரிப்புக்குப் பயன்படுத்து முன்னர் அவைகளுக்கு மேலாகவும் இவ்வாறு செய்யப்படும். சீலை மண் சுற்றுக்களின் எண்ணிக்கையைக் கொண்டு அதன் எண் குறிக்கப்படும். பொதுவாகக் குறைந்தது மூன்று சீலையாவது சுற்றப்படும். ஒவ்வொரு சீலையும் நன்றாய் உலர்ந்த பின்பே மறு சீலை அதற்குமேலே சுற்றப்படவேண்டும். புற்று மண்ணுக்குப்

பதிலாக மருந்துக்குத் தக்கவாறு உளுந்தின் மாவு, கோதுமை மாவு, சுண்ணாம்பு, சுண்ணாம்பும் முட்டை வெண்கருவும் சேர்ந்த கலவை ஆகியனவும் பயன்படும். சீலை செய்வது குப்பிகள் நெருப்பில் வெடித்து உடையாமல் இருக்கவும் அகல் அல்லது மூசைக்குள் வைத்துப் புடமிடும் மருந்துகள் சிதறாமலும் புகைந்து போகாமலும் இருக்கவும் உதவுகிறது. அதோடு வெளிக் காற்றிலுள்ள உயிர் வாயுவின் தொடர்பு ஏற்பட்டு சரக்குகள் எரிந்து கரியாகிப் போகாமல் தேவையான சூட்டினால் ஏற்படும் இயைபு மாற்றங்களை மட்டும் அடையச் செய்யவும் உதவுகிறது. இதனாலேதான் பற்ப, செந்தூர, சுண்ணங்கள் ஆகிய மருந்துகள் கிடைக்கின்றன.

அடுப்பு : சாதாரணமாக களிமண்ணால் செய்து சுட்டு எடுத்துக் கொள்ளுவது, சிமிட்டினால் செய்துகொள்ளுவது, கனமான தகட்டினால் செய்து கொள்ளுவது என்று பலவகை அடுப்புகள் உண்டு. அமைப்பில் தனி அடுப்பு, இரட்டை அடுப்பு, கண் அடுப்பு அல்லது கொடி அடுப்பு என்றும் பலவகைப்படும். அன்றியும் விறகடுப்பு தவிர உமி அடுப்பு, கரி அடுப்பு, வாயு அடுப்பு போன்று பிறவும் உண்டு. பொதுவாய் எரிபொருள் வைக்கத்தக்க உடற்பகுதியும் மேலே பானை அல்லது சட்டி போன்ற கலங்களை நிலையில் நிறுத்தக்கூடியதாயும் அமையும். இவை பலவகைப்படுவதாலும் யாவரும் அறிந்தவையாதலாலும் விவரிக்காமல் விடப்படுகின்றன.

விறகு : பொதுவாக பலவகைப்பட்ட மரங்களின் கொம்புகளும் பிளந்த கட்டைகளும் எரிபொருளாகப் பயன்பட்டாலும் மருந்துகள் செய்யும் போது விறகுகளைத் தேர்வு செய்வதில் தனிக் கவனம் வேண்டும். இவ்வாறு தேர்ந்த விறகுகளால் செய்த மருந்துகளே கேடுகள் அற்றதாயும் உடலின் கேடுகளைப் போக்குவதாயும் அமையும். எந்த விறகால் எரித்தாலும் உண்டாவது தீயே என்றாலும் அதனின்று வெளிப்படும் புகை, நாற்றம் போன்றவை மாறுபடுவதாலும் அவைகளில் உண்டாகும் சூட்டின் அளவு மாறுபடுவதாலும் இன்னின்ன விறகுகளையே இன்னின்ன மருந்துகள் செய்யும்போது பயன்படுத்த வேண்டும் எனப்பட்டுள்ளது. நுணா, வாகை, வன்னி, மாவிலிங்கம் போன்றவைகளின் விறகுகள் வாத நோயைப் போக்கக்கூடிய

மருந்துகள் செய்யவும் நெல்லி, விளா, இலந்தை, வேம்பு ஆகியவை பித்தநோயைப் போக்கக் கூடிய மருந்துகள் செய்யவும், வேல், வேங்கை, கொன்றை, உசிலை போன்றவைகள் ஐய நோய்களைப் போக்கக்கூடிய மருந்துகளைச் செய்யவும் பனை, தென்னை, வேம்பு இவற்றின் விறகுகள் இரசம் கலந்த மருந்துகளைச் செய்யவும், வேல், வேங்கை ஆகியவற்றின் விறகுகள் அயம் சேர்ந்த மருந்துகளைச் செய்யவும் பயன்படுகின்றன. அவ்வப்போது சில மருந்துகளுக்குச் சிறப்பான விறகுகளும் நூற்களில் சொல்லப்பட்டுள்ளன.

**விறகின் திட்டம்** : இதனைக் கீழ்க்காணும் சூத்திரவடிகளால் அறியலாம்.

'சாடியே விறகினது திட்டங்கேளாய்
சாணீள மிரண்டு விரற் கனதியாகும்.'

இந்த அளவான ஒரு விறகால் எரிப்பது தீபாக்கினி என்றும் இரண்டால் எரிப்பது கமலாக்கினி என்றும் மூன்றால் எரிப்பது கதலியாக்கினி என்றும் ஐந்தால் எரிப்பது காடாக்கினி என்றும் சொல்லப்படும்.

**கரி** : மரக்கிளைகளையும் விறகுகளையும் எரித்துக் கரியாக்கிப் பெறுவது. சில மருந்துகளைத் துருத்தி, உலை போன்றவற்றில் வைத்து ஊதப்படும்போது இது பயன்படுகிறது. சில மருந்துகளுக்கு குறிப்பிட்ட மரங்களின் கரியைப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

**உமி** : நெல்லிலிருந்து கழித்து எடுக்கப்பட்ட உமி, துருத்தியில் மருந்துகள் ஊதப்படும்போதும், சில மருந்துகளை நீற்றும்போதும் பயன்படுகிறது.

**சுண்ணாம்பு** : சில மருந்தடைத்த அகல்களைச் சீலை செய்யவும், சில மருந்துகளை வைத்து எரிக்கவும், பூசி எரிக்கவும் சுண்ணாம்பு பயன்படுகிறது. தாளகம் சுத்தி செய்ய சுண்ணாம்புக்குள் வைத்து நீற்றி எடுக்கலாம். கற்சுண்ணாம்பு, சிப்பி (கிளிஞ்சில்) சுண்ணாம்பு என்று இருவகையில் கற்சுண்ணாம்பே அதிகம் பயன்படுகிறது.

**மணல்** : ஆற்று மணலே மருந்து செய்கையில் பயன்படுத்தச் சிறந்தது. இது மணல் எரிப்பு (வாலுகா எந்திரம்) செய்யும்போது பயன்படுகிறது. பொடிமணல் மேலுள்ள

அதிநெருக்கமாய் அமைவதால் விரைவாகச் சூட்டைப பெறத்தக்கதாயும், அதிக வெப்பத்தைத் தன்வயப்படுத்துவதாயும், நெடுநேரம் வெப்பத்தை இழக்காமல் நிலைப்படுத்துவதாயும் அமையும். மணலின் அளவு பெரிதாக ஆக இத்தன்மைகள் குறைந்து கொண்டே வரும். எனவே மருந்து, அதற்குவேண்டிய வெப்பம் இவைகளுக்குத் தக்கதான அளவுள்ள மணலை எடுத்துக் கொள்ள வேண்டும். சீலைமண் செய்யும்போதும் மூசைகள் செய்யும்போதும் மண்கலங்கள் செய்யும்போதும் தனித்த களிமண்ணினால் செய்தால் கீறல், விரிசல் ஏற்படுவதால் அதோடு மணலையும் நன்றாகக் கலந்து குழைத்து செய்யப்படும். மணலில் வேறுபட்ட கனிமங்கள் கலப்புக்குத் தக்கதாக அவற்றின் நிறமாற்றங்கள் உண்டு. மிகக் கருப்பாக இருக்கும் மணல் விரைவாயும் அதிக அளவிலும் சூட்டைக் கிரகித்து அதிக நேரம் சூட்டை நிலைப்படுத்தக் கூடியது. வெண் (குருத்து) மணல் இத்தன்மைகளில் குறைவானது.

**வரட்டி** : இது எரு என்றும் சொல்லப்படும். சாதாரணமாய் மாடு போடுகின்ற சாணம் உலர்ந்து காய்ந்திருப்பது இயற்கை வரட்டி அல்லது காட்டு வரட்டி எனப்படும். இது ஏறத்தாழ இரண்டு பல் எடையுள்ளதும் மருந்து செய்ய மேலானதும் ஆகும். எருவை ஒரு கை விரித்த அளவான வட்டமான சுண்டு விரல் கனமுடைய தட்டு போல செய்து உலர்த்தி எடுப்பது செயற்கை வரட்டி அல்லது நாட்டெரு எனப்படும். வரட்டி செய்ய நாற்றமுள்ள எரு, வைக்கோல், சருகு போன்றவை ஆகாது. இவை மருந்தின் குணத்தைக் கெடுக்கும். பசுமாட்டின் சாணத்தினால் செய்யப்பட்ட எருவே மிகச் சிறப்பானதாகும். இதற்கு அடுத்து எருமைச் சாணமும், கலப்புச் சாணமும் குணமுடையது. சில மருந்துகள் செய்கையில் ஆட்டின் எருவில் புடமிடச் சொல்லப்பட்டுள்ளது.

**புடம்** : வரட்டியின் துணைகொண்டு செய்யப்படும் எரிப்பு புடம் எனப்படும். பொதுவாய் புடத்தின் அளவுக்குத் தக்கதான குழியைப் பூமியில் செய்துகொண்டு அதில் அடிப்பாகம் பாதிவரை எருவடுக்கி நீற்றவேண்டிய சரக்கு அல்லது சரக்குகளிடம் பட்டு சீலை செய்த அகல் போன்றவைகளை நடுவில் வைத்து அதைச் சுற்றிலும் மேலும் எருக்களை நெருக்கமாக நிரப்பி, கீழுள்ள எருவிலும்

மேலுள்ள எருவிலும் தீயிட்டு அப்படியே எருமுழுவதையும் நன்றாய் எரித்து, நீறி ஆறின பின் குழியிலிருந்து எடுத்துக் கொள்ளுவது ஒரு புடமாகும். இவ்வாறு மருந்துக்குத் தக்கதாக பல புடங்கள் போடவேண்டியதிருக்கலாம். உலோகங்கள் பொதுவாய் அதிக புடமிட வேண்டியிருக்கும். அப்பிரகத்தை நூறு புடமிட்டெடுத்தல் களுக்கு நீற்றவும் நன்கு நீற்றவும் உதவும்.

புடபாகம் : வரட்டியின் எண்ணிக்கையும் புடப்பெயரும் கீழ்வருமாறு :

| வரட்டி எண் | | புடம் |
|---|---|---|
| 1. ஒன்று | - | காடைப்புடம் |
| 2. மூன்று | - | கவுதாரிப் புடம் |
| 3. பத்து | - | குக்குடப் புடம் (குக்குடம் - சேவல்) |
| 4. ஐம்பது | - | வராக புடம் (வராகம்-பன்றி) |
| 5. ஆயிரம் | - | கஜ (கெஜ) புடம் (கஜம்-யானை) |
| 6 பூமிப்புடம் | - | ஆட்டெரு அகலநீளம் நான்கு விரற்கடை. |
| 7. மணல்மறைவு | - | 90 எரு |

உமியில் எரித்து நீற்றுதல் உமி எரிப்புப் புடமாகும். அவித்த தானியங்களுள் வைத்து எடுப்பது தானிய அவிபுடம்.

வேறுவகைப் புடங்களும் மருந்து செய்யும்போது செய்யப்படுகின்றன. இவை வைத்தெடுப்பு அல்லது வைப்புப் புடங்களாகும். அவையாவன - உமி (வைப்புப்) புடம், தானிய (வைப்புப்) புடம், சூரிய (காய்வுப்) புடம், சந்திர புடம், பனி (வைப்புப்) புடம், பட்டை (உள்ளிடு) புடம், அமாவாசை புடம், பருவப்புடம் என்பனவாகும். பூமிக்குள் புதைத்து விளைச்சலுக்காக வைப்பது (பூமிப்) பாண்டவைப்பாகும். சில மருந்துகள் இருட்டறையிலும், அலம்பாமலும் வைக்கப்படும். வேறுசில மருந்துகள் செய்து பலநாள் வைத்திருந்த பின்பே வழங்கப்படும். இது பழக வைத்தல் எனப்படும்.

**துருத்தி** : கரி, உமி அல்லது வேறு எரிபொருள் வைக்கக்கூடிய ஒரு அடுப்பும் அதன் கீழ்ப்பகுதியோடு இணைந்த ஒருகுழலும் குழலின் மறுபுறம் தோலினால் செய்யப்பட்டு சுருங்கி விரிக்கத் தக்கதாயும், விரிக்கும் போது கைப்பிடியை சற்று தளர்த்தி வெளிக்காற்றை உள்ளே வாங்குவதாயும் சுருக்கும்போது கைப்பிடியை இறுக்கி உள்வாங்கிய காற்றைக் குழல்வழியாய் எரிமுகத்துக்கு அனுப்புவதாயும் அமைந்த கருவி துருத்தியாகும். தேவைக்கேற்றவாறு பல அளவுகளில் துருத்தி செய்யப்படும்.

**உலை** : துருத்தி போன்ற அமைப்பில் மிகப் பெரியதாய் அமைவது உலையாகும். தோலினால் ஆக்கப்பட்ட காற்று செலுத்தும் பகுதிக்குப் பதிலாக காற்றாடியால் காற்றைச் செலுத்துவதுமுண்டு. பொருட்களைப் பெரிய அளவில் விறகு, கரி, உமி போன்ற ஏதாவது எரிபொருட்களுக்கு நடுவில் வைத்தெரித்தெடுப்பது சூளை எனப்படும்.

**நீட்டலளவைக் கருவி** : இது பட்டையான தகடு, பலகை, துணி நாடா போன்ற பொருட்களால் வரைவரையாக அளவுகளைக் குறிக்கும் கோடுகளும் எண்களுமுடையது. தற்காலம் மில்லி மீட்டர் சென்டி மீட்டர், மீட்டர் அளவுகளே வழக்கில் உள்ளன. அங்குலம், அடி, கெஜம் போன்றவையும் சிறு அளவில் வழங்கப்படும். முற்காலம் வளர்ந்த ஆளின் நடுவிரல் (அங்குலியின்) உள்ளங்கைப்பகுதி நடு இருவரை இடைத்தூர நீள அளவு ஒரு அங்குலம் எனப்பட்டது. விரலான கனதின் கோலம் விரற்கடை எனப்படும். கையை விரித்து வைக்க சுண்டு விரலின் நுனிக்கும் பெருவிரலின் நுனிக்கும் இடைப்பட்ட தூரம் ஒரு சாண் (ஒன்பது அங்குலம்) ஆகும். சுண்டுவிரலின் நுனியிலிருந்து முழங்கைப் பொருத்தின் அகமுனிக்கும் இடைப்பட்ட தூரம் ஒருமுழம் (18 அங்குலம்) ஆகும். இவ்வாறான இரண்டு முழம் ஒரு கெஜம், கைகள் இரண்டையும் பக்கவாட்டில் விரித்தால் அவைகளின் சுண்டு விரலுக்கும் இடைப்பட்ட தூரம் ஒருபாகம் எனப்பட்டது.

**அளவைக் கலங்கள்** : பழங்கால ஆழாக்கு, படி போன்றவை வழக்கற்று புதிய லிட்டர் அளவைகளே வழக்கில் இருக்கின்றன. அளவைக் கலங்கள் ஆடி, பீங்கான், சுடுகளி(பிளாஸ்டிக்), உலோகம் போன்ற ஏதாவதொன்றால் செய்யப்பட்டதாயும்,

பல அளவுகளை அளப்பதற்குமுரிய பெரிது சிறிதாயும் அளவுகள் குறிக்கப்பட்ட கோடுகள், எண்களுடனும் இருக்கும். இவை உருளை, முக்கோணம், சதுரம் போன்ற பல வடிவினைச் சிலவற்றில் ஊற்றுவதற்கான மூக்கு அமைக்கப்பட்டிருக்கும். சிலவற்றில் முகப்பதற்கு உதவ கைப்பிடி அல்லது காம்பு இணைக்கப்பட்டிருக்கும்.

**எடைகாட்டிகள் :** இவை தராசு, துலா, துலாக்கோல் என்று பல பெயர்பெறும். எடைக்கற்கள் பயன்படும் வகை, பயன்படாத வகை ஆகிய தராசுகள் வழக்கிலுண்டு. எடைக்கற்கள் கல் அல்லது உலோகங்களால் பல எடைகளிலும் பல வடிவங்களிலும் செய்யப்பட்டதாயும் அதன் எடை பொறிக்கப்பட்டதாயும் இருக்கும். வெவ்வேறு வகைப் பொருட்களையும், நுண்ணியதுமுதல் மிகப் பருமனான பொருட்களையும் நிறுத்து எடை தெரிந்து கொள்ளக்கூடிய பலவகைத் தராசுகள் உண்டு.

**மின் தராசு :** இது மின்சாரத்தினால் இயக்குவதும் மிகத்துல்லியமானதுமாகும். இயற்பியல் ஆய்வகங்களில் இது மிகுந்த பயனுடையது. ஒரு கிராம் எடையின் ஆயிரக்கணக்கில் ஒரு பங்கினையுங்கூட எடைகாட்டக்கூடிய அளவு நுட்பமான அமைப்புடையது.

**பாளைத் தராசு :** மிகப் பருமனானதும் கனமானதுமான பொருட்களை எடைகாண இத்தராசு பயன்படும். நிறுக்கப்பட வேண்டிய பொருட்கள் ஒரு பரவலான தட்டில் வைக்கப்படும். எடைகாட்டும் பகுதிமுட்காட்டி வட்டமைப்பாகவோ எண்காட்டுக் கோலாகவோ இருக்கலாம். எண்காட்டுக் கோல் இருக்கும் தராசுகள் மருந்துசெய் நிலையத்தில் அதிக அளவு எடையுள்ள மூடைகள், விறகு, கட்டைகள் போன்றவற்றை நிறுக்க உதவுகின்றன. இவற்றில் எடைக்கற்களும் பயன்படும். சரக்கு வண்டிகள் போன்ற மிகப் பெரிய பொருட்களின் எடையைக் காட்டும் பாளைத் தராசுகளும் உண்டு.

**பௌதிகத் தராசு :** இதுவும் துல்லியமான எடை காணப் பயன்படுவதாகும். எடை காணவேண்டிய பொருள் வைக்க ஒரு தட்டும், எடைக்கற்கள் வைக்க ஒரு தட்டுமாக, பக்கத்துக்கொன்றாக இரு தட்டுகளும், அவைகளை மேலே

நடுவில் ஆடக்கூடிய கோலுடன் இணைக்கும் இணைப்புகளும், கோலின் நடுவிலிருந்து கீழே திடமாகத் தொங்கும் நீளமான முட்காட்டியும், முட்காட்டியின் நுனிக்கும் பின்னே அரைவட்ட வடிவில்வரையப்பட்டும், நடுவில் குறியும் இருபக்கமும் ஏறு எண்கள் வரிசையாய் குறிக்கப்பட்டும் உள்ள அளப்பானும் கொண்டது. இவ்வகைத் தராசுகள் ஒரு பலகை அடியுள்ள ஆடிப்பெட்டிக்குள் பத்திரமாய் நிறுத்தப்பட்டதாயும் அடியில் நீட்டிக் குறுக்கத்தக்க திருகல் அமைப்புள்ள கால்களுடையதாயும், பெட்டியின் ஒருபக்கம் திறப்புடையதாயும், தட்டுகளை அடியில் நிலைப்படுத்தவும் தூக்கவும் தக்க அமைப்பைக் கொண்டதாகவும் இருக்கும். இதில் பயன்படும் எடைக்கற்கள் இடுக்கிகளைக் கொண்டே கையாளப்படவேண்டும்.

எடைகாணும்போது பொருள் ஒரு தட்டிலும் எடைக்கல் மற்றொரு தட்டிலும் வைக்கப்பட்டு பெட்டி மூடப்பட்டு தட்டுகள் தூக்கப்படும். வைக்கப்பட்ட பொருளைவிட எடைக்கல் குறைவானால் முட்காட்டி குறியிலிருந்து எடைக்கல் வைக்கப்பட்ட தட்டுப்பக்கமாகச் சென்றிருக்கும். எடைக்கல் கூடுதலாய் இருந்தால் மாறியிருக்கும். எடைக்கற்களை, முட்காட்டி குறியில் நிற்கும்வரை கூட்டியோ அல்லது குறைத்தோ வைத்து பொருளின் எடையைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

மருந்துத் தராசு : மருந்துச் சரக்குகளை நிறுப்பதற்கு அதிக அளவில் பயன்படுவது இவ்வகையான எடை காட்டியேயாகும். பௌதிகத் தராசின் அமைப்புடையதாகவே இதுவும் அமையும், என்றாலும் அதிலுள்ள காப்புக் கூண்டு இதில் இராது. அனேகமாய் பொருள் வைக்கும் தட்டு ஆடியாலும் எடை வைக்கும் தட்டு உலோகத்தாலும் ஆக்கப்பட்டிருக்கும். எடைகாணும் விதியாவும் முன்னதைப் போலவேயாகும்.

சுருளித் தராசு : ஒரு சீராக விரிந்து சுருங்கும் தன்மையுள்ள எஃகுச் சுருளியின் கீழ் நுனியில் பொருட்களை வைக்கத் தக்க அல்லது தொங்கவிடத்தக்க தட்டு அல்லது கொக்கியும், கீழ்நுனியினின்று இணைக்கப்பட்ட ஒரு முட்காட்டியும், முட்காட்டி மேலிருந்து கீழே காட்டத் தக்க அளவு வரைகளும் கொண்டது சுருளித் தராசாகும்.

பொருளில்லாதபோது முட்காட்டி குறியைக் காட்டும். வைக்கப்பட்ட பொருளின் எடைக்குத் தக்க சுருளி விரிவதால், பொருள் வைக்கப்பட்ட பின்னர் முட்காட்டி பொருளின் எடையைக் காட்டும் எண்ணுள்ள வரையைக் குறிக்கும். பொருள் நீக்கப்பட்டதும் மீண்டும் தன் நிலைக்குச் சென்றுவிடும். இவ்வகையான தராசுகள் பல அளவுகளில் பல்வேறு நிறைகளை நிறுக்கத் தக்கதாக உண்டு. சிலவற்றில் முட்காட்டிக்குப் பதிலாக சுருளியின் அடிப்பாகத்தில் இணைக்கப்பட்ட ஒரு சீரான பல்லுள்ள பட்டை காணப்படும். இப்பல்லில் பொருந்தத்தக்க பல்லுள்ள உருளை ஒன்றுடன் முட்காட்டி இணைக்கப்பட்டு, அது ஒரு வட்டமைப்பு குறிப்பானின் நடுவில் சுழலத்தக்க விதமாயும், எடைக்குத் தக்க குறியீட்டெண் வரையைக் காட்டக்கூடியதாயும் அமைக்கப்பட்டிருக்கும்.

*மட்டத்தராசு:* இதுவும் மருந்துசெய் நிலையத்தில் அதிகமாகப் பயன்படுவதாகும். நடுவில் ஆடக்கூடிய மட்டக்கோலின்-ஒருபுறம் பொருட்களை வைக்கக்கூடிய ஒரு அகன்ற, வட்டித்த, குழிவான தட்டும் மறுபுறம் எடைக்கற்களை வைக்கக்கூடிய தட்டையான சிறிய தட்டும், தன் நிலையில் சமமாய் நின்றும் மட்டக்கோலின் நடுவில் இணைக்கப்பட்ட முட்காட்டி எண்ணைக் குறிப்பதுமாய் செய்யப்பட்டும் இருக்கும். கூடிய எடையுள்ள தட்டு கீழே இறங்குவதால் முடகாட்டி மட்டக்கோலின் கீழாக இணைக்கப்படடிருந்தால் குறைந்த எடையுள்ள தட்டுப்பக்கமாகவும் மாறி இருந்தால் மாறியும் நகரும். முட்காட்டி மட்டக்கோலின் மேலாக இணைக்கப்பட்டிருந்தால் இவைகளுக்கு எதிராக நகர்ச்சி இருக்கும். குறிப்பானின் குறிவரும்வரை, பொருளையோ அல்லது எடைக்கற்களையோ கூட்டி அல்லது குறைத்து பொருளின் எடையைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

கொல்லுத்தராசு, கடைத்தராசு, தானியத் தராசு போன்ற பலவகையான சாதாரண தராசுகள் உண்டு. இவை அனைத்தும் உபயோக வசதிக்குத் தக்கதான சிறுசிறு மாற்றங்களுடையவையும் பொதுவாய் ஒரேவகையினவுமாகும்.

பொதுவான தராசுகள் நடுவில் ஆடத்தக்கதான மட்டக் கோலும் அதனோடு நடுவில் இணைக்கப்பட்ட முட்காட்டியும் தனியாக ஆடும் கைப்பிடியும், மட்டக்கோலின் இரண்டு

நுனியிலும் இணைப்புகளோடு தொங்கவிடப்பட்ட பக்கத்துக்கொன்றான ஒரே எடையுள்ள இரண்டு தட்டுகளும் கொண்டன. சமநிலையில் இரு தட்டுக்களும் இணைப்புகளும் ஒரே நிறையினவாதலால், தராசு தூக்கப்படும்போது மட்டக்கோல் நிறுதிட்டமான மட்டத்தில் இருக்கும். இந்த நிலையில் இதனோடிணைந்த முட்காட்டி காட்டுமிடத்தில் ஒரு குறி கைப்பிடியில் காணப்படும். இதுவே சமநிலைக் குறியாகும். இதில் பொருட்களை நிறுக்க தட்டுக்களை நிலைப்படுத்தி பொருளை ஒருதட்டிலும், எடைக்கற்களை மறுதட்டிலும் வைத்து கைப்பிடியை மெதுவாகத் தூக்க வேண்டும். எடை எந்தத் தட்டில் அதிகமாய் உள்ளதோ அத்தட்டு தாழுவதால் மட்டக்கோலின் முட்காட்டி அப்பக்கமாக நகரும். எனவே மறுபக்கம் குறைவான எடை இருக்கிறதென்று தெரிந்து முன்போலவே எடைகளையோ அல்லது பொருளையோ கூட்டியாவது குறைத்தாவது நிறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

துலா : இது பழங்காலத்தில் பயன்பட்ட எடைக்கருவியாகும். இதனை துலாக்கோல், தூக்கு, தூக்குக்கோல் என்றும் அழைப்பர். இதில் ஒருமுனை பருமனாகவும் போகப்போகக் குறுகி மறுமுனை மெலிவாகவும் அமைந்த ஒருகோலின் மெலிந்த முனையில் ஒரு தட்டு இணைப்புகளால் தொங்கவிடப்பட்டிருக்கும். கோலில் இரண்டு பக்கமும் நகர்த்தக்கூடிய விதத்தில் ஒரு கைப்பிடி (தூக்கு) பெரும்பாலும் கயிற்றால் ஆனதாய் இணைக்கப்பட்டிருக்கும். இக்கைப்பிடியைப் பிடித்துத் தூக்கைத் தூக்கும் போது எந்த இடத்தில் அது இருக்கும்போது கோல் நிறுதிட்டமாக இருக்கிறதோ அந்த இடம் எண் குறியாகும். அக்குறியுள்ள இடம் கோலின் பருமனான முனைக்குச் சமீபமாய் இருக்கும். இனி தட்டில் ஒரு தனிம எடைபொருளை வைத்துத் தூக்க, தூக்குமிடம் இவ்வாறு நிற்குமிடம் ஒரு தனிம நிறையைக் காட்டும் வரையுடனும் குறியுடனும் குறிக்கப்படும். இது குறிக்குச் சற்று தள்ளி மெலிந்த பக்கமாய் இருக்கும். இவ்வாறே இரண்டு, மூன்று என்று வரிசையாய் கோலில் தனிமங்களின் எடை வரைக் குறிகள் கோலில் குறிக்கப்படும். இத் துலாக்கோலில் நிறுக்கப்பட வேண்டிய பொருளைத் தட்டில் வைத்து தூக்கைப்

பிடித்துத் தூக்கும்போது தூக்கு எந்தக் குறியில் நிற்கும்போது கோல் நிறுதிட்டமான மட்டத்தில் நிற்கிறதோ அக்குறி காட்டும் எடையே பொருளின் எடையாகும்.

பொதுவாய் நிறுக்கும்போது தராசுகளையோ எடைக்கற்களையோ அல்லது பொருளையோ முரட்டுத்தனமாகக் கையாளக்கூடாது. நிதானமாயும் மென்மையாயும் இவைகள் செய்யப்பட வேண்டும். தராசுத் தட்டுகளைச் சட்டென்று உயர்த்தினால் தட்டுகள் மேலும் கீழும் அதிகநேரம் ஆடி நிலைப்படுவது தாமதமாகும். இதுபோலவே எடைகள் அல்லது பொருட்கள் தராசுத் தட்டுகளிலிருந்து நீக்கப்படுமுன் அல்லது சேர்க்கப்படுமுன் தட்டுகளை நிலைப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். தட்டுகளை உயர்த்திய நிலையிலேயே வைத்திருந்து இவைகளைச் செய்யக் கூடாது. எடைகாணத் தராசுத் தட்டுக்கள் தூக்கப்பட்டபின் அவை ஆடுவது நின்று முட்காட்டிநிலையாய் நின்றபின்னரே எடைகள் கணிக்கப்பட வேண்டும். எடைகாட்டி, எடைக்கற்கள், அளவைக் கலங்கள் ஆகியவற்றில் பலர் கள்ளத்தனங்கள் செய்வதால், தற்காலம் அவையாவும் அரசு அமைத்துள்ள அத்தாட்சி தரும் நிறுவனங்களால் முத்திரையிடப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறான முத்திரையிடப்படாத கருவிகளை வணிகத்தில் பயன்படுத்துவது சட்டப்படி குற்றமாகும்.

**பீங்கான் பலகை :** இது சதுரமான சீரான பரப்பளவும் சற்று கனமானதுமான பீங்கான் அல்லது பளிங்குக் கல்லாலான கருவி. இதில் ஒரு ஓரத்தில் நீளமான கோடும் அதில் ஒரே அளவான இடைவிட்ட சிறு கோடுகளும் காணும். களிம்புகளைக் கலப்பதற்கும், மாத்திரைகளைப் பொடிக்கவும் அளவுப்படுத்தி பங்கிடவும் இது பயனாகிறது.

**குப்பி :** நெய்வகைகள், நீர்த்துவப் பொருட்கள், கியாழவகைகள், போன்றவற்றைக் கொள்வதற்கும், மாத்திரை, பற்பசெந்தூரம் போன்றவை வைப்பதற்கும், குப்பி எரிப்புச் செய்யவும் குப்பிகள் பயன்படுகின்றன. குப்பிகள் அதிகமாக ஆடியால் செய்யப்படும். அன்றியும் பீங்கான், அலுமினியம் போன்ற உலோகங்கள், சுடுகளி(பிளாஸ்டிக்) இவற்றாலான குப்பிகளும் உண்டு.

ஆடியாலான குப்பிகள் நிறமற்றவை, பழுப்பு நிறத்தவை, வேறு நிறங்களுடையவை என்று பலவகையாகும். கியாழம் போன்ற உள் மருந்துகளை நிறமற்ற குப்பிகளில் கொள்வதே சிறந்தது. சில மருந்துகள் ஒளியில் வன்மை இழப்பதாலும் வேறுசில ஒளியில் ஈடுபட்டால் மாறுதலடைவதாலும் அவ்வகை மருந்துகள் பழுப்புநிறக் குப்பிகளில் அடைக்கப்படும். குப்பிகள் அளவு, தன்மை இவற்றால் பெரிதும் மாறுபட்ட அமைப்பில் பலவகைகளாகச் செய்யப்பட்டிருக்கும். மருந்தூற்றப் பயனாகும் குப்பியில் வரையறுக்கப்பட்ட அளவுக்குறியீடுகளும் இருக்கும். குப்பிகளின் வாய் பொதுவாய் அகன்றது, குறுகியது ஆகிய இரண்டு வகையாகும். கடினப் பொருட்கள் அகன்ற வாயுள்ள குப்பிகளிலும் நீர்மப் பொருட்கள் குறுகிய வாயுள்ள குப்பிகளிலும் வைக்கப்படும்.

குப்பிகளை அடைக்க அடைப்பான்கள் உண்டு. அவை தக்கை (Cork) மாக்கல், ஆடி, நெகிழம் (Rubber), தகடு, சுடுகளி(பிளாஸ்டிக்) போன்ற பலவகைப் பொருட்களால் ஆனவைகளாகும்.

**சிமிழ்** : பொதுவாய் இரசபாடாண கனிம மருந்துகளை வைப்பதற்கான மூடியுடன்கூடிய சிறு கொள்கலம் சிமிழ் எனப்படும். இது தங்கம், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்கள், மூங்கில், விலங்குகளின் கொம்புகள் போன்ற பொருட்களால் ஆக்கப்பட்டிருக்கும். சில மருந்துகள் சிறப்பாக இன்ன சிமிழில் அடைக்கப்படவேண்டும் என்று நூற்களில் காணப்படுகின்றன.

**ஜாடி (Jar)** : ஜாடிகள் மருந்துப் பொருட்களைப் போட்டு வைக்கவும், இளகம், களிம்பு போன்ற மருந்துகளை அடைக்கவும் விளைவதற்கான வைப்புச் செய்யவும் இன்னும் பலவற்றுக்கும் பயன்படுகின்றன. இவை பீங்கான், ஆடி போன்ற பொருட்களால் உருளை வடிவமாகவும் சற்று குறுகலான வாயுடனும் அதனோடு பொருந்தக்கூடிய பொருத்தமான மூடியுடனும் இருக்கும்.

இதுவரை குறிப்பிட்ட பொதுக்கருவிகள் தவிர மண்வெட்டி, கோடரி, கடப்பாரை, ஊதுகுழல், முறம் போன்ற வீட்டில் பயன்படுவதும் பிறவுமான பல கருவிகள் மருந்து செய்யுமிடத்தில் பயனாகின்றன.

# சிறப்புக் கருவிகள்

இதுவரை விவரிக்கப்பட்ட பொதுவான கருவிகளைத் தவிர சில மருந்துகளுக்குச் சிறப்பான பொறிகள் தேவைப்படுகின்றன. இவை அவற்றுக்கெனவே தனித்துச் செய்யப்பட்டதாகவோ அல்லது பொதுக்கருவிகள் சிலவற்றைச் சேர்த்து அவ்வப்போது வடிவாக்கிக் கொள்ளுவதாகவோ இருக்கலாம். அவ்வகைச் சிறப்புக் கருவிகள் இங்கு கூறப்படுகின்றன.

**அவி எந்திரம்** : இது பிட்டு அவிப்பதற்கு உதவும் வகையிலான கருவியாகும். அடுப்பேற்றக்கூடிய வாயகன்ற ஒரு (கீழ்க்) கலத்தினுள் நீர், பால் போன்ற நீர்மப் பொருட்களைப் பாதியளவு விட்டு, அதன் வாயை ஆவி நுழையத்தக்கதான துணியை விரித்து மூடி துணியின் எஞ்சிய பகுதிகளை கலத்தின் உதட்டுக்குக் கீழே வெளியில் சேர்த்துக் கட்டிக்கொள்ள வேண்டும். இவ்வாறு கட்டும்போது துணி தொங்கிக் கொண்டும் அடுப்பினின்று எழும்பும் தீ படாதவாறும் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு கலத்தின் வாயில் துணியை விரித்துக் கட்டுவதை வேடு கட்டுதல் அல்லது வண்டு கட்டுதல் என்று சொல்வர். இவ்வேட்டின் மேலே அவிக்கப்படவேண்டிய பொருளைப் பரப்பி வைத்து மேலே மற்றொரு வாய் பொருந்தக்கூடிய கலத்தைக் கவிழ்த்து மூடி, இரண்டு கலங்களினதின் வாய்ப்பொருத்தில் சற்று ஈரமாக்கிய துணியால் சுற்றியோ அல்லது அப்படியோ அடுப்பேற்றி எரிக்க வேண்டும். இவ்வாறு எரிக்கையில் கீழ்க்கலத்திலுள்ள நீர்மப் பொருள் சூட்டினால் ஆவியாகி வேட்டின் மீது பரப்பப்பட்ட பொருளை அவிய அல்லது வேகச் செய்யும். அனேகமாக இந்த ஆவியின் சூட்டின் அளவு கீழுள்ள நீர்மத்தின் ஆவியாகு நிலைக்குத் தேவையான வெப்ப அளவு ஆகலாம். அன்றியும் கீழுள்ள நீர்மம் கலந்துள்ள சூட்டினால் ஆவியாகு தன்மைப் பொருட்கள் பிரிந்து வேட்டிலுள்ள சரக்கில் கலபபதற்கும் இது உதவுகிறது.

அமுக்குரா, சீனச்சக்கை (பறங்கிச் சக்கை) போன்றவைகளின் சூரணங்கள் இவ்வாறு அவித்து அவற்றின் கேடு நீக்கப்படுகின்றன. துளசி, ஆடாதோடை, வாழைப்பூ, தென்னம் பாளை போன்றவைகளிலிருந்து சாறு பெறப்படுமுன்னரும் இவ்வாறு அவிக்கப்படலாம். பிட்டு, வடகம் போன்ற மருந்து கள் செய்கையிலும் இக்கருவி பயனாகிறது.

**தூபக்கருவி :** ஆவியந்திரத்துக்கொப்பான அமைப்பிலேயே செய்து கொள்ளப்படுவது எனினும் கீழ்க்கலத்திலுள் ஆவியாகும் நீர்மங்களுக்குப் பதிலாக புகையும் (தூப) புகைச்சரக்குகள் போடப்படும்.

**செந்தூர எரிப்புக் கருவி :** இதுவும் மேற்கண்ட அமைப்பிலேயே செய்துகொள்ளுவது. இதில் வேடுகட்டுதல் இல்லை. இரண்டு வாய் பொருந்தக்கூடிய சட்டியில் கீழுள்ளதில் செந்தூரிக்க வேண்டிய சரக்கு அல்லது வில்லைகளை வைத்து ஒன்றன்மேலொன்று கவிழ்த்துப் பொருத்தி, பொருந்துவாயில் மூன்று அல்லது ஏழு சீலைமண் செய்து லர்த்தி எடுத்து அடுப்பேற்றி எரிப்பதாகும். அயக்காந்தம், ஆறு முகம், பஞ்சபாடாண செந்தூரங்கள் இவ்வகையில் செய்யப் படுகின்றன.

**பதங்கக் கருவி:** செந்தூர எரிப்புக் கருவி போன்ற அமைப்பில் கீழ்க்கலம் சிறிதாயும் மேல்கலம் பெரியதாயும் வைத்து சீலை செய்து அமைத்துக் கொள்ளுவதாகும். பதங்கம் எடுக்க வேண்டிய சரக்கை கீழ்ச்சிறு சட்டியிலிட்டு மேலே கவிழ்த்துமூடும் கலத்தின் உள்ளே புகைகின்ற பதங்கச் சத்து ஒட்டக்கூடிய துளசி, வெற்றிலை, குப்பைமேனி கோவை, ஊமத்தை போன்ற ஏதாவது மருந்துக்குத் தக்கதான மூலிகையின் சாற்றைப் பூசி உலர்த்தி இரண்டினது வாயினையும் பொருந்த வைத்து சீலைமண் செய்துகொள்ள வேண்டும். இப்பொறியை அடுப்பேற்றி எரிக்க கீழுள்ள கலத்தில் வைக்கப்பட்ட சரக்கு புகைந்து மேலே பதங்கமாக ஒட்டிக்கொள்ளும். சரக்கு பதங்கமாவதற்கான நேரம்வரை எரித்து பொறி நன்றாக ஆறியபின் இறக்கி சீலைகளைப் பத்திரமாகவும் கலங்கள் குலுங்காமலும் பிரித்து மேல்கலத்தின் உள்ளே சேர்ந்து, ஒட்டியிருக்கும் பதங்கத்தைச் சுரண்டி சேகரித்துக் கொள்ள வேண்டும்.

பதங்க மருந்துகள் இவ்வாறு செய்யப்படுகின்றன. இலிங்கப்பொடியும் கொடிவேலி வேரும் வைத்து எரிக்க இரசம் பதங்கமாகும். சாம்பிராணிப் பதங்கம் செய்ய மேல்கலத்துக்குப் பதிலாக கடுதாசியை (paper)க் குல்லாயைப்போல செய்து பயன்படுத்துவதுமுண்டு. பொதுவாக பதங்கம் செய்யும் போது சிறு தீயில் நிதானமாக எரிக்க வேண்டும்.

***புகை எரிப்புக் கருவி:*** சில மருந்துகள் எரிக்கப்படும்போது மணல், நீர் போன்ற பொருட்களினுள் புதைத்து வைத்து எரிக்கப்படும். அடுப்பேற்றக்கூடிய கலத்தில் மணல் அல்லது நீர் முக்காற்பங்கு நிரப்பி நடுவில் எரிக்க வேண்டிய சரக்கை குப்பியிலிட்டாவது, சீலையில் முடிந்தாவது, வேறொரு சிறுகலத்தில் வைத்தாவது இருத்தி எரிப்பதாகும். குப்பியிலிடும் மருந்துகள் சீலை செய்யப்பட்டோ அல்லது மூடாமலோ வைக்கப்படலாம். மணலுள் எரிப்பது வாலுகா யந்திரமாகும் (வாலுகா - மணல்). இதில் பூரணசந்திரோதயம், தங்க வெள்ளி உரங்கள் செய்யப்படுகின்றன. பொதுவாக தேன்மெழுகு சேர்ந்து செய்யப்படும் களிம்புகள் நீரினுள் புதைத்து வைத்தெரித்துச் செய்யப்பட வேண்டும். தேன்மெழுகை உருக்கும் போதும் இதுவே முறையானதாகும்.

***புகை (மறை) புடக்கருவி:*** பட்டுக்கருப்பு போன்ற மருந்து செய்யும்போது சரக்குகள் துணிமுடிச்சுகளில் கட்டப்பட்டு, ஒரு கலத்திலிட்ட மணலுக்குள் புதைத்து வைக்கப்பட்டு மேற்கலம் மூடிச்சீலை செய்து புடமிடப்படுகின்றன. இது மணல் மறைபுடம் எனப்படும். இது போலவே பிறபொருட்களான சாம்பல், மரங்களின் புறணிகளின் தூள், பூவிதழ், கொம்பரக்கு போன்றவற்றுள் மறைத்துப் புடமிடுதலும் உண்டு. உப்பைக் கட்டாக்க பிரண்டைச் சாம்பலுள்ளும், கெந்தகத்தைப் பற்பமாக்க புளியம் புறணித்தூளுக்குள்ளும், தாளகத்தைக் கட்டாக்க கொம்பரக்குத்தூள், பூவரம் பூவிதழ் இவற்றுக்குள்ளும் புடமிடப்படும்.

***துலா எந்திரம்:*** நீரிலுள்ளாவது, நீர்ப்பரப்புக்கு மேலாகவாவது பொருட்களைத் துலாப்போல கட்டித் தொங்கவிட்டு எரிப்பதற்கு உதவும் கருவி துலா எந்திரமாகும். முன் புகை எரிப்புக் கருவிபோலவே ஆயினும் பொருள்கட்டித் தொங்கவிடப்படுதலே

இதில் மாறுபாடு ஆகும். இதில் பொருட்கள் ஒரு சீலைத்துணியில் தளர்ச்சியாக முடியப்பட்டு ஒரு கயிற்றின் உதவியால் கலத்தின் வாய்க்குக் குறுக்காக வைக்கப்பட்ட மட்டக்கோலில், பொருள் நீர்ப்பொருளுக்குள் முழுகும்படி அல்லது நீர்ப்பரப்பைத் தொடாமல் மேலே நிற்கும்படி கட்டித் தொங்கவிடப்படும். வாளம், சேங்கொட்டை, கொம்பரக்கு, பூரம் போன்றவை முழுக வைத்து எரிக்கப்படுவன. வீரம் (நீரில் கரைந்துவிடும் தன்மையானதால்) நீர்ப்பொருளுக்கு மேலாக நிற்கும்படி கட்டித் தொங்கவிடப்படும்.

**சுடர்தைலக்கருவி:** சரக்குகளைச் சுத்தமான வெள்ளைத் துணியில் முடிந்தாவது கம்பிகளால் கட்டிப் பொதிந்தாவது ஒரு கதிரின் நுனியில் கட்டி, நெய்ப்பொருளில் தோய்த்தாவது சரக்கே நெய்யை விடத்தக்கதானால் அப்படியேயாவது கொளுத்தி அதிலிருந்து சுடரோடு வடிகின்ற நெய்யை ஒரு பீங்கான் பாத்திரத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியது சுடர்த்தைலக் கருவியாகும். கந்தகசுடர்தைலம், ஓணான் சுடர்தைலம், பஞ்சபாடாண சுடர்த்தைலம், பாம்புச்சட்டைச் சுடர்தைலம் என்னும் பல தைலங்கள் இவ்வாறு பெறப்படுகின்றன.

**குழித்தைலக் கருவி:** ஒரு பெரிய மட்பாண்டத்தின் அடிப்பகுதியில் பல (10-30) சிறு துவாரங்களிட்டு அவற்றுள் சுமார் 2-3 அங்குல நீளமான கம்பிகளைத் தொங்கும்படியும் துவாரங்களை முழுதும் அடைத்துவிடாதபடியும் தொங்கவிட்டு, துளைகளிட்ட பாகம் முழுதும் மறையத்தக்கதாயும் தொங்குகின்ற கம்பிகள் முழுதும் உள்ளே இருக்கத்தக்கதாயும் ஒரு பீங்கான் பாத்திரத்தின் வாயைக் கலத்தின் அடிப்பாகத்தோடு இணைத்து வைத்து சந்து இல்லாமல் சீலை செய்துகொண்டு, மட்கலத்துக்குள் குழித்தைலம் எடுக்க வேண்டிய சரக்குகளை நியமப்படி நிரப்பி வாயை மூடிச் சீலை செய்துகொள்ள வேண்டும். பூமியில் மேற்கலமும் பக்கங்களில் எருவும் அடுக்கக்கூடிய அளவு உள்ள ஒரு குழிதோண்டி குழியின் அடிப்பகுதியின் நடுவில் கீழுள்ள பீங்கான் பாத்திரம் மட்டும் இருக்கக்கூடிய அளவான சிறுகுழி தோண்டிக்கொள்ள வேண்டும். அச்சிறு குழியுள் பீங்கான் பாத்திரத்தை இருத்தி வைத்து மேலே

மேற்கலத்தைச் சுற்றிலும் எரு அடுக்கித் தீயிட்டு புடம் ஆறியபின் பிரித்தெடுத்து கவனமாக பீங்கான் பாத்திரத்தில் சேர்ந்திருக்கும் குழித்தைலத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

சிரட்டைத் தைலம், சிவனார் வேம்புக்குழித் தைலம், இலந்தைக் கட்டைத் தைலம், துவரைவேர்க்குழித் தைலம் போன்றவைகள் இக்கருவியில் செய்யப்படுகின்றன.

**குப்பிபுடத்தைலக் கருவி:** குழித்தைலம் பெறுகின்ற வகைப்படியேயாயினும் இதில் குழிதோண்டி வைப்பதில்லை. கலத்துக்குப் பதிலாக குப்பி பயன்படுத்தப்படும். தைலம் எடுக்கவேண்டிய சரக்குகளை ஏழுசீலைமண் செய்யப்பட்ட ஒரு குப்பிக்குள் நிரப்பி, அக்குப்பியின் கழுத்திலிருந்து வாய் வரையிலும் கம்பியினாலான வலையை நெருக்கிச் சிக்காக்கி அடைத்துக்கொள்ள வேண்டும். ஒரு அகலமானதும் குப்பியின் உயரத்துக்கு மேற்பட்ட உயரமுடைய குப்பியைச் சுற்றிலும் தேவையான அளவு எரிபொருள் கொள்ளக்கூடியதுமான ஒரு கலத்தின் அடிப்பாகத்தில் குப்பியின் வாய் நுழையத்தக்கதான ஒரு துளை செய்து, அதனுள் குப்பியைக் கவிழ்த்து செருகி குப்பியின் கழுத்து துவாரத்தில் பொருந்தும்படி நிலைப்படுத்தி வைத்து சந்திற்கு அரைத்த மண்ணைப்பூசிக்காய விட்டுக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்த குத்துக்கலத்தை குப்பியின் வாய் கீழ்நோக்கி இருக்கத்தக்கவும் உயரமாகவும் நிலைப்படுத்திக்கொண்டு, குப்பி வாய்க்கு நேராகக் கீழே ஒரு வாயகன்ற பீங்கானை வைத்துக்கொண்டு, குப்பிக்கும் குத்துக் கலத்துக்கும் இடையிலும் சிறிது மேலும் எரிபொருளை வைத்துத் தீயிட்டுப் புடமிட சரக்குகள் கரிந்து தைலம் வெளிப்பட்டு குப்பியின் வாய்வழியாகப் பீங்கானில் துளித் துளியாய்ச் சேரும். புடம் எரிந்து முடிந்ததும் பீங்கானில் சேர்ந்த தைலத்தை எடுத்துக் கொள்ளலாம்.

முட்டை (அண்டத்தைலம்;) சுடலைத் தைலம் போன்றவை இம்முறையில் செய்யலாம். அன்றியும் குழித்தைலம் பெறுகின்ற சிறுமுறை யாவும் இம்முறையாலும் செய்யப்படலாம்.

**மெழுகுத்தைலக்கருவி:** மெழுகு(மயன)த்தைலம் செய்வதற்குப் பயன்படுகிற கருவி தனியான அமைப்பில் செய்யப்படும். இதற்கு வாய் குறுகலாயும் கழுத்து உருளையாய் நீண்டதாயும்

உடலில் பொருட்களைப் போடத்தக்கதான ஒரு துளை உள்ளதாயும் உள்ள ஒரு பெரிய குடுவையும், இக்குடுவையின் வாயும் கழுத்தின் ஒருபகுதியும் செம்மையாய் நுழைந்து பொருந்தத் தக்கதாயும் உடலில் பக்க நடுவில் சிறு துளைகள் உள்ளதாயும் அமைந்த மற்றொரு சிறிய குடுவையும் வேண்டும். முதலில் கழுத்துக் குடுவையின் வாயையும் கழுத்தையும் சிறு குடுவையின் வாய்க்குள் நுழைத்து பெரிய குடுவையின் துளை மேல்நோக்கியும் சிறிய குடுவையின் சிறு துளைகள் கீழ்நோக்கியும் இருக்கத் தக்கதாகப் பொருந்த வைத்து இரண்டினதின் இணைப்பில் சந்தில்லாமல் மண்பூசி மேலே ஏழுசீலைமண் செய்து உலர்த்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தபின் பெரிய குடத்தில் துவாரத்தினூடாக சரக்குகளைப் போட்டு அத்துவாரத்தில் பொருந்தும்படி சில்லிட்டு அதன்மேல் பசுஞ்சாணமும் மண்ணும் கலந்து அதன்வழியே புகை வெளிப்படாதவாறு செய்துகொள்ள வேண்டும். பின்பு பெரிய குடத்தை சில்லிட்ட துவாரம் மேற்புறமாக இருக்கவும் சற்று ஒருக்கலித்து சிறுகுடம் சற்று மிதக்கவும் அதிலுள்ள சிறுதுவாரங்கள் கீழ் நோக்கி இருக்கவும் நிலைப்படுத்தி துவாரங்களில் சிறுகுச்சிகளைச் செருகி அடுப்பேற்றிக் கொண்டு சிறுகுடத்தின் துவாரங்களுக்கு நேராக ஒரு பீங்கான் பாத்திரத்தை வைத்து, அடுப்பில் தீயிட்டு எரிக்க வேண்டும். பெரிய குடத்தின் சரக்குகள் ஆவியாகிப் புகைந்து சிறுகுடத்துள் சேர்ந்து குளிர்ந்து புகையுடன் தைலமாக துவாரங்கள் வழியாய் வடிந்து பீங்கானில் சேரும். வெளிப்படும் புகை அடுப்பின் தீயோடு தொடர்பு படாமல் இடையில் ஒரு தகரத் தடுப்பை வைத்துக்கொள்ள வேண்டும். இப்புகை தீயுடன் தொடர்பு பட்டால் உடனே தீப்பற்றிக் கொள்ளும். பொதுவாக மெழுகுத்தைலக் குடுவைகள் நல்ல தரமான களிமண்ணால் செய்து சுட்டு எடுக்கப்பட்டபின்பு பல நாட்கள் தண்ணீர் விடப்பட்டு அடுப்பில் எரிக்கப்பட்டுப் பழக்கப்படும். எனினும் அவற்றிலுள்ள நுண்ணிய துவாரங்களிலிருந்து புகை வெளிக்கசிவு ஏற்பட்டு எந்திரம் முழுதும் தீப்பிடித்தல், குடம் வெடித்தல் முதலியன ஏற்படலாம்.

எனவே மெழுகுத் தைலம் செய்யும்போது புகைந்து தீப்பிடித்தால் குடுவையைப் போர்த்தி மூடித் தீயை அணைக்கத் தக்கதாக இரண்டு கோணித்துண்டுகளை நீரில் நனைத்து ஈரமாக்கித் தயாராக வைத்திருக்க வேண்டும்.

**வாலை எந்திரம்:** தீநீர்களும், திராவகங்களும் இறக்க இது பயன்படுகிறது. வாலைகள் பொதுவாய் மண்ணால் செய்யப்படும். தீநீர்கள் பெருமளவில் இறக்க செம்பினாலான வாலைகளும் பயன்படுவதுண்டு. ஆனால் திராவகங்கள் தனித்தனி மண்வாலையில் இறக்கப்படும். வாலைகள் அமைப்பில் பலவிதமாய் இருக்கலாம். இதில் ஆவியாகக்கூடிய சரக்குகள் ஆவியாக்கப்பட்டுக் குளிருட்டப்பட்டுப் பெறப்படுகின்றன. மெழுகுத் தைலக் கருவியில் சரக்குகள் புகையும் ஆவியுமாக்கப்பட்டு குளிரடைந்து மருந்தாகும்.

மருந்துச் சரக்குகள் போட்டு எரிக்கக்கூடிய ஒரு பெரிய கடமும் அதன் கழுத்து நீண்டு அல்லது உயர்ந்தும் அதனோடு மற்றொரு சிறுகுடுவை இணைக்கப்பட்டதாயும் இச்சிறு குடுவை குளிருட்டப்படக் கூடியதாயும் மருந்து சேரக்கூடியதாயும் அமையும்.

மண் அல்லது உலோகத்தினால் செய்யப்படும் வாலையின் குளிருட்டுப்பகுதி ஒரு உருளைக்குழல் வடிவினதாய் கழுத்தோடு செவ்வையாய்ப் பொருந்துவதாயும் இப்பொருத்துவாய்க்கு சற்று உயரே உட்புறத்தில் அதன் சுவரோடு ஒட்டியதும் நடுவில் இடமுள்ளதும் உட்புற உதடு உயர்ந்து ஒரு வட்டமான சற்று ஆழிய வாய்க்கால் அமைக்கப்பட்டதாயும் இவ்வாய்க்காலில் சேரும் மருந்தை வடிக்கத்தக்க ஒரு துவாரமும் அதோடு இணைந்த ஒரு நீளமான குழலும் இணைந்ததாயும், இப்பகுதிக்குச் சற்று மேலே உருளைக் குழலை முழுதுமாக அடைக்கத் தக்கதாயும் மேற்புறம் குவிவாயும் கீழ்புறம் குழிவாயும் அமைந்த ஒருவிதானமும் இவ்விதானத்துக்கு மேலே ஊற்றப்படும் நீர் சூடானதும் அகற்றுவதற்கு வசதியாகத் துவாரமும் அதில் குழலும் இணைந்ததாயும் இருக்கும்.

தீநீர் பெறவேண்டிய ஊறலையாவது திராவகம் பெறத்தக்க உப்புவகைகளையாவது பெரிய குடத்துக்குள் போட்டு அதின்மேலே குளிரூட்டும் வாலைப்பகுதியை இணைத்துச் செருகிப் பொருத்திவைத்து பொருத்தில் மண்பூசி அடைத்து மேலே சீலைமண் செய்துகொண்டு வாலைப்பகுதியின் மேலே நீர்விடும் பகுதியின் குழலை அடைத்துவிட்டு குளிர்ந்தநீரை நிரப்பி அடுப்பேற்றி எரிக்க வேண்டும். தீநீர் வடியும் குழலின் நுனியில் மருந்துசேர ஒரு கலத்தை வைக்க வேண்டும்.

குடத்திலுள்ள பொருள் ஆவியாக மேலே சென்று விதானத்துக்கு மேலுள்ள குளிர்ந்த நீரினால் குளிர்ச்சியடைந்து திரவமாக மாறி விதானத்தின் சுவர் வழியாய் வடிந்து அதன் கீழேயுள்ள வாய்க்காலில் சேரும். இவ்வாறு சேருவது அவ்வப்போது குழலின் வழியாய் வடிந்து சேகரிக்க வைக்கப்பட்டுள்ள கலத்தை அடையும். மேலே ஊற்றப்பட்டுள்ள குளிர்ந்த நீர் சூடாகிக் குளிரூட்டும் தன்மையை இழப்பதால் அடிக்கடி இது மாற்றப்பட வேண்டும். இவ்வாறு செய்வதற்குப் பதிலாக மேலே தொடர்ந்து அதே அளவு நீர் வெளியாகுமாறும் அமைத்துக் கொள்ளலாம்.

சங்குத்திராவகம், வெடியுப்புத் திராவகம், கறியுப்புத் திராவகம், கெந்தகத் திராவகம், ஓமத்தீநீர் சோம்புத்தீநீர், நண்டுத்தீநீர் போன்ற பல மருந்துகள் இதில் செய்யப்படுகின்றன.

பிழி எந்திரம்: கற்கப் பொருட்களிலிருந்து தைலத்தைப் பிரிக்கவும், இடித்த இலை போன்ற பொருட்களிலிருந்து சாற்றைப் பிரிக்கவும் பிழி எந்திரம் பயன்படுகிறது. இது கீழே ஒருபுறம் உயர்ந்தும் மறுபுறம் தாழ்ந்தும் தாழ்ந்த பகுதியில் திரவம் ஒருமித்து இறங்கக்கூடிய மூக்கமைப்பு கொண்ட ஒரு அகன்ற உலோகத்தாலான தட்டும் இதன் இருபக்கமும் நிறுத்தப்பட்ட இரு **கோல்களும்** அவற்றின் மேலே குறுக்காக ஒரு சட்டமும் கொண்ட ஒரு கருவியும், நுனியில் ஆடக்கூடியவிதத்தில் கட்டப்பட்ட இருகோல்களாலான இடுக்கியும் கொண்டது.

பிழியப்படவேண்டிய கற்கப்பொருளை ஒரு முரட்டுத் துணியில் இறுக்கமாக முடிந்து கட்டி குறுக்குச் சட்டத்தில் தொங்கவிட்டு இடுக்கியின் கோல்களை விரித்து

அவைகளுக்கிடையில் இம்முடிச்சை இருக்கச் செய்து கோல்களை நெரிக்க கற்கத்திலிருந்து நீர்மப்பொருள் பிரிந்து தட்டில் விழுந்து தாழ்ந்த பகுதியிலுள்ள வடிமுக்கு வழியாய் வடியும். இவ்விடத்தில் ஒரு பாத்திரத்தை வைத்து அதைச் சேகரித்துக்கொள்ள வேண்டும்.

இதுவரை கூறப்பட்டவையல்லாத வேறு சில கருவிகளும் சில மருத்துவர்களால் அவ்வப்போது கையாளப்படுகின்றன. இவையல்லாத தற்காலத்தின் அதிக தேவையை மனதிற்கொண்டு பல புதிய கருவிகள் மருந்து செய்வதற்குப் பயன்படுத்தப் படுகின்றன. இவைகளில் பல மின்சாரத்தால் இயங்குபவையாகும். இவைகளைப் பற்றிய முழு விவரமும் இவ்வரிசையிற் கூறுவது தேவையற்றதால், அவைகளுட் சிலவற்றைப் பற்றிய சிறுவிளக்கம் மட்டும் இங்கு எழுதப்பெற்றுள்ளது. பெரும்பாலும் இவை வணிகத்தின் பொருட்டாய் அதிக அளவில் மருந்துசெய்யும் மருந்தாக்க நிலையங்களுக்கே தேவையானவையாகும். எனினும் நிலநெய் அடுப்பு, விசிறி உலை போன்றவை சிறு அளவுகளில் மருந்து செய்வாருக்கும் உதவும்.

**நிலநெய் அடுப்பு (kerosine stove) :** இது மண்ணெண் ணெயை எரிபொருளாகக் கொண்டு எரிவது ஆகும். இதில் திரியில் எரிவது, நில நெய்யும் வாயுவும் சேர்ந்தெரிவது என்று இருவகையுண்டு. திரியில் எரிவது ( Wick Stove ) குறைந்த சூட்டைத் தரக்கூடியது. வாயு அடுப்பில் (Kero Gas stove) அதிக சூடு உண்டாகும். இதில் காற்று வெளியாகாத விதத்தில் அமைந்த நிலநெய் தேக்கி (oil tank) யில் அழுத்தமாக காற்றை உள்ளடைத்து மிகச் சிறிய துவாரத்தின் வழியாக நில நெய்யும் வாயுவும் வெளிவரச்செய்து எரிப்பதாகும். இதுதவிர எரிவாயுக்கள் ( Indane Gas) உபயோகித்து எரிக்கும் அடுப்புகளும் உண்டு. இவைகளில் எரியக்கூடிய வாயுக்கள் ஒரு தேக்கியில் பத்திரப்படுத்தப்பட்டு நுண்ணிய துளைகளுள்ள குழாய்களால் இணைக்கப்பட்டிருக்கும். இவை அன்றி நீராவி (Steam) அடுப்புகள் ஓரிடத்தில் நீர் எரிக்கப்பட்டு ஆவியாக்கி அவை தேவையான இடங்களுக்குக் குழாய்களின்முலம் கொண்டு செல்லப்பட்டு அவைகளுக்கென அமைந்த அடுப்புக் கலங்களில் இரண்டு சுவர்களுக்கிடையில் தேவையான அழுத்தத்தில் செலுத்தப்பட்டு உபயோகிக்கப்படும். மின்சாரத்தைச்

சுருளான கம்பிகளில் செலுத்தி சூடாக்கி அவைகளிலிருந்து வெப்பத்தைப் பெறக்கூடிய (electric Heater) அடுப்புகளும் பலவகைகளில் உண்டு.

*விசிறி உலை* : இதில் துருத்தியில் வாயுவைச் செலுத்தப் பயன்படும் பகுதி, கையால் இயக்கக்கூடியதும் வெளிவாயுவை இழுத்து உட்செலுத்தக்கூடியதுமான விசியுடன் கூடியதாய் அமைக்கப்பட்டிருக்கும்.

*மின் உலை* : மின்சாரத்தைக் கொண்டு சூட்டை உண்டாக்கக்கூடிய உறுப்புகளும் அச்சூடு பரவுகின்ற அறையும் கொண்டதாயும் தேவையான அளவு மின்சாரத்தைக் கொடுக்கக்கூடிய கட்டுப்பாட்டு விசை அமைந்ததாயும், உண்டான சூட்டின் அளவை அறிய உதவும் வெப்பமானி உள்ளதாயும் இருக்கும். இதில் சிறிது முதல் பெரிது வரை பல அளவுகள் உண்டு. வெப்பத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக கூட்டி, தேவையான அளவில் தேவையான நேரம் நிலைப்படுத்திப் பின்பு கொஞ்சங் கொஞ்சமாகக் குறைக்கக்கூடிய விதத்தில் அமைந்த புடஉலை (சவுதாமுனி) களும் தற்காலம் செய்யப்பட்டுள்ளன. இவை உருக்குகைக்கும் நீற்றுகைக்கும் உதவுகின்றன.

*மின் கல்வம்* : இதில் ஆட்டுரல் போல அமைந்ததும் அதுபோலவே பயன்படுவதும் பொதுவானதாகும். மருந்துகளை அரைப்பதற்கு கல்வங்களில் நிறுத்தப்பட்ட ஒருதலைக்குழவியை முன்னும் பின்னுமாக நகர்த்தக் கூடியவாறு மின்சாரத்தால் இயங்கும் சுழற்றியும் அதோடு இணைந்து சக்கரம் அல்லது உருளைகளும், இணைப்புகளும் கொண்டது, பயன்படுகிறது.

*சிதைப்பான்* : சிகைக்காய், வசம்பு போன்ற பொருட்களைச் சிறுகச் சிறுகச் சிதைத்துப் பொடியாக்கும் எந்திரம் சிதைப்பான் ஆகும். இதில் மின் சுழற்றியும் இணைக்கப்பட்ட சிதைபொறியும் உண்டு. சிதைபொறிக்குள் ஒருபுறம் சரக்குகள் தள்ளப்படுவதற்கான வசதியும் மறுபுறம் சிதைவுண்டவை வெளிப்படுவதற்கான வழியும் அமைக்கப்பட்டிருக்கும். இது சூரணங்கள் செய்வதற்குப் பயனாகிறது.

**பொடிப்பான் :** இது மாவாக அரைக்கப் பயன்படும் எந்திரமாகும். சிதைப்பான் போலவே சிதை பொறிக்குப் பதில் பொடித்திரிகை இணைக்கப்பட்டிருக்கும். நெய்ப்பசை உள்ள பொருட்கள் இதில் பொடியாக்க போடப்பட்டால் சிக்கும். எனவே பசையற்றதும் ஈரமற்றதுமான பொருட்களைப் பொடியாக்க இது பயன்படும்.

**சலிப்பான் :** ஒரு சுழற்றுவானில் இணைக்கப்பட்ட வலையான சலிப்புக்கருவி அதற்குள் போடப்பட்டவற்றைச் சலிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். சூரணங்களைச் சலிக்க இது பயனாகிறது.

**குளிகை எந்திரம் :** இது கயிறாக்கி, கூறாக்கி, உருட்டி ஆகிய எந்திரங்களைக் கொண்டது. ஒரு உருளையில் தேவையான ஆழத்திற்குப் பல வரைவுகள் போடப்பட்டு அதன்வழியாய் ஒருதட்டில் பரப்பிய கற்கத்தை உருட்டி எடுக்க கற்கம் நீளமான கயிறுகளாக்கப்படும். இவ்வாறான கயிறுகள் கொண்டதட்டை ஓரிடத்தில் நிலைப்படுத்தி குறுக்காக சம இடைவெளியில் இழுத்துக் கட்டப்பட்டுள்ள கம்பிகளுள்ள ஒரு அச்சை அழுக்க அவை சம கூறுகளாக்கப்படும். இவ்விரண்டும் குளிகையின் அளவுக்குத் தக்கபடியான அளவுகளில் அமைக்கப்பெறும். இவ்வாறு கூறானவற்றை ஒரு வட்டித்த மழமழப்பான சுவருள்ள பெரிய உருட்டிக்குள் போட்டு, அக்கூறுகள் ஒன்றோடொன்று ஒட்டாதபடி சிறு அளவு மாவு தூவி உருட்டியை ஓட்டிவிட்டு உருண்டுகொண்டிருக்கச் செய்ய, கூறுகள் உருண்டு குளிகையாகிவிடும். உருட்டிக்குள் குளிகை உலரும்பொருட்டு காற்றுலவச் செய்வதும் உண்டு.

**மாத்திரை ஆக்கி எந்திரம் :** ஒரு பகுதியில் தூளான மருந்தைக் கொட்டிவிட அவை மாத்திரையளவிலான அச்சுகுளில் நிரம்பி இறுக்கப்பட்டு மாத்திரையாய் வெளிப்படும் முறையில் செய்யப்பட்டிருக்கும். இதுவும் மின்சாரத்தால் இயங்குவதாகும். அச்சை மாற்றியமைத்து தேவையான அளவு மாத்திரைகள் செய்து கொள்ளலாம். எவ்வளவு அழுக்கமடைந்தாலும் ஒட்டக்கூடாத பொடிகளை மாத்திரையாக்க

மாவுப்பொருள், வேலம்பிசின் போன்றவை சில வேளை கலக்கப்படும்.

உருளையான அல்லது உருண்டையான ஜெலட்டின் கவசம் செய்யப்பட்ட மாத்திரைகள் செய்யப்படக்கூடிய எந்திரங்களும் உண்டு. மாத்திரைகளை எண்ணிக்கைப்படி குப்பிகளில் அடைக்கக்கூடிய எந்திரங்கள், மருந்துகளை அளவுப்படி குப்பிகளில் நிரப்பக்கூடிய எந்திரங்கள், குப்பிகளுக்கு மூடியிடும் எந்திரங்கள், மூடிகளுக்குக் காப்பிடும் எந்திரங்கள், பொடிகள் பலவற்றையாவது நீர்மங்களையாவது கலக்குவான் இளகம், களிம்பு போன்றவற்றை சீராகக் கிளறும் எந்திரங்கள் போன்று இன்னும் பல வகையான கருவிகளும் இப்போது வழக்கில் வந்துள்ளன.

# மருந்து செய்முறைகள்

தமிழ் மருத்துவத்தில் மருந்துகளை அகமருந்து, புறமருந்து எனப் பகுத்துக் கூறுவர். இவை ஒவ்வொன்றும் முப்பத்திரண்டு வகையினவாம். இவற்றுள் அக மருந்துகள் முப்பத்திரண்டும் அவற்றின் தன்மைகளைக் கொண்டு பெயர் பெறுகின்றன. புறமருந்துகள் அவை வழங்கப்படும் வகையைக் கொண்டு பெயர் பெறுகின்றன. அக மருந்து வகையுட் கூறப்படும் பல மருந்துகள் புறப்பயனுக்கும் உதவுகின்றன. பொதுவாக நோக்குமிடத்து மருந்து செய்வதில் அகமருந்துகளின் பிரிவுகளே சிறப்பான இடம் வகிக்கின்றன. புறமருந்துகள் வழங்கும்போதே சிறப்பிடம் பெறுகின்றனவாதலின் அவைகளைப் பெரும்பாலும் மருத்துவ கூடங்களில் வழங்குகையிலேதான் அறிந்துகொள்ள முடியும். எனவே ஈண்டு செய்முறைப் பயிற்சிக்குரிய அகமருந்துகளே விரிவாகக் கூறப்பெறுகின்றன.

அகமருந்துகளை உள் மருந்து என்றும் குறிப்பதுண்டு. அவையாவன:

1. சாறு 4. கற்கம்

2. சுரசம் 5. உட்களி

3. சியாழம் (குடிநீர்) 6. அடை

இவை ஆறினதின் ஆயுட்காலம் ஒருசாமமென்ற மூன்று மணி நேரம்

7 பொடி (தூசி, சூரணம்) 9. வடகம்

8 பிட்டு 10 வெண்ணெய்

இவை மூன்று மாதம் வரை ஆயுளுடையன

11 மணப்பாகு 13 கவைப்பு (இரசாயனம்)

12 நெய் 14 இளகம் (இலேகியம்)

இவை ஆறு மாதம் கெடாதிருக்கும் வன்மையுடையன.

15 எண்ணெய் (தைலம்) 18. பக்குவம்

16 மாத்திரை(குளிகை) 19 தேனூறல்

17 கடுகு 20 தீநீர் (புகைநீர்)

இவை ஓராண்டு ஆயுட்காலமுடையவை

21 மெழுகு 22 குழம்பு

இவை ஐந்தாண்டு ஆயுட்காலமுடையவை

23 பதங்கம் (படங்கு)

இது பத்தாண்டு ஆயுட்காலமுடையது

24 சிந்தூரம் (செந்தூரம்)

இது எழுபத்தைந்தாண்டு ஆயுட்காலமுடையது

25 பற்பம் (நீறு) 27 உருக்கு

26 கட்டு 28 களங்கு

இவை நூறாண்டுனால ஆயுளுடையன

29 சுண்ணம்

இது ஐந்நூறாண்டு கால ஆயுளுடையது

30 கற்பம் 32 குளிகை (இரு குளிகை)

31 சத்து

இவை மூன்றும் நெடுங்காலம் வரை வைத்திருந்து பயன்படுத்தக்கூடியன என்பதைக் கீழ்வரும் பாடலால் அறியலாம்.

"உள்மருந் துரசஞ் சாறுகுடிநீர் கற்க
முக்களியடை யோர்சாமம்
உயர்சூரணம் பிட்டு வடகம் மிளகுநால்
மேவுமறு திங்களெண்ணெய்
விரலிடு முயர்ந்த மாத்திரை கடுகுபக்குவம்
மிளிரு தேனூறல் தீநீர்
கொள்ளாறு மோராண்டு மெழுகொடு குழம்பைந்து
கோப்பதங்கம் பத்தாகும்
குருதிபொடி யெழுபானொ டைந்தாண்டு நீறுகட்
டுருக்குக் களங்கு நானூ
றெள்ளிடாச் சுண்ணம் ஐநூறுகற் பஞ்சத்து
குருகுளிகை மிக்காயுளென்
றைவரு மகிழ்சித்தர் முப்பத்திரண்டாக மருந்
திசைத்தவா யுள்ளன வரோ"

மேற்குறிப்பிட்ட மருந்துகள் அந்தந்த கால அளவுக்குள் பயன்படுத்த வேண்டும். அதற்கு மேல் பயன்படுத்தக்கூடாது.

மருந்துகள் செய்யுங்கால் தூய்மைக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். மருந்திற்குச் சேரும் சரக்குகளும் கருவிகளும் தகுந்தமுறையில் தூய்மை செய்யப் பெற்றுள்ளதாயும் செய்பவரின் கைகள் நன்கு தேய்த்துக் கழுவி தூய்மை செய்யப்பெற்றதாயும் இருத்தல் வேண்டும். கடைச் சரக்குகளில் போலிக் கலப்பும், கேடுற்றவையும் நீக்கப் பெற்று பெறவேண்டும். சில பொருட்களுக்குச் சிறப்பான சுத்தி முறைகள் உண்டு. அவற்றை அவ்வவற்றுக்குரிய முறையில் சுத்திசெய்த பின்னரே மருந்தில் சேர்க்க வேண்டும். பொருட்களின் சுத்திமுறைகள் சில இந்நூலில் கடைசியில் இடம் பெறுகின்றன.

மருந்து செய்யும்போது மிக்க கவனமாகச் செய்யவேண்டும். இதையே கைபாகம், செய்பாகம் என்று கூறுவர். ஒவ்வொரு மருந்திலும் என்னென்ன பொருளை என்னென்ன நேரத்தில் சேர்க்க வேண்டுமென்பதை மிகத் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும். ஈதன்றி மருந்தை என்ன பாகத்தில் அல்லது பக்குவத்தில் முடிக்கவேண்டும் என்பதும் அறியப் பாலதாம். இவை பொதுவாகப் பயிற்சியிலும் அனுபவத்திலும் அறிந்து கொள்ளக்கூடியன. எனினும் இந்நூலில் அவ்வப்போது மருந்துகளுக்குரிய பக்குவம் கூறப்படும்.

மருந்துசெய்முறைப் பயிற்சியின்போது பயன்படுத்தப்பெற்ற கருவிகளையும் கலங்களையும் சீராக வைத்திருக்க வேண்டும். அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தாறுமாறாக போட்டுவிடக்கூடாது. பயிற்சியைப் பதிவுசெய்யும்போது சீராகவும் ஒழுங்காகவும் பொருட்களின் எடை, அளவு முதலியவற்றைக் குறிப்பிட வேண்டும். முதற்பயிற்சிக்கு மட்டும் செய்முறைப்பதிவின் மாதிரி கூறப்படும். எஞ்சியவற்றை அதே முறையில் பதிவேட்டில் எழுத வேண்டும்.

## செய்முறைகள்

இப்பகுதியில் அக மருந்துகளின் இயல், வகை ஆகியவும் பயிற்சிகளின் செய்முறையும் பிறவும் கூறப்படும். மருந்துகளைச் செய்முறை வழியைக் கொண்டு இயன்றவரையில் பாகுபடுத்திக் கூறுவதற்கான முறையும் இந்நூலில் கையாளப்படுகிறது. ஒவ்வொரு முறைக்குரிய எளிதான பயிற்சிகளும் கூறப்படுகின்றன. பயிற்சி என்று குறிப்பிடப்பட்டவை மட்டுமே செய்முறைப் பயிற்சிக்குரியன. ஏனைய செய்முறைகள் அவைகளைப் போன்றே சில எடுத்துக் காட்டுகளாகும். கூடுமானால் அவைகளிற் சிலவற்றையும் பயிற்சியாகச் செய்து கொள்ளலாம்.

# சாறு

இயல்: மூலிகையின் இலை, வேர், பட்டை, பூ, காய் முதலிய உறுப்புகளில் தேவைப்பட்ட ஏதாவதொன்றையோ அல்லது ஐந்தும் சேர்ந்த சமூலத்தையோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மூலிகைப் பொருட்களையோ

1. சீவிப்பிழிதல், 2. வாட்டிப் பிழிதல், 3. அரைத்து வாட்டிப் பிழிதல், 4. பிற பொருளைச்சேர்த்துச் சாறு பெறுதல், 5, பிட்டவியல் செய்து பிழிந்தெடுத்தல் ஆகிய ஏதாவதொரு முறையில் அவற்றினின்றும் பெறப்படும் நீர்மப்பொருளே சாறு என்பதாம்.

குறிப்பு: இலைகள் மற்றும் மூலிகையின் ஏனைய உறுப்புகளினது வளப்பம், விளைந்த இடத்தில் செழுமை முதலியவற்றைப் பொறுத்து அவற்றினின்று கிடைக்கும் சாற்றின் அளவும் மாறுபடும். மூலிகையன்றி நண்டு போன்ற உயிரிகளினின்றும் சாறு பெறுவதுண்டு.

# இடித்துப் பிழிதல்

## முறை.1

சாறு எடுப்பதற்குரிய சரக்குகளை உரலிலிட்டு உலக்கை கொண்டு இடித்து, மசிந்த சரக்கைப் பிழிந்து அவற்றினின்றும் சாற்றைப் பிரிக்கும் முறை இடித்துப் பிழிதல் எனப்படும். பெரும்பாலும் இதில் கல்லுரலும் மர உலக்கையுமே நன்றென எண்ணப்படுகிறது.

பயிற்சி.1

# ஆடாதோடை இலைச்சாறு

## தேவையான சரக்குகள்:

ஆடாதோடை இலை, நீர்

## தேவையான கருவிகள்:

இடிகருவி, வடிகட்டி, கலங்கள், எடைகாட்டி, அளவைக்கலம், கத்தி

## செய்முறை:

தேவையான அளவு ஆடாதோடை இலைகளை எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு நீர்விட்டு கழுவி இலைகளின் நரம்பு, காம்பு ஆகியவற்றை நீக்கிக்கொண்டு எடைகாட்டியில் வைத்து அதன் நிறையைக் குறித்துக்கொள்ள வேண்டும். பின் இலைகளை நறுக்கிக் கல்லுரலிலிட்டு மர உலக்கையில் நன்றாக மசிய இடிக்க வேண்டும். இடிபட்டு மசிந்த இலையை உரலிலிருந்து எடுத்துப் பிழிய சாறு வெளிப்பட்டு வடியும். இதை ஒரு கலத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். இச்சாற்றில் கலந்திருக்கும் சக்கையை நீக்க இதனை ஒரு வடிகட்டியினூடாகச் செலுத்தி மற்றொரு பாத்திரத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அளவைக் கலத்தின் எடையைத் தெரிந்து கொண்டு அதில் சாற்றை விட்டு சாற்றுடன் கலத்தின் எடையைக் கண்டு, தனித்த சாற்றின் எடையைக் கணக்கிட வேண்டும். அளவைக் கலத்தில் சாற்றின் அளவு தெரியும். சக்கையாக மீந்தவற்றை எடைகாட்டியிலிட்டு எடை கண்டு கொள்ளலாம்.

## தேர்வு:

ஆடாதோடை இலைகளின் எடை - .....கிராம்
கலத்தின் எடை - ...கிராம்
கலம் + சாறு = எடை
சாற்றின் எடை

(கலம் + சாறு எடை) - கலத்தின் எடை - .....கிராம்

சக்கையின் எடை - ....கிராம்

சாற்றின் அளவு -.....மிலிட்

## குறிப்பு :

சில இலைகளில் நீர்த்துவம் மிகக் குறைந்து காணப்படும். அப்போது இடிக்கப்படும் இலையுடன் சிறிது நீர் சேர்த்து இடித்துப் பிழிந்து கொள்ளலாம். இவ்வாறாயின் சேர்க்கப்படும் நீரின் அளவையும் எடையையும் கண்டு கொள்ள வேண்டும். நீர் சேர்க்கப்பட்டு இடித்துப் பிழிந்த சாற்றின் தேர்வு முறை

சரக்கின் எடை - கிராம்

நீரின் அளவு - மிலிட்

சாற்றின் அளவு - மிலிட்

கலத்தின் எடை - கிராம்

கலம் - சாறு எடை - கிராம்

ஃ சாற்றின் எடை - கிராம்

சக்கையின் எடை - கிராம்

## பயன் :—

தனித்த ஆடாதோடை இலைச்சாறு ஐயநோய்களிலும் இருமல், இரைப்பிலும் பயன்படும். ஈதன்றி கண்டங்கத்தரி இளகம் போன்றவற்றிலும் சேரும்.

இதே முறைப்படி கரிசாலை, குடியோட்டிப் பூண்டு, எருக்கிலை போன்ற பல மூலிகைகளினின்றும் சாறு பெறலாம். பெரும்பாலான மூலிகைப் பொருட்களின் சாறு 'இடித்துப் பிழிதல்' முறையிலேதான் பெறப்படுகிறது. நண்டு

போன்ற உயிரிகளினின்றும் 'இடித்துப் பிழிதல்' முறைப்படி சாறு பெறலாம்.

## செய்முறைப் பதிவு

(மாதிரி)

## பயிற்சி எண் : 1

நாள் :

பயிற்சி : ஆடாதோடை இலைச்சாறு

முறை : இடித்துப் பிழிதல்

## தேவையான சரக்குகள் :

ஆடாதோடை இலை, நீர்

## தேவையான கருவிகள் :

இடிகருவி, வடிகட்டி, கலங்கள், அளவைக்கலம், எடைகாட்டி, கத்தி

## செய்முறை :

ஆடாதோடை இலைகளை நல்லவைகளாகப் பார்த்துத் தெரிந்தெடுத்து ஒரு வட்டிலில் போட்டு பாதியளவு நீர் விட்டு கழுவி காம்பு நரம்பு நீக்கிச் சுத்தமாக்கப்பட்டு எடை காட்டியிலிட்டு எடை கண்டு கொள்ளப்பட்டது. (இலையின் எடை ... கிராம்) பின் இவற்றை நறுக்கி கல்லுரலிலிட்டு மர உலக்கை கொண்டு நன்றாக இடிக்கப்பட்டது. மசிந்ததும் உரலிலிருந்து எடுத்து நன்றாகப் பிழிந்து வடித்த சாற்றை ஒரு கலத்தில் பெறப்பட்டது. பின் இதனை ஒரு வடிகட்டியினூடாகச் செலுத்தி மற்றொரு கலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது. ஒரு அளவைக் கலத்தை நிறுத்து எடை கண்டு கொள்ளப்பட்டது. (அளவைக் கலத்தின் எடை ... கிராம்) அதில் சாற்றை விட்டு அளவு தெரிந்துகொண்டபின் (சாற்றின் அளவு ... மி. லிட்) சாற்றுடன் கலத்தை எடைகாட்டியிலிட்டு எடை கண்டுகொள்ளப்பட்டது (சாற்றினதும் கலத்தினதும் சேர்ந்த எடை ... கிராம்) சக்கையின் எடை கண்டு கொள்ளப்பட்டது. (சக்கையின் எடை ... கிராம்)

**தேர்வு :**

செய்முறையின் கீழ் கூறப்பெற்றபடி கணித்தெழுத வேண்டும்.

**பயன் :**

முன்கூறியபடியே எழுதிக் கொள்ளலாம்.

**முறை :**

1 அ. கூட்டுச் சரக்குச்சாறு

**பயிற்சி :**

2 மாந்தச் சாறு

**தேவையான சரக்குகள் :**

நொச்சியிலை, நுணா இலை, பொடுதலை இலை,. உத்தாமணி இலை

**தேவையான கருவிகள் :**

இடிகருவி, வடிகட்டி, எடைகாட்டி, சுரண்டி, அளவைக்கலம், கலங்கள்

**செய்முறை :**

நொச்சி, நுணா, பொடுதலை, உத்தாமணி ஆகியவற்றின் இலைகளைத் தூயதாக எடுத்துக்கொள்ள வேண்டும். இவற்றை ஒவ்வொன்றையும் தனித்தனியாக "இடித்துப் பிழிதல்" முறைப்படி சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். இவற்றைத் தனித்தனியாக அளந்து தனித்தனி கலங்களில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பின்பு இச்சாறுகளில் எந்தச் சாறு குறைந்த அளவுள்ளதாக இருக்கிறதோ அதே அளவு மற்ற சாறு ஒவ்வொன்றும் அளந்து கலந்து கொள்ள வேண்டும்.

## தேர்வு :

நொச்சில் எடை - .... கிராம்

சாற்றின் அளவு - ... மிலிட்.

நுணா இலை எடை - ... கிராம்

சாற்றின் அளவு - ... மிலிட்.

பொடுதலை இலை எடை - ... கிராம்

சாற்றின் அளவு - ... மிலிட்.

உத்தாமணி இலை எடை - ... கிராம்

சாற்றின் அளவு - ... மிலிட்.

குறைந்த அளவுள்ள சாறு அதன் அளவு - . . . மிலிட்.

அதே அளவு ஏனைய சாறுகள் கலந்தபின் அளவு - .மிலிட்.

## பயன் :

5.15 மிலிட் காலையில் மட்டும் சிறுகுழந்தைகட்குக் காணும் மாந்த நோயில் கொடுக்கலாம். 3 நாட்கள் கொடுத்தால் போதுமானது.

முறை :

### 1 சேவப்பொருட்சாறு

பயிற்சி :

### 3 நண்டுச்சாறு

## தேவையான சரக்குகள் :

வயல் வரப்புகளில் கிடைக்கும் பால் நண்டு, தேவையான அளவு

**தேவையான கருவிகள் :**

இடிகருவி, எடைகாட்டி, வடிகட்டி, கலங்கள், அளவைக்கலம், துணித்துண்டு.

**செய்முறை :**

வேண்டிய மட்டும் பால் நண்டுகளை எடுத்து அவற்றின் கொடுக்கு, கால்கள் ஆகியவற்றை ஒடித்து நீக்கிவிட்டு கழுவி எடைகண்டு கொண்டு இடிகருவியில் நன்றாக இடித்ததும் துணித்துண்டில் வைத்துப் பிழிய சாறு பிரியும். இதை வடிகட்டி அளந்து கொள்ள வேண்டும்.

**தேர்வு :**

| | | |
|---|---|---|
| பால் நண்டின் எடை | - | ... கிராம் |
| சாற்றின் அளவு | - | ... மிலிட். |

**பயன் :**

ஈரல் நோய்கள், நீர்ப்பெருவயிறு, இவற்றுக்கான நண்டு நெய் செய்ய உதவும்.

## கோழிக் குஞ்சுச்சாறு

கூவாத இளம் கோழிக்குஞ்சுகளைக் கொன்று தோலுரித்து, குடல், தலை இவற்றைப் போக்கி உரலில் இட்டு இடித்து வைத்துப் பிழிய சாறிறங்கும்.

**பயன் :**

இச்சாற்றுடன் சாராயம் கூட்டி வாரம் ஒருமுறையாக 3 தடவை கொடுக்க அடிபட்ட வர்மம் இளகும்.

# வாட்டி இடித்துப் பிழிதல்

**முறை :**

சாறு எடுப்பதற்கான சரக்கை அனலில் வாட்டிப்பின் கரைத்து இடித்து மசிந்ததும் பிழிந்து சாற்றைப் பிரிக்கும் முறையை வாட்டி இடித்துப் பிழிதல் எனப்பட்டது.

**பயிற்சி : 4**

## கும்மட்டிக் காய்ச் சாறு

**தேவையான சரக்குகள் :**

ஆற்றுக் கும்மட்டிக்காய், வைக்கோல், தீ.

**தேவையான கருவிகள் :**

இடிகருவி, எடைகாட்டி, வடிகட்டி, கலங்கள், அளவைக்கலம், கத்தி, சலாகை, துணித் துண்டு.

**செய்முறை :**

தேவையான அளவு கும்மட்டிக்காய்களை எடுத்து அவற்றை எண்ணி, எத்தனை காய்கள் என்றும் எடையும் குறித்துக் கொள்ள வேண்டும். இக்காய்களை நன்றாக மூடி மறைக்கக்கூடிய அளவு வைக்கோல் எடுத்து அதில் ஒருபகுதியைத் தரையில் விரித்துப் பரப்பி அதன்மேல் காய்களை வைத்து எஞ்சிய வைக்கோலை காய்களுக்கிடையிலும் மேலுமாகப் போட்டு மறைத்து மூடி வைக்கோலுக்குத் தீயிட வேண்டும். வைக்கோல் எரிந்து முடிந்ததும் ஒரு நீண்ட சலாகையின் உதவியினால் காய்களை சாம்பலினின்று அகற்றி ஆற வைத்தெடுத்துக் கொள்ள வேண்டும். இப்போது காய்கள் வெந்து அவற்றின் மேற்றோல் வெடித்துக் காணும். கத்தியினால் அத்தோலைச் சீவி அகற்றிவிட்டு காய்களைப் பிளந்து விதைகளையும் நீக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு தோலும் விதையும் நீக்கப்பட்ட ஆற்றுக்கும்மட்டிக் காய்க் கதுப்புகளின் எடையைக் கண்டுகொண்டபின் சற்று மசிய இடித்து ஒரு தூய துணித் துண்டில் வைத்து இறுக்கிப் பிழிய சாறு பிரியும். இதை ஒரு கலத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும். சக்கையை மற்றொரு தரம் இடித்துப் பிழிந்தும்

சாற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். இவ்வாறு கிடைத்த சாற்றை வடிகட்டியினூடாகச் செலுத்தி மற்றொரு பாத்திரத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும். சாற்றின் அளவு, எடை ஆகியவற்றையும் சக்கையின் எடையையும் முன் பயிற்சியில் போலவே அறிந்துகொள்ள வேண்டும். (நீர்பொருட்களின் எடையை முதலில் வெற்றுக் கலத்தில் எடைகண்டு, பின் அதில் அப்பொருளை வார்த்து எடைகண்டு கணித்துக் கொள்ள வேண்டும்)

**தேர்வு :**

காய்களின் எண்ணிக்கை -

காய்களின் எடை -

தோல், விதை நீக்கப்பட்ட காய்க் கதுப்புத் துண்டுகளின் எடை

= கிராம்

| | |
|---|---|
| கலத்தின் எடை | - கிராம் |
| கலம் - சாறு எடை | - கிராம் |
| சாற்றின் எடை | - கிராம் |
| சாற்றின் அளவு | - மிலிட் |
| சக்கையின் எடை | - கிராம் |

**பயன் :**

*சில தைலங்களில் சேர்த்துக் காய்ச்சப்படுகிறது.*

**பயிற்சி : 5**

## பிரண்டைத் தண்டுச் சாறு

*பிரண்டைத் தண்டுச் சாற்றையும் 'வாட்டி இடித்துப் பிழிதல் முறையிலேயே பெற வேண்டும். இதன் எரிபொருளாகக் கரியைப் பயன்படுத்தி கணுக்கள் நீக்கிய பிரண்டைத் தண்டுகளை இடுக்கியில் பற்றிக்கொண்டு வாட்டி, பின் இடித்தாவது முறுக்கியாவது பிழிய சாறு கிடைக்கும். இவ்விரண்டு பயிற்சிகளிலும் பொருள் நன்றாக வெந்திருந்தால் இடிக்க வேண்டியதில்லை.*

**முறை : 3**

## அரைத்து வாட்டிப் பிழிதல்

*சாறு எடுப்பதற்கான சரக்கை நன்றாக அரைத்து வாட்டித் துணித் துண்டில் தடவி, அதை அனலில் வாட்டிப் பிழிந்து சாற்றைப் பெறும் முறை 'அரைத்து வாட்டிப் பிழிதல்' எனப்பட்டது.*

**பயிற்சி : 4**

## பூண்டுச் சாறு

**தேவையான சரக்குகள் :**

*பூண்டு, கரி, தீ.*

**தேவையான கருவிகள் :**

*அளவைக்கலம், எடைகாட்டி, கத்தி, அரைகருவி, கரண்டி, துணித்துண்டு, கலங்கள்*

**செய்முறை :**

*வெள்ளைப்பூண்டு தேவையான அளவு எடுத்து கத்தியினால் அதன் வேர், மேற்றோல் ஆகியவைகளைப் போக்கி, பூண்டரிசிகளின் எடையைக் கண்டுகொள்ள வேண்டும். பின்*

இவற்றைக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து கரண்டியினால் அரைபட்ட பூண்டை வழித்தெடுத்து, இது தடவக்கூடியவாறு அமைந்த ஒரு தூய மெல்லிய துணித்துண்டை எடை கண்டு கொண்டபின் அதில் சீராகத் தடவி குழம்பு தடவப்பட்ட பின்னுள்ள எடையையும் கண்டுகொள்ள வேண்டும். பின் கரியில் தீமூட்டி நன்றாக அனலானதும் பூண்டு தடவப்பட்ட துணியை முறுக்கிப் பிழிய சாறு பிரியும். இதை ஒரு கலத்தில் பெற்றுக்கொள்ளவேண்டும். மேலும் ஒரு தடவை துணியை வாட்டி முறுக்கிப் பிழிந்து வடியும் சாற்றையும் பெற்றுக்கொள்ளலாம். சாற்றின் அளவு, பூண்டுச் சக்கையுள்ள துணியின் எடை ஆகியவைகளைக் கண்டுகொள்ள வேண்டும்.

**தேர்வு :**

| | |
|---|---|
| பூண்டரிசிகளின் எடை | - கிராம் |
| துணியின் எடை | - கிராம் |
| துணி + பூண்டுக்குழம்பு எடை | - கிராம் |
| ஃ பூண்டுக் குழம்பின் எடை | - கிராம் |
| சாற்றின் அளவு | - மிலிட் |
| பூண்டுச் சக்கை துணி எடை | - கிராம் |
| சக்கையின் எடை | - கிராம் |

**பயன் :**

இவ்வாறு பெறப்படும் பூண்டுச் சாற்றையே பூண்டுத் தைலம் எனவும் வழங்குவர். இதைத் துளிக்கணக்கில் காதிலிட செவிச்சூலை தீரும். புரை புண்களுக்குத் தடவ அவை விரைவில் ஆறும். சம அளவு தேன் கலந்து தொண்டை, அண்ணாக்குத்தூறு அழற்சி நோய்களுக்குத் தடவலாம். இதைப்போலவே அறுகம்புல்சாற்றை குருதி வடிகின்ற காயங்களுக்கு மேலாட்சியாகப் போடலாம்.

முறை : 4

# பிறபொருள் சேர்த்துச் சாறு பெறுதல்

பிறபொருள் சேர்த்துச் சாறு பெறுதலாவது சாறு எடுப்பதற்கான பொருளுடன் வேறு மூலிகை அல்லது தாதுப்பொருள் சேர்த்துச் சாற்றைப் பிரித்தலாகும்.

பிரிவு அ

## துவர்ப்பி சேர்த்துச் சாறு எடுத்தல்

சாறு எடுப்பதற்கான பொருளுடன் துவர்ப்புப் பொருட்களான படிகாரம், கடுக்காய், மாசிக்காய் போன்ற ஏதாவது பொருளின் தூளைச் சேர்த்துச் சாற்றைக் கசியச் செய்து பெறுதல்.

பயிற்சி 7

## சோற்றுக்கற்றாழைச்சாறு

### தேவையான சரக்குகள் :

கற்றாழை மடல், துவர்ப்பித்தூள் (படிகாரத்தூள்)

### தேவையான கருவிகள் :

கத்தி, உயர்ந்த விளிம்புள்ள அகலமான வட்டில், வடிகட்டி, கலங்கள், எடைகாட்டி, அளவைக்கலம், தட்டு.

### செய்முறை :

சாறு எடுப்பதற்குத் தேவையான அளவு சோற்றுக் கற்றாழை மடல்களை எடுத்துக் கொள்ள வேண்டும். இம்மடலில் மேற்பகுதி பச்சை நிறமுள்ள தோலால் மூடப்பட்டதாயும், ஓரங்களில் முட்களுடையதாயும் இருக்கும். நடுவிலுள்ள ஆடிபோன்ற சோற்றுப்பகுதியே சாறு பெறுவதற்குப் பயன்படும். எனவே கற்றாழை மடலின் மேற்பகுதியிலுள்ள தோலையும் ஓரத்திலுள்ள முட்களையும் கத்தியால் போக்கிக் கொள்ள வேண்டும். இதை எளிதாகச் செய்ய முதலில் ஓரங்களிலுள்ள முட்களைச் சிறிதளவு மடலுடன் நெடுக்காக

அப்புறப்படுத்திவிட்டு, மடலைக் குறுக்குவாட்டில் இரண்டாகப் பிளந்துகொள்ள வேண்டும். பின் இவ்வாறு பிளந்த பாதி மடலின் தோற்பகுதி கீழே இருக்க, சோற்றுப் பகுதியை கத்தியால் சிறுசிறு துண்டுகளாக வெட்டி எடுத்துக் கொள்ளலாம். ஒரு தட்டின் எடையைக் கண்டுகொண்டு அதில் மேற்சொன்னவாறு பெறப்பட்ட கற்றாழைச் சோற்றை வைத்து எடை கண்டுகொள்ள வேண்டும். இரண்டாவதிலிருந்து முதலாவதைக் கழிக்க தனித்த கற்றாழைச் சோற்றின் எடை கிடைக்கும். இவ்வெடைக்குப் பாதியளவாக படிகாரத்தைப் பொடித்துத் தூளாக்கி எடுத்துக் கொண்டு, ஒரு உயரமான விளிம்புள்ள அகலமான வட்டிலின் ஒரு ஓரத்தில் கற்றாழைச் சோற்றை வைத்து படிகாரத்தூளைக் கலந்து நன்றாகக் கிளறிப் புரட்ட வேண்டும். பின் வட்டிலில் கற்றாழைச் சோறு வைக்கப்பட்ட பகுதி சற்று மிதக்க இருக்கத் தக்கதாக அவ்வோரத்தில் வட்டிலின் கீழ் அடைகொடுத்து வைத்துவிட வேண்டும். சிறிது நேரத்தில் கற்றாழைச் சோற்றின் சாறு கசிந்து வட்டிலின் பதிவான ஓரத்தில் தேங்கும். சாறு முழுவதும் கசிந்து சேர்ந்ததும் அதை வடிகட்டிக்கொண்டு அதன் அளவு, எடை, சக்கையின் எடை ஆகியவைகளைக் கண்டுகொள்ள வேண்டும்.

## தேர்வு :

| | | |
|---|---|---|
| கற்றாழைச் சோறு வைக்கப்படாத தட்டின் எடை | - | கிராம் |
| தட்டு + கற்றாழைச் சோற்றின் எடை | - | கிராம் |
| ஃ கற்றாழைச் சோற்றின் எடை (தட்டு + சோறு எடை) - தட்டு எடை | - | கிராம் |
| தூவப்பட்ட - துவர்ப்பி - படிகாரத் தூளின் எடை | - | கிராம் |
| கலத்தின் எடை | - | கிராம் |
| கலம் - சாற்றின் எடை | - | கிராம் |
| ஃ சாற்றின் எடை | - | மி. லிட் |
| சோற்றுச் சக்கையின் எடை | - | கிராம் |

**பயன் :**

கற்றாழையின் சாறு பல தைலங்களில் சேருகிறது. சிலாசத்து போன்றவற்றைப் பற்பமாக்க அரைப்புக்கும் பயன்படுகிறது.

**குறிப்பு :**

இப்பயிற்சியில் படிகாரத் தூளன்றி கடுக்காய் போன்ற வேறு துவர்ப்பிகளின் தூளையும் சேர்த்துச் செய்யலாம். துவர்ப்பித் தூளை ஒரே நேரத்தில் கலக்காமல் சிறிது சிறிதாகத் தூவியும் சாற்றைக் கசியச் செய்யலாம். இவ்வாறு செய்தால் முதலில் எடுத்துக்கொண்ட துவர்ப்பித் தூளின் எடையைக் கண்டுகொள்ள வேண்டும். பயிற்சியில் தூளைப் பயன்படுத்தியபின் எஞ்சியதூளின் எடைகண்டு பயிற்சியில் பயன்பட்ட துவர்ப்பியின் எடையைக் கணித்துக் கொள்ளலாம்.

**பயிற்சி : 8**

## வாழைப்பழச்சாறு

வாழைப் பழத்திலும் துவர்ப்பி சேர்த்து அல்லது பச்சைநெல்லின் உமி சேர்த்து சாறு பெறலாம். இதில் மாசிக்காய் அல்லது தான்றிக்காயின் தூள் நன்றென எண்ணப்படுகிறது. வாழைப் பழத்தின் தோலை உரித்து நீக்கிவிட்டு முன்போலவே ஒரு உயரமான விளிம்புள்ள வட்டிலின் ஒரு ஓரத்தில் வைத்து துவர்ப்பித்தூள் கலந்து பிசைந்து அவ்வோரம் சற்று மிதக்க இருக்கத் தக்கதாக வைத்துவிட சாறு கசிந்து மறு ஓரத்தில் தேங்கும். முன்போலவே வடிகட்டி எடுத்துக் கொள்ளலாம்.

**தேவையான சரக்குகள் :**

வாழைப்பழம், பச்சை நெல், உமி

**தேவையான கருவிகள் :**

எடைகாட்டி, தட்டு, அளவைக்கலம்

**செய்முறை :**

நன்றாகக் கனிந்த ஒரு வாழைப்பழத்தை எடுத்து, தோலை உரித்து நீக்கிவிட்டு அதன் எடையைக் கண்டுகொள்ள வேண்டும். இதை விளிம்பு உயரமான ஒரு தட்டின் ஒரு பக்கம் வைத்து, எடை தெரிந்து கொள்ளப்பட்ட பச்சைநெல் உமியைச் சிறிது சிறிதாகத் தூவி கையால் பிசைய வேண்டும். தேவையான அளவு உமி சேர்த்துப் பிசைந்தானதும் மீதியான உமியின் எடைகண்டு பயன்பட்ட உமியின் எடையைத் தெரிந்து கொள்ளலாம். பிசையப்பட்ட பழத்தை தட்டின் ஒரு ஓரமாக வைத்து தட்டை அந்த ஓரம் சற்று மிதக்க இருக்கும்படி வைத்துவிட சாறு கசிந்து கீழ்ஓரத்தில் சேரும். இதை அளவைக் கலத்தில் வடிகட்டி எடுத்து அளவைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**தேர்வு :**

வாழைப்பழத்தின் எடை - கிராம்

எடுக்கப்பட்ட உமியின் எடை - கிராம்

பயன்பட்ட உமியின் எடை= எடுத்த
உமியின் எடை - மீதியான உமியின்
எடை = கிராம்

வாழைப்பழச் சாற்றின் அளவு / எடை - மிலிட் _

**பிரிவு — ஆ**

## துருசுச் சுண்ணம் சேர்த்துச் சாறு எடுத்தல்

விராலி என்பது ஒரு பாலைச்செடி. இதன் இலையில் நீர்த்துவம் காணப்படுவதில்லை. எனவே 'இடித்துப் பிழிதல்' போன்ற முறைகளால் இதன் சாற்றைப் பெறுவது இயலாததொன்று. விராலி இலையுடன் துருசுச் சுண்ணம் சேர்த்துச் சிறிது நேரம் வைத்துவிட இலை மென்மையடையும். பின்னர் இதை இடித்துப் பிழிய சாறு வெளிப்படும் என்பர்.

விராலி இலைகளை மொத்தமாகக் குவித்து வைத்து அதன் மீது துருசுச் சுண்ணநீரைத் தெளித்தாவது, ஒவ்வொரு இலையாக இந்நீரில் நனைத்தாவது எடுக்கலாம். இவ்வாறு செய்வதற்குக் 'கவசமிடுதல்' என்று பெயர்.

**முறை : 5**

## பிட்டவியல் செய்து இடித்துப் பிழிதல்

சாறு எடுப்பதற்கான பொருளைப் பிட்டவியல் முறைப்படி அவித்தெடுத்துப் பின் அடித்துப் பிழிந்து சாற்றைப் பிரிக்கும் முறை பிட்டவியல் செய்து இடித்துப் பிழிதல் எனப்படும்.

**பயிற்சி : 9**

### துளசியிலைச்சாறு

**தேவையான சரக்குகள் :**

துளசி இலை, நீர், தீ, எரிபொருள், விறகு.

**தேவையான கருவிகள்:**

கொதிகலம், குவிமூடி, துணி, இடிகருவி கலங்கள், வடிகட்டி, எடைகாட்டி, அளவைக்கலம், அடுப்பு.

**செய்முறை :**

சாறு எடுப்பதற்குத் தேவையான அளவு துளசியிலையைக் கொய்து எடுத்துச் சுத்தமாக்கி எடையைக் கண்டுகொள்ள வேண்டும். கொதிகலத்தில் பாதியளவு நீர் விட்டு அதன் வாயை ஒரு நீளத் துணித்துண்டை விரித்து மூடி, துணி நழுவி விழாதபடி கலத்தின் உதட்டின் கீழே கட்டிவிட வேண்டும். இவ்வாறு செய்தலுக்கு வேடு அல்லது 'வட்டு கட்டுதல்' என்று பெயர். இவ்வாறு கட்டப்பட்ட வேட்டின்மேல் துளசி இலையைப் பரப்பி வைத்துக் குவி மூடியால் மூட வேண்டும். இவ்வாறு மூடுகையில் கொதிகல வாயுடன், குவி மூடியின் வாய் ஒட்டப்பொருந்தி இருக்க வேண்டும். இரு கலங்களின் பொருத்துவாயில் துணியால் சுற்றிவிடலாம். இவ்வாறு செய்வதால் கொதிகலத்திலுள்ள நீர் ஆவியாகும்போது இதன்வழியாக வெளியாகாமல் இருக்கும். இதனைப் 'பிட்டவியல் கருவி என்பர். இனி அடுப்பில்

விறகிட்டுத் தீமூட்டிப் பிட்டவியல் கருவியை அடுப்பில் ஏற்றிவிட வேண்டும். தீயின் வெப்பத்தால் கொதிகலத்திலுள்ள நீர் கொதித்து ஆவியாகி வேட்டிலுள்ள துளசி இலை அவியும். சில மணித்துளி நேரம்வரை கொதிநிலையில் வைத்திருந்தபின் மூடியை நீக்கி இலை நன்றாக வெந்து விட்டதா என அறிந்துகொண்டு வெந்ததும் பிட்டவியல் கருவியை அடுப்பினின்று இறக்கி தீயை அணைத்துவிட வேண்டும். பின் மூடியை நீக்கி அவிந்த துளசி இலையை எடுத்து எடைகாட்டியிலிட்டு எடை கண்டுகொண்டு, கல்லுரலிலிட்டு மர உலக்கையால் இடிக்க வேண்டும். மசிந்ததும் பிழிந்து இடித்துப் பிழிதலில் செய்தது போல சாற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். முன்போலவே சாற்றை வடிகட்டிய பின் அதன் அளவு, எடை, சக்கையின் எடை ஆகியவைகளைக் கண்டு கொள்ளலாம்.

## தேர்வு :

| | | |
|---|---|---|
| துளசி இலையின் எடை | - | கிராம் |
| அவித்த துளசி இலையின் எடை | - | கிராம் |
| கலத்தின் எடை | - | கிராம் |
| கலத்ினதும் சாற்றினதும் சேர்ந்த எடை | - | கிராம் |
| (கலம் + சாறு எடை) - கலம் எடை | - | கிராம் |
| சாற்றின் அளவு | - | மிலிட் |
| சக்கையின் எடை | - | கிராம் |

## பயன் :

துளசிச்சாறு, இருமல், சளிக்கட்டு போன்ற நோய்களில் சிறப்பாகக் குழந்தைகட்குக் கொடுக்கப்படுகிறது. கோரோசனை மாத்திரை போன்றவைகளைக் கொடுக்கத் துணை மருந்தாகவும் பயன்படும்.

முறை : 6

## கசக்கிப் பிழிதல்

சாறு சிறிதளவே தேவைப்படும்போதும், சொட்டுக் கணக்கில் விடும்பொருட்டு பெரும்பாலும் இலைகளை உள்ளங்கைக்குள் வைத்துக் கொண்டு அப்படியே அமுக்க சாறு வடியும். குப்பைமேனியும் உப்பும் கூட்டி இவ்வாறு எடுத்த சாற்றை காதில் விட காதில் நுழைந்த ஈ வெளிப்படும்.

**குறிப்பு :**

இப்பயிற்சியில் அடுப்பில் விறகுபோன்ற எரிபொருள் கொண்டு அதில் தீயிட்டுப் பிட்டவியல் பொறியை வைத்து அவிப்பதை இக்கால நிலநெய் அடுப்பைக் கொண்டும் செய்யலாம். இதனால் எளிதாயும் கால விரயமின்றியும் பயிற்சி செய்ய முடிகிறது. இதைபோலப் பின்னால் விளக்கப்படும் சியாழும் செய்முறைப் பயிற்சிகளிலும் பிறவற்றிலும் விறகடுப்புக்குப் பதிலாக நிலநெய் அடுப்பையே கொள்ளலாம்.

## சுரசம்

**இயல் :**

மூலிகையின் தனி உறுப்பையோ அல்லது சமூலத்தினையோ கொண்டு பெறப்பட்ட சாற்றினையாவது, உலர்ந்த சுக்கு போன்ற சரக்குகளை இடித்துப் பொடித்து நீர் விட்டரைத்துப் பிழிந்த நீரினையாவது புதிய மண் அகல் அல்லது சட்டியில் விட்டுக் கொதிக்க வைத்தாவது அனலில் வாட்டிய அகலில் விட்டாவது முறித்து எடுப்பதைச் சுரசம் என்பர்.

தேன்போன்ற பொருட்களை காய்ச்சிய உருக்குப் பட்டையில் வடியச் செய்து முறித்துப் பெறலாம்.

முறை : 1

## கொதிக்கவைத்து முறித்தல்

*நீர்ப்பொருளை ஒரு புது மண்ணகலில் இட்டு அடுப்பில் வைத்து எரிபொருளால் தீயிட்டுக் கொதிநிலை வந்ததும் எடுத்துக்கொள்ளுதல்.*

**பயிற்சி : 10**

## இஞ்சிச் சுரசம்

**தேவையான சரக்குகள் :**

*இஞ்சி, நீர், தீ.*

**தேவையான கருவிகள் :**

*கத்தி, இடிகருவி, வடிகட்டி, கலங்கள், மண்ணகல், இடுக்கி, நிலநெய் அடுப்பு, அளவைக்கலம், எடைகாட்டி.*

**செய்முறை :**

*சுரசத்திற்குத் தேவையான அளவு சாற்றைப் பெறுவதற்கு வேண்டிய இஞ்சி எடுத்து, அதன் எடையைத் தெரிந்துகொண்டபின், மேற்றோலான புறணியைக் கத்தியைக் கொண்டு போக்கித் தூய்மை செய்து பின்னரும் எடையைக் கண்டுகொள்ள வேண்டும். பின் இதைக் கல்லுரலில் போட்டு மர உலக்கை கொண்டு இடித்துப் பிழிந்து சாற்றை வடிகட்டிப் பெற்றுக் கொள்ள வேண்டும். சாறு குறைவாகக் காணப்பட்டால், சிறிதளவு நீரை அளந்தெடுத்து அதன் எடையையும் கணக்கிட்டுக் கொண்டு சேர்த்து இடித்துப் பிழிந்து சாறு பெற்றுக்கொள்ளலாம். இஞ்சிச் சாற்றைக் . கலத்தில் அசையாமல் சிறிது நேரம் வைத்திருக்க அடியில் மாவு போன்ற படிவு ஏற்படும். மேற் பாகத்திலுள்ள தெளிவான சாற்றை மட்டும் மற்றொரு பாத்திரத்தில் வடித்து எடுத்துக் கொண்டு அதன் அளவு, எடை இவைகளைக் கண்டுகொள்ள வேண்டும். வேறாக்கப்பட்ட மாவைச் சக்கையுடன் எடை தெரிந்து கொள்ளலாம்.*

*இனி இவ்வாறு பெறப்பட்ட இஞ்சிச் சாற்றை ஒரு புதிய மண்ணகலில் வார்த்து நில நெய் அடுப்பில் வைத்து சிறு தீயில் காய்ச்ச சிறிது நேரத்தில் சாறு குமிழி விட்டுப் பொங்கி*

வரும். இப்போது அகலை ஒரு இடுக்கியினால் பற்றி அடுப்பை விட்டு இறக்கி விட வேண்டும். இதுவே இஞ்சிச் சுரசம்" எனப்படும். இச்சுரசத்தை எடைகண்டுகொள்ளப்பட்ட ஒரு அளவைக் கலத்தில் விட்டு நிறுத்து எடையைக் கணித்துக் கொள்வதுடன் அளவையும் கண்டுகொள்ள வேண்டும்.

அகலை அடுப்பின்மீது வைத்து சூடாக்கி நன்றாக சூடு ஏறியதும் அதில் சாற்றை விட்டும் முறித்துக் கொள்ளலாம்.

## தேர்வு :

| | | |
|---|---|---|
| எடுக்கப்பட்ட இஞ்சியின் எடை | - | கிராம் |
| புறணி நீக்கப்பட்ட இஞ்சியின் எடை | - | கிராம் |
| (சாறு பெறுகையில் நீர் கலக்கப்பட்டால்) | | |
| நீரின் அளவு | - | மிலிட் |
| நீரின் எடை | - | கிராம் |
| கிடைத்த சாற்றின் அளவு | - | மிலிட் |
| நீர்சாற்றின் எடை | - | கிராம் |
| சக்கையினதும் மாவினதும் எடை | - | கிராம் |
| சுரசத்தின் அளவு | - | மிலிட் |
| அளவைக் கலத்தின் எடை | - | கிராம் |
| கலம்-சுரசம் எடை | - | கிராம் |
| ஃசுரசத்தின் எடை | - | கிராம் |

## பயன் :

இஞ்சியின் சுரசம் அலசம், செரியாமை போன்ற வயிற்றுப் பிணிகட்கு உள்ளுக்குக் கொடுக்கப் பயன்படும்.

## குறிப்பு :

இஞ்சியின் மேற்றோலைப் புறணி என்று சொல்லுவர். இது மருந்திற்காகாது. இஞ்சியை இடித்துப் பிழிந்த சாற்றை அசையாது வைத்திருக்க அதனடியிற் படியும் மாவை இறுத்து நீக்கி விடவேண்டும். இப்படிவு நஞ்செனப்படும். இதுவும் மருந்திற்கு ஆகாது.

சாறு கொதிக்கையில் பொங்குவதை முறிதல் என்பர். முறியும் போது 'சர்' என்ற ஒலியுண்டாவதால் இதற்குச் சுரசம் என்று பெயர் வந்தது.

### பொடுதலைச் சுரசம் :

பொடுதலை இலை 50 கிராம் எடுத்து அதனுடன் 2 கிராம் சோற்றுப்பு சேர்த்து இரண்டையும் இடித்துப் பிழிந்து சாறெடுத்து ஒரு மண் சட்டியை அடுப்பிலேற்றி நன்றாய் சூடானதும் இச்சாற்றை அதில் ஊற்றி முறித்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

### பயன் :

5-10 மிலிட் வீதம் கொடுத்துவர சிறு குழந்தைகளின் மாந்த நோய் தீரும்.

### முறை : 2

## அனலில் வாட்டிய உருக்கிலிட்டு முறித்தல்

உருக்கினாலான தட்டையான கருவியை அனலில் வைத்துக் காய வைத்து, அதில் சுரசம் செய்வதற்கான நீர்ப்பொருளை விட்டு வழியச் செய்து முறித்தெடுத்தல் 'அனலில் வாட்டிய உருக்கிலிட்டு முறித்தல்' எனக் கூறப்படுகிறது.

## தேன் சுரசம்

உருக்குப் பட்டை அல்லது உருக்கினாலான வெட்டுக் கத்தியை அனலுக்குள் பதித்து வைக்க அது சிறிது நேரத்தில் வெப்பமடைந்து காயும். அதன் கைப்பிடியைப் பிடித்து வெளியே எடுத்து பிடித்துள்ள பக்கம் சற்று மிதக்க இருக்கும்படிச் சாய்வாகப் பிடித்துக்கொண்டு, இப்பகுதியில் தேனை வார்க்க, தேன் அதிலுள்ள வெப்பத்தால் முறிவுற்று, வழிந்து பதிவாக உள்ள மறுமுனைக்கு வந்து வடியும். இதை ஒரு பாத்திரத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். இதுவே தேன் சுரசம் எனப்படும்.

அன்றியும் ஓட்டுத் துண்டொன்றை அனலில் இட்டு சூடாக்கி அத்துண்டை தேனுள்ள கலத்திலுள் போட்டும் தேனை முறித்துக் கொள்ளுவது உண்டு.

தேனைச் சுரசமாக்குவது தேனுக்கு சுத்தி என்று எண்ணப்படுகிறது.. மருந்துகட்குத் தேன் துணை மருந்தாகப் பயன்படும்போது தேனைச் சுரசமாக்கி கொடுப்பதே நன்று.

## கியாழம்

இது குடிநீர், மருத்துநீர், உண்ணீர் என வேறு பல பெயர்களாலும் வழங்கப்படும். வடநூலார் கசாயம், குவாதம் என்று சொல்வர். முப்பலையில் கியாழம் போன்றவைகளைப் புண் கழுவுநீர் போன்ற வெளியாட்சி செய்யும்போது அவைகளைக் குடிநீர் என்று கூறுவது பொருந்தாமல் இங்கு பொதுவாகக் கியாழம் என்ற சொல்லால் கூறப்படுகிறது.

**இயல் :**

உலர்ந்த சரக்குகளையாவது ஈரமுள்ள சரக்குகளையாவது சுத்தம் செய்து, வறுக்க வேண்டியவைகளை வறுத்தும் இடிக்க வேண்டியவைகளை இடித்தும், தனியாகவோ, சமூலமாகவோ, பிற பொருட்களுடன் கலந்தோ, அதனுடன் பதினாறு பங்கு நீர் சேர்த்து இரண்டுக்கொன்றாகவோ நான்குக்கொன்றாகவோ, எட்டுக்கொன்றாகவோ, பதினாறுக் கொன்றாகவோ, இருபத்து நான்குக்கொன்றாகவோ காய்ச்சிச் சுருக்கி வடிகட்டி எடுப்பது அல்லது சரக்குகளை நீரில் ஊறவைத்து வடிகட்டி எடுப்பது கியாழம் எனப்படும்.

**முறை : 1**

## ஊறவைத்து வடிகட்டி எடுத்தல்

*தனிச் சரக்கையோ அன்றிப் பலசரக்குகளையோ சுத்தி செய்து துண்டித்து வேண்டிய அளவு வெந்நீரிலோ அல்லது தண்ணீரிலோ ஊற வைத்து வடிகட்டி எடுத்துக்கொள்வது 'ஊறவைத்து வடிகட்டி எடுத்தல்' எனப்படுகிறது.*

*இம்முறையிற் பெற்ற கியாழத்தை 'ஊறற்கியாழம்' என வழங்குவர்.*

**பயிற்சி : 11**

## சந்தன (ஊறல்) கியாழம்

**தேவையான சரக்குகள் :**

*சந்தனக் கட்டை, நீர்*

**தேவையான கருவிகள் :**

*வெட்டுக்கத்தி, கலங்கள், மூடி, அளவைக்கலம், எடைகாட்டி, வடிகட்டி*

**செய்முறை :**

*தேவையான அளவு சந்தனக்கட்டை எடுத்து அதை வெட்டுக் கத்தியினால் சிறுசிறு சீவல்களாக வெட்டிக் கொள்ள வேண்டும். இச்சந்தனச் சீவலின் எடையைக் கண்டுகொண்டபின் அதை ஒரு கலத்தில் போட்டுக்கொள்ள வேண்டும். இன்னொரு கலத்தை நிறுத்தி அதில் சந்தனச் சீவல் எடைக்கு நான்கு பங்கு நீரை நிறுத்து எடுத்து அந்நீரின் அளவைக் கண்டுகொள்ள வேண்டும். பின் இந்நீரைச் சந்தனச் சீவல் போடப்பட்டுள்ள கலத்தில் ஊற்றி அப்படியே ஊறவைத்துவிட வேண்டும். ஊறவைக்கப்படும் கலத்தை மூடியினால் மூடிவிடலாம்.*

*சந்தனத் துண்டுகள் நன்றாக ஊறி அதன் சத்து நீரில் கலந்ததும் நீரை வடிகட்டி எடுத்து அதன் அளவு, எடை ஆகியவைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். கலத்தில்*

எஞ்சிய சத்தனத் துண்டுச்சீவலின் எடையையும் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு பெறப்பட்டதே சந்தன ஊறற்கியாழம் எனப்படும்.

## தேர்வு :

| | | |
|---|---|---|
| சந்தனச் சீவல்களின் எடை | - | கிராம் |
| விடப்பட்ட நீரின் எடை | - | கிராம் |
| நீரின் அளவு | - | மிலிட் |
| ஊறல் நீரின் அளவு | - | மிலிட் |
| கழிவுச் சீவலின் எடை | - | கிராம் |

## பயன் :

சந்தன ஊறற்கியாழம் வெட்டை, நீர் எரிவு போன்ற அழல் நோய்களைப் போக்கும். 30 மிலிட் வீதம் உள்ளுக்குக் கொடுக்கலாம். உடலிற்றுவாலை பண்ண குளிர்ச்சியுண்டாகும். உடலில் வியர்வை நாற்றம், வியர்வைக்குரு நீங்கும். கோமூத்திர சிலாசத்து, போன்றவைகளை இழைத்து மூல நோய்கட்குப் பூச பயன்படும்.

## குறிப்பு :

ஊறற்கியாழத்துக்கு விடப்படும் நீர் 4,8,16 போன்ற விகிதங்களில் இருக்கலாம். சரக்குகளைத் துணியில் மூடி கட்டி நீரினுள் அமிழ்த்தித் தொங்கவிட்டும் ஊறச்செய்யலாம். சிலவற்றை வெண்ணீரில் ஊற வைக்கலாம்.

தயிரைத் துணியில் கட்டித் தொங்கவிட்டு அதனின்று வடியும் நீரைப் பெற்றுக் கொள்ளலாம். இதைத் தயிர்நீர் என்பர்.

சீந்திற்கொடி, நன்னாரி, வெட்டிவேர், முப்பலை, தேயிலை இவைகளையும் ஊறற்கியாழ முறைப்படி குடிநீராக்கலாம். முப்பலை, தேயிலை இவற்றின் ஊறற்கியாழத்திற்கு நீருக்குப் பதிலாக வெண்ணீர் விட வேண்டும்.

முறை : 2

## கொதிக்க வைத்துச் சுருக்கி வடித்து எடுத்தல்

சரக்கின் தனி உப்பையோ சமூலத்தையோ அன்றிப் பிற பொருட்களுடன் கலந்தோ சற்று நைய இடித்துப் பதினாறு பங்குநீர் சேர்த்துக் காய்ச்சி குறிப்பிட்ட அளவாகச் சுருக்கி வடிகட்டி எடுத்துக் கொள்ளுவது 'கொதிக்க வைத்துச் சுருக்கி வடித்தெடுத்தல்' எனப்படும்.

இவ்வகை முறையாற் பெறப்படும் கியாழத்தை கொதிக்கியாழம் அல்லது கொதிக்குடிநீர் என்று சொல்வர்.

**பயிற்சி : 12**

## நிலவேம்புக் கியாழம்

**தேவையான சரக்குகள் :**

நிலவேம்பு, வெட்டிவேர், விலாமிச்சன்வேர், சந்தனத்தூள், பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, பற்பாடகம் ஒன்பதும் சம எடை

**தேவையான கருவிகள் :**

கொதிகலம், கலன்கள், வடிகட்டி, அளவைக்கலம், இடிகருவி, வெட்டுக்கத்தி, எடைகாட்டி, நிலநெய் அடுப்பு.

**செய்முறை :**

சரக்குகளை நன்றாகத் தூய்மைசெய்து ஒவ்வொன்றிலும் சமவெடை நிறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும். நிலவேம்பு, வெட்டிவேர், விலாமிச்சன்வேர், பேய்ப்புடல், பற்பாடகம் ஆகியவற்றை வெட்டுக்கருவியினால் வெட்டித் துண்டுகளாக்கிக் கொண்டு கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, ஆகியவைகளைச் சிறிது இடித்து நையச் செய்து சந்தனத் தூளையும் சேர்த்து கொதிகலத்தில் ஊற்றி நிலநெய் அடுப்பில் தீயிலிட்டு கொதிகலத்தை அடுப்பிலேற்றிவிட வேண்டும். தீயின் வெப்பத்தினால் நீர் கொதித்துச் சுண்டிக் குறைந்துவரும். விடப்பட்ட நீர் ஏறக்குறைய நாலில் மூன்று பங்கு

சுண்டியதும் கலத்தை அடுப்பினின்று இறக்கி, ஆறியதும் அதிலுள்ள நீரை வடிகட்டிப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதன் அளவு, எடை ஆகியவைகளையும் கழிவுச் சரக்கின் எடையையும் கண்டுகொள்ள வேண்டும்.

## தேர்வு :

சேர்க்கப்பட்ட சரக்குகள்

| | | |
|---|---|---|
| சரக்கு ஒன்றின் எடை | - | கிராம் |
| ஒன்பது சரக்குகளின் கூட்டு எடை | - | கிராம் |
| சேர்க்கப்பட்ட நீரின் விகிதம் | - | 1:16 |
| நீரின் எடை | - | கிராம் |
| நீரின் அளவு | - | மிலிட் |
| அளவைக்கலத்தின் எடை | - | கிராம் |
| அளவைக்கலம் + குடிநீர் எடை | - | கிராம் |
| *குடிநீரின் எடை | - | கிராம் |
| (அளவைக்கலம் + குடிநீர் எடை) | - | |
| - அளவைக் கலத்தின் எடை | - | கிராம் |
| குடிநீரின் அளவு | - | மிலிட் |
| கழிவுச் சரக்குகளின் எடை | - | கிராம் |

## பயன் :

நிலவேம்புக்கியாழும் பொதுவாக எல்லாச் சுரங்களிலும் 30-60 மிலிட் அளவுகளில் கொடுக்கப்படுகிறது. சுர மருந்துகட்குத் துணையாகவும் பயன்படுத்தலாம்.

## குறிப்பு :

ஒருமுறை கியாழம் எடுக்கப்பட்ட சரக்கில் சிலவேளை மறுமுறையும் கியாழம் தயாரிக்கலாம். இயலில் சொல்லப்பட்ட ஏதாவது விகிதங்களில் நீரைச் சுண்டக்காய்ச்சிக் கொள்ளலாம். கியாழத்தில் சேரும் சரக்குகளின் எடை விகிதம் மாறுபட்டும் காணப்படும்.

சில கியாழங்களில் பயிர்ப் பொருட்களன்றி உயிர்ப் பொருட்களும் தாதுப் பொருட்களும் சேருவதுண்டு. மண்டூராதிக் கியாழத்தில் கோமூத்திரம், வெள்ளாட்டுமூத்திரம் மண்டூரப்பொடி.

செங்கல் சிட்டப்பொடி போன்றவை சேருகிறது. சொள்ளுக்கியாழத்தில் சாந்தம் சேருகிறது. சில சரக்கியாழங்களில் பழைய தோல் சேர்க்கப்படுகிறது.

முறை : 3

# உயிர்ப்பொருள் சேரும் கியாழம்

பயிற்சி : 13

## ஆமையோட்டுக் கருக்குக் கியாழம்

### தேவையான பொருட்கள் :

பூண்டு, ஓமம் நுணாஇலை, வேலிப்பருத்தி இலை, பொடுதலையிலை, வெற்றிலைக் காம்பு, கிராம்பு வகைக்கு 5 கிராம். ஆமை ஓடு தணலில் சுட்டு கருக்கி எடுத்தது 5 கிராம், சுட்ட வசம்பு 5 கிராம்.

### தேவையான கருவிகள் :

எடைகாட்டி, கொதிகலம், கத்தி, இடுக்கி, தணல் நெருப்பு, நிலநெய் அடுப்பு, வடிகருவி, கலங்கள்.

### செய்முறை :

தணல் நெருப்பை நன்றாக தணலாக்கி அதில் ஆமை ஓட்டைப் போட்டு சுட்டு கரிந்ததும் இடுக்கியால் எடுத்து ஆறவிட்டு எடுத்துக்கொள்ள வேண்டும். வசம்பையும் இவ்வாறே சுட்டு இது நன்றாக பச்சையில்லாமல் எரிந்து கருகியதும் இடுக்கியால் எடுத்து சுத்தமான மணலுக்குள் புதைத்தாவது காற்றுப்புகாத பாத்திரத்தில் போட்டு மூடியாவது எடுக்க தீ அணைந்துவிடும். (வசம்பு சுட்டபோது பச்சையாய் இருந்தால் வாந்தியுண்டாக்கி விடும். தணலில் எரித்தெடுத்து காற்றில் வைத்தால் சாம்பலாகிவிடும்)

எல்லாச் சரக்குகளையும் இனி நிறைப்படி எடையிட்டு எடுத்து ஒரு சட்டியில் இலைகளைச் சிறு துண்டுகளாகப் பிரித்துப் போட்டு மற்ற சரக்குகளையும் போட்டு அடுப்பேற்றி எரித்து வறுக்க வேண்டும். இலையாவும் நன்றாய்க் கரிந்ததும் 200 மிலிட் நீர்விட்டு 100 மிலிட்டராக சுருக்கி வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

**தேர்வு :**

| | | |
|---|---|---|
| சரக்குகள் ஒவ்வொன்றின் எடை | - | கிராம் |
| மொத்த சரக்குகள் | - | ------ |
| விடப்பட்ட நீர் | - | 200 மிலிட் |
| கியாழ அளவு | - | மிலிட் |

**பயன் :**

25-50 மிலிட் கியாழத்தை காலை, மாலை இருவேளை 3 நாள் கொடுக்க போர் மாந்தம் தீரும்.

ஆடாதோடைக்கியாழம், நீர்முள்ளிக்கியாழம் போன்ற பலவகைக் கியாழங்கள் வழக்கிலுள்ளன. அவையாவும் கொதிக்க வைத்துச் சுருக்கி வடித்தல் முறையிலேயே செய்யப்படுவதால் பயிற்சியில் அதேமுறையை மீண்டும் செய்ய வேண்டியதில்லை. அவற்றில் சில இங்கு கூறப்பட்டுள்ளது.

## ஆடாதோடைக் கியாழம் :

ஆடாதோடையின் இலை 15 கிராம் எடுத்து சிறுசிறு துண்டுகளாக அரிந்து ஒரு சட்டியில் சிறிது தேன்விட்டு இந்த இலைத் துண்டுகளைப் போட்டு வதக்கி எடுத்துக்கொண்டு அதனுடன் அதிமதுரம், தாளிசபத்திரி, திப்பிலி மூன்றும் வகைக்கு 2 கிராம் பொடித்து சேர்த்து 400 மிலிட் நீர் சேர்த்து 100 மிலிட்டராக சுருக்கி வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

**பயன் :**

50-100 மிலிட் வீதம் ஒரு நாளைக்கு இருவேளை கொடுக்க இருமல், காசம், ஐயசுரம், இவை தீரும்.

## கீழாநெல்லிக்கியாழம்

கீழாநெல்லிவேர் 30 கிராம், வால்மிளகு, ஏலக்காய் தோல், சீரகம் வகைக்கு 5 கிராம். 200 மிலிட் நீர்விட்டு நாலில் ஒன்றாகக் காய்ச்சிக் கொடுக்க காமாலை விலகும்.

நீர்முள்ளி, நெருஞ்சில், கீழாநெல்லிசமூலம் இவையும் குடிநீராக்கிக் கொடுக்கலாம்.

காசநோய்க்கு இம்பூறல்வேர், ஆடாதோடை இலை, போன்றவைகளைப் பயன்படுத்தலாம்.

மாந்த நோய்கட்கு நுணாஈர்க்கு, ஓமம், பூண்டு, நொச்சி, வேளைவேர், பொடுதலை இலை, முருங்கை ஈர்க்கு போன்றவையும், கணத்திற்கு பருத்திப்பிஞ்சு, ஓதியம்பட்டை, மாதுளையிலை, பெருமரப்பட்டை, வல்லாரை, வில்வவேர், வில்வக் கொழுந்து, வெந்தயம், சீந்தில் போன்றவையும் பயனாகும்.

இவையன்றி வளி சுரக்கியாழம், அழற்சுரக்கியாழம் ஐயசுரக்கியாழம் போன்ற பலவகைகள் உண்டு. நூலிற் கூறப்படுகின்ற சரக்குகளின்றி தேவைக்கேற்ப கூட்டியும் குறைத்தும் இக்கியாழங்களைச் செய்து கொள்ளலாம்.

வளி நோய்க்கான கியாழங்களில் காஞ்சொறிவேர், சித்திரமூலம், சங்கன் வேர், கழற்சி வேர், பேராமுட்டி, சிற்றரத்தை, பேரரத்தை மாவிலங்கப்பட்டை, செவ்வியம், கோஷ்டம், சுக்கு, வாய்விடங்கம் போன்ற சரக்குகள் சேர்க்க வேண்டும்.

அழல் சுரக்கியாழங்களில் விலாமிச்சன்வேர், வெட்டிவேர், வில்வவேர், நன்னாரிவேர், சந்தனச் சிராய், சீரகம், ஏலம் கொத்துமல்லி, நெல்லி முள்ளி, ரோஜாமொக்கு போன்றவை பயனாகும்.

ஐயசுரத்திற்கு திப்பிலி, அக்கராகாரம், ஆடாதோடையின் பஞ்சாங்கம் அல்லது இலை, கற்பூரவல்லி, தாளிசபத்திரி, அதிமதுரம், சிற்றரத்தை, கண்டங்கத்திரி, தூதுவளை, துளசி, வெற்றிலை போன்ற சரக்குகள் சிறப்பாகச் சேரும். இவையன்றி, பேய்ப்புடல், சுரைக்கொடி, நிலவேம்பு விஷ்ணுகிரந்தி, மிளகு, மஞ்சள், சிவதைவேர், கடுகரோகிணி சோம்பு, கருஞ்சீரகம், கருடக் கொடி போன்ற சரக்குகளைத் தேவையான இடங்களில் சேர்த்துக் கொள்ளலாம்.

விடாச் சுரத்திற்கு விஷ்ணு கிரந்தி சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. விடாச்சுரங்கட்கு தும்பை, மிளகு, அவுரிவேர், நஞ்சறுப்பான், அகத்திப் பட்டை, அருகன் கட்டை இவைகள் பயனளிக்கும்.

அகத்திப் பட்டை அம்மைநோய் சுரத்திலும் கொடுக்கலாம்.

இதுபோலவே ஒவ்வொரு நோய்க்கும் அதற்குரிய சரக்குகள் சேர்த்து கியாழமிட்டு மருத்துவன் கருத்துப்படி கொடுக்கலாம்.

முன்னரே கூறியது போல உள்ளாட்சியன்றி வெளியாட்சிக்குப் பயன்படும் கியாழ வகையும் உண்டு. எ-டு, முப்பலைக்கியாழம் - புண்கழுவு நீராகப் பயன்படுகிறது. புளியிலைக் கியாழம் - கண்ணோய்களில் கண்ணைக் கழுவப் பயன்படுகிறது. கருவேல் பட்டைக்கியாழம் - வாய்ப்புண், வேக்காடு, போன்றவைகளில் கொப்பளிக்கப் பயன்படுகிறது.

மண்டூராதி அடைக்கியாழத்தை எப்போதும் அடுப்பிலேயே வைத்திருக்க வேண்டும். இது மற்ற கியாழங்களைப் போலன்றி நீண்ட ஆயுளுடையது.

## கற்கம்

**இயல் :**

ஈரப்பசையுள்ள சரக்குகளையாவது, உலர்ந்த சரக்குகளுடன் நீர்த்துவப் பொருட்களைச் சேர்த்தாவது தூய்மை செய்யப்பட்ட உலோகம் போன்ற பொருட்களுடன் இலை அல்லது வேறு பொருட்கள் சேர்த்தாவது கல்லோடு கல்லாய் ஒட்ட அரைத்துக் கெட்டியாய் எடுத்துக் கொள்வது "கற்கம்" என்று சொல்லப்படுகிறது.

முறை 1

# தனிச்சரக்குக் கற்கம்

## பயிற்சி : 14

# கரிசாலைக் கற்கம்

## தேவையான சரக்குகள் :

*கரிசாலை, நீர்*

## தேவையான கருவிகள் :

*அரைகருவி, கரண்டி, எடைகாட்டி, தட்டு, வட்டில்*

## செய்முறை :

*கற்கம் செய்யத் தேவையான அளவு கரிசாலை எடுத்து அதிலுள்ள பழுப்பு இலைகள், பூச்சி தின்ற இலைகள் முதலியவற்றையும் செடியில் முற்றிய தண்டு, வேர் முதலியவைகளையும் நீக்கி நல்ல இலைகளாக எடுத்து ஒரு வட்டிலில் பாதியளவு நீர்விட்டு அதில் போட்டு அலம்பி எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விலைகளிலுள்ள நீர் வடிந்ததும் அவற்றை நிறுத்தி எடை தெரிந்துகொண்டு குழியம்மியில் போட்டு, நன்றாக அரைக்க வேண்டும். நன்றாக அரைப்பட்டதும் அது கல்லோடு கல்லாய் ஒட்டியதுபோலக் காணும். இதைச் கரண்டியால் வழித்தெடுத்து உருட்டி எடையைக் கண்டுகொள்ள வேண்டும். தேவையான அளவில் சிறு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளலாம்.*

## தேர்வு :

| | | |
|---|---|---|
| *கரிசாலை இலையின் எடை* | - | *கிராம்* |
| *கற்கத்தின் எடை* | - | *கிராம்* |

## பயன் :

*கரிசாலைக்கற்கம் ஈரற் பிணிகளிலும் காமாலை நோயிலும் 25 கிராம் அளவில் ஆடை போக்கிய பாலுடன் கொடுக்கப்படுகிறது.*

முறை 2

# கூட்டுச் சரக்குக் கற்கம்

## பயிற்சி 15

# வால்மிளகுக் கற்கம்

### தேவையான சரக்குகள் :

*வால்மிளகு, வெள்ளைப்பூண்டு, ஓமம், வசம்பு, கருஞ்சீரகம், கிராம்பு, சண்பகப்பூ இவை வகைக்கு 2 கிராம்; பொடுதலை இலை 30 கிராம்.*

### தேவையான கருவிகள் :

*இடிகருவி, அரைகருவி, எடைகாட்டி, கரண்டி, தட்டு, அளவைக் கலம்.*

### செய்முறை :

*பொடுதலை இலை நல்லதாக 30 கிராம் எடுத்து நன்றாகக் கழுவி தூய்மை செய்து கொள்ள வேண்டும். இதை இடிகருவியில் இட்டு 'இடித்துப் பிழிதல்' முறைப்படி சாறு பெற்றுக் கொள்ள வேண்டும்.*

*வால்மிளகு, பூண்டு, ஓமம், வசம்பு, கருஞ்சீரகம், கிராம்பு, செண்பகப்பூ, ஆகிய சரக்குகளைத் தூயதாக 2 கிராம் வீதம் நிறுத்தெடுத்து முதலில் இவற்றை இடிகருவியில் இட்டு இடித்து தூளாக்கிக் கொண்டு அத்தூளை அரைகருவியில் எடுத்துப் போட்டு பொடுதலைச் சாற்றைச் சிறிது சிறிதாக விட்டு நன்றாக அரைக்க வேண்டும். சாறு சுவரியதும் மீண்டும் சிறிது சாறுவிட்டு அரைக்க வேண்டும். இவ்வாறு சாறு முழுவதும் மடிந்ததும் நன்றாக அரைத்து கற்க பதத்தில் சுரண்டி எடுத்து எடையைக் கண்டுகொள்ள வேண்டும்.*

**தேர்வு :**

| | | |
|---|---|---|
| பொடுதலை இலை எடை | - | 30 கிராம் |
| கிடைத்த சாறு | - | மிலிட் |
| வால்மிளகு, பூண்டு, ஓமம், வசம்பு, கருஞ்சீரகம், கிராம்பு, செண்பகப்பூ ஒவ்வொன்றின் எடை | - | 2 கிராம் |
| கூட்டு எடை | - | 14 கிராம் |
| கற்க எடை | - | கிராம் |

**பயன் :**

5-10 கிராம் அளவில் குழந்தைகட்குக் காணும் கணமாந்தம், மாந்தகணம், ஆகிய நோய்கட்கு கொடுக்கலாம்.

## உட்களி

**இயல் :**

பச்சரிசியையாவது புழுங்கலரிசியையாவது வறுத்து மாவாக அரைத்து அல்லது உளுந்தை மாவாக்கி இம்மாவுடன் விதைகளைப் பொடியாக இடித்துக் கூட்டித் தக்க அளவு தண்ணீர் விட்டுப் பிசைந்து அதற்குத் தக்க சர்க்கரை அல்லது வெல்லம் சேர்த்துக் கரைத்து கலத்தில் விட்டு அடுப்பேற்றித் துடுப்பினால் கிளறி, களிபதம் வரும்வரை வேகவிட்டு, கொஞ்சம் நெய்விட்டு, கைகளில் ஒட்டாத பக்குவத்தில் எடுத்து உருட்டிக் கொள்ளுவதே உட்களி எனப்படும்.

உட்களி பெயர்க்காரணம் - இதன் மேற்பகுதி சிறு வறட்சியுடனும் உட்பகுதி களிப்பதமாகவும் இருப்பதால் இது உட்களி எனப்பட்டது.

உளுந்தின் மாவுடன், நீர், சர்க்கரை கலந்து அடுப்பேற்றிக் கிளறி மேற்சொன்னபடி செய்துகொள்ளுவதை உளுந்துமாவு உட்களி என்பர். இவ்வண்ணமே அரிசி, ஆளிவிதை உட்களி, கோதுமை உட்களி, குறுவை அரிசி உட்களி என்பனவும் செய்யப்படும்.

## அடை

**இயல் :**

அரிசி மாவுடன் சில இலைகளையாவது வேறு சரக்குகளையாவது அரைத்து, கலத்தை அடுப்பிலேற்றி அதில் சிறிது நெய்தடவி அரைத்ததை தட்டையாக வில்லைபோல அடையாகத் தட்டி தோசைக் கல்லில் இட்டு வெந்ததும் எடுத்துக் கொள்ளுவது அடை எனப்படும்.

## முசுமுசுக்கை அடை

அரிசியை வறுத்து இடித்துத் திரித்து மாவாக்கி அதனுடன் சுத்தம் செய்யப்பட்ட முசுமுசுக்கை இலை நன்றாக அரைப்பட்டதும் அதை எடுத்து அடை தட்டிக் கொண்டு, ஒருகலத்தை அடுப்பிலேற்றி சிறிது நெய் தடவி அதில் அடையை வைத்து நன்றாக வெந்ததும் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்யப்பெறுவது முசுமுசுக்கை அடை எனப்படும்.

இவ்வாறே வெள்ளரிவித்து அடை, முட்டை அடை போன்ற பிறவும் செய்வதுண்டு.

## பொடி

**இயல் :**

தேவைப்பட்ட சரக்குகளைப் புதியனவும் தூய்மையானவுமாக எடுத்து ஈரப்பசை உள்ளதை உலர்த்தியும் வறுக்க வேண்டியவைகளை வறுத்தும் தனித்தனியாக இடித்துத் துணியில் சலித்துக் கலந்து கொள்ளுவதைச் சூரணம், பொடி அல்லது தூள் எனலாம்.

**பிரிவு : 1**

## தனிச் சரக்குப் பொடி

ஏதாவது ஒரு சரக்கை உலர்த்த வேண்டுமானால் உலர்த்தியும் வறுக்க வேண்டுமானால் வறுத்தும் இடித்துத் துணியில் சலித்து நுண் பொடியாக எடுத்துக்கொள்ளுவது.

பயிற்சி 16

## சுக்குத்தூள்

### தேவையான சரக்குகள் :

சுக்கு

### தேவையான கருவிகள் :

கத்தி, இடிகருவி, கரண்டி, துணி, எடைகாட்டி, கலம்.

### செய்முறை :

சூரணம் செய்யத் தேவையான அளவு காய்ந்த சுக்கு எடுத்து அதன் எடையைத் தெரிந்து கொண்டபின் கத்தியினால் அதன் மேற்றோலைச் சீவி சுரண்டி சுத்தி செய்துகொண்டு எடையைக் கண்டுகொள்ள வேண்டும். பின் இதை இடிகருவியில் இட்டு நன்றாக இடித்துத் தூளாக்க வேண்டும். தூளானதும் கரண்டியினால் சுரண்டி பொடியை எடுத்து ஒரு கலத்தின் வாயின் மேல் விரித்துக் கட்டப்பட்ட துணியின் மேலிட்டு விரல்கொண்டு தேய்க்க நுண்ணிய பொடிமட்டும் துணியில் இழைகளினூடாக கலத்தினுள் சேரும். பருக்கைகள் துணியின் மேலேயே தங்கிவிடும். இவ்வாறு செய்தலுக்கு 'தனிச்சலிப்பு' என்று பெயர். வடநூலர் 'வஸ்திரகாயம்' என்பர். இனி துணியின்மேல் தங்கிய பெருந்துண்டுகளை மறுபடியும் இடிகருவியிலிட்டு இடித்து முன்போலவே சலித்துக் கொள்ள வேண்டும். துண்டுகள் எஞ்சாமல் இருக்கும்வரை இவ்வாறு இடித்துச் சலித்துக்கொண்டபின் கலத்தினுள் வடிகட்டப் பட்ட நுண்தூளை எடுத்து எடை தெரிந்துகொள்ள வேண்டும். இது சுக்குத் தூள் எனப்படும்.

### தேர்வு :

| | | |
|---|---|---|
| சுக்கின் எடை | - | கிராம் |
| சுத்தமாக்கப்பட்ட சுக்கின் எடை | - | கிராம் |
| தூளின் எடை | - | கிராம் |

### பயன் :

சுக்குத்தூள் சில மாத்திரைகட்குத் துணை மருந்தாகப் பயன்படுகிறது. கழிச்சல் மருந்துகளுடன் கொடுக்க வயிற்றைக்

கெடுக்காமல் சூழியச் செய்யும். வர்ம மருத்துவத்தில் செவியிலும் நாசியிலும் சுக்குத்தூள் ஊதுவதுண்டு.

**பிரிவு :**

## கூட்டுச் சரக்குப்பொடி

உலர்த்தவேண்டிய சரக்குகளை உலர்த்தியும் வறுக்க வேண்டியவைகளை வறுத்தும் ஒவ்வொன்றையும் அதனுக்குச் சொல்லப்பட்ட அளவுப்படி எடுத்து இடித்து துணிச்சலிப்புச் செய்து கலந்து எடுப்பதைக் 'கூட்டுச் சரக்குச் சூரணம்' என்று சொல்லுவர்.

**பயிற்சி 17**

## பஞ்ச தீபாக்கினிச் சூரணம்

### தேவையான சரக்குகள் :

சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம், ஐந்தும் சம எடை

### தேவையான கருவிகள் :

இடிகருவி, கத்தி, சுரண்டி, எடைகாட்டி, கலம், துணி.

### செய்முறை :

சரக்குகளை நன்றாக வெய்யிலில் காயவைத்து எடுத்துக் கொண்டு சுக்கின் மேற்றோலைச் சுரண்டியும் ஏனைய சரக்குகளில், கல், தூசு போக்கியும் தூய்மை செய்யப்பட்ட ஐந்து சரக்குகளையும் சம எடைகளில் நிறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும். பின் இவைகளைத் தனித்தனியாக இடி கருவியிலிட்டு நன்றாக இடித்துச் சுரண்டி எடுத்து முன்போலவே துணியில் வடிகட்டிக் கொள்ள வேண்டும். இவ்வாறு பெறப்பட்ட தனிச் சூரணங்கள் அனைத்தையும் கலந்து விரவி எடையைக் கண்டுகொள்ள வேண்டும். இது பஞ்ச தீபாக்கினிச் சூரணமாகும்.

சரக்குகளை மொத்தமாகப் போட்டும் இடிக்கலாம். ஆனால் தனித்தனியாக இடித்துச் சலித்தெடுத்துக் கலந்து கொள்ளுவதே சிறந்தது.

**தேர்வு :**

சூரணத்தில் சேரும் சரக்குகள் சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம்,

வகைக்கு

| | | |
|---|---|---|
| மொத்த எடை | - | கிராம் |
| சூரணங்களின் தனித்தனி எடைகள் : | | |
| சுக்கு | - | கிராம் |
| மிளகு | - | கிராம் |
| திப்பிலி | - | கிராம் |
| ஏலம் | - | கிராம் |
| சீரகம் | - | கிராம் |
| மொத்த சூரண எடை | - | கிராம் |

**பயன் :**

10-15 நெல்லெடை அளவில் தேன் அல்லது நெய்யில் கூட்டிக் கொடுக்க செரியாமை, பசியின்மை, பித்தவாயு போன்றவை நீங்கும்.

**குறிப்பு :**

இதுபோல் செய்யப்படும் பல சூரணங்களுண்டு. எடுத்துக்காட்டு - முக்கடுகுச் சூரணம், முப்பலைச் சூரணம், அமுக்கிராச் சூரணம் போன்றன.

## பயிற்சி 18

# விலங்கினப் பொருள் சேரும் சூரணம் மயிலிறகுச் சூரணம்

| | | |
|---|---|---|
| திப்பிலி | - | 8 பங்கு |
| சீரகம் | - | 10 பங்கு |
| மயிலிறகுச் சாம்பல் | - | 18 பங்கு |

திப்பிலியையும் சீரகத்தையும் இடித்து, துணிச்சலிப்புச் செய்துகொண்டு இவ்விரண்டின் கூட்டுத்தொகைக்கு மயிலிறகைக் கொளுத்திப் பெற்ற சாம்பலைச் சேர்க்க வேண்டும்.

**பயன் :**

15-20 நெல்லெடை சூரணத்தைத் தக்க துணை மருந்துடன் கொடுக்க விக்கல், இசிவு நீங்கும்.

## தயிர்ச்சுண்டிச் சூரணம்

| | | |
|---|---|---|
| இந்துப்பு | - | 1 பங்கு |
| வெங்காரம் | - | 1 பங்கு |
| வெடியுப்பு | - | 1 பங்கு |
| பூநீறு | - | 1 பங்கு |
| சோற்றுப்பு | - | 1 பங்கு |
| சுக்கு | - | 1 பங்கு |
| புளித்த தயிர் | - | 50 பங்கு |

சரக்குகளில் இந்துப்பு, வெடியுப்பு, சோற்றுப்பு, பூநீறு இவைகளை சுத்தி செய்து எடுத்துக்கொள்க. வெங்காரத்தைப் பொரித்துக் கொள்ள வேண்டும். சுக்கைத் தோல் நீக்கி எடுத்து சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளலாம். ஒரு அகன்ற வட்டிலில் புளித்த தயிரை விட்டு அதில் ஆறு சரக்குகளையும் போட்டு வெய்யிலில் வைத்துவிட வேண்டும். வெய்யிலின் காய்வால் தயிர் முழுவதும் வற்றியதும் சரக்குகளை நன்றாக உலர்த்தி இடித்துச் சலித்துச் சூரணமாக்கிக் கொள்ள வேண்டும்.

**பயன்:**

15-25மி.கி அளவில் நீரிலாவது மோரிலாவது கொடுக்க செரியாமை, செரியாக் கழிச்சல் ஆகியவை தீரும்.

## பரங்கிச் சக்கைச் சூரணம்

சூரணிக்கத் தேவையான அளவு பரங்கிச் சக்கையை எடுத்து அதைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி ஒரு கொதிகலத்தில் போட்டு மூழ்குமளவிற்கு பசுவின் பாலூற்றி அடுப்பேற்றி எரிக்கவேண்டும். பால் முக்காற்பாகம் சுண்டியதும்

இறக்கி சக்கைத் துண்டுகளை நிழலிலுலர்த்திப் பின் இடித்துச் சலித்துக்கொள்ள வேண்டும்.

**பயன்:**

15-25 நெல்லெடை அளவு பாலில் கொடுக்க தோற்பிணிகளும் மேக நோயும் தீரும்.

# காய்ச்சுக் கட்டிச் சூரணம்

| | | |
|---|---|---|
| காய்ச்சுக் கட்டி | - | 3 பங்கு |
| இலவங்கப் பட்டை | - | 3 பங்கு |
| கிராம்பு | - | 2 பங்கு |
| சாதிக்காய் | - | 1 பங்கு |

இலவங்கப்பட்டை, கிராம்பு இரண்டையும் தூயனவாக எடுத்து தனித்தனியாக இடித்துத் துணியில் சலித்து சூரணமாக்கிக் கொள்ள வேண்டும். பின் காய்ச்சுக் கட்டியை இடித்து சல்லடையில் சலித்துக்கலந்து அதனுடன் சாதிக்காயை நன்றாக அரைத்துக் கலந்துகொள்ள வேண்டும்.

**பயன்:**

10-15. நெல்லெடை சூரணத்தை நெய் அல்லது சர்க்கரை கூட்டிக்கொடுக்க கடுப்புக் கழிச்சல், குருதி, சளிக்கழிச்சல் தீரும்.

# அமுக்கிராச் சூரணம்

| | | |
|---|---|---|
| அமுக்கராக் கிழங்கு | - | 64 பங்கு |
| சுக்கு | - | 32 பங்கு |
| திப்பிலி | - | 16 பங்கு |
| மிளகு | - | 8 பங்கு |
| ஏலக்காய் | - | 4 பங்கு |

| | | |
|---|---|---|
| சிறுநாகப்பூ | - | 2 பங்கு |
| இலவங்கம் | - | 1 பங்கு |

இந்த சரக்குகளை எல்லாம் நிறைப்படி எடுத்து சிறிது புன் வறுவலாக வறுத்து இடித்துச் சலித்துக்கொள்ள வேண்டும்.

சூரணத்துக்குச் சம அளவு கற்கண்டுப் பொடி சேர்த்துக்கொள்ளலாம்.

**பயன்:**

10-20. நெல்லெடை தேன் அல்லது வெந்நீரில் கொடுக்க குன்மம், வெட்டை, விக்கல், பாண்டு இவை தீரும். தீபனமுண்டாகும். இச்சூரணம் பல செந்தூரங்கட்குத் துணை மருந்தாகவும் பயன்படும்.

# அரத்தைச் சூரணம்

| | |
|---|---|
| சிற்றரத்தை | சமஎடை |
| சுக்கு | |
| திப்பிலி | |
| அக்கரா | |
| அதிமதுரம் | |

சரக்குகள் ஒவ்வொன்றும் சமஎடைவீதம் எடுத்து சூரணித்துக் கொள்ளவேண்டும். சூரண எடைக்குச் சீனியும் கூட்டிக்கொள்ளலாம்.

**பயன்:** 10-15. நெல்லெடை தேனில் கொடுக்க தொண்டைக்கட்டு, சளிக்கட்டு, சளி, இருமல் இவை தீரும்.

# தாளிசாதிச் சூரணம்

**தேவையான சரக்குகள்**

தாளிசபத்திரி, இலவங்கம்,

இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை

| | |
|---|---|
| சாதிக்காய், சாதிபத்திரி<br>சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம்<br>கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்<br>ஓமம், சோம்பு, சதகுப்பை, வாய்விடங்கம்<br>சண்பகப்பூ, சிறுநாகப்பூ<br>அதிமதுரம், கோட்டம்<br>திப்பிலிமூலம், சடாமாஞ்சில்<br>பெருங்காயம் -<br>கொத்தமல்லி - 6 பங்கு<br>கற்கண்டு/சீனி - 12 பங்கு | வகைக்கு 1 பங்கு |

### செய்முறை:

சரக்குகளைத் தூய்மையானதாக எடுத்து கற்கண்டு நீங்கலாக மற்றவைகளை புன்வறுவலாய் வறுத்து இடித்துச் சலித்துக் கலந்து கொண்டு கடைசியில் கற்கண்டுப் பொடியைக் கலந்துகொள்ள வேண்டும்

### பயன்:

5-10 நெல்லெடை விதம் தேன், தாளிசபத்திரிக் கியாழம் ஏதாவதொன்றில் கொடுத்துவர இருமல், இரைப்பு,வயிற்றுப் பொருமல், வயிற்றெரிச்சல், செரியாமை, போன்றவை தீரும்.

## காவிக்கல் சூரணம்

### தேவையான சரக்குகள்:

காவிக்கல் - 40 பங்கு

சோடா உப்பு - 4 பங்கு

ஏலரிசி - 1 பங்கு

### செய்முறை:

சரக்குகளைச் சுத்தமானதாக எடைப்படி நிறுத்தெடுத்து தனித்தனியாக இடித்துச் சலித்து ஒன்றாகக் கலந்துகொள்ள வேண்டும்.

**பயன்:**

10-30 நெல்லெடை சூரணத்தை நீரில் அனுபானித்துக் கொடுக்க செரியாமை, வயிற்றுவலி, பெரும்பாடு ஆகியவை தீரும்.

# கர்ப்பூராதி சூரணம்

## தேவையான சரக்குகள்:

| | |
|---|---|
| பூங்கர்ப்பூரம், கிச்சிலிக் கிழங்கு, அன்னாசிப்பூ, சாதிக்காய், சாதிபத்திரி | - வகைக்கு 1 பங்கு |
| சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கம், சிறுநாகப்பூ | - வகைக்கு 2 பங்கு |
| சீனிச்சரக்கரை - 15 பங்கு | |

## செய்முறை:

சரக்குகளைச் சுத்தி செய்து பூங்கர்ப்பூரம் நீங்கலாக மற்றவைகளை இடித்துச் சலித்துக் கலந்து கடைசியில் பூங்கர்ப்பூரத்தையும் சீனிப் பொடியையும் கலந்துகொள்ள வேண்டும்.

**பயன்:**

10-30 நெல்லெடை சூரணத்தை தேன், கர்ப்பூரவல்லி இலைச்சாறு, தாளிசபத்திரிக் கியாழம் ஆகிய ஏதாவதொன்றில் சேர்த்துக் கொடுக்க இருமல், இரைப்பு, குன்மம், வாதம், சுரம் நீங்கும்.

## குறிப்பு:

இச்சூரணத்தைக் காற்றுப் புகாத குப்பிகளில் அடைத்து பத்திரப்படுத்த வேண்டும்.

# ஏலாதிச் சூரணம்

| | | |
|---|---|---|
| ஏலம் | - | 64 பங்கு |
| சுக்கு | - | 32 பங்கு |
| கூகைநீறு | - | 16 பங்கு |
| தாளிசம் | - | 8 பங்கு |
| சிறுநாகப்பூ | - | 4 பங்கு |
| மிளகு | - | 2 பங்கு |
| இலவங்கம் | - | 1 பங்கு |

கூகைநீறு நீங்க மற்றைய சரக்குகளைப் புன்வறுவலாய் வறுத்து சூரணித்து கூகைநீறு சேர்த்து சலித்து எடுத்துக்கொள்ளவேண்டும். சூரண எடைக்குச் சமமாக சீனிப்பொடி சேர்த்துக் கொள்ளலாம்.

**பயன்:**

10-20. நெல்லெடை தேனில் கொடுக்க பித்தப்பிணிகள், வாந்தி, பித்த மயக்கம், சிறுசிறுப்பு, நெஞ்செரிவு ஆகிய நோய்கள் தீரும்.

# கழற்சிச் சூரணம்

| | | |
|---|---|---|
| கழற்சிப் பருப்பு | - | 4 பங்கு |
| மிளகு | - | 1 பங்கு |

இரண்டையும் சூரணித்துக்கொள்ள வேண்டும்.

**பயன்:**

5-10. நெல்லெடை பாலில் அல்லது வெந்நீரில் கொடுகக தசவாய்வு, யானைக்கால், சூதகவாயு, வாதவீக்கம் முதலியவை தீரும்.

# நிலவாகைச் சூரணம்

| | |
|---|---|
| நிலவாகை<br>சுக்கு<br>மிளகு<br>ஓமம்<br>வாய்விடங்கம் | சம அளவு |

சரக்குகளை ஒரெடையாய் எடுத்து முறைப்படி சூரணித்துக் கொள்ள வேண்டும். சூரண எடைக்குச் சம அளவு சீனி கலந்து கொள்ளலாம்.

**பயன்:**

20-40 நெல்லெடை வரை வெந்நீரில் கொடுக்க மலக்கட்டு, வயிற்றுப் பொருமல் போன்ற நோய்கள் தீரும்.

# திரிகடுகுச் சூரணம்

| | |
|---|---|
| சுக்கு<br>மிளகு<br>திப்பிலி | சம எடை |

சரக்குகள் ஒவ்வொன்றும் சரியெடை எடுத்து சூரணித்துக்கொள்ள வேண்டும்.

**பயன்:**

5-10 . நெல்லெடை தேனில் கொடுக்க வாத, பித்த, கப நோய்கள் தீரும். செரிமனமுண்டாகும். துணை மருந்தாகப் பயன்படும்.

# திரிபலைச் சூரணம்

| | |
|---|---|
| கடுக்காய்த் தோல்<br>நெல்லிக்காய் வற்றல்<br>தான்றிக்காய்த்தோல் | சம எடை |

சரக்குகள் ஒவ்வொன்றும் சமஎடைவீதம் எடுத்து சூரணித்துக் கொள்ள வேண்டும்.

**குறிப்பு:**

சூரணங்களை ஆட்சிவகையால் மருந்துச் சூரணம், துணை மருந்துச் சூரணம் என இருவகையாகக் கொள்ளலாம். நேர் மருந்துகளாக நோய்களில் கொடுக்கும்போது அதை மருந்துச் சூரணம் எனலாம். அநேக வேளைகளில் சூரணங்கள், பற்பம், சிந்தூரம், மாத்திரை போன்ற மருந்துகளுக்குத் துணையாக வழங்கப்பெறுகின்றன.

# சூரணத் தூய்மை

அமுக்கராக்கிழங்கு, பரங்கிச்சக்கை, தண்ணீர்விட்டான் கிழங்கு, நிலப்பனங்கிழங்கு ஆகிய சரக்குகளை 'இடித்துச் சலித்தல்' முறைப்படி சூரணமாக்கியபின் பசுவின் பாலில் பிட்டவியல் செய்து உலர்த்தி எடுத்துக் கொள்ளத் தூய்மையாகும்.

**பயிற்சி: 19**

# அமுக்கராக் கிழங்குச் சூரணத்தூய்மை

**தேவையான சரக்குகள்:**

அமுக்கராக் கிழங்கு

**தேவையான கலங்கள் :**

இடிகுருவி, துணித்துண்டுகள், சுத்தி, கொதிகலம், குவிமூடி, நிலநெய் அடுப்பு, தட்டு, அளவைக்கலம், எடைகாட்டி

**செய்முறை:**

அமுக்கராக் கிழங்கைத் தேவையான அளவில் எடுத்து அதன் மேற்றோலைச் சற்றுச் சுரண்டிச் சுத்தப்படுத்திக்கொண்டு எடையை அறிந்து கொள்ள வேண்டும். பின் இதைத் தனிச்சரக்குச் சூரணம் செய்வது போல 'இடித்துச் சலித்தல்' முறைப்படி சூரணம் செய்துகொண்டு அதன் எடையைக் கண்டுகொள்ள வேண்டும்.

அமுக்கராச் சூரணத்தின் எடைக்கு இரண்டு பங்கு பசுவின் பாலை நிறுத்தெடுத்து அதை அளந்து கொள்ள வேண்டும். அதே அளவு நீர் அளந்தெடுத்து எடை கண்டு பாலுடன் கலந்து ஒரு கொதிகலத்தில் விட்டு, கலத்தின் வாயில் ஒரு தூய மெல்லியதான துணியை விரித்துக்கட்டி பிட்டவியல் கருவியாகச் செய்து கொள்ள வேண்டும். பிட்டவியல் கருவியின் வேட்டில் அமுக்கராச் சூரணத்தை வைத்து குவிமூடி மூடி, நிலநெய் அடுப்பிலேற்றித் தீயிட வேண்டும். நீர் கலந்த பாற்கலவை முக்கால் பாகம் வற்றியதும் பொறியை இறக்கி ஆறவிட்டு மூடியை நீக்கிப் பார்க்க சூரணம் நன்றாக வெந்து மலர்ந்திருக்கும். இதைத் தனியாக எடுத்து ஒரு தட்டில் விரித்துப் பரப்பி நன்றாக உலர விட வேண்டும். எஞ்சிய நீர் கலந்த பாலின் அளவையும் எடையையும் தெரிந்து கொள்ள வேண்டும். பிட்டு நன்றாக உலர்ந்ததும் மீண்டும் ஒரு முறை இடித்துச் சலித்துக் கொண்டு எடையைத் தெரிந்து கொள்ளலாம். (பிட்டு உலருவதற்குப் பல மணி நேரங்கள் ஆகுமாதலால் மறு நாள் தான் இதைச் செய்ய முடியும்).

## தேர்வு:

அமுக்கிராக்கிழங்கின் எடை ... கிராம்
சூரணத்தின் எடை ... கிராம்
பசும்பாலின் எடை ... கிராம்
அளவு ... மி.லிட்
கலக்கப்பட்ட நீரின் எடை ... கிராம்
அளவு ... மி.லிட்
எஞ்சிய நீர் கலந்த பாலின் எடை... கிராம்
அளவு ... மி.லிட்
தூய்மை செய்யப்பட்ட சூரணத்தின்
எடை ... கிராம்

**பயன்** : செந்தூரங்கட்குத் துணை மருந்தாகப் பயன்படும். இதனை மருந்தாகப் பயன்படுத்த நரம்புகட்கு வன்மையுண்டாக்கும்.

# பிட்டு

## இயல்:

தேவையான சரக்குகளை எடுத்துத் தூய்மையாக்கி வறுக்க வேண்டியவைகளை வறுத்து இடித்துச் சூரணமாக்கி, பசுவின் பாலும் நீரும் சம அளவு கலக்கப்பட்ட கலவையில் பிட்டவியல் செய்து, பிட்டு வெந்து மலர்ந்ததும் அதை எடுத்து சர்க்கரை அல்லது வெல்லம் சேர்த்துப் பிசைந்தெடுத்துக் கொள்ளுவதைப் பிட்டு என்பர்.

## குறிப்பு:

சூரணத்தூய்மையில் கூறப்பட்டதுபோலவே இதிலும் பிட்டவியல் பொறி செய்யப்பட வேண்டும். இம்முறை முன்னரே கூறப்பட்டதால் இங்கு விவரிக்கப்படவில்லை. பிட்டு செய்கையில் கொதிகலத்திலுள்ள நீர் கலந்த பால் கொதித்து ஆவி கிளம்பும் வரையில் தீயிட வேண்டும். இவ்வாறு கிளம்பும் ஆவியினால்தான் வேட்டிலுள்ள பொருள் வெந்து பிட்டாகும். மூடியைத் திறந்து பார்க்கும்போது பொருளில் நீண்ட வெடிப்புகள் காணப்பட்டால் அது நன்றாக வெந்துவிட்டது என்று கொள்ள வேண்டும். இவ்வாறு வெடிப்பதை 'மலர்தல்' என்று சொல்வர். பொருள்மலர்ந்த பின்பே பொறியை அடுப்பைவிட்டு இறக்க வேண்டும்.

# வடகம்

## இயல்:

சரக்குகளைத் தூய்மை செய்து வறுக்க வேண்டியவைகளை வறுத்துச் சூரணம் செய்து சர்க்கரையாவது வெல்லமாவது வேண்டிய அளவில் கலந்து நீர் கலந்த பாலில் பிட்டவியல் செய்து எடுத்து உருட்டி உலர்த்திக் கொள்ளுவதையோ அல்லது சரக்குகளை நீர் அல்லது வெல்லம் கலந்தாவது, தனியாகவாவது அரைத்து உருட்டிக் கொள்ளுவதையோ அல்லது வெல்லத்தைப் பாகுபதமாகக் காய்ச்சி அதில் சூரணத்தைக் கலந்து பிசைந்து உருட்டிக் கொள்ளுவதையோ, வடகம் என்று சொல்லலாம்.

**குறிப்பு:**

வடகம் என்பது குளிகை போலவே உருட்டிக் கொள்வதாகும் . ஆனால் வடகம் குளிகையைவிட அளவில் பெரியதாய் இருக்கும். வாழைப் பூ வடகம் எருமை மோரில் வேக வைக்கப்படுகிறது.

**முறை:1**

# அரைத்து உருட்டி எடுத்தல்

சரக்குகளை அளவுப்படி எடுத்துத் தூய்மையாக்கி நன்றாக அரைத்து உருட்டிக் கொள்வது அரைத்து உருட்டி எடுத்தல் எனப்படுகிறது.

**பயிற்சி: 20**

# இம்பூறல் வடகம்

**தேவையான சரக்குகள்:**

| | | |
|---|---|---|
| இம்பூறல் சமூலம் | - | 1 பங்கு |
| மிளகு | - | 1 பங்கு |
| கற்கண்டு | - | 2 பங்கு |

**தேவையான கருவிகள்:**

இடிகருவி, அரைகருவி, கரண்டி, எடைகாட்டி, தட்டு, கலம்.

**செய்முறை:**

இம்பூறல் சமூலத்தைத் தேவையான அளவில் எடுத்துக் கழுவிச் சுத்தமாக்கி எடை கண்டுகொண்டபின் அதன் எடைக்குச் சமமாக சுத்தமான மிளகை நிறுத்து எடுத்துக்கொண்டு இவை இரண்டின் எடைக்குச் சமமாக கற்கண்டை நிறுத்தெடுத்துக்கொள்ள வேண்டும். பின் இம்மூன்றையும் இடிகருவியிலிட்டு இடித்து மசிந்ததும் எடுத்து குழிக் கல்லிலிட்டு நன்றாக அரைக்க வேண்டும். நன்றாக அரைப்பட்டதும் கரண்டியால் அதை வழித்தெடுத்து 10

நெல்லளவுள்ள உருண்டைகளாக உருட்டித் தட்டில் வைத்துக்கொண்டு அவற்றை எண்ணிக் கொண்டபின் மொத்த எடையையும் கண்டுகொள்ள வேண்டும்.

**தேர்வு:**

இம்பூறல் சமூலத்தின் எடை - கிராம்

மிளகின் எடை - கிராம்

கற்கண்டின் எடை - கிராம்

வடகங்களின் எண்ணிக்கை

மொத்த எடை - கிராம்

∴ ஒரு வடகத்தின் எடை = மொத்த எடை / வடகத்தின் எண்

(ஏறக்குறைய) - கிராம்

*பயன்:* வடகத்தை வாயிலிட்டுச் சுவைக்கச் செய்தால் குருதி அழல், காசம் முதலிய நோய்கள் தீரும்.

## பிட்டவியல் செய்து உருட்டி எடுத்தல்

சரக்குகளைப் பிட்டவியல் பொறியில் வைத்து வேக வைத்து வெந்ததும் எடுத்து வேண்டிய அளவில் உருட்டிக் கொள்ளுவதைப் பிட்டவியல் செய்து உருட்டி எடுத்தல் எனலாம்.

**பயிற்சி: 21**

## தாளிசாதி வடகம்

**தேவையான சரக்குகள்**

| | | | |
|---|---|---|---|
| தாளிசபத்திரி | - | 1 | பங்கு |
| மிளகு | - | 1 | பங்கு |
| செவ்வியம் | - | 1 | பங்கு |

| | | | |
|---|---|---|---|
| திப்பிலி | - | 2 | பங்கு |
| திப்பிலி மூலம் | - | 2 | பங்கு |
| சுக்கு | - | 3 | பங்கு |
| இலவங்கப்பட்டை | - | 1 | பங்கு |
| இலவங்கப்பத்திரி | - | 1 | பங்கு |
| ஏலம் | - | 1 | பங்கு |
| சிறுநாகப்பூ | - | 1 | பங்கு |
| சிற்றரத்தை | - | 1 | பங்கு |
| விலாமிச்சன்வேர் | - | 1 | பங்கு |
| பனைவெல்லம் | - | 16 | பங்கு |
| பசுவின் பால் | - | 32 | பங்கு |

## தேவையான கருவிகள்:

இடிகருவி, அரைகருவி, கரண்டி, துணிச்சல்லடை, கலங்கள், எடைகாட்டி, அளவைக்கலம், கத்தி, கொதிகலம், குவிமூடி, துணித்துண்டு, நிலநெய்அடுப்பு, தட்டு.

## செய்முறை:

பனைவெல்லம் பசுவின் பால் நீங்கலாக பல சரக்குகளைச் சுத்தி செய்து அளவுப்படி எடுத்து ஒவ்வொன்றினதின் எடையைக் குறித்துக் கொண்டு கூட்டுச் சரக்குச் சூரண முறைப்படி இடித்து துணியில் சலித்துக் கொண்டு சூரண எடையைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

பின் இச்சூரணத்தை ஒரு கலத்தில் கொட்டி அளவுப்படி பனைவெல்லம் நிறுத்தெடுத்து கத்தியால் சீவிச் சூரணத்துடன் கலந்து நன்றாக விரவிக் கொள்ள வேண்டும். பசுவின் பாலை அளவுப்படி நிறுத்தெடுத்து அதன் அளவையும் தெரிந்து கொண்டபின் கொதிகலத்தில் விட்டு அதன் வாயில் துணியை விரித்து வேடுகட்டி அதில் பனைவெல்லம் கலந்த சூரணத்தை வைத்து குவிமூடி கொண்டு மூடி, நிலநெய் அடுப்பில் தீ ஏற்றி கலத்தை வைக்க வேண்டும். சிறு தீயில் இதை எரியவிட்டு

பசுவின்பால் முக்காற்பாகம் சுண்டும்வரை இருந்து பின் வெந்த பிட்டை எடுத்து குழியம்மியிலிட்டு நன்றாக உறவாகும்படி அரைத்து 15 நெல்லளவான உருண்டைகளாக உருட்டி தட்டில் வைத்துக் கொண்டபின் அவற்றின் எண்ணிக்கையையும் மொத்த எடையையும் கண்டுகொள்ள வேண்டும்.

**தேர்வு:**

## தூய்மையாக்கிய சரக்குகளின் எடை

| | | |
|---|---|---|
| தாளிச பத்திரி | - | கிராம் |
| மிளகு | - | கிராம் |
| செவ்வியம் | - | கிராம் |
| திப்பிலி | - | கிராம் |
| திப்பிலி மூலம் | - | கிராம் |
| சுக்கு | - | கிராம் |
| இலவங்கப்பட்டை | - | கிராம் |
| இலவங்கப்பத்திரி | - | கிராம் |
| ஏலம் | - | கிராம் |
| சிறுநாகப்பூ | - | கிராம் |
| சிற்றரத்தை | - | கிராம் |
| விலாமிச்சன்வேர் சூரணஎடை | - | கிராம் |
| பனை வெல்லம் | - | கிராம் |
| பசும் பாலின் எடை அளவு | - | மி.லிட் |
| வடகங்களின் எண்ணிக்கை | | |
| மொத்த எடை | - | கிராம் |

மொத்த எடை
ஃ ஒரு வடகத்தின் எடை ———————— கிராம்
வடக எண்

கிராம்

**பயன்:**

வடகத்தை வாயிலிட்டுச் சுவைக்கச் செய்ய மாந்தம், செரியாக்கழிச்சல், செரியாமை, பசியின்மை, வயிற்றுப் பொருமல், இருமல் போன்ற நோய்கள் தீரும்.

**முறை: 3**

# துலாயந்திரமாக அவித்து அரைத்து உருட்டி எடுத்தல்

சரக்குகளைக் கட்டி துலாயந்திரத்தில் நீர்ப்பொருளில் மூழ்கும்படி அமைத்துத் தொங்கவிட்டு எரித்து அவித்து அரைத்து உருட்டிக்கொள்ளு வதைத் 'துலாயந்திரமாக அவித்து அரைத்து உருட்டி எடுத்தல்' என்று கூறுவர்.

**பயிற்சி: 22**

**தேவையான சரக்குகள் :**

## வாழைப்பூ வடகம்

**தேவையான சரக்குகள் :**

| | | | |
|---|---|---|---|
| மொந்தன் வாழைப்பூ | - | 1 | பெரியது |
| சாதிக்காய் | - | 8 | கிராம் |
| சாதிபத்திரி | - | 8 | கிராம் |
| இலவங்கம் | - | 8 | கிராம் |
| கஞ்சா | - | 8 | கிராம் |
| கறிவேப்பிலை | - | 8 | கிராம் |
| கர்க்கடகசிங்கி | - | 3 | கிராம் |
| எருமைமோர் | - | 3 | லிட்டர் |

## தேவையான கருவிகள்:

எடைகாட்டி, அரைகருவி, தள்ளுவான், இடிகருவி, கரண்டி, தட்டு, கத்தி, நூல், பானை, நிலநெய் அடுப்பு, பானை வாய்க்கு குறுக்காக வைக்க ஒரு கம்பி.

## செய்முறை:

வாழைப்பூவின் மேல்பகுதியில் சிவந்த நிறமாயுள்ள இதழ்களையும் முற்றிய பூக்களையும் நீக்கி நடுவில் உள்ள குருத்துப் பகுதியை எடுத்து எடை கண்டுகொள்ள வேண்டும். (இது சுமார் 300 கிராம் இருக்க வேண்டும்) பின் சரக்குகளை இடிகருவியிலிட்டு இடித்துத் தூளாக்கி, வாழைப்பூக் குருத்தை இரண்டாகப் பிளந்து அதன் நடுவில் தூளை வைத்து இரண்டு பகுதியையும் இணைத்துப் பொருந்த வைத்து நூலால் நன்றாக வரிந்து கட்டிக்கொள்ள வேண்டும்.

ஒரு 4 லிட்டர் கொள்ளளவுள்ள பானையில் எருமைமோர் 3 லிட்டரை விட்டு அடுப்பில் ஏற்றி பானைவாயின்மேல் குறுக்காக ஒரு கம்பியை வைத்து முன் நூல் வரிந்து கொண்ட வாழைப்பூவை இக் கம்பியில் கட்டி மோருக்குள் மூழ்கும்படி தொங்கவிட்டு எரிக்க வேண்டும். இவ்வாறு தொங்கவிடும்போது பானையின் அடியில் அது படாதவாறு அமைக்க வேண்டும்.

இவ்வாறு எரித்து, மோர் சுமார் நாலில் ஒருபாகம் சுண்டியதும் வாழைப்பூவை எடுத்து நூலைப் பிரித்துவிட்டு கல்வத்தில் போட்டு நன்றாக அரைக்க வேண்டும். வாழைப்பூவும் உள்ளே வைத்த தூளும் நன்றாய் வெந்திருக்கும். அரைபட்டதும் இதைச் சுமார் 20 நெல்லளவு மாத்திரைகளாக உருட்டிக்கொள்ள வேண்டும்.

## தேர்வு:

| | | |
|---|---|---|
| வாழைப்பூ எடை | - | கிராம் |
| சூரண எடை | - | கிராம் |
| எருமை மோர் | - | லிட்டர் |
| வடக எடை | - | கிராம் |
| எண்ணிக்கை | - | கிராம் |

# வெண்ணெய்

**இயல்:**

தேவையான சரக்குகளைத் தூய்மை செய்து எடுத்துப் பசுவின் வெண்ணெயுடன் கலந்தரைத்துப் பெறுவதை அல்லது சரக்குகளைப் பொடியாக்கி பசுநெய் கலந்த இருப்புச் சட்டியிலிட்டுக் காய்ச்சி வேறொரு பாத்திரத்திலுள்ள தண்ணீரில் ஊற்றிக் கடைந்து திரளுவதை எடுத்துக் கொள்ளுவது வெண்ணெய் எனப்படும்.

**முறை: 1**

## அரைத்துப் பெறுதல்

சரக்குகளைப் பசுவெண்ணெயுடன் குழியம்மில் இட்டு அரைத்து வழித்தெடுத்துக் கொள்ளுவதை அரைத்துப் பெறுதல் எனக் கூறலாம்.

**பயிற்சி: 23**

## வங்கவெண்ணெய்

**தேவையான சரக்குகள்:**

| | | | |
|---|---|---|---|
| வங்கச் செந்தூரம் | - | 2 | பங்கு |
| மிருதார்சிங்கி | - | 2 | பங்கு |
| துருசு | - | 1 | பங்கு |
| பசுவெண்ணெய் | - | 20 | பங்கு |

**தேவையான கருவிகள்:**

அரைகருவி, கரண்டி, எடைகாட்டி, தட்டு.

**செய்முறை:**

மிருதார்சிங்கியையும் துருசையும் அளவுப்படி எடுத்துக் குழியம்மியிலிட்டு நன்றாக அரைத்துத் தூளாக்கிக் கொண்டு

வங்கச் சிந்தூரப் பொடியை நிறுத்தெடுத்துக் கலந்து நன்றாக அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும். இதை ஒரு தட்டில் வைத்துக்கொண்டு பசுவின் வெண்ணெய் நிறுத்து எடுத்துக் குழிக்கல்லிலிட்டு முன் செய்த தூளைச் சிறிது சிறிதாகக் கலந்து நன்றாக அரைக்க வேண்டும். தூள் எல்லாம் கலந்து கலவை நன்றாக அரைபட்டு உறவானதும் சுரண்டி கலவையைச் சேகரித்து எடுத்து தட்டின் எடையைக் கண்டு கொண்டபின் அதில் வைத்து எடைகண்டு கணித்துக் கொள்ள வேண்டும்.

**தேர்வு:**

| | | |
|---|---|---|
| மிருதார்சிங்கியின் எடை | - | கிராம் |
| துருசின் எடை | - | கிராம் |
| வங்கச்செந்தூரத்தின் எடை | - | கிராம் |
| பசுவெண்ணெயின் எடை | - | கிராம் |
| தட்டின் எடை | - | கிராம் |
| தட்டு + வங்கவெண்ணெய் எடை | - | கிராம் |
| - தட்டின் எடை | | |
| ஃ வங்கவெண்ணெய் எடை | - | கிராம் |

**பயன்:**

சொறி, சிரங்கு, புண் இவைகளுக்கு மேற்பூச்சாகப் போடுவதற்கு உதவும்.

# அமிர்த வெண்ணெய்

1 பங்கு வீரத்திற்கு 15 பங்கு பசுவெண்ணெய் சேர்த்து கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து பின்னர் நீர்விட்டுக் கழுவி எடுத்துக்கொள்ள வேண்டும்.

**பயன்:**

வெளியாட்சியாக புண்கள், கட்டிகள், ஆசன அழற்சி, தவளைச் சொறி, எச்சிற்றழும்பு ஆகியவற்றுக்குப் போட்டு வரலாம்.

முறை : 2

# சரக்கை நெய்யில் உருக்கி நீரில் ஊற்றிக்கடைந்து பெறுதல்

*சரக்கைப் பசு நெய்யிற் கலந்து உருக்கி தண்ணீரில் ஊற்றிக் கையினாலாவது மத்தினாலாவது கடைந்து திரளும் வெண்ணெயை எடுத்துக் கொள்ளுதலே 'சரக்கை நெய்யில் உருக்கி நீரில் ஊற்றிக் கடைந்து பெறுதல்' எனக் கூறப்படுகிறது.*

**பயிற்சி: 24**

## குக்கில் (குங்கிலிய) வெண்ணெய்

**தேவையான சரக்குகள்:**

*வெள்ளைக் குங்கிலியம், பசுநெய், நீர், தீ*

**தேவையான கருவிகள்:**

*குழியம்மி, கரண்டி, கலம், இரும்புச்சட்டி, சலாகை, தட்டு, எடைகாட்டி, வாயகன்ற பெரிய கலம், மத்து, அடுப்பு, விறகு.*

**செய்முறை:**

*வெள்ளைக் குங்கிலியம் வேண்டிய அளவு எடுத்துக்கொண்டு இதனைக் குழிக்கல்லில் இட்டுப் பொடியாக்கி நிறுத்து எடைதெரிந்து கொண்டு இதற்கு இரண்டுபங்கு எடைபசுவின் நெய் நிறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு வாயகன்ற கலத்தில் பாதி அளவு தண்ணீர் ஊற்றித் தயாராக வைத்துக்கொண்டபின் பசு நெய்யை இரும்புச் சட்டியில் ஊற்றி அடுப்பில் சிறுதீயிட்டு ஏற்றி அதில் குங்கிலியப் பொடியைச் சிறிது சிறிதாகத் தூவி, தூள் முழுவதும் உருகிக் கலந்தானதும் ஏற்கனவே தயாராக வைக்கப்பட்டுள்ள நீர் உள்ள வாயகன்ற கலத்தில் இக்கலவையை ஊற்ற வேண்டும். பின் இந்நீரை மத்தைக்கொண்டு கடைய வெண்ணெய் பிரிந்து மிதக்கும். இவ்வெண்ணெய் திரளுமட்டும் கடைந்து மேலே மிதக்கும் வெண்ணெயை, ஒரு எடை கண்டு கொள்ளப்பட்ட*

தட்டில் எடுத்து வைத்து தட்டுடன் எடை கண்டு வெண்ணெயின் எடையைக் கணித்துக்கொள்ள வேண்டும். இதுவே 'குங்கிலிய வெண்ணெய் எனப்படும்.

**தேர்வு:**

| | | |
|---|---|---|
| வெள்ளைக்குங்கிலியத்தூள் எடை | - | கிராம் |
| பசு நெய்யின் எடை | - | கிராம் |
| தட்டின் எடை | - | கிராம் |
| வெண்ணெயுடன் தட்டின் எடை | - | கிராம் |

ஃ வெண்ணெயின் எடை = (வெண்ணெய் + தட்டு எடை)

- தட்டின் எடை = கிராம்

# மணப்பாகு

**இயல்:**

வேண்டிய சரக்குகளைக் கியாழமிட்டாவது பழங்களின் சாற்றைப் பிழிந்தாவது அதனுடன் கற்கண்டு அல்லது சர்க்கரை சேர்த்துக் கரைத்து அடுப்பிலேற்றி மணம் வரும் பக்குவத்தில் இறக்கி எடுத்துக் கொள்ளுவதும் அப்பக்குவத்தில் சில சரக்குப் பொடிகளைத் தூவிக் கிளறி எடுத்துக் கொள்ளுவதும் மணப்பாகு எனப்படும்.

# கியாழ மணப்பாகு

**பிரிவு 1**

சரக்குகளை ஊறற்கியாழமாவது கொதிக்கியாழமாவது செய்து அதனுடன் சர்க்கரை கரைத்துக் கலந்து அடுப்பேற்றி மணம் வரும் பருவத்தில் எடுத்துக் கொள்ளுவது.

**பயிற்சி 25**

# ஆடாதோடை மணப்பாகு

**தேவையான சரக்குகள்:**

ஆடாதோடை இலை, சர்க்கரை, நீர், தீ

## தேவையான கருவிகள்:

கத்தி, கொதிகலம், வடிகட்டி, எடைகாட்டி, அளவைக்கலம், கலங்கள், துடுப்பு, நிலநெய்அடுப்பு.

## செய்முறை:

வேண்டிய அளவு ஆடாதோடை இலைகளை எடுத்துச் சுத்தமாக்கி கத்தியால் குறுக அரிந்து எடைகாட்டியிலிட்டு எடையைக் கண்டு கொண்டபின் ஒரு கலத்தை எடை கண்டு அதில் ஆடாதோடை இலைக்குப் பதினாறு பங்கு நீர் எடுத்து அளந்து கொதிகலத்தில் ஊற்றி ஆடாதோடை இலையையும் அதனுள் போட்டு அடுப்பிலேற்றி தீயிட்டு நாலிலொன்றாய்ச் குறுக்கிக் கியாழமிட்டுக் கொள்ள வேண்டும். ஆடாதோடை இலைக்கியாழத்தை வடிகட்டி அளவையும் எடையையும் தெரிந்துகொண்டபின் அதை மற்றொரு கலத்தில் ஊற்றி அதன் எடைக்குச் சம அளவு சர்க்கரை நிறுத்தெடுத்துக் கியாழத்துடன் கலந்து கரைத்துக்கொண்டு மறுபடியும் வடிகட்டியபின் கரைசலின் அளவையும் எடையையும் கண்டுகொள்ள வேண்டும். பின் இக்கரைசலைக் கலத்தில் விட்டு அடுப்பேற்றி சிறு தீயில் காய்ச்ச வேண்டும். இடையிடையே துடுப்பால் கிளறிவிட்டுக் கொள்ளலாம் சிறிது நேரத்தில் கரைசல் சற்றுக் கெட்டியாகி அதினின்று மணம் வரும். இப்போது கலத்தை அடுப்பினின்று எடுத்து மணப்பாகை ஆறவிட்டு அதனை எடை தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு அளவைக் கலத்தில் விட்டு நிறுத்து எடையைக் கணித்துக் கொள்ள வேண்டும்.

## தேர்வு:

| | | |
|---|---|---|
| ஆடாதோடை இலையின் எடை | - | கிராம் |
| கியாழத்துக்கு விடப்பட்ட நீரின் எடை | - | கிராம் |
| நீரின் எடை | - | மிலிட் |
| எடை | - | கிராம் |
| சர்க்கரையின் எடை | - | கிராம் |
| கரைசலின் அளவு | - | மிலிட் |

எடை - கிராம்

மணப்பாகின் அளவு - மிலிட்

எடை - கிராம்

**பயன்:**

5-10 மிலிட் மணப்பாகைத் தக்க அளவு நீரில் கலந்து கொடுக்க ஐயநோய்கள், இருமல், சுரம், தொண்டைக்கம்மல் இவை தீரும்.

## நன்னாரி மணப்பாகு

நன்னாரி வேர்ப்பட்டை - 1 பங்கு

சர்க்கரை - 1 பங்கு

நன்னாரி வேர்ப்பட்டையை இடித்துச் சிதைத்து ஒரு பாண்டத்திலிட்டு அதுபோல் 8 மடங்கு வெந்நீர் விட்டு 6 மணிநேரம் ஊறவைத்தபின் அடுப்பேற்றிக் காய்ச்சி பாதியாக சுருக்கி வடிகட்டிக்கொண்டு அதில் சர்க்கரையைக் கலந்து வடிகட்டி மீண்டும் காய்ச்சி மணப்பாகு பக்குவத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

**பயன்:**

15 கிராம் (1 மேசைக்கரண்டி) மணப்பாகு எடுத்து தேவையான அளவு நீரில் கலந்து கொடுக்க நீர்க்கடுப்பு, நீர்சுருக்கு, நாவறட்சி, தாகம், மேககாங்கை வெள்ளை, கண்ணெரிச்சல் முதலியவை தீரும்.

**பிரிவு: 2**

## சாறு மணப்பாகு

ஈரப்பசையுள்ள சரக்கினையாவது பழங்களையாவது முறைப்படி சாறு பிழிந்து அதனுடன் சர்க்கரை கரைத்துக் கலந்து அடுப்பேற்றி மணம் வரும் பக்குவத்தில் எடுத்துக்கொள்ளுவது.

பயிற்சி: 26

# இஞ்சி மணப்பாகு

## தேவையான சரக்குகள்:

*இஞ்சி, சர்க்கரை, நீர், தீ.*

## தேவையான கருவிகள்:

*இடிகருவி, கத்தி, அளவைக்கலம், கலங்கள், எடைகாட்டி, துடுப்பு, வடிகட்டி, நிலநெய் அடுப்பு.*

## செய்முறை:

*தேவையான அளவு இஞ்சி எடுத்து அதன் மேற்றோலைக் கத்தியால் சுரண்டி நீக்கி எடைகண்டு கொள்ள வேண்டும். பின் இதை இடிகருவியிலிட்டு இடித்துப் பிழிதல் முறைப்படி சாறு பெற்றுக்கொள்ள வேண்டும். சாறு குறைவாகக் காணப்பட்டால் சக்கையுடன் சிறிது நீரை அளந்து எடைகண்டு கலந்து மறுபடி இடித்துப் பிழிந்து கிடைத்த சாற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். சிறிது வைத்திருந்து மாவு போக்கி இஞ்சிச் சாற்றின் அளவையும் எடையையும் கண்டு கொண்டபின் அவ்வெடைக்குச் சமன் சர்க்கரை நிறுத்தெடுத்துக் கலந்து கரைந்ததும் வடிகட்டி, கலவையின் அளவையும் எடையையும் கண்டுகொள்ள வேண்டும். இக்கலவையை ஒரு கலத்தில் விட்டு நில நெய் அடுப்பில் தீமூட்டி வைத்து சிறு தீயில் எரிக்க வேண்டும். இடைக்கிடை துடுப்பினால் சிறிது துளாவிவிட்டுக் கொள்ளலாம். கலவையில் நீர்த்துவம் குறைந்து சிறிது நேரத்தில் மணம் வீசும். அப்போது கலத்தை இறக்கி ஆறவிட்டு மணப்பாகின் அளவையும் எடையையும் கண்டுகொள்ள வேண்டும்.*

## தேர்வு :

| | | |
|---|---|---|
| *எடுக்கப்பட்ட இஞ்சியின் எடை* | - | *கிராம்* |
| *சுத்தமாக்கப்பட்ட இஞ்சியின் எடை* | - | *கிராம்* |
| *நீர் கலக்கப்பட்டால் அதன் அளவு* | - | *மி.லிட்* |

| | | |
|---|---|---|
| எடை | - | கிராம் |
| இஞ்சிச் சாற்றின் அளவு | - | மி.லிட் |
| எடை | - | கிராம் |
| சர்க்கரையின் எடை | - | கிராம் |
| மணப்பாகின் கலவையின் அளவு | - | மி.லிட் |
| எடை | - | கிராம் |

**பயன்:**

2-5 மி.லிட் அளவு கொடுக்க பசியின்மை, செரியாமை, பித்தம் இவை தீரும்.

## துருஞ்சி மணப்பாகு

துருஞ்சி நாரத்தையைப் பிளந்து சாறு பிழிந்து அதில் சர்க்கரையைக் கலந்து வடிகட்டிக் கொண்டு பின் அடுப்பேற்றி மணப்பாகு செய்துகொள்ள வேண்டும்.

**பயன்:**

15 கிராம் மணப்பாகைத் தேவையான அளவு நீரில் கலந்து கொடுக்க, பித்தப் பிணிகள் தீரும்.

## மாதுளை மணப்பாகு

| | | |
|---|---|---|
| இனிப்பு மாதுளைப் பழச்சாறு | - | 1 பங்கு |
| பன்னீர் | - | 1 பங்கு |
| கற்கண்டு | - | 3 பங்கு |
| தேன் | - | 1 பங்கு |

மாதுளைச் சாற்றையும் பன்னீரையும் கலந்து அதில் கற்கண்டை இடித்துப் பொடித்து இதனுடன் தேனைக் கலந்து அடுப்பேற்றி மணப்பாகு செய்துகொள்ள வேண்டும்.

**பயன்:** 15 கிராம் மணப்பாகை நீரில் கலந்து கொடுக்க சுரபாத எரிவு சுவையின்மை, வாந்தி, பாண்டு இவை தீரும்.

# நெய்

**இயல்:**

பசுவின் நெய்யுடன் இலைச்சாறு, பழச்சாறு முதலியவைகளைத் தனியாகவோ சேர்த்தோ அல்லது கற்கங்களைச் சேர்த்தோ அல்லது சரக்குகளின் கியாழம் சேர்த்தோ அடுப்பேற்றிக் காய்ச்சி நீர் முழுவதும் ஆவியான பின் நெய்ப் பக்குவத்தில் இறக்கி வடிகட்டி எடுத்துக்கொள்ளுவதை நெய் எனக் கூறுவர்.

**பயிற்சி : 27**

## தூதுவேளை நெய்

### தேவையான சரக்குகள் :

தூதுவேளை, பசுநெய், கோட்டம், நீர், தீ.

### தேவையான கருவிகள் :

இடிகருவி, வடிகட்டி, எடைகாட்டி, அளவைக்கலம், கலங்கள், துடுப்பு, நிலநெய்அடுப்பு

### செய்முறை :

தூதுவேளையின் இலையைப் பறித்துத் தூய்மையானதாக எடுத்து அதை நிறுத்து 'இடித்துப் பிழிதல்' முறைப்படி சாறு பெற்றுக் கொள்ள வேண்டும். இச்சாற்றை அளந்து எடைகண்டு கொண்டபின் ஒரு கலத்தில் விட்டு அதே அளவு பசுவின் நெய் அளந்தெடுத்து நிறுத்துக் கலந்து கொள்ள வேண்டும். தூதுவேளைச் சாற்றின் எடைக்கு இருபதில் ஒரு பங்கு கோட்டம் நிறுத்தெடுத்துப் பொடித்து அதில் கலந்து நிலநெய் அடுப்பில் தீயேற்றி கலத்தை வைத்துச் சிறு தீயில் காய்ச்ச வேண்டும். சாற்றில் உள்ள நீர் முழுவதும் ஆவியானதும் ஒரு உலர்ந்த சர்க்கை நெய்யில் நனைத்து தீயில் காட்ட அது வெடிப்பு ஒலி இல்லாமல் எரியும். அப்போது

கலத்தை இறக்கி ஆறவிட்டு வடிகட்டி நெய்யை எடுத்துக் கொள்ள வேண்டும். சர்க்கு எரியும்போது வெடிப்பு ஒலி கேட்டால் அதில் நீர்ப்பொருள் இன்னும் இருக்கிறது என்று கொள்ள வேண்டும். இவ்வாறு வெடிப்பு காணப்படாமல் சர்க்கு எரிகிற வரையில் நெய்யைக் காய்ச்ச வேண்டும். நெய்யை வடிகட்டி எடுத்துக்கொண்டபின் அதன் அளவையும் எடையையும் கணித்துக் கொள்ளவேண்டும்.

## தேர்வு :

| | | |
|---|---|---|
| தூதுவேளை இலையின் எடை | - | .. கிராம் |
| சாற்றின் அளவு | - | .. மி.லிட் |
| எடை | - | .. கிராம் |
| பசு நெய்யின் அளவு | - | .. மி.லிட் |
| எடை | - | .. கிராம் |
| கோட்டத்தின் எடை | - | .. கிராம் |
| தூதுவேளை நெய்யின் அளவு | - | .. மி.லிட் |
| எடை | - | .. கிராம் |

## பயன் :

2.4 மி.லிட். அளவில் கொடுத்துவர கக்குவான் என்னும் குத்திருமல் நீங்கும்.

## குறிப்பு :

பிரமி நெய், வல்லாரை நெய் போன்ற நிறைந்த அளவில் பொருட்கள் சேருவதால் எளிதாகப் பயிற்சியில் செய்யும் பொருட்டு "பாலவாகடநூலில்" கூறப்பட்டுள்ள தூதுவேளை நெய் ஈண்டு விவரிக்கப்பட்டுள்ளது. இதுபோன்றே மணத்தக்காளி இலைக்கற்கம் சேர்த்துச் செய்யப்படும் மணத்தக்காளிநெய் போன்ற பல நெய்களும் பாலவாகடநூலில் கூறப் பெற்றுள்ளன.

# சுவைப்பு (இரசாயனம்)

(இயல்) சரக்குகளைத் தூய்மை செய்து சூரணமாக்கி சர்க்கரையும் நெய்யும் சேர்த்து இளகலாகப் பிசைந்து எடுத்து வைத்துக் கொள்ளுவது இரசாயனம் எனப்படும்.

**பயிற்சி 28**

# இஞ்சி இரசாயனம்

## தேவையான சரக்குகள்

*இஞ்சி, சர்க்கரை, நெய், தீ.*

## தேவையான கருவிகள் :

*கத்தி, வறுஓடு, துடுப்பு, இடிகருவி, சல்லடை, கலங்கள், எடைகாட்டி, அளவைக்கலம், நிலநெய்அடுப்பு.*

## செய்முறை :

தேவையான அளவு இஞ்சி எடுத்து அதன் புறணியைக் கத்தியால் சுரண்டி நீக்கிவிட்டு சிறுசிறு துண்டுகளாக நறுக்கி எடுத்து அவற்றின் எடையைத் தெரிந்து கொள்ள வேண்டும். அடுப்பில் தீயிட்டு வறு ஓட்டை வைத்து சூடானதும் இஞ்சித் துண்டுகளை அதில் போட்டு துடுப்பினால் நன்றாகக் கிளறிவிட்டு வறுக்க வேண்டும். இஞ்சியில் நீர்த்தன்மை குறைந்ததும், அது கரியாத பருவத்தில் எடுத்து நிறுத்துக் கொண்டு இடிகருவியிலிட்டு வடித்துச் சலித்தல முறைப்படிச் சூரணமாக்கி அதன் எடையையும் கண்டுகொண்டபின் அதன் எடைக்குச் சரியாக சர்க்கரை நிறுத்தெடுத்து அதனுடன் கலந்து கொள்ள வேண்டும். ஒரு கலத்தில் பசுநெய் நிறுத்தெடுத்து வைத்துக்கொண்டு அதில் சிறிது சிறிதாகக் கலந்து பிசைய கலவை இளகலாகும். இளகலான பதம் வந்ததும் நெய் கலப்பதை நிறுத்திவிட வேண்டும். எஞ்சியுள்ள நெய்யை நிறுத்தெடுத்து பயன்பட்ட நெய்யின் எடையைக்

கணித்துக் கொள்ளலாம். இவ்வாறு செய்வதே இஞ்சி இரசாயனம் எனப்படும். இதன் எடையையும் கண்டுகொள்ள வேண்டும்.

**தேர்வு :**

| | | |
|---|---|---|
| இஞ்சியின் எடை | - | .. கிராம் |
| வறுத்த இஞ்சியின் எடை | - | .. கிராம் |
| இஞ்சிச் சூரண எடை | - | .. கிராம் |
| சர்க்கரையின் எடை | - | .. கிராம் |
| முதலில் எடுக்கப்பட்ட நெய்யின் எடை | - | .. கிராம் |
| மீதமுள்ள நெய்யின் எடை | - | .. கிராம் |

ஃ பயன்படுத்தப்பட்ட நெய்யின் எடை
= எடுக்கப்பட்ட நெய் எடை - மீதமுள்ள நெய் எடை
= கிராம்

இஞ்சி இரசாயன எடை = கிராம்

**பயன்** : 10-30 நெல்லெடை வீதம் கொடுக்க பித்தம், மந்தம், செரியாமை ஆகியவை தீரும்.

# கெந்தக ரசாயனம்
## (பாடாணம் சேர்ந்த இரசாயனம்)

**தேவையான சரக்குகள் :**

| | | |
|---|---|---|
| சுத்தித்த கெந்தகம் | - | 10 பங்கு |
| அமுக்கரா | - | 5 பங்கு |
| பரங்கிச் சக்கை | - | 2 பங்கு |

| | |
|---|---|
| கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கிராம்பு, சந்தனம், சேராங்கொட்டை, சித்திரமூல வேர்ப்பட்டை, வாய்விடங்கம், கடலை, | வகைக்கு 1 பங்கு |

நெய் - தேவையான அளவு

எல்லாச் சரக்குகளையும் முறைப்படி தூய்மை செய்தெடுத்து இடித்துச் சூரணித்துக் கொள்ள வேண்டும். பின் இச்சூரணங்களைக் கல்வத்திலிட்டு போதிய அளவு நெய்யைச் சிறிது சிறிதாக விட்டு இளகலான பதம் கிடைக்கும் வரை அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

**பயன் :**

5-10 நெல்லெடைவீதம் சர்க்கரையும் நெய்யும் கலந்து கொடுத்துவர தோற்பிணிகள், வெண்புள்ளி, வெள்ளை மேகநோய்கள் முதலியவை தீரும். இம்மருந்துண்ணுங்காலத்து புளி நீக்க வேண்டும். (கெந்தக ரசாயனம் அரைப்பின்போது நெய் மட்டும் சேர்ப்பதற்குப் பதிலாக சர்க்கரை, தேன், நெய் மூன்றும் சேர்த்தும் அரைத்துக் கொள்ளலாம். இவை மூன்றும் சேர்த்தரைத்த மருந்தானால் அளவு 10-15 நெல்லெடை ஆகும்)

**குறிப்பு :**

அமுக்கராச் சூரணத்துடன் சில சரக்குகளைக் கூட்டி நெய், சர்க்கரை கலந்து அரைத்துப் பெறுவதை அமுக்கரா ரசாயனம் என்று சொல்வர்.

# இளகம்

**இயல் :**

கியாழம், சாறு ஆகியவைகளைத் தனியாகவோ அல்லது கலந்தோ வைத்துக் கொண்டு, சர்க்கரை சேர்த்துச் சிறு தீயில் காய்ச்சி, சாறு குறைந்து மணம்வரும் பருவத்தில் சூரணம் செய்யப்பட்ட சரக்குப் பொடிகளைச் சிறிது சிறிதாகத் தூவிக்கிளறி, விடவேண்டிய தேனை முன்னரும், நெய்யைக் கலவை ஆறிய பின்னரும் விட்டு இளகல் பதமாய் எடுத்துக் கொள்ளுவது இளகம் எனப்படும்.

(வேறு)

சர்க்கரை அல்லது கரும்பு வெல்லத்தை நீர் அல்லது பசும்பால் விட்டுக் காய்ச்சிப் பாகு செய்து மணக்கும் பருவத்தில் தேனைவிட்டு ஒரு தரம் பொங்கி வரும்போது சரக்குப் பொடிகளைத் தூவிக்கிளறி இறக்கியபின் நெய் கலந்து கிளறி எடுத்துக் கொள்ளுது இளகம் என்று சொல்லப்படும்.

**பயிற்சி : 20**

# இம்பூறல் இளகம்

## தேவையான சரக்குகள் :

இம்பூறல் வேர்ப்பட்டை, பசும்பால், பனங்கற்கண்டு, பசுநெய், சாதிக்காய், சாதிபத்திரி, வால்மிளகு, தீ.

## தேவையான கருவிகள் :

இடிகருவி, அரைகருவி, கரண்டி, எடை காட்டி, அளவைக்கலம், கலங்கள், வடிகட்டி, சல்லடை, நிலநெய்அடுப்பு.

## செய்முறை :

இம்பூறல் வேரின் பட்டையை உரித்துச் சுத்தம் செய்து நிறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். இதைப் போன்று இரண்டு பங்கு எடை பசும்பாலை நிறுத்தெடுத்து வைத்துக் கொண்டு, இம்பூறல் வேர்ப்பட்டையை அரை கருவியிலிட்டு நன்றாய் அரைத்துக் கற்கமாக்கிப் பாலில் கலந்து கலக்கி வடிகட்டிக்கொள்ள வேண்டும். இவ்வாறு வடிகட்டி பெற்ற பாற்கலவையுடன், பசும்பாலின் எடைக்குச் சமன் பனங்கற்கண்டு எடுத்துக் கலந்து கரைத்து வடிகட்டிக் கொள்ள வேண்டும். இக்கரைசலை ஒரு வாயகன்ற கலத்தில் விட்டு வைத்துக் கொண்டு இம்பூறல் வேர்ப்பட்டையின் எடைக்கு பத்தில் ஒன்று வீதம் சாதிக்காய், சாதிபத்திரி, வால்மிளகு ஆகிய சரக்குகளை நிறுத்து எடுத்து சூரணித்துக் கலந்துகொண்டு சூரணங்களின் மொத்த எடையையும் கண்டு கொள்ள வேண்டும். சாதிக்காய் நெய்ப்புப் பசையுடன் இருந்தால்

அதைக் குழிக்கல்லிலிட்டு நன்றாய் அரைத்து எடுத்துக் கொள்ளலாம். முன்னர் வடிகட்டி எடுத்துக் கொண்ட கரைசலை அடுப்பேற்றி சிறு தீயிட்டுக் காய்ச்சிப் பாகுபதம் வந்ததும் அடுப்பைவிட்டு இறக்கி சூரணங்களைத் தூவி நன்றாகக் கிளற வேண்டும். கடைசியில் இம்பூறல் வேர்ப்பட்டைக்கு இருமடங்கு எடை பசுவின் நெய் நிறுத்தெடுத்துக் கலந்து கிளறிக் கொள்ள இளகல் பதமாய் இருக்கும். இதன் எடையையும் கண்டு கொள்ள வேண்டும்.

## தேர்வு :

| | | |
|---|---|---|
| இம்பூறல் வேர்ப்பட்டையின் எடை | - | .. கிராம் |
| (2 பங்கு) பசும்பாலின் எடை | - | .. கிராம் |
| (2 பங்கு) பனங்கற்கண்டின் எடை | - | .. கிராம் |
| (1/10) பங்கு வீதம் | | |
| சாதிக்காய் எடை | - | .. கிராம் |
| சாதிபத்திரி எடை | - | ... கிராம் |
| வால்மிளகு எடை | - | ... கிராம் |
| சூரணங்களின் மொத்த எடை | - | .... கிராம் |
| (2 பங்கு) பசு நெய்யின் எடை | - | .... கிராம் |
| இம்பூறல் இளக எடை | - | ... கிராம் |

**பயன் :**

5-10 கிராம் வீதம் கொடுக்கக் குருதி அழல் நோய்களும் குருதிக் காசமும் தீரும்.

**பயிற்சி 30**

# பஞ்ச தீபாக்கினி இளகம்

## தேவையான சரக்குகள்

சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம், வகைக்கு 10 கிராம்

| | | |
|---|---|---|
| சர்க்கரை | - | 100 கிராம் |
| பசும்பால் | - | 200 மி.லிட். |
| நெய் | - | 20 கிராம் |
| தேன் | - | 40 கிராம் |

## தேவையான கருவிகள் :

இடிகருவி, கரண்டி, எடைகாட்டி, அளவைக்கலம், தட்டு, வடிகட்டி, சல்லடை, கலங்கள், நிலநெய் அடுப்பு.

## செய்முறை :

பஞ்ச தீபாக்கினி சரக்குகளை சூரணவிதிப்படி சூரணித்து வைத்துக் கொள்ள வேண்டும். பசும்பாலில் சர்க்கரையைக் கலந்து வடிகட்டி, அதை ஒரு பாத்திரத்தில் விட்டு அடுப்பேற்றி எரிக்க வேண்டும். இது பாகுபதம் வந்ததும் சூரணத்தைச் சிறிது சிறிதாகத் தூவிக் கிளறி கொண்டு கடைசியில் நெய்யைவிட்டுக் கிளறி இறக்கிக் கொண்டு ஆறியபின் தேனைவிட்டுக் கிளறி பத்திரப் படுத்த வேண்டும்.

## தேர்வு :

| | | |
|---|---|---|
| சூரணச் சரக்குகள் எடை | - | .. கிராம் |
| பஞ்சதீபாக்கினி சூரண எடை | - | .. கிராம் |
| சர்க்கரை எடை | - | .. கிராம் |
| பசும்பால் | - | .. மி.லிட். |
| நெய் | - | .. கிராம் |
| தேன் | - | .. கிராம் |
| இளகத்தின் எடை | - | .. கிராம் |

**பயன் :**

10 முதல் 20 கிராம் வரை கொடுத்துவர செரியாமை, பித்தவாயு, பசியின்மை, போன்ற பிணிகள் தீரும்.

# அமுக்கரா இளகம்

| | | |
|---|---|---|
| சீமை அமுக்கராக் கிழங்கு | - | 80 கிராம் |
| சுக்கு | - | 40 கிராம் |
| மிளகு | - | 10 கிராம் |
| திப்பிலி | - | 20 கிராம் |
| ஏலரிசி | - | 5 கிராம் |
| கிராம்பு | - | 2 கிராம் |
| சிறுநாகப்பூ | - | 3 கிராம் |
| சர்க்கரை | - | 250 கிராம் |
| நெய் | - | 85 கிராம் |
| தேன் | - | 30 கிராம் |
| பால் | - | 500 மிலிட். |

சூரணிக்க வேண்டிய சரக்குகளைச் சூரணித்து எடுத்துக் கொண்டு சர்க்கரையைப் பாலில் கரைத்து வடிகட்டி அடுப்பேற்றி பாகுபதம் வரும்போது சூரணத்தைத் தூவிக்கிளறி கடைசியில் நெய்விட்டு கிளறி எடுத்துக் கொண்டு ஆறியபின் தேனைவிட்டு பிசறி எடுத்து பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**பயன் :**

10 முதல் 20 கிராம் வரை கொடுத்துவர வாதப் பிணிகள், வன்மைக் குறைவு, செரியாமை, போன்ற பிணிகள் தீரும். அன்றியும் வாதநோய்கட்கான செந்தூரங்களை இதில் அனுபானித்தும் கொடுக்கலாம்.

# தேன், சேரா இளகம்
# கேசரி இளகம்

| | | | |
|---|---|---|---|
| மல்லி | - | 60 கிராம் - | 10 கிராம் |
| மிளகு | - | 6 கிராம் - | 1 கிராம் |
| திப்பிலி | - | 6 கிராம் - | 1 கிராம் |
| சாதிக்காய் | - | 6 கிராம் - | 1 கிராம் |
| தாளிசபத்திரி | - | 6 கிராம் - | 1 கிராம் |
| கோட்டம் | - | 6 கிராம் - | 1 கிராம் |
| எலுமிச்சம்பழச்சாறு | - | 750 கிராம் - | 125 கிராம் |
| நாட்டுச்சர்க்கரை | - | 1500 கிராம் - | 250 கிராம் |
| பசுநெய் | - | 90 கிராம் - | 15 கிராம் |

*சரக்குகளைச் சூரணித்து வைத்துக் கொண்டு தேவையான அளவு எலுமிச்சம்பழத்தை ஒரு சட்டியில் போட்டு அடுப்பேற்றி சிறிது வறுத்து பின் அவற்றின் சாற்றைப் பிழிந்து தேவையான அளவு வடிகட்டிக் கொள்ள வேண்டும். பின் சர்க்கரையை இச்சாற்றில் கலந்து வடிகட்டி அடுப்பேற்றி பாகுபதம் வரும்போது ஏனைய சரக்குகளின் சூரணத்தைச் சிறிது சிறிதாகத் தூவிக் கிளறி கடைசியில் பசு நெய்விட்டுக் கிளறி எடுக்கவும்.*

**பயன் :**

*5 முதல் 10 கிராம் அளவு கொடுத்துவர பித்தப் பிணிகள், கிறுகிறுப்பு, பித்தவாந்தி, குமட்டல், நெஞ்செரிவு, சுவையின்மை போன்ற பிணிகள் தீரும்.*

# விதையை முதன்மையாகக் கொண்ட இளகம்
# தேற்றான் இளகம்

தேற்றான்கொட்டை - 30 கிராம்

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சிற்றரத்தை வகைக்கு 3 கிராம்

| | | |
|---|---|---|
| சர்க்கரை | - | 24 கிராம் |
| பசும்பால் | - | 400 மிலி. |
| நெய் | - | 100 கிராம் |
| தேன் | - | 50 கிராம் |

சரக்குகளைச் சூரணித்துக் கொண்டு சர்க்கரையைப் பசும்பாலில் கரைத்து வடிகட்டி அடுப்பேற்றி பாகுபதம் வந்ததும் சிறிது சிறிதாக தூவிக் கிளறி நெய்விட்டு எடுக்கவும், ஆறிய பின் தேன்விட்டு கிளறிக் கொள்ள வேண்டும்.

**பயன் :**

15-30 கிராம் வரை கொடுத்துவர என்புசுரம், இளைப்பு, வாதப் பிணிகள், வன்மைக் குறைவு போன்ற பிணிகள் தீரும். குருதி மூலப் பிணியில் நாகபற்பத்திற்கு அனுபானமாகக் கொடுக்கலாம்.

# பழத்தை முதன்மையாகக் கொண்ட இளகம்

## கண்டங்கத்தரி இளகம்

| | | |
|---|---|---|
| ஆடாதோடை இலைச் சாறு | - | 240 மிலிட். |
| கருந்துளசிச் சாறு | - | 160 மி. லிட் |
| கண்டங்கத்தரி இலைச்சாறு | - | 80 மிலிட். |

சுக்கு, திப்பிலி, ஏலம், கிராம்பு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சாதிக்காய், சாதிபத்திரி, தாளிசபத்திரி, சிற்றரத்தை, பேரரத்தை அதிமதுரம், இலவங்கப்பட்டை — இவற்றின் சூரணம் வகைக்கு 3 கிராம்.

தேன் - கிராம்

இவை எல்லாவற்றையும் சேர்த்து பாத்திரத்திலிட்டு சிறு தீயில் எரித்து மருந்து இளகல் பதமாக வந்தவுடன் அடுப்பை விட்டு இறக்கிக் கொள்ள வேண்டும்.

**பயன் :**

வேளைக்கு 5 முதல் 10 நெல்லெடையளவு கொடுத்துவர கக்குவான், இருமல், காசம் போன்ற பிணிகள் தீரும்.

# வேரை முதன்மையாகக் கொண்ட இளகம்

## வில்வாதி இளகம்

350 கிராம் வில்வவேர்க் கட்டையைச் சிதைத்து அதற்கு 8 பங்கு நீர் விட்டு கியாழம் செய்துகொள்ள வேண்டும். இதில் 1200 மிலிட் பால் கலந்து, 500 கிராம் சர்க்கரையைக் கரைத்து வடிகட்டி அடுப்பேற்றி பாகுபதம் வரும்போது கீழ்க்கண்ட சரக்குகளின் சூரணத்தைச் சிறிது சிறிதாகத் தூவிக்கிளறி கடைசியில் 240 கிராம் நெய்யும் ஆறியபின் 105 கிராம் தேனும் கலந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| சூரணச் சரக்குகள்: சுக்கு, மிளகு திப்பிலி, ஏலரிசி, சிறுநாகப்பூ, இலவங்கம், இலவங்கப்பட்டை, சாதிக்காய், தாளிசபத்திரி. | வகைக்கு 22.5 கிராம் |

**பயன்:**

8 முதல் 12 கிராம் வீதம் கொடுத்துவர பித்த வயிற்றுவலி, நெஞ்செரிவு, பித்தவாந்தி, பசியின்மை போன்றவை தீரும். உடல் ஊட்டமடையும்.

# எண்ணெய் (தைலம்)

## இயல்:

சரக்குகளின் கியாழம், சாறு, கற்கம் ஆகிய ஏதாவதொன்றுடனோ சில கூட்டியோ அவற்றுடன் நெய்வகையுள் ஒன்றைச் சேர்த்து எரித்து வடிகட்டிப் பெறுவதையாவது சரக்குகளைக் கருக்கிப் பெறுவதையாவது, ஆவியாக்கிப் பின் குளிருட்டிப் பெறுவதையாவது, சுடரில் எரித்து வடிவதைப் பெறுவதையாவது, ஆதவபுடமாவது, குழிப்புடமாவது செய்து பெறுவதையாவது எந்திரங்கள் விட்டுப் பெறுவதையாவது எண்ணெய் அல்லது தைலம் என்று கூறுவது. இது அடர்த்தி அதிகமான பிசு பிசுப்புள்ள நீர்த்துவப் பொருள்.

இது இழுது எனத் தேரையரால் குறிக்கப்படுகிறது. ஆட்சி வகையால் இஃது ஐவகையாம். அவை முடித்தைலம், குடித்தைலம், பிடித்தைலம், தொளைத்தைலம், சிலைத்தைலம் என்பன. உற்பத்தி வகையால் இதை கொதி, உருக்கு, மண், மரம் சிலை , நீர், ஆவி, சுடர், பொறி, தீநீர், குழி, ஆதவம் எனப் பன்னிரு வகையாகக் கூறப்படுகிறது. எனினும் இவற்றுள் சிலவே இந்நூலிற் கூறப்பெறுகின்றன.

**தைலபாகம்:** தைலம் எரிக்கும்போது எண்ணெயுடன் கலந்த கற்கத்தின் நிலையைக் கொண்டு தைலபாகம் கூறப்படும். எவ்வாறெனில் அக்கற்கப் பொருளை எடுத்துப் பார்க்கும்போது அது சிறு அளவு நீருடன் மெழுகுபோல இருந்தால் மிருது பாகம் என்றும், கற்கம் கையில் ஒட்டினால் சிக்கு பாகம்

என்றும், கற்கம் தைலத்தின் கீழ் பருக்கைகளாகச் சிதறி மணல்போல இருந்தால் கரகரப்புப் பாகம் என்றும் கூறப்படும்.

**முறை: 1**

## காய்ச்சிப் பெறுதல்

*சரக்குகளின் சாறு, கியாழம், கற்கம், சூரணம் ஆகியவற்றுடன் சேர்க்கப்பட்ட எண்ணெயைக் காய்ச்சிக் கொதிக்க வைத்து வடிகட்டித் தைலம் பெறும் முறைக்கு காய்ச்சிப் பெறுதல் என்று பெயர்.*

**பயிற்சி: 31**

## மத்தன் தைலம்

### தேவையான சரக்குகள் :

*ஊமத்தை இலை, மயில்துத்தம், தேங்காய் நெய்.*

### தேவையான கருவிகள்:

*இடிகருவி, வடிகட்டி, கலங்கள், எடைகாட்டி அளவைக்கலம், மண்கொதிகலம், சலாகை, நிலநெய்அடுப்பு.*

### செய்முறை:

*தேவையான அளவு ஊமத்தன் இலையை எடுத்து தூய்மை செய்து கழுவி 'இடித்துப் பிழிதல்' முறைப்படி சாற்றைப் பிழிந்தெடுத்து வடிகட்டிக் கொள்ள வேண்டும். இச்சாற்றை எடை தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு அளவைக்கலத்தில் விட்டு எடையையும் அளவையும் கண்டு கொள்ள வேண்டும். மயில் துத்தத்தைப் பொடித்து இச்சாற்றின் எடைக்குப் பத்தில் ஒரு பங்கு நிறுத்து எடுத்துக்கொண்டு சாற்றின் இரண்டில் ஒரு பங்கு தேங்காய் நெய் நிறுத்து எடுத்து அளவையும் கண்டு கொள்ள வேண்டும். ஊமத்தை இலைச் சாற்றை மண்ணாலான ஒரு கொதிகலத்தில் ஊற்றி அதில் மயில் துத்தப் பொடியைப் போட்டுச் சலாகையினால் நன்றாகக் கலக்க வேண்டும். மயில் துத்தப்பொடி கரைந்ததும் தேங்காய் நெய்யைக் கலந்து, கலத்தை அடுப்பில் வைத்து தீ மூட்டிக் காய்ச்ச வேண்டும்.*

கலவையிலுள்ள நீர்த்துவம் குறைந்து விட்டதை அறிய ஒரு சார்க்கை இதில் நனைத்து தீயில் பிடிக்க அது வெடிப்பு ஒலி இன்றி எரியும். அப்பருவம் வந்ததும் கலத்தை இறக்கி ஆறவிட்டு தைலத்தை வடிகட்டியினூடாக ஒரு எடை தெரிந்து கொள்ளப்பட்ட அளவைக் கலத்தில் விட்டு எடையையும் அளவையும் தெரிந்து கொள்ள வேண்டும். இது மத்தன் தைலம் அல்லது பச்சை எண்ணெய் என்று வழங்கப்படும்.

## தேர்வு:

| | | |
|---|---|---|
| ஊமத்தை இலைச்சாற்றின் அளவு | - | மிலிட் |
| எடை | - | கிராம் |
| துருசுத்தூளின் எடை | - | கிராம் |
| தேங்காய் நெய்யின் எடை | - | கிராம் |
| அளவு | - | மிலிட் |
| பச்சை எண்ணெயின் எடை | - | கிராம் |
| அளவு | - | மிலிட் |

## பயன்:

இது வெளியாட்சிக்கு மட்டுமே பயன்படும். புண்களுக்கும் தசை வளர்ச்சியுள்ள புண்களுக்கும் இதை வலைத்துணியில் நனைத்து வைத்துக் கட்ட அவை எளிதில் ஆறும்.

## குறிப்பு:

இத்தைலம் காய்ச்சியபின் பச்சை நிறமாக இருப்பதால் "பச்சை எண்ணெய்" என்றும் ஊமத்தை என்பது மத்தன் என்று முதற்குறையால் 'மத்தன் தைலம்' என்றும் வழங்கப்படுகிறது. இவ்வெண்ணெயில் துருசு சேராமல் காய்ச்சி அதைத் துளிக்கணக்கில் காதுத் துளைகளில் துளித்து வர செவிக்குலை, செவி எழுச்சி தீரும்.

## சீரகத் தைலம் (அசைத்தைலம்)

8 கிராம் சீரகத்தை 100 கிராம் நல்லெண்ணெயில் சேர்த்து சீரகம் வெந்து மிதக்கும் தருவாயில் இறக்கி ஆறவிட்டு வடிகட்டி எடுக்கவும்.

**பயன்:**

தலையில் தேய்த்து குளிக்க பித்த மயக்கம், கண் நோய்கள் மாந்தம் தீரும். உடல் குளிர்ச்சியாகும்.

**முறை 2**

## மடக்கிக் காய்ச்சிப் பெறுதல்

எண்ணெயில் சாறுகளைச் சேர்த்துக் காய்ச்சித் தைலம் வடித்துக் கொண்டு, மீண்டும், மீண்டும் அத்தைலத்துடன் சாற்றைக் கலந்து காய்ச்சி வடித்து எடுத்துக் கொள்ளுவது 'மடக்கிக் காய்ச்சிப் பெறுதல்' எனக் கூறப்படுகிறது.

**பயிற்சி 32**

## மடக்குக் கரிசாலைத்தைலம்

**தேவையான சரக்குகள்:**

கரிசாலை, எள்நெய், தீ.

**தேவையான கருவிகள்:**

இடிகருவி, வடிகட்டி, கலங்கள், கொதிகலம், அளவைக்கலம், சலாகை, நிலநெய்அடுப்பு.

**செய்முறை:**

கரிசாலை வேண்டிய மட்டும் எடுத்துத் தூய்மை செய்து 'இடித்துப் பிழிதல் முறைப்படி சாறு பிழிந்து வடிகட்டி எடுத்து அதன் அளவைத் தெரிந்து கொண்டபின் அதே அளவில் எள்நெய் அளந்தெடுத்து இரண்டையும் ஒரு கொதிகலத்தில் ஊற்றிக் கொள்ள வேண்டும். அடுப்பில்

தீமூட்டி கலத்தை வைத்து சிறு தீயில் சலாகையால் கலக்கிவிட்டு எரித்து நீர்த்துவம் குறைந்ததும் தைல பாகத்தில் வடிகட்டி அதன் அளவைக் கண்டுகொள்ள வேண்டும்.

மறுநாள் தைலத்தின் அளவு கரிசாலைச் சாற்றை இடித்துப் பிழிந்து வடிகட்டி எடுத்து தைலத்துடன் கலந்து அடுப்பேற்றி எரித்து தைல பாகத்தில் வடிகட்டி எடுத்துக் கொண்டு அளவைத் தெரிந்துகொண்டபின் மீண்டும் மீண்டும் இவ்வாறே தைல அளவுக்குத் தக்கவாறு கலந்து எரித்து வடித்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு மடக்கி மடக்கிக் காய்ச்சிப் பெறுவதால் இது மடக்குத் தைலம் எனப்படுகிறது.பொதுவாக மூன்று முறையிலிருந்து நூறுமுறை வரை மடக்கிக் காய்ச்சும் வழக்குமுண்டு (பயிற்சியில் மூன்றுமுறை மட்டும் மடக்கிக் காய்ச்சிக் கொண்டால் போதுமானது)

## தேர்வு:

| | | |
|---|---|---|
| கரிசாலைச் சாற்றின் அளவு | - | மி. லிட் |
| எள் நெய் அளவு | - | மி. லிட் |
| தைல அளவு | - | மி. லிட் |
| இரண்டாவது மடக்கில் சாற்றின் அளவு | - | மி. லிட் |
| தைலத்தின் அளவு | - | மி. லிட் |
| மூன்றாவது மடக்கில் சாற்றின் அளவு | - | மி. லிட் |
| தைலத்தின் அளவு | - | மி. லிட் |

**பயன்:**

1-3 மிலிட் அளவு வீதம் கொடுக்க காசம், இருமல், இரைப்பு, மற்றும் புப்புச நோய்கள் தீரும்.

# அரைத்துக் கலக்கிப் பெறுதல்

## முறை: 3

சரக்கின் சூரணங்களை நெய் கலந்து அரைத்துக் கலக்கிப் பெறுவது 'அரைத்துக் கலக்கிப் பெறுதல் எனக் கூறப்படுகிறது.

பயிற்சி 33

# வெள்ளை எண்ணெய்

## தேவையான சரக்குகள்:

ஆமணக்கு நெய், பூரம், ஏலரிசி, சுக்கு

## தேவையான கருவிகள்:

இடிகருவி, குழியம்மி, சல்லடை, அளவைக்கலம், எடைகாட்டி, கத்தி, கரண்டி

## செய்முறை:

பூரசுத்தி-பூரத்திற்குச் சமஎடை வெற்றிலையும் மிளகும் அரைத்துக் கற்கமாக்கி நீரிற் கலக்கி ஒரு கொதிகலத்தில் விட்டு அதில் அமிழும்படி பூரத்தைக் கிழிகட்டி தொங்கவிட்டு நீர் முக்காற்பாகம் சுண்டும்படி எரித்துக் கழுவி எடுக்க வேண்டும். சுத்தி செய்த பூரம், ஏலரிசி, மேற்றோல் சீவிய சுக்கு இவை மூன்றும். சம எடைகளில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஏலரிசியைச் சூரணித்து எடுத்து வைத்துக்கொண்டு பூரத்தைக் குழிக்கல்லில் இட்டு நன்றாக அரைக்க வேண்டும். பூரம் நன்றாக அரைபட்டதும் இதற்கு நாற்பது பங்கு எடை ஆமணக்கு நெய் நிறுத்தெடுத்து அளவையும் தெரிந்துகொண்டபின் அதில் சிறிது விட்டு பூரத்தை அரைத்து ஏலரிசி, சுக்கு இவற்றின் சூரணங்களையும் கலந்தரைத்துப் பின் எஞ்சியுள்ள ஆமணக்கு நெய் முழுவதையும் விட்டு சிறிது அரைத்துக் கலக்கி கரண்டியால் அதை முகர்ந்து எடை தெரிந்து கொள்ளப்பட்ட அளவைக் கலத்தில் விட்டு அளவையும் எடையையும் கண்டுகொள்ள வேண்டும்.

## தேர்வு:

| | | |
|---|---|---|
| 1 பங்கு சுத்தித்த பூரத்தின் எடை | - | கிராம் |
| 1 பங்கு ஏலரிசியின் எடை | - | கிராம் |
| 1 பங்கு சுக்கின் எடை | - | கிராம் |

| | | |
|---|---|---|
| 40 பங்கு ஆமணக்கு நெய்யின் எடை | = | மி. லிட் |
| தைலத்தின் எடை | - | கிராம் |
| அளவு | - | மி. லிட் |

**பயன்:**

10-30 மி. லிட் அளவு கொடுக்க கழிச்சலுண்டாக்கும். வெள்ளை, கீல்வாயு, வீக்கம், குன்மம் முதலிய நோய்களில் கொடுக்கலாம்.

**குறிப்பு:**

வெள்ளை எண்ணெயை பூரஎண்ணெய் என்றும் வழங்குவர். பூரம் பளுவுள்ளதால் தைலத்தின் அடியில் படியும். எனவே வழங்கும்போது தைலம் வைத்துள்ள குப்பியை நன்றாகக் குலுக்கி தைலத்தைக் கலக்கிக் கொண்டு பின்பே வழங்க வேண்டும். கழிச்சலுக்கு மருந்துகள் தரும்போது ஆளின் தன்மைக்கேற்ப மருந்துகளை அளவிட வேண்டும். சிலருக்கு சிறிய அளவிலான கழிச்சல் மருந்துகூட பெருங்கழிச்சல் உண்டாக்கி விடக்கூடும். வேறு சிலருக்கு அதிக அளவு கொடுப்பினும் ஒன்றிரண்டு தடவை மலம் கழிவதும் இன்னும் சிலருக்கு கழியாமல் இருப்பதும் உண்டு.

## மூலகுடார தைலம்

கடுக்காய்ப் பிஞ்சு 15 கிராம்

ஆமணக்கு நெய் 60 கிராம்

இரண்டையும் தைலம் பழகிய பாண்டத்திலிட்டு அடுப்பேற்றி கடுக்காய்ப் பிஞ்சு மிதக்கும் வரை எரித்து ஆறியபின் முதலில் கடுக்காய்ப் பிஞ்சைக் கல்வத்திலிட்டு அரைத்துக் கொண்டு பின் ஆமணக்கு எண்ணெய்விட்டு அரைத்து வழித்தெடுத்துக் கொள்ளவும்.

**பயன்:**

5-10 கிராம் படுக்கைக்குப் போகுமுன் கொடுக்க, மூலம் இரத்தமூலம், ஆகியவை தணியும். மலக்கட்டு தீரும்.

குறிப்பு:

கடுக்காய்ப் பிஞ்சைச் சிறிது ஆமணக்கு நெய்விட்டு வறுத்துப் பொடியாக்கி மீதி நெய்விட்டு அரைத்து எடுப்பதும் உண்டு. வழக்கில் இதனினும் முன்முறை சிறப்பானது.

முறை 4

# கருக்கிப் பெறுதல்

சரக்கை நெருப்பில் கருக்கி அதிலிருந்து வழியும் தைலத்தைச் சேகரித்து எடுத்துக்கொள்ளுவதைக் கருக்கிப் பெறுதல் என்பர்.

பயிற்சி : 34

# அண்டத் தைலம்

**தேவையான சரக்குகள்:**

கோழிமுட்டை, நீர், தீ.

**தேவையான கருவிகள்:**

கொதிகலம், கலம், இரும்புச் சட்டி, நீண்ட கரண்டி, அளவைக்கலம், எடைகாட்டி, நிலநெய்அடுப்பு, வடிகட்டி

**செய்முறை:**

தேவையான எண்ணிக்கை கோழிமுட்டை எடுத்து அதை ஒரு கொதிகலத்தில் போட்டு அதில் தக்க அளவு நீர்விட்டு நிலநெய் அடுப்பில் தீமூட்டி கலத்தை வைத்து எரித்து நீரைக் கொதிக்க வைக்க வேண்டும். நீர் கொதிநிலை அடைந்ததும் முட்டை நன்றாக வெந்துவிடும். அப்போது கலத்தை இறக்கி நீண்ட கரண்டியினால் வெந்த முட்டையை கொதி நீரிலிருந்து எடுத்து மற்றொரு கலத்தில் தண்ணீர் விட்டு அதில் சிறிது நேரம் போட்டு வைக்க வேண்டும். பின் முட்டையை எடுத்து அதன்மேல் கரண்டியினால் தட்ட மேலோடு கீறல் விழும். அம்மேலோட்டை நீக்கிவிட்டால் உள்ளே முட்டையில் வெண்கரு தெரியும். அதைப்பிட்டு எடுக்க உள்ளே மஞ்சட்கரு உருண்டையாக இருக்கும்.

இம்மஞ்சட்கருவை எடுத்து எடைகாட்டியிலிட்டு எடையைக் கண்டுகொண்டபின் இரும்புச் சட்டியை அடுப்பில் வைத்து அதில் மஞ்சட்கருவை மட்டும் போட்டு எரிக்க வேண்டும். இப்போது மஞ்சட்கரு கடுகிக் கரியும். கரண்டியில் புறப்பங்கினால் இதை நையச் செய்து கொண்டிருக்க அதிலிருந்து தைலம் கசியும். மஞ்சட்கருவை சட்டியின் ஒரு ஒரத்தில் கொண்டு வந்து நையச் செய்ய தைலம் வழிந்து கீழ் ஒரத்தில் தேங்கும். இத்தைலத்தைக் கரண்டியால் முகர்ந்து எடை தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு அளவைக் கலத்தில் வடிகட்டியினூடாக விட்டுக் கொள்ள வேண்டும். மஞ்சட் கருவிலிருந்து தைலம் இறங்கும் வரை கருகச் செய்து தைலம் பெற வேண்டும். இதன் எடை, அளவு இவைகளையும் கணித்துக்கொள்ள வேண்டும். இதுவே அண்டத் தைலம் அல்லது முட்டைத் தைலம் எனப்படும்.

## தேர்வு:

| | | |
|---|---|---|
| கோழிமுட்டை எண்ணிக்கை | - | எண் |
| மஞ்சட்கருவின் எடை | - | கிராம் |
| அண்டத் தைலத்தின் எடை | - | கிராம் |
| அளவு | - | மி. லிட் |

## பயன்:

1-3 துளிவீதம் வெந்நீரில் கொடுத்துவர வலிப்பு, சன்னி, மாந்தம் முதலிய குழந்தைப் பிணிகள் தீரும். பக்கவாத நோயில் ஏற்படும் குரல் செயலிழப்புக்கு தடவி வரக் குணமுண்டாகும்.

## குறிப்பு:

அவித்த முட்டையின் மஞ்சட்கருவை ஒரு புட்டியினுள் போட்டு அதன் வாயை துளைகளுள்ள மூடியால் மூடி அத்துளைகளில் மெல்லிய சிறு குச்சிகளைச் செருகி வைத்து அக்குப்பியைக் கவிழ்த்து அதனுடன் பொருந்தக்கூடிய ஒரு பீங்கான் கலத்தை கீழே வைத்துப் பீங்கான்கலம் மண்ணுக்குள் இருக்கும்படி வைத்து குப்பியைச் சுத்தி சாணவரட்டிகளை வைத்துத் தீயிட மஞ்சட்கரு கருகித் தைலம் குச்சிகளின்

வழியால் வழிந்து கீழேயுள்ள பீங்கான் கலத்தில் சேரும். சிறு அளவில் அண்டத் தைலம் பெறுவதற்கு இம்முறை மிக்க பயனுடைத்து.

## முறை : 5

## காய்ச்சி நீரில் விட்டு வடித்தெடுத்தல்

சரக்குகளை எண்ணெயில் கலந்து காய்ச்சி அரிசி கழுவிய நீரிலாவது தண்ணீரிலாவது ஊற்றி ஒருநாள் விட்டிருந்து மறுநாள் மேலாக மிதக்கும் தைலத்தை வடித்தெடுத்து சிறிது காய்ச்சி அதிலுள்ள நீரைப் போக்கி எடுத்துக்கொள்ளுவது 'காய்ச்சி நீரில்விட்டு வடித்தெடுத்தல்' எனக் கூறப்படும்.

## பயிற்சி : 36

## விரண சஞ்சீவித் தைலம்

### தேவையான சரக்குகள் :

தாளகம், சேராங்கொட்டை, எள்நெய், அரிசி கழுவிய நீர், தீ.

### தேவையான கருவிகள் :

அரைகருவி, வெட்டுக்கத்தி, கரண்டி, கொதிகலம், கலங்கள், அளவைக்கலம், எடைகாட்டி, சலாகை, நிலநெய்அடுப்பு.

### செய்முறை :

எள்ளில் நெய் முப்பது பங்கு நிறுத்தெடுத்து அதன் அளவைத் தெரிந்துகொண்டு ஒரு கொதிகலத்தில் இட்டுக்கொள்ள வேண்டும். ஒரு பங்கு தாளகத்தை எடுத்து அரை கருவியில் இட்டுத் தூளாக்கி கரண்டியால் கரண்டி எடுத்து எள் நெய்யில் போட்டு சலாகையால் கலக்கிக் கொள்ள வேண்டும். பின் மூன்று பங்கு எடையுள்ள சேராங்கொட்டை எடுத்து வெட்டுக் கத்தியால் அதை இரண்டாகப் பிளந்து நறுக்கி எண்ணெயில் சேர்த்துக்கொள்ள வேண்டும். சேராங்கொட்டையின் பால் உடலில் பட்டால் கொப்புளமுண்டாக்குவதோடு உடலை வீங்கச் செய்யும். எனவே, சேராங்கொட்டையை நறுக்கும்போது, அதன் பால் உடலில் பட்டுவிடாதபடி மிகக்

கவனமாகச் செய்ய வேண்டும். பின் அடுப்பில் தீமூட்டி கொதிகலத்தை வைத்துச் சலாகையால் கலக்கிவிட்டு சிறுதீயில் எரிக்க வேண்டும். சேராங்கொட்டை வெந்து அதன் தோலில் வெடிப்புகள் ஏற்பட்டதும் கொதிகலத்தை அடுப்பினின்று இறக்கிவிட வேண்டும். மற்றொரு பெரிய கலத்தில் அரிசி கழுவிய நீர் பாதியளவு விட்டு அதில் காய்ச்சிய தைலத்தைக் கொட்டிவிட்டு அப்படியே ஒருநாள் வைத்துவிட வேண்டும்.

மறுநாள் நீரின் மேல் மிதக்கும் தைலத்தை ஒரு கரண்டியால் முகர்ந்து பிரித்தெடுத்துவிட்டு, மற்றொரு கலத்திட்டு அக்கலத்தை அடுப்பேற்றிச் சிறுதீயில் காய்ச்சி தைலத்துடன் கலந்துள்ள நீரை ஆவியாக்கிப் போக்கிக் கொண்டு தைலத்தின் அளவையும் எடையையும் கணித்துக்கொள்ள வேண்டும்.

## தேர்வு:

எள்நெய் (30 பங்கு) எடை - கிராம்
அளவு - மிலிட்

தாளகம் (1 பங்கு) எடை - கிராம்

சேராங்கொட்டை (3பங்கு)
எடை - கிராம்

தைலத்தின் அளவு - மிலிட்
எடை - கிராம்

## பயன்:

புண்களுக்கு வெளியாட்சி செய்ய இது பயன்படும். சன்னிநோய்க்கு இத்தைலத்தில் 1-2 துளியை வெற்றிலையில் தடவி மென்று தின்னச் செய்யலாம்.

## குறிப்பு :

இப்பயிற்சியில் அரிசி கழுவிய நீர் கிடைக்காதவிடத்து தண்ணீரையே பயன்படுத்திக்கொள்ளலாம்.

முறை : 6

## சுடரெரித்துப் பெறுதல்

சரக்குகளை அரைத்துத் துணியில் தடவி திரியாகத் திரித்து நீண்ட கம்பியின் நுனியில் பற்றிக்கொண்டு தீமூட்டி எரித்து சொட்டும் தைலத்தைப் பெற்றுக்கொள்ளுவது 'சுடர் எரித்துப் பெறுதல்' எனக் கூறப்படுகிறது.

## கெந்தக சுடர்த் தைலம்

| | | |
|---|---|---|
| கெந்தகம் | -16 | பங்கு |
| வெடியுப்பு | -16 | பங்கு |
| மனோசிலை | -16 | பங்கு |
| நவாச்சாரம் | - 1 | பங்கு |
| வீரம் | - 1 | பங்கு |
| பசுவெண்ணெய் | -64 | பங்கு |

கடைச் சரக்குகளைத் தனித்தனியாகக் கல்வத்திலிட்டு அரைத்துப் பொடியாக்கி பசுவெண்ணெயைக் கல்வத்திலிட்டு ஒவ்வொரு தூளாகக் கலந்து அரைத்து ஒரு துணித்துண்டில் அவ்வெண்ணெயைத் தடவி, துணியைச் சுருட்டித் திரிபோலாக்கிக் கொண்டு நீண்ட இடுக்கியால் அதன் ஒரு நுனியைப் பற்றிக்கொண்டு மறு நுனியில் கொளுத்திவிட திரி எரிந்து அதிலிருந்து தைலம் சொட்டும். இத்தைலத்தை ஒரு பீங்கான் பாத்திரத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**பயன் :**

1-4 துளிவீதம் சர்க்கரையில் அல்லது பனைவெல்லத்தில் கொடுத்து வர மேகப்புண்கள், வெண்புள்ளிநோய், வாதநோய் முதலியன தீரும்.

**குறிப்பு :**

வெடியுப்புடன் ஏனைய பொருட்களைக் கலந்து அரைத்தால் அது தீப்பற்றிக்கொண்டுவிடும். அதனால் சரக்குகளைத் தனித்தனியாக அரைத்துத் தூளாக்கிக்கொள்ள வேண்டும். வெண்ணெயில் இத்தூள்களைக் கலக்கும்போது அது நீர்த்து வழுமுடையதால் வெடியுப்பு பற்றிக்கொள்ளாது.

வழக்கில் காலில் ஆணி முதலிய துருப்பிடித்த உலோகங்கள் குத்தியபோது ஒரு துணியை உருட்டித் திரியாக்கி அதைத் தேங்காய் நெய்யில் தோய்த்துக் கொளுத்தி அதிலிருந்து விழும் சுடர் தைலத்தைக் குத்துவாயில் விழச் செய்வதுண்டு. இதனால் வேறு மருந்துகள் இல்லாமலேயே ஆணி முதலிய குத்திய புண்கள் ஆறிவிடுகின்றன.

சொட்டுகின்ற தைலம் தீச்சுடர் விழுவதுபோல தீ எரிந்துகொண்டு விழுவதால் இது சுடர்த்தைலம் எனப்படுகிறது.

**முறை : 7**

## குழிப்புடமிட்டுப் பெறுதல்

சரக்குகளை அடியில் சிறு துவாரங்களுள்ள ஒரு கடத்தில் அடைத்து துவாரங்களில் கம்பி செருகி அதனடியில் மற்றொரு கலத்தை அமைத்துக் கீழுள்ள கலம் மண்ணுக்கடியில் இருக்கும்படி வைத்து மேலுள்ள சரக்கு நிறைந்த கலத்தைச் சுற்றி எரி பொருள்விட்டு எரிக்க பொருள் கரைந்து தைலம் கீழேயுள்ள கலத்தில் சேரும். இவ்விதம் செய்து தைலம் பெறுவது 'குழிப்புடமிட்டுப் பெறுதல்' எனக் கூறப்படுகிறது.

## சிரட்டைக்குழித் தைலம்

அடியில் சிறு துவாரங்களுள்ள ஒரு கடத்தில் சிரட்டைத் துண்டுகளைப் போட்டு மூடி சீலை செய்து கீழுள்ள துவாரங்களில் சிறு கம்பிகளைச் செருகி வைத்து அவற்றில் துணித்துண்டில் அரைத்து புற்று மண்ணைத் தடவி சீலை மண் செய்து கொள்ளவும். எத்தனை சுற்றாக துணி சுற்றப் படுகிறதோ அத்தனை சீலை என்று வழக்கில் கூறப்படும். செந்தூரம், பற்பம் முதலிய செய்முறையில் புடமிடும்போது ஒரு அகலில் சரக்குகளின் வில்லைகளை வைத்து மேலகல் கொண்டு மூடி அவ்விரண்டினதின் பொருத்து வாயைச் சீலை செய்து, உலர்த்தி எரிக்க வேண்டும். பின் இதனைச் சுற்றிலும் வரட்டியும் கொள்ளத்தக்க அளவு பூமியில் குழி ஒன்று தோண்டி அக்குழியின் நடுவில் கீழுள்ள கலம் இருக்கத்தக்க மற்றொரு சிறு குழி தோண்டிக்கொள்ள வேண்டும். பின்

இப்பொறியைக் குழிக்குள் வைத்து கீழுள்ள கலத்தின் வாய் மறையும்வரை மணல் கொண்டு மூடி மேற் கலத்தைச் சுற்றிலும் குழியில் வரட்டி அடுக்கி அதில் தீயிட வேண்டும். தீயின் வெம்மையால் மேற்கலத்திலுள்ள சிரட்டை கரித்து அதிலுள்ள நெய்ப்புப் பொருள் கசிந்து பானையின் அடியிலுள்ள துவாரங்களில் செருகப்பெற்ற கம்பிகள் வழியாய் கீழ்க் கலத்தினுள் சேரும். புடம் எரிந்து ஆறியதும் குழியைப் பிரித்துக் கீழ்க்கலத்திலுள்ள தைலத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

**பயன் :**

வெளியாட்சிக்கு மட்டும் பயன்படும். தேங்காய் நெய்யில் அல்லது வெண்ணெயில் கலந்து சொறி, படை, தடிப்புகள் முதலிய தோற்பிணிகளுக்குப் பூசலாம்.

**குறிப்பு :**

சிரட்டைத் தைலத்தை தேங்காய் நெய் அல்லது பசு வெண்ணெயில் கலக்காமல் பூசினால் பூசிய இடம் கொப்புளம் கண்டு புண்ணாகிவிடும். எனவே, இதைத் தனியாகப் பயன்படுத்தக் கூடாது. அமிர்த வெண்ணெயில் சிரட்டைத் தைலத்தைக் கலந்து படைகளுக்குப் பூசலாம்.

# ஆவித்தைலம்

வாலை முறையிலேயே இத்தைலம் பெறப்படுகிறது. வாய் நீண்ட கலங்கள் இரண்டு இதில் தேவைப்படுகின்றன.

## ஆவிமூலம் பெறல்

## மெழுகுத் தைலம்

| | |
|---|---|
| தேன் மெழுகு | - 16 பங்கு |
| சக்கிமுக்கிக் கல் | - 16 பங்கு |
| சோற்றுப்பு | - 16 பங்கு |
| ஆற்று மணல் | - 8 பங்கு |

ஓமம் - 2 பங்கு

கப்பு மஞ்சள் - 2 பங்கு

சடாமாஞ்சில் - 1 பங்கு

நீண்ட கழுத்துள்ள இரு கலங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு கடம் பெரிதாயும் அதன் வாயினுள் மற்றதன் வாய் நுழையத் தக்கதாயும் இருக்க வேண்டும். பெருங்கடத்தின் பக்கப் பகுதியில் ஒரு பெரிய துவாரமும் சிறுகடத்தின் பக்கப் பகுதியில் ஒன்றிரண்டு சிறு துவாரங்களும் செய்துகொண்டு பெருங்கடத்திலுள்ள துவாரம் மேல்நோக்கவும் சிறுகடத்தின் துவாரங்கள் கீழ்நோக்கவும் இருக்கத்தக்கதாக ஒன்றின் வாயை மற்றதில் நுழைத்து களிமண் பூசி அதன்மேல் அரைத்த புற்றுமண் தடவிய சீலையை ஏழுமுறை சுற்றிக் காய விட வேண்டும். இது மெழுகு தைலக் கருவி எனப்படும். இனி சரக்குகளில் பொடிக்க வேண்டியவைகளைப் பொடியாக நறுக்கிப் பெருங்கடத்தின் துளையினூடாக உள்ளே போட வேண்டும். சரக்குகள் போட்டு முடிந்ததும் பெருங்கடத்தின் துவாரம் மேலே நோக்கத் தக்கதாகவும் சிறுகடம் சற்று மிதக்க இருக்கத்தக்கதாகவும் அடுப்பின் மேல் அதை இருத்த வேண்டும். பெருங்கடத்தின் துவாரத்தைச் சீல் கொண்டு மூடி சாணத்தை அதன்மேல் அப்பிவிட வேண்டும். பின் அடுப்பில் எரிபொருள் கொண்டு ஒன்பது மணிநேரம் எரிக்க சரக்குகளும் மெழுகும் காய்ந்து ஆவியாகி சிறு கடத்திற்குப் போய்க் குளிர்ந்த தைலமாகிச் சேரும். சிறிது நேரமானதும் சிறு கடத்தைச் சற்றுக் கீழாக இருக்கத்தக்கவாறு நிலைப்படுத்தி வர அதன் கீழாக உள்ள சிறு துவாரங்களின் வழியாகத் தைலம் சொட்டும். அதன் நேருக்கு ஒரு கலத்தை வைத்துத் தைலத்தைச் சேகரித்துக் கொள்ள வேண்டும். இது மயன தைலம் என்றும் சொல்லப்படும்.

ஆவி மிகுந்து பானை வெடித்துவிடாமல் இருப்பதற்கு அனுகூலமாகவே பெருங்கடத்தின் பெருந்துளையை சில் கொண்டு மூடி சாணம் அப்பப்படுகிறது. ஆவியின் அமுக்கம் கடத்தினுள் மிகுந்து விட்டால் இச்சில்லை நெகிழ்த்துத் தூக்கி ஆவியை வெளியேற்றிவிட வாய்ப்பு ஏற்படுகிறது.

**பயன் :**

வெளியாட்சிக்கு மட்டும் பயன்படுகிறது. பட்சபாதம், பக்கவாதம், அண்டவாதம் முதலிய வாதப் பிணிகள், வலிப்பு, சன்னி, இனக்குறித் தளர்ச்சி ஆகியவற்றில் வெளிப்பூசலாம். குருதி வழியில் வெட்டுக் காயங்களுக்குப் போட மிக்க நன்மையுண்டாம். ஆனைக்கால் நோயில் இத்தைலத்தைப் பூசிப்பட்டி கட்டலாம். சிலைப்புண்களுக்கு இதனுடன் புங்குநெய் கலந்து பூச அவை விரைவில் ஆறும்.

## அறுகன் தைலம்

**தேவையான சரக்குகள் :**

| | | |
|---|---|---|
| அறுகன்புல் சாறு | - 100 | மிலிட் |
| தேங்காய் எண்ணெய் | - 100 | மிலிட் |
| அதிமதுரம் | - 5 | கிராம் |

**செய்முறை :**

அறுகன் புல்லை இடித்துப் பிழிந்து சாறெடுத்து வடிகட்டிக்கொண்டு தேங்காய் எண்ணெயைக் கலந்து, அதில் அதிமதுரத்தைப் பொடியாக்கி நீர்விட்டரைத்து கற்கத்தைச் சேர்த்து எரித்து கரகரப்புப் பதத்தில் வடித்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

**பயன் :**

சொறி, சிரங்கு, தீப்பட்டபுண் முதலிய தோல் பிணிகளுக்கு மேலாட்சியாகப் போட்டுவர குணமாகும்.

## சிற்றாமுட்டித் தைலம்

**தேவையான சரக்குகள் :**

| | | |
|---|---|---|
| சிற்றாமுட்டி | - 35 | கிராம் |
| நீர் | - 400 | மிலிட் |
| எள்நெய் | - 100 | மிலிட் |

**செய்முறை :**

*சிற்றாமுட்டி வேரைச் சிதைத்து நீர் சேர்த்து நாலில் ஒன்றாகக் கியாழமிட்டு வடிகட்டி அதனுடன் எண்ணெய் சேர்த்து பதத்தில் காய்ச்சி இறக்க வேண்டும்.*

**பயன் :**

*வாதத்தாலேற்படும் வலி, குடைச்சலுக்கு மேலாட்சியாகப் போடலாம்.*

**குறிப்பு :**

*சிற்றாமுட்டி மடக்கு தைலத்துக்கு கியாழம் செய்ய ஆற்றுநீர் பயன்படுத்தப்படும். இது காய்ச்சுகையில் பசும்பால் சேர்க்கப்பட்டு ஆறுமுறை மடக்கிக் காய்ச்சப்பட வேண்டும். இதை உள்ளாட்சியாகப் பயன்படுத்த சூசிகாவாதம், என்புசுரம், பலமின்மை, அதிக இளைப்பு ஆகியவை தீரும்.*

## கரிசாலைத் தைலம்

**தேவையான சரக்குகள் :**

*கரிசாலை, எள் நெய்*

**செய்முறை :**

*கரிசலாங்கண்ணியை இடித்துப் பிழிந்த சாற்றுடன் சம அளவு எள்நெய் சேர்த்து பதத்தில் காய்ச்சி வடிக்கவேண்டும்.*

**பயன் :**

*தலையில் தேய்த்துக் குளித்து வர கண்ணில் எரிச்சல், உடற் சூடு தீரும்.*

**குறிப்பு :**

*இதை இரைப்பு, இருமல் போன்றவைகளில் உள்ளுக்கும் கொடுக்கலாம். எனினும் மடக்கு கரிசாலைத் தைலம் சிறந்தது.*

# கர்ப்பூராதி தைலம்

## தேவையான சரக்குகள் :

| | | |
|---|---|---|
| ஓமம் | - | 5 கிராம் |
| தேங்காய் எண்ணெய் | - | 200 மி.லிட் |
| பூங்கர்ப்பூரம் | - | 16 கிராம் |

## செய்முறை :

ஓமத்தை நீரில் ஊறவைத்து அரைத்துக் கற்கமாக்கி தேங்காய் எண்ணெயில் சேர்த்து எரித்து பதத்தில், பூங்கர்ப்பூரப் பொடி போடப்பட்ட பாத்திரத்தில் வடித்துக் கலக்கிக் கொள்ள வேண்டும்.

## பயன் :

சுளுக்கு, வலியுள்ள இடங்களில் மேற்பூசலாம். மார்புச் சளி, இரைப்பிருமல் இவற்றுக்கு மார்பில் தடவி வரலாம். நோயின் கடுமையில், இத்தைலம் தடவி வறுத்த கோதுமைத் தவிட்டால் ஒற்றடமிடலாம்.

உடல் குளிர்ந்துபோகும் நிலைகளில் இதை உடல் முழுதும் போட்டு உள்ளங்கை உள்ளங் கால்களில் தடவி சூடுண்டாகும்படி தேய்க்கலாம்

# குந்திரிக / குக்கில் / குங்கிலிய தைலம்

## தேவையான சரக்குகள் :

| | | |
|---|---|---|
| பூனைக்கண் குங்கிலியம் | - | 10 கிராம் |
| எள் நெய் | - | 100 மி.லிட். |

## செய்முறை :

குங்கிலியத்தை இடித்துப் பொடித்து எள் நெய்யில் கலந்து எரித்து பதத்தில் வடிகட்டி எடுத்துக்கொள்ள வேண்டும்.

**பயன் :**

வாத வலி, குடைச்சல், வீக்கம், விரணம், அழற்சியாலுண்டாகும் வீக்கம் போன்றவைகளுக்கு வெளிப்பூச்சு செய்யலாம்.

## சிவப்பு குக்கில் தைலம்

**தேவையான சரக்குகள் :**

| | |
|---|---|
| வெள்ளைக் குங்கிலியம், மலை நன்னாரி, மஞ்சிட்டி தேன் மெழுகு | 18 கிராம் |
| வேம்பாடம்பட்டை | - 2 கிராம் |
| எள் நெய் | - 200 மி லிட் |

**செய்முறை ;**

மலை நன்னாரி, மஞ்சிட்டி இரண்டையும் பொடி பண்ணி நீர் விட்டரைத்துக் கற்கமாக்கிக்கொள்க. எஞ்சிய சக்கையைச் சேர்த்துக் குடிநீராக்கிக் கலந்து, எள் நெய் கூட்டி அடுப்பேற்றி பதத்தில் வேம்பாடம்பட்டைத் தூளைச் சேர்த்துக்கொள்க. வெள்ளைக் குங்கிலியத்தைப் பொடித்தும் தேன் மெழுகைச் சிறு துண்டுகளாக்கியும் போட்டுள்ள பாத்திரத்தில் தைலத்தை வடித்துக் கரையும்படி கலக்கி எடுக்கவும்.

**பயன் :**

வாத நோய்கள், அடிபட்ட வீக்கம், புண்கள் போன்றவற்றுக்கு மேலே போட்டு வரலாம்.

# எட்டி (விடமுட்டி)த் தைலம்

## (எளியமுறை)

**தேவையான சரக்குகள் :**

| | | | |
|---|---|---|---|
| எட்டி விதை | - | 265 | கிராம் |
| ஆயிலியப்பட்டை | - | 160 | கிராம் |
| பூண்டரிசி | - | 350 | கிராம் |
| ஆட்டுப்பால் | - | 500 | மிலிட் |
| எள் நெய் | - | 12 | லிட் |

**செய்முறை :**

எட்டி விதையை ஆட்டுப்பாலில் ஒருநாள் ஊறப்போட்டு எடுத்து சிறிது சிறிதாய் வெட்டி உலர்த்திக் கொண்டு, எ.ண்ணெயை அடுப்பேற்றி எரித்து எட்டி விதைத் துண்டுகள், முற்றிய ஆயிலியப்பட்டை, உரித்த பூண்டு இவைகளைப் போட்டு அவை வெந்து மிதந்ததும் வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

**பயன் :**

சீல்வாயு, வாதநோய், நரம்புகளில் செயற்குறைவு போன்றவைகளுக்கு மேலாட்சியாகப் போட்டு வரலாம்.

# திரிபலைத் தைலம்

**தேவையான சரக்குகள் :**

கடுக்காய்த்தோல், நெல்லி வற்றல், தான்றிக்காய்த்தோல் அதிமதுரம், வெட்டி வேர் — வகைக்கு 18 கிராம்

பச்சைக் கர்ப்பூரம் - 1 கிராம்,

பசும்பால், எள்நெய் - வகைக்கு 1 லிட்.

**செய்முறை :**

முதல் ஐந்து சரக்குகளையும் பொடித்துப் பாலை விட்டரைத்துக் கற்கமாக்கி பசும்பாலையும் எள் நெய்யையும் கலந்து அதில் போட்டு அடுப்பேற்றி எரித்துப் பதத்தில்வடிகட்டி பச்சைக் கர்ப்பூரத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**பயன் :**

இதைத் தேய்த்துக் குளித்துவர கண் எரிச்சல், கண் அருகல், உடலனல் தீரும்.

## காதுவலித் தைலம்

**தேவையான சரக்குகள் ;**

காயம், பூண்டு, வசம்பு - வகைக்கு 6கிராம்

வேப்பம் வித்து எண்ணெய் `-72 மிலிட்

**செய்முறை ;**

காயம், வசம்பு இரண்டையும் பொடிபண்ணி கல்வத்திலிட்டு பூண்டைச் சேர்த்தரைத்து வேப்பெண்ணெயில் கரைத்து அடுப்பேற்றி பதத்தில் வடித்துக்கொள்ள வேண்டும்.

**பயன் :**

காதில் துளிக்கணக்கில்விட செவிச்சூலை, செவி எழுச்சி ஆகியவை தீரும்.

## சடாமாஞ்சில் தைலம்

**தேவையான சரக்குகள் :**

| | | | |
|---|---|---|---|
| சடாமாஞ்சில் | - | 20 | கிராம் |
| கப்பு மஞ்சள் | - | 10 | கிராம் |
| ஓமம் | - | 4 | கிராம் |
| நவாச்சாரம் | - | 4 | கிராம் |
| பூங்கர்ப்பூரம் | - | 8 | கிராம் |
| எள் நெய் | - | 79 | மிலி |

**செய்முறை :**

சடாமாஞ்சில், ஓமம் இவைகளை ஒன்றிரண்டாய் இடித்து 120 மிலிட் நீர்விட்டு நாலில் ஒன்றாகச் சுருக்கி கியாழம் செய்து நவாச்சாரத்தைப் பொடித்துக் கலந்து எள் நெய்யுடன் எரித்து தைலம் வடிக்கையில் பூங்கர்ப்பூரத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**பயன்:**

சுளுக்கு, வாதவகைகள் ஆகியவற்றுக்கும் நெஞ்சு வலிக்கும் வெளிப்பூச பயன்படும்.

## கரப்பான் தைலம்

**தேவையான சரக்குகள் :**

| | |
|---|---|
| இரசம், கெந்தகம்<br>இரசகர்ப்பூரம், மிருதார்சிங்கி<br>துத்தம், துருசு<br>பூங்கர்ப்பூரம்<br>காட்டுச் சீரகம், கார்போகரிசி<br>கஸ்தூரி மஞ்சள், ஏலம்<br>நீரடிமுத்து | வகைக்கு 2 கிராம் |

தேங்காய்ப்பால் - 1200 மிலிட்

**செய்முறை :**

இரசத்தையும், கெந்தகத்தையும் ஒன்றாகச் சேர்த்தரைத்து மற்ற சரக்குகளைத் தனித்தனியாகப் பொடியாக்கிக் கலந்து தேங்காய்ப் பாலுடன் சேர்த்து அது எண்ணெயாகுமட்டும் காய்ச்சி இறக்கிக் கொள்ள வேண்டும். (இதனுடன் தேங்காய் எண்ணெய் சேர்த்துக் காய்ச்சிக் கொள்ளலாம்)

**பயன் :**

சிரங்கு, கரப்பான் போன்ற தோல் பிணிகளுக்கு மேலாட்சியாகப் பூசி வரலாம்.

# மாத்திரை

**இயல் ;**

*சில சரக்குகளைச் சேர்த்து சாறுகளிலாவது கியாழங்களிலாவது அரைத்து வேண்டிய அளவில் உருட்டி உலர்த்தி எடுத்துக் கொள்ளுவது மாத்திரை எனப்படும். மாத்திரை என்பது அளவினால் ஏற்பட்ட பெயர். வடிவத்தால் இதனைக் குளிகை, உருண்டை, (உண்டை) என்றும் வழங்குவர். இக்காலத்தில் இவை வட்டமும் தட்டையுமான வடிவத்தில், எந்திரங்களால் செய்யப் பெறுகின்றன.*

**பிரிவு ; 1**

## மூலிகைப் பொருள் மாத்திரை

**பயிற்சி : 36**

## சுவாச குடோரி மாத்திரை

**தேவையான சரக்குகள் :**

*வெள்ளெருக்கன் பூ, மிளகு*

**தேவையான கருவிகள் :**

*அரைகருவி, கரண்டி, எடைகாட்டி, தட்டு, கத்தி*

**செய்முறை :**

*வெள்ளெருக்கன் பூவின் காம்பையும், பூவின் நடுவிலுள்ள தேர் போன்ற பகுதியின் மேல் ஐங்கோணமுடைய வடிவத்தில் கடினமுடைய தாய்க் காணும் பகுதியையும் நீக்கித் தேவையான அளவு எடுத்துக் கொண்டு அதன் எடையைக் கண்டுகொள்ள வேண்டும். அதே எடை மிளகை நிறுத்தெடுத்துக்கொண்டு முதலில் மிளகை அரைகருவியிலிட்டு நன்றாய் அரைத்து சூரணித்தெடுத்துக் கொள்ள வேண்டும். பின் சுத்தி செய்தெடுத்த வெள்ளருக்கன் பூவை அரை கருவியிலிட்டு நன்கு கற்கமாக்கிக்கொண்டு அதனுடன் மிளகுப் பொடியைக் கலந்து நன்றாக அரைக்க வேண்டும். குழியம்மியிலும் குழவியிலும் கற்கம் ஒட்டாமல் தனியாகத் திரளும்வரை அரைத்தெடுத்து*

பின் அரைக் குன்றியளவுள்ளதாக உருட்டிக் குளிகைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

குளிகைகளின் எண்ணிக்கையையும் மொத்த எடையையும் கண்டுகொள்ள வேண்டும்.

மாத்திரைகள் உருட்டும்போது அவை ஒரே அளவினதாக இருக்க வேண்டும். இதை எளிதாகச் செய்ய முதலில் கற்கத்தை ஒரு சமதளத்தில் வைத்து நீண்ட குச்சிபோல் உருட்டிக் கொண்டு கத்தியால் ஒரு மாத்திரைக்கு வேண்டிய அளவான, சிறு சிறு துண்டுகளாக வெட்டிக்கொண்டு பின் அவற்றை உருட்டிக் கொள்ளலாம்.

**தேர்வு:**

| | |
|---|---|
| வெள்ளெருக்கன் பூ எடை | - கிராம் |
| மிளகு எடை | - கிராம் |
| மாத்திரைகளின் எண்ணிக்கை | - எண் |
| மொத்த எடை | - கிராம் |
| ஒரு மாத்திரையின் சராசரி எடை | - மொத்த எடை / எண் |
| | - கிராம் |

**பயன்:**

1-2. மாத்திரை வீதம் தாளிசபத்திரிக் கியாழத்தில் கொடுக்க இருமல், காசம், இரைப்பு இவை தீரும்.

பிரிவு: 32

# மூலிகை தாதுப் பொருள் மாத்திரை

## பயிற்சி : 37

## சாந்த சந்திரோதய மாத்திரை

### தேவையான சரக்குகள்:

பொரித்த வெங்காரம், சுத்தி செய்த இரசகர்ப்பூரம், கப்பு மஞ்சள், எலுமிச்சம்பழம்.

### தேவையான கருவிகள்:

அரைகருவி, கரண்டி, கத்தி, அளவைக்கலம், எடைகாட்டி, தட்டு.

### செய்முறை:

வெங்காரத்தை வறு ஓட்டிலிட்டு அடுப்பேற்றிச் சலாகையால் கிளறிவிட்டு வறுக்க அதிலுள்ள நீர்த்துவம் குறைந்து பொரியும். இப்படிச் செய்தெடுப்பதே பொரித்த வெங்காரம். வெங்காரத்தைப் பொரித்தெடுப்பதே இதன் சுத்தியுமாகும்.

இரசகர்ப்பூரத்தின் எடைக்குச் சமமாக கம்மார் வெற்றிலையும் மிளகும் எடுத்தரைத்துக் கற்கமாக்கி நீரிற் கரைத்து அக்கலவையை ஒரு கொதிகலத்தில் ஊற்றி அடுப்பேற்றி அதில் பூரத்தைக் கிழிகட்டி அமிழச் செய்து தூலாந்திரமாக எரித்தெடுத்துப் பின் நீரிற் கழுவி உலர்த்தி எடுக்க சுத்தியாகும்.

பொரித்த வெங்காரம் ஒரு பங்கு, சுத்தித்த இரசகர்ப்பூரம் இரண்டு பங்கு, கப்பு மஞ்சள் ஆறு பங்கு வீதம் நிறுத்தெடுத்து எடைகளைக் குறித்துக் கொள்ள வேண்டும். முதலில் மஞ்சளை அரைகருவியிலிட்டு நன்றாகப் பொடித்துத் தூளாக்கி அதனுடன் பூரத்தையும் பின் பொரிகாரத்தையும் கலந்தரைத்துத் தூளாக்கிக் கொள்ள வேண்டும். எலுமிச்சம்பழத்தைக் கத்தியால்

இரண்டாகப் பிளந்து விதைகளை நீக்கி விட்டுக்கையினால் பிசைந்து பிழிந்தாவது பழம்பிழி கருவியில் வையச் செய்தாவது வடியும் சாற்றை, ஒரு எடை தெரிந்துகொள்ளப்பட்ட அளவைக் கலத்தில் பெற்று எடையைக் கண்டுகொள்ள வேண்டும். பின் இச்சாற்றைச் சிறிது சிறிதாக விட்டு முன் தூளாக்கிய கலவையை நன்றாக அரைக்க வேண்டும். இவ்வாறு அரைக்கும்போது கற்கத்தின் நீர்த்துவம் குறைந்து வரும். அப்போது மேலும் சிறிது சாறுவிட்டு அரைக்க வேண்டும். இவ்வாறு பன்னிரண்டு மணிநேரம் இதனை நன்றாய் அரைக்க வேண்டும். அரைத்து முடிந்ததும் மீதமுள்ள பழச்சாற்றின் எடையைத் தெரிந்து கொள்ள வேண்டும். அரைக்கப்பட்ட கற்கத்தைக் சுரண்டி எடுத்து குன்றியளவு மாத்திரைகள் உருட்டிக்கொண்டு மாத்திரைகளைத் தட்டில் வைத்து நிழலில் உலர்த்தி எண்ணிக்கையையும் எடையையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

## தேர்வு:

பொரிகாரம் 1 (பங்கு) எடை - கிராம்

பூரம் (2 பங்கு) எடை - கிராம்

கப்பு மஞ்சள் (6பங்கு) எடை - கிராம்

சரக்குகளின் மொத்த எடை - கிராம்

எடுக்கப்பட்ட பழச்சாற்றின்
எடை - கிராம்

மீதி சாறு எடை - கிராம்

மீதமுள்ள சாறு எடை= மொத்த சாறு
- பயன்பட்ட சாறு

= கிராம்

மாத்திரைகளின் எண்ணிக்கை - எண்

ஃஒரு மாத்திரையின் சராசரி எடை - $\frac{\text{மொத்த எடை}}{\text{எண்}}$

- கிராம்

**பயன்:**

*1-2, மாத்திரை வீதம் தேன் அல்லது வெற்றிலைச் சாறு கூட்டிக்கொடுக்க அழல் சுரம் , மலக்கட்டு, கல்லீரல் பிணிகள் முதலியன தீரும்.*

## முறை: 3

# கயிறுமாத்திரைகள் செய்தல்

*கண்ணோய்களுக்கு இழைத்துப் போடும் மருந்துகளை மாத்திரைகளாகச் செய்யும்போது அவைகளை நீண்ட உருண்டையான குச்சிகளைப்போல உருட்டி உலர்த்திக் கொள்ளுவது வழக்கு. இவ்வகையான மாத்திரைகளைக் கயிறு அல்லது வர்த்தி என்பர்.*

## பயிற்சி: 38

# கண் காசமாத்திரை

### தேவையான சரக்குகள்:

*இந்துப்பு, திப்பிலி, பீதரோகிணி, நந்திப்பூ*

### தேவையான கருவிகள்:

*அரைகருவி, கரண்டி, எடைகாட்டி, அளவைக்கலம், கலம், துணி, தட்டு.*

### செய்முறை:

*இந்துப்பு, திப்பிலி, பீதரோகிணி இம்மூன்றும் சம எடைகளில் எடுத்து அவைகளின் எடைகளைக் குறித்துக் கொண்டபின் வேண்டியமட்டும் நந்தியாவட்டைப் பூ கழுவப்பட்ட ஒரு குழிக் கல்லிலிட்டு அரைத்துக் கற்கமாக்கி ஒரு துணியில் வைத்துப் பிழிந்து, சாற்றை ஒரு எடை தெரிந்து கொள்ளப்பட்ட கலத்தில் பெற்றுக் கொண்டு அச்சாற்றின் எடையைக் கண்டுகொள்ளவும். திப்பிலியையும் பீதரோகிணியையும் முதலில் அரைத்து நன்றாகத் தூளாக்கிக் கொண்டு இந்துப்பையும் சேர்த்தரைத்துக் கொள்ளவேண்டும். சரக்குகள் நன்றாகப் பொடியானதும் நந்திப் பூச்சாற்றைச் சிறிது சிறிதாக விட்டு*

அரைக்க வேண்டும். கலவை நன்கு அரைபட்டு கல்லில் ஒட்டாது புரளும் பக்குவமடைந்ததும் மீதமுள்ள சாற்றின் எடையைக் கண்டு கொள்ள வேண்டும். கற்கத்தைச் சமதளத்தில் வைத்து ஏறக்குறைய ஐம்பது செமீ. நீளமும் முக்கால் செமீ. விட்டமும் உள்ள குச்சிகளாக உருட்டிக் கொண்டு ஒரு தட்டில் வைத்து நிழலில் உலர்த்திக் கொண்டு அவைகளின் மொத்த எடையைக்கண்டுகொள்ள வேண்டும்.

**தேர்வு:**

இந்துப்பின் எடை - கிராம்

திப்பிலியின் எடை - கிராம்

பீதரோகிணியின் எடை - கிராம்

எடுக்கப்பட்ட நந்திப் பூச்சாற்றின் எடை - கிராம்

மீதமுள்ள நந்திப் பூச்சாற்றின் எடை - கிராம்

ஃபயன்பட்டபூச்சாறு = மொத்த சாறு - மீதமுள்ள சாறு

கயிற்றின் அளவு (ஏறக்குறைய)

விட்டம் - செமீ

நீளம் - செமீ

எடை - கிராம்

**பயன்:**

நந்திப் பூச்சாற்றினை இழைத்து கண்ணில் தீட்ட இருள் நீங்கி ஒளியுண்டாகும். வெளியாட்சிக்கு மட்டும் கண்ணோய்களில் பயன்படும்.

# பாலசஞ்சீவி மாத்திரை

சுக்கு, மிளகு, திப்பிலி, வெங்காரம், இலிங்கம் ஆகிய ஐந்து சரக்குகளையும் சுத்தி செய்து சம எடைகளில் எடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் மூன்று மணிநேரம் அரைத்து, பயிற்றில் பாதியளவாக உருட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும்.

பயன்:

1-2. மாத்திரை வீதம் தக்க துணை மருந்துகளில் கொடுக்க குழந்தைகளின் கழிச்சலுடன் கூடிய சுரம், மாந்த கணசுரம், காசம், இரைப்பு முதலிய பிணிகள் தீரும்.

## வசந்த குசுமாகர மாத்திரை

இலிங்கம், பொரிகாரம், கிராம்பு, திப்பிலி, கோட்டம், அக்கராகாரம், அதிமதுரம், ஆகிய ஏழும் வகைக்கு ஐந்து பங்கு, கோரோசனம், குங்குமப்பூ, பச்சைக் கர்ப்பூரம் ஆகிய மூன்றும் வகைக்கு இரண்டு பங்குவீதம் எடுத்து கல்வத்திலிட்டு இஞ்சிச்சாற்றிலும் தாய்ப்பாலிலும் நான்குநாள் அரைத்துப் பயிறளவு மாத்திரையாக உருட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும்.

பயன்:

1-2 மாத்திரை வீதம் தேனில் கூட்டிக்கொடுக்க சுரம், தும்மல், ஏப்பம் இவை தீரும்.

## நீர்க்கோவை மாத்திரை

கப்பு மஞ்சள், கஸ்தூரி மஞ்சள் இரண்டும் வகைக்கு நாலு பங்கு, வெங்காரம், சாம்பிராணி, மிளகு, சுக்கு, சாதிக்காய் ஐந்தும் வகைக்கு இரண்டு பங்கு ஓமம், கிராம்பு, கர்ப்பூரம் மூன்றும் வகைக்கு 1 பங்கு நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் ஆறுமணிநேரம் அரைத்துப் பத்து குன்றியளவு உருண்டைகளாக உருட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும்.

பயன்:

மண்டைச்சூலை, தடுமன் இவைகட்கு இம்மாத்திரை ஒன்றைத் தாய்ப்பாலிலாவது பசும்பாலிலாவது இழைத்து நெற்றியில் பற்றிட குணமுண்டாகும். பின்னர் சாம்பிராணி புகை பிடிப்பது மிகவும் நல்லது.

# முருக்கன்வித்து மாத்திரை

முருக்கன்வித்து, சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கடுகுரோகிணி ஆகியவை வகைக்கு 1 பங்கு; சுத்தித்த நேர்வாளம் 6 பங்கு எடுத்து முதல் ஆறினையும் பொடியாக்கி கடைசியில் நேர்வாளம் சேர்த்து தேவையானால் நீர் சிறிது சேர்த்து அரைத்து மிளகின் அளவாய் மாத்திரை உருட்டிக் கொள்ள வேண்டும்.

**பயன்:**

வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் கொடுக்க குடற்கிருமிகள் பேதியில் வெளியாகும்.

# அஷ்டபைரவ மாத்திரை

**தேவையான சரக்குகள்**

| | |
|---|---|
| இரசம், இலிங்கம், வீரம், பூரம், கெந்தி, சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கம், சாதிக்காய், சாதிபத்திரி, கருநாபி | வகைக்கு 1 பங்கு |
| நேர்வாளம் | - 5 பங்கு |

**செய்முறை :**

சரக்குகளைத் தூய்மை செய்து எடுத்து ஒன்றன் பின் ஒன்றாக அரைத்து பழச்சாறு, தாய்ப்பால், பொடுதலைச்சாறு, கரிசாலைச்சாறு, நாவற்பட்டைச்சாறு ஆகிய ஒவ்வொரு சாற்றாலும் வரிசையாக மூன்று மணிநேரம் அரைத்து மிளகு அளவான மாத்திரை உருட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும்.

**பயன் :**

சுரத்துக்கு தாய்ப்பாலிலும், தோடங்களுக்கு தேனிலும், விடங்களுக்கு இலவங்கக் கியாழத்திலும் கொடுக்கலாம்.

## இலிங்கபூபதி

### தேவையான சரக்குகள்

இலிங்கம், இரசசெந்தூரம், இரசகர்ப்பூரம், இலவங்கம், ஓமம், காவிக்கல் வகைக்குச் சம அளவு

### செய்முறை :

சுத்தித்த சரக்குகளை ஒவ்வொன்றாய் பொடித்துக் கலந்தரைத்து நீர்விட்டு ஒருநாள் அரைத்து பயிறளவு மாத்திரை உருட்டிக் கொள்ள வேண்டும்.

### பயன் :

தேன், இஞ்சிச் சாறு, தாய்ப்பால இவைகளில் ஏதாவதொன்றில் கொடுக்க சுரங்கள், குடற்புண் ஆகியவை தீரும்.

## கஸ்தூரி மாத்திரை

### தேவையான சரக்குகள் :

| | | |
|---|---|---|
| கஸ்தூரி | - | 1 பங்கு |
| குங்குமப்பூ | - | 2 பங்கு |
| கோரோசனை | - | 3 பங்கு |

### செய்முறை :

சுத்தமான கல்வத்திலிட்டு தாய்ப்பாலால் (அல்லது துளசிச் சாற்றால்) அரைத்து பயிறளவு மாத்திரை உருட்டிக் கொள்ள வேண்டும்.

### பயன் :

தாய்ப்பால் அல்லது வெற்றிலைச்சாற்றை அனுபானமாய்க் கொண்டு கொடுக்க முப்பிணி, பித்தசீதளம் தீரும். இதய வாயுவுக்கு தேனில் கொடுக்கலாம்.

## கோரோசனை மாத்திரை

**தேவையான சரக்குகள் :**

கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கர்ப்பூரம், பூங்கர்ப்பூரம் ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிகோஷ்டம் அக்கராகாரம், இரச செந்தூரம், அப்பிரகபற்பம் - வகைக்குச் சம எடை

**செய்முறை :**

சரக்குகளைச் சந்தன கியாழத்தில் ஒருநாளும் குங்குமப்பூக் கியாழத்தில் (அல்லது செண்பகப்பூக் கியாழத்தில்) ஒருநாளும் அரைத்து பயிறளவு மாத்திரை உருட்டிக் கொள்ள வேண்டும்.

**பயன் :**

தாய்ப்பாலில் கொடுக்க வாயு, ஐயசுரம், முப்பிணி, தலைச்சூலை ஆகியவை தீரும். குழந்தைகளின் மாந்த, சன்னிகளுக்கு அண்டத்தைலத்தில் அனுபானித்துக் கொடுக்கலாம்.

## பிரம்மானந்த பயிரவம்

**தேவையான சரக்குகள் :**

கெந்தி, மனோசிலை, தாளகம், வெங்காரம், இலிங்கம், நாபி, சுக்கு வகைக்குச் சம எடை.

**செய்முறை :**

தூய்மை செய்த சரக்குகளைப் பொடித்து இஞ்சிச் சாற்றால் மூன்று நாள் அரைத்து மிளகளவு மாத்திரைகளாக உருட்டிக் கொள்ள வேண்டும்.

**பயன் :**

தேனும் இஞ்சிச் சாறும் கூட்டி அதில் மாத்திரையை இழைத்துக் கொடுக்க சுரம், சன்னி தீரும்.

# பச்சைக் கர்ப்பூர மாத்திரை

## தேவையான சரக்குகள்

*பச்சைக் கர்ப்பூரம், கெந்தகம், இரசப்பதங்கம், இலவங்கம், சாதிக்காய், நேர்வாளம் ஒவ்வொன்றும் சம எடை.*

## செய்முறை :

*சுத்தி செய்யப்பட்ட சரக்குகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு கற்றாழைச் சாறுவிட்டு நன்றாக அரைத்து உளுந்தளவு மாத்திரை உருட்டிக் கொள்ள வேண்டும்.*

## பயன் :

*1- 2 மாத்திரை தேனில் கொடுக்க சுரங்கள், வாதப்பிணிகள், பித்தப் பிணிகள், கபப்பிணிகள் தீரும்.*

# மேகநாத மாத்திரை

## தேவையான சரக்குகள் :

| | |
|---|---|
| *இலிங்கம், இந்துப்பு, வெங்காரம், சுக்கு, வசம்பு, சிவதைவேர், காட்டாமணக்கு வேர்ப்பட்டை, ஓமம், வாய்விடங்கம் பெருங்காயம்,* | *வகைக்கு 1 பங்கு* |

*நேர்வாளம் - 10 பங்கு*

## செய்முறை :

*சுத்தி செய்த சரக்குகளை எடைப்படி எடுத்து பொடிசெய்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் நன்றாக அரைத்து மிளகளவு மாத்திரைகளாக உருட்டிக் கொள்ள வேண்டும்.*

## பயன் :

*1-2 மாத்திரை சுக்குக் கியாழத்திலாவது இஞ்சிச் சாற்றிலாவது கொடுக்க மலக்கட்டுடன் கூடிய சுரம், குடற்கிருமி, குன்மத்தில் காணும் மலக்கட்டு, பாண்டு, சோபை ஆகிய பிணிகள் தீரும்.*

# கடுகு

## இயல்

மருந்துச் சரக்குகளை எண்ணெய் போன்ற நெய்ப் பொருட்களுடன் சேர்த்துக் காய்ச்சி அச்சரக்குகள் திரண்டு வரும்போது எடுத்துக் கொள்ளுவது கடுகு எனப்படுகிறது. இவ்வாறு பெறப்படும் கடுகை உள்ளுக்கு உண்ணச் செய்து தைலத்தை வெளியாட்சிக்கும் பயன்படுத்தலாம். எண்ணெயுடன் கலந்த கற்கப் பொருட்கள் வெந்து திரண்டு கடுகு பதமாக வரும்போது அதில் சேர்க்கப்படும் நெய் அளவில் குறைவாக இருக்கும்.

# பக்குவம்

## இயல் :

மருந்துச் சரக்குகளைப் பயன்படுத்தத் தக்கவாறு செய்தெடுத்துக் கொள்ளுவது பக்குவம் எனப்படும்.

கடுக்காய் போன்ற பொருட்களை பச்சரிசி கழுவிய நீரிலாவது தண்ணீரிலாவது ஊறவிட்டு அது மென்மையானபின் மோர், பழச்சாறு, இஞ்சிச்சாறு முதலியவற்றில் மருந்துச் சரக்குகளின் பொடியைக் கூட்டி அதில் போட்டுப் பக்குவம் செய்து கொள்ளலாம். எலுமிச்சங்காய் போன்றவற்றை இந்துப்பு முதலியன சேர்த்து வேகவைத்துப் பக்குவம் செய்யலாம்.

# தேனூறல்

## இயல்

மருந்து சரக்குகளைத் தூய்மை செய்தெடுத்து நறுக்கித் துண்டுகளாக்கியாவது மலர் போன்ற சரக்குகளின் இதழ்களைத் தனியாக எடுத்தாவது தேன் அல்லது சர்க்கரைப் பாலில் போட்டு ஊறவைத்து எடுத்துக் கொள்ளுவது தேனூறல் எனப்படும்.

பயிற்சி 30

# இஞ்சித் தேனூறல்

## தேவையான சரக்குகள்:

இஞ்சி, தேன்.

## தேவையான கருவிகள்:

கத்தி, மூடியுள்ள ஆடிக்கலம், எடைகாட்டி, நீண்ட ஊசி.

## செய்முறை:

தேனூறல் செய்வதற்கு வேண்டிய அளவு இஞ்சி எடுத்து கத்தியால் அதன் புறணியைப் போக்கிவிட்டு சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ள வேண்டும். பின் ஆடிக்கலத்தை எடைகாட்டியிலிட்டு அதன் எடையைக் கண்டுகொண்டு அதில் நறுக்கப்பட்ட இஞ்சித் துண்டுகளைப் போட்டு எடையைத் தெரிந்து கொள்ள வேண்டும். பின் கலத்திலுள்ள இஞ்சித் துண்டுகள் முழுகும் அளவுக்கு அதில் தேனைவிட்டு எடைதெரிந்து கொண்டபின் நீண்ட ஊசியால் இஞ்சித் துண்டுகளைக் குத்த வேண்டும். இவ்வாறு செய்வதால் தேன், இஞ்சித் துண்டுகளின் உள்ளேயும் பரவும். பின் ஆடிக் கலத்தை மூடியால் மூடி அப்படியே வைத்துவிட வேண்டும்.

சில நாட்களுக்கொருமுறை ஊசியால் முன்போல குத்திவிடலாம். சில நாட்கள் கழிந்ததும் இது பயன்படக்கூடிய பக்குவமடையும். இதுவே இஞ்சித் தேனூறல்.

## தேர்வு

ஆடிக்கலத்தின் எடை - .. கிராம்

ஆடிக்கலம் + இஞ்சி எடை - .. கிராம்

ஆடிக்கலம் + இஞ்சி - தேன் எடை - .. கிராம்

இஞ்சியின் எடை = (ஆடிக்கலம் + இஞ்சி)

ஆடிக்கல எடை = கிராம்

தேனின் எடை = (ஆடிக்கலம் - இஞ்சி) - கிராம்

தேனூறலின் எடை

(ஆடிக்கலம் + இஞ்சி + தேன்)

ஆடிக்கல எடை = கிராம்.

**பயன் :**

தேனூறலின் ஒன்றிரண்டு துண்டுகள் அல்லது 2-3 கிராம் வீதம் உண்ண, உணவில் வெறுப்பு, செரியாமை, மந்தம் முதலிய அன்ன கோசப்பிணிகள் தீரும். கற்ப விதிப்படி முறையாக உண்டுவர நன்மையுண்டாம்.

**குறிப்பு :**

இவ்விதமே பன்னீர்ப் பூவிதழ்களையும் தேனூறல் செய்து கொள்ளலாம். இது வழக்கில் குல்குந்து என்று கூறப்படுகிறது.

**இயல் :**

சரக்கு வகைகளுடன் நீர் சேர்த்து ஊற வைத்தாவது, உப்பு வகைகளையாவது, வாலை எந்திரத்திலிட்டு எரித்து ஆவியாக்கிப் பின் குளிரச் செய்து வடித்தெடுத்துக் கொள்ளுவதை தீநீர் அல்லது புகைநீர் என்று கூறுவர்.

தீநீர் செய்முறையில் பயன்படும் கருவி வாலை எனப்படுகிறது. இது உலோகப் பொருளாலோ மண்ணாலோ ஆக்கப்பட்டதாய் இருக்கும். இக்கருவியின் கீழே ஒரு கொதிகலம் உண்டு. இதன் வாய் சற்று நீண்டு மேற்பங்கு குவிவாய் உள்ள மூடியால் மூடப்பட்டிருக்கும். இம்மூடியின் உள்விளிம்பில் கால்வாய் உண்டு. கொதிகலத்தினுள் சரக்குகளைப் போட்டு மூடியால் மூடி பொருத்துவாயில் ஈரத் துணியால் சுற்றிவிட்டுக் கருவியை அடுப்பேற்றி எரிக்க வேண்டும். கொதி நிலை வந்ததும் கலத்திலுள்ள பொருள் ஆவியாகி மூடிக்குச் செல்லும். மூடியில் குவிந்த மேற்புறத்தில் குளிருண்டாகும்படி நீரை ஊற்றியாவது தண்ணீர் நனைத்த துணியைப் போட்டாவது வைக்க உட்புறத்தில் அவ்வாவி குளிர்ந்து தீநீராகி மூடியின் உள்விளிம்பிலுள்ள கால்வாய் போன்ற பகுதிக்கு வந்து சேரும். துளைவழியாய் அதை வெளியேற்றிப் பெற்றுக் கொள்ளலாம். மூடியின் மேல் அடிக்கடி புதிய தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

# ஓமத்தீநீர்

தேவையான அளவு ஓமம் எடுத்து அதைத் தூசு போக்கி சுத்தமாக்கி நிறுத்தெடுத்து வாலையின் கொதிகலத்தில் போட்டுக் கொண்டு, ஓமத்தின் எடைக்கு நான்கு பங்கு நீர் எடுத்து ஊற்றிக் கொள்ள வேண்டும். இதை அப்படியே ஊறவைத்து ஒன்றிரண்டு நாட்கழித்து அடுப்பேற்றித் தீநீர் முறைப்படி எரிக்க தீநீர் இறங்கும்.

தண்ணீரின் பாதியளவு வரை தீநீர் பெற்றுக் கொள்ளலாம். தீநீரின் மேல் கறுப்பாக நெய் மிதக்கும். இது ஓம நெய். தேவையானால் இதனைத் தனியாகச் சேகரித்து எடுத்துக் கொள்ளலாம்.

**பயன் :**

இத்தீநீரில் 10-30 மி.லிட் வரை தனியாகவோ நீர் கலந்தோ கொடுக்க செரியாமை, கழிச்சல், வாந்தி முதலிய நோய்கள் தீரும். இதேபோல் சோம்புத் தீநீரும் பெறலாம்.

# சோம்புத் தீநீர்

சோம்பு ஒன்றுக்கு 10 பங்கு நீர் சேர்த்து முன்போலவே தீநீர் பெற்றுக் கொள்ளலாம்.

**பயன்**

10-30 மி.லிட். கொடுத்துவர வயிற்றுவலி, நீரெரிச்சல், காய்ச்சல் தீரும்.

# சங்கத் திராவகம்

| | | |
|---|---|---|
| வெடியுப்பு | .. | 12 பங்கு |
| இந்துப்பு | .. | 8 பங்கு |
| சோற்றுப்பு | .. | 4 பங்கு |
| நவாச்சாரம் | .. | 10 பங்கு |
| அன்னபேதி | .. | 1 பங்கு |
| துருசு | .. | 1 பங்கு |
| படிகாரம் | .. | 2 பங்கு |

பூநீறு .. 3 பங்கு
பொரிகாரம் .. 4 பங்கு

இச்சரக்குகளை மண்ணாலான வாலையிலிட்டு தீநீர் முறைப்படி எரிக்கத் திராவகம் இறங்கும்.

**பயன் :**

1-2 துளி திராவகத்தை 30-60 மிலிட் நீரிற் கலந்து கொடுக்க வாயு குன்மம், மேகம் முதலான பிணிகள் தீரும். உலோக தாது உபரசப் பொருட்களை இதனால் அரைத்துப் புடமிட தீரும்.

## சாராயம்

(போகர் ஏழாயிரம் என்ற நூலின் நான்காவது காண்டத்தில் கூறப்பட்டுள்ள முறை)

வெள்வேலன்பட்டை, நெல்லி வேர், பனை வேர், மாதுளை வேர், கஞ்சாவேர், நன்னாரிவேர், ஆவாரைவேர், கிச்சலிவேர் ஆகிய சரக்குகளை ஒரே எடையாய் நிறுத்தெடுத்து ஒரு பாண்டத்திலிட்டு அதில் நீர் விட்டு வைத்துப் பத்து நாள் ஊறவிட்டு எடுத்து இதனுடன் பனை வெல்லம் சேர்த்து அடுப்பேற்றித் தீநீர் முறைப்படி எரித்தெடுக்கச் சாராயம் கிடைக்கும்.

**பயன் :**

சாராயம், சில சரக்குகளைச் சுத்தி செய்யவும் பக்குவம் செய்யவும் பயன்படும். அறுவை முதலிய அசுர மருத்துவம் செய்யும் காலத்து சாராயத்தைத் தக்க அளவில் பிணியாளிக்கு கொடுப்பதுண்டு. வலிமிக்க நோய்களிலும், கருவிகரணாதிகள் மந்த நிலையிலும் இது மெத்தவும் பயன்படும். இதன்றிக் கீறல், குடோரியூன்றல் முதலிய கருவிகளாடலைச் செய்யுமுன் அவ்விடத்தைச் சாராயத்தால் துடைத்துத் தூய்மை செய்து கொள்ளலாம்.

# மெழுகு

**இயல்:**

*இரசக் கலப்புள்ள சரக்குகள், உப்புகள் முதலியவற்றைத் தனியாகவோ தேனிலோ நெய்ப்புப் பொருட்களிலோ அரைத்து எடுத்துக் கொள்வதும், சரக்குகளைச் சாறுகளிலாவது எண்ணெயிலாவது சுருக்குக் கொடுத்து அரைத்து எடுத்துக் கொள்வதும் மெழுகு எனப்படும்.*

**முறை : 1**

## சாற்றில் அரைத்தெடுத்தல்

*சரக்குகளைக் கூறப்பட்ட சாறுகளில் அரைத்து மெழுகு பதமாய் வரும்போது எடுத்துக் கொள்ளுவதைச் சாற்றில் அரைத்து எடுத்தல் என்பர்.*

**பயிற்சி : 40**

## கெந்தக மெழுகு

**தேவையான சரக்குகள்:**

*கெந்தகம், வெள்ளை வெங்காயம், இஞ்சி, நீர்,*

**தேவையான கருவிகள்:**

*அரைகருவி, கரண்டி, இடிகருவி, வடிகட்டி, எடைகாட்டி, கலங்கள், வாயகன்ற ஆடிக்கலம்.*

**செய்முறை:**

*கெந்தகத்தைச் சுத்தி செய்ய ஒரு வாயகன்ற மண் கலத்தில் தயிர்விட்டு அதில் மருதோன்றி இலையின் கற்கத்தைக் கரைத்து கலத்தின் வாயில் வேடுகட்டி அதில் கெந்தகத்தைப் பரப்பி மேலே ஒரு கலத்தால் வாய் பொருந்தும்படி மூடிச் சீலைசெய்து பூமியில் ஒரு குழி தோண்டி கீழ்க்கலம் மண்ணுள் இருக்கும்படியும் மூடி மேலே தெரியும் படியும் வைத்து சில வரட்டிகளை அதன்மேலே அடுக்கித் தீயிட, கெந்தகம் சூட்டில் உருகி வேட்டுத் துணியின்*

இடைவழியாய் மருதோன்றி இலைக் கற்கத் தயிர்க் கலவையுள் சேரும். புடம் ஆறியபின் கெந்தகத்தைத் தக்கவாறு ஏழு முதல் இருபத்தொருமுறை செய்யக் கெந்தகம் தூய்மையாகும்.

சுத்தித்த கெந்தகம் தேவையான அளவு நிறுத்தெடுத்து கல்வத்தில் போட்டுக் கொண்டு வெள்ளை வெங்காயத்தை இடித்துப் பிழிந்து கெந்தக எடைக்கு இரண்டு பங்கு சாறு பெற்று வடிகட்டிக்கொண்டு அதைச் சிறிது சிறிதாக விட்டு அரைக்க வேண்டும். சாறு முற்றும் தீர்ந்ததும் இஞ்சியை மேற்றோல் சீவி 'இடித்துப் பிழிதல்' முறைப்படி கெந்தக எடைக்கு இரண்டுபங்கு சாறு பெற்று வடிகட்டிக் கொண்டு, இச்சாற்றால் அரைக்கவேண்டும். சாறு முழுவதும், ஒரு எடை தெரிந்து கொள்ளப்பட்ட வாயகன்ற ஆடிக்கலத்தில் போட்டு எடையைக் கணித்துக் கொள்ள வேண்டும்.

## குறிப்பு :

ஒவ்வொரு சாற்றாலும் ஐந்து நாட்கள் அரைக்க வேண்டும் என நூற்களில் கூறப்பட்டுள்ளன. எனினும் பயிற்சியின்போது ஒருநாள் வெள்ளை வெங்காயச் சாற்றிலும் மறு பயிற்சியின்போது இஞ்சிச் சாற்றிலும் அரைத்தெடுத்துக் கொள்ளலாம்.

## தேர்வு:

சுத்தித்த கெந்தகத்தின் எடை - கிராம்

வெள்ளை வெங்காயச் சாற்றின் எடை - கிராம்

இஞ்சிச் சாற்றின் எடை - கிராம்

ஆடிக்கலத்தின் எடை - கிராம்

ஆடிக்கலம் + கெந்தக மெழுகு எடை = கிராம்

கெந்தக மெழுகின் எடை = (ஆடிக்கலம் + மெழுகு எடை)

ஆடிக்கல எடை = கிராம்.

**பயன் :**

2-6. நெல்லெடை வீதம் கொடுத்து வர வெகுமூத்திரம், சொறி, சிரங்கு, முதலிய தோற்பிணிகள், குட்டம் இவை தீரும். இம்மருந்துண்ணும் காலத்து புளிப்புப் பொருள் நீக்க வேண்டும்.

## முறை : 2

# வெண்ணெயில் அரைத்தெடுத்தல்

சரக்குகளை வெண்ணெய் சேர்த்து அரைத்து மெழுகாக்கி எடுப்பது 'வெண்ணெயில் அரைத்தெடுத்தல்' எனக் கூறப்படுகிறது.

**பயிற்சி:41**

# மிளகு மெழுகு

## தேவையான சரக்குகள்:

மிளகு, வெண்ணெய்.

## தேவையான கருவிகள்:

அரைகருவி, கரண்டி, எடைகாட்டி, தட்டு.

## செய்முறை:

வேண்டிய அளவு நல்ல மிளகை தும்பு, தூசு நீக்கி எடுத்து அதை நிறுத்து எடையைத் தெரிந்துகொண்டபின் அரைகருவியிலிட்டு நன்றாக அரைத்து மாவாக்கிக் கொள்ளவேண்டும். பின் ஒரு தட்டின் எடையைத் தெரிந்துகொண்டு அதில் எண்ணெய் வைத்து மிளகின் எடைக்குப் பாதியளவு நிறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வெண்ணெயை மிளகுத் தூளுடன் கலந்து நன்றாக அரைத்து எடுக்க மிளகு மெழுகாம். இதைக் கரண்டியால் வழித்து எடை தெரிந்து கொள்ளப்பட்ட தட்டில் வைத்து நிறுத்து எடையைக் கணித்துக் கொள்ள வேண்டும்,

**தேர்வு:**

மிளகின் எடை - கிராம்

வெண்ணெயின் எடை - கிராம்

தட்டின் எடை - கிராம்

தட்டு + மிளகு மெழுகு எடை - கிராம்

மிளகு மெழுகின் எடை = தட்டு + மிளகு மெழுகு எடை - தட்டின் எடை = கிராம்

**பயன் :**

படை முதலிய தோற்பிணிகளுக்கு வெளியாட்சியாகப் பூசப் பயன்படும்.

## முறை : 3

# சுருக்கிட்டு அரைத்து எடுத்தல்

இரசச் சரக்குகளையாவது பிற சரக்குகளையாவது சில சாறுகள் அல்லது எண்ணெய் போன்ற நெய்ப்புப் பொருட்கள் இவற்றில் சுருக்குக் கொடுத்து அரைத்து மெழுகு பதம் அடையும்போது எடுத்துக் கொள்ளுவது 'சுருக்கிட்டு அரைத்தெடுத்தல்' எனக் கூறப்படுகிறது.

**பயிற்சி 42**

## கிளிஞ்சில் மெழுகு

### தேவையான சரக்குகள்

கிளிஞ்சில், நெல்லிக்காய், ஆமணக்கு நெய், கரி, தீ.

### தேவையான கருவிகள்

இடிகருவி, வடிகட்டி, அரைகருவி, கரண்டி, அளவைக்கலம், எடைகாட்டி, தட்டு, கலம், இடுக்கி, விசிறி.

### செய்முறை

நெல்லிக்காய் வேண்டிய அளவு எடுத்து அதை 'இடித்துப் பிழிதல்' முறைப்படி சாறு பிழிந்து வடிகட்டி, சாற்றின் அளவைக் கண்டு கொண்டு இச்சாற்றை ஒரு கலத்தில் விட்டு

வைத்துக்கொள்ள வேண்டும். பின் கரியை ஓரிடத்தில் அல்லது கும்மட்டி அடுப்பில் கொட்டி அதில் தீயிட்டு விசிறியால் விசிறித் தணலாக்கிக் கொள்ள வேண்டும். கிளிஞ்சல்களின் எடையைக் கண்டு கொண்டபின் அவற்றை எண்ணித் தணலில் போட்டு மேலும் கொஞ்சம் கரியால் மூடி விசிற வேண்டும். சிறிது நேரம் அனலில் காய்ந்ததும் ஒவ்வொரு கிளிஞ்சலாக இடுக்கியால் பற்றி எடுத்து நெல்லிக்காய்ச் சாற்றில் முக்கித் தட்டில் வைத்துக் கொள்ள வேண்டும். எல்லாக் கிளிஞ்சல்களுக்கும் இவ்வாறு சுருக்குக் கொடுக்கப்பட்டபின் மீண்டும் அவற்றைத் தணலில் போட்டெடுத்து சுருக்குக் கொடுக்க வேண்டும். சாறு குறைந்துவிட்டால் மேலும் கொஞ்சம் சாறு பெற்று அளந்து முன்சாற்றுடன் கூட்டிக் கொள்ளலாம். இவ்வாறு மூன்று முறை சுருக்கிட்டு எடுத்து மீதியான சாற்றை அளந்து கொள்ள வேண்டும். பின் கிளிஞ்சல்களை அரைகருவியில் வைத்து நன்றாக அரைத்து ஒரு அளவைக் கலத்தில் ஆமணக்கு நெய் அளந்தெடுத்து அதில் சிறிது சிறிதாக விட்டு அரைக்க வேண்டும். கலவை மெழுகு பதமடைந்ததும் ஆமணக்கு நெய் விடுவதை நிறுத்திவிட்டு மீதமுள்ள நெய்யின் அளவைத் தெரிந்து கொள்ள வேண்டும். கலவையை நன்றாய் அரைத்துச் சுரண்டி வழித்தெடுத்து, ஒரு எடை தெரிந்து கொள்ளப்பட்ட தட்டில் வைத்து எடையைக் கணித்துக் கொள்ள வேண்டும். இதுவே கிளிஞ்சல் மெழுகு எனப்படும்.

## தேர்வு :

கிளிஞ்சல்களின் எடை - .. கிராம்

எண்ணிக்கை - .. எண்

பெறப்பட்ட நெல்லிக்காய் சாற்றின் அளவு - .. மிலிட்

மீதமுள்ள சாற்றின் அளவு = .. மிலிட்

ஃ பயன்பட்ட சாற்றின் அளவு = பெறப்பட்ட சாற்றின் அளவு - மீதமுள்ள சாற்றின் அளவு = மிலிட்.

எடுக்கப்பட்ட ஆமணக்கு நெய்யின் அளவு - மிலிட்

மீதமுள்ள ஆமணக்கு நெய்யின் அளவு .. மிலிட்

∴பயன்பட்ட ஆமணக்கு நெய்யின் அளவு =

எடுக்கப்பட்ட ஆமணக்கு நெய்யின் அளவு

- மீதமுள்ள ஆமணக்கு நெய்யின் அளவு = மிலிட்

தட்டின் எடை - .. கிராம்

தட்டு + கிளிஞ்சல் மெழுகின் எடை = .. கிராம்

∴ கிளிஞ்சல் மெழுகின் எடை = தட்டு + கிளிஞ்சல் மெழுகு எடை - தட்டின் எடை = கிராம்

**பயன் :**

பாதத்தில் ஏற்படுகின்ற பித்த வெடிப்பிற்கு இதை வெளியாட்சியாகப் பூசி வர நன்மையுண்டாகும்.

**முறை : 4**

## வெல்லம், தேன் சேர்த்தரைத்து எடுத்தல்

சரக்குகளைத் தூய்மை செய்து அவற்றை அரைத்து அவற்றுடன் தேன், பனைவெல்லம் சேர்த்து மெழுகுபதமாக வரும்போது எடுத்துக் கொள்ளுவது 'வெல்லம், தேன் சேர்த்தரைத்து எடுத்தல்' எனக் கூறப்படுகிறது.

**பயிற்சி 43**

# சூன்மகுடோரி மெழுகு

## தேவையான சரக்குகள் :

| | |
|---|---|
| இந்துப்பு, கல்லுப்பு, சோற்றுப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, பூநீறு, வெங்காரம், நவாச்சாரம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கிராம்பு, கோட்டம், மோடி, பெருங்காயம் | இவை வகைக்கு ஒரு பங்கு |
| பூண்டு, தேன், பனைவெல்லம் | இவை வகைக்கு ஐந்து பங்கு. |

## தேவையான கருவிகள் :

அரைகருவி, கரண்டி, எடைகாட்டி, இடிகருவி, கலம், தட்டு, சல்லடை.

## செய்முறை :

உப்புச் சரக்குகளை அதனுக்குரிய தூய்மை முறைப்படி சுத்தி செய்து அளவுப்படி எடுத்துக் கொள்ள வேண்டும். மிளகு திப்பிலி போன்ற சரக்குகளைத் தூசு துரும்பு நீக்கி அளவுப்படி எடுத்துக் கொள்ள வேண்டும். பூண்டை உரித்து அரிசியாக்கிக் கொள்ள வேண்டும். மற்ற சரக்குகளை அளவுப்படி நிறுத்து எடுத்துக் கொண்டு பூண்டு, தேன், பனைவெல்லம் நீங்கலாக மற்ற சரக்குகளைச் சூரணமாக்கிக் கொள்ள வேண்டும். பின் பூண்டரிசியைக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துச் சூரணத்தைச் சிறிது சிறிதாகக் கலந்து அரைக்க வேண்டும். சூரணம் யாவும் கலந்து நன்றாக அரைக்கப்பட்ட பின் பனை வெல்லத்தைச் சிறிது சிறிதாகப் போட்டு அரைத்துக் கடைசியில் தேனை விட்டு அரைத்து மெழுகு பதத்தில் கரண்டி எடுத்து ஒரு தட்டை எடை கண்டு அதில் வைத்து எடையைக் கணித்துக் கொள்ள வேண்டும்.

**தேர்வு :**

**சரக்குகள் ஒவ்வொன்றின் எடை**

| | | |
|---|---|---|
| இந்துப்பு | - | .. கிராம் |
| கல்லுப்பு | - | .. கிராம் |
| சோற்றுப்பு | - | .. கிராம் |
| வளையலுப்பு | - | ... கிராம் |
| வெடியுப்பு | - | .. கிராம் |
| பூநீறு | - | .. கிராம் |
| வெங்காரம் | - | .. கிராம் |
| நவச்சாரம் | - | .. கிராம் |
| சுக்கு | - | .. கிராம் |
| மிளகு | - | .. கிராம் |
| திப்பிலி | - | .. கிராம் |
| ஓமம் | - | .. கிராம் |
| கிராம்பு | - | .. கிராம் |
| கோட்டம் | - | .. கிராம் |
| மோடி | - | .. கிராம் |
| பெருங்காயம் | - | .. கிராம் |
| தோலுரித்த பூண்டரிசி | - | .. கிராம் |
| பனைவெல்லம் | - | .. கிராம் |
| தேன் | - | .. கிராம் |
| தட்டின் எடை | - | .. கிராம் |
| தட்டு + மெழுகு எடை | - | .. கிராம் |

ஃ மெழுகு எடை - .. (தட்டு + மெழுகு எடை) - தட்டின் எடை = கிராம்

**பயன்**

10 - 20 நெல்லெடை வீதம் கொடுத்து வர குன்மம், பித்த வாயு, செரியாமை, சூதகவாயுவினால் உண்டாகும் வலி முதலிய பிணிகள் தீரும். இம்மெழுகு பெருங்காய வாடை வீசுவதால் இதைப் பனைவெல்லத்தூளில் பொதித்து விழுங்கிவிடச் செய்யலாம்.

## குறிப்பு

குன்மகுடோரி மெழுகைச் சிலர் இளகம் என்றும் வழங்குவர்.

# வெள்ளை மெழுகு

வெள்ளைப்பாடாணம் ஒரு பங்கைத் தூளாக்கி எடுத்துக் கொண்டு பத்து பங்கு தேன் மெழுகைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கொண்டு ஒரு கலத்திலிட்டு அடுப்பேற்றி சிறு தீயில் எரித்து உருகும்போது தூளைத் தூவி நன்றாகக் கிளறிக் கலந்து இறக்கி எடுத்துக் கொள்ள வேண்டும்.

**பயன் :**

சல்லடைத் துணியில் இம்மெழுகை சிறிது சூடாக்கித் தடவி, அரையாப்பு, கண்டமாலை பிளவை, கட்டிகள் இவற்றுக்குப் போடலாம். வெளியாட்சிக்கு மட்டும் பயன் படும்.

# இரச மெழுகு

இரசம், பரங்கிச் சக்கை இரண்டும் வகைக்கு ஒரு பங்கு, திப்பிலி, கிராம்பு இரண்டும் வகைக்கு இரண்டு பங்கு, வெல்லம் ஆறு பங்கு நிறுத்தெடுத்து பரங்கிச் சக்கை, திப்பிலி, கிராம்பு ஆகிய மூன்றையும் "இடித்துச் சலித்தல்," முறைப்படி சூரணித்துக் கொள்ள வேண்டும். இரசத்தைக் குழிக்கல்லிலிட்டு சூரணங்களைச் சிறிது சிறிதாகக் கலந்து நன்றாக அரைத்துக் கடைசியில் வெல்லத்தைச் சிறிது சிறிதாகக் கலந்து அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

**குறிப்பு :**

இதை நாற்பது நாட்கள் பழக வைத்து, பின்பே வழங்க வேண்டும்.

**பயன்:**

1-2 நெல்லெடை வீதம் பனைவெல்லத்தில் ஏழு நாட்கள் வரை கொடுக்க மேகத்தால் ஏற்படும் வெள்ளை, தடிப்பு, புண் அரையாப்பு, கிரந்தி, சூலை, கீல் வாயு முதலிய பிணிகள் தீரும். மருந்துண்ணும் காலத்து பாற்சோறு, உப்பு, நீக்கி உண்டு பின் மறு பத்தியம் ஏழு நாள் காத்து வரச் செய்ய வேண்டும். பதினைந்தாம் நாள் தலைக்கு ஓமப்பால் (ஓமம் + பசும்பால்) தப்பளம் செய்து முழுக்காட்டலாம்

# குழம்பு

**இயல் :**

சில சரக்குகளின் கியாழத்தையாவது சில சரக்குகளின் சாறுகளையாவது எடுத்து சர்க்கரை கூட்டிச் சூரணங்களைக் கலந்து காய்ச்சிக் குழம்பு பக்குவத்தில் எடுத்துக் கொள்வது குழம்பு எனப்படும்.

# சாதிசம்பிரக் குழம்பு

**பயிற்சி 44 :**

**தேவையான சரக்குகள் :**

கர்ப்பூரம், இலிங்கம், எலுமிச்சம்பழம், துளசி இலை, தீ.

**தேவையான கருவிகள் :**

கத்தி, அளவைக்கலம், வடிகட்டி, கலம், அரைகருவி, மண் அகல், நிலநெய்அடுப்பு, துடுப்பு, எடைகாட்டி

**செய்முறை :**

ஒரு புதிய மண் அகலின் உட்புறத்தில் துளசி இலையைக் கொஞ்சம் எடுத்துத் தேய்த்து உலரவிட்டு வைத்துக் கொள்ள வேண்டும். உலர்ந்ததும் மறுபடியும் ஒன்றிரண்டு முறை இவ்வாறு செய்து கொள்ளலாம்.

எலுமிச்சம் பழத்தைக் கத்தியால் இரண்டாகப் பிளந்து விதை நீக்கி விட்டுப் பிழிந்து, சாற்றை ஒரு கலத்தில் பெற்றுக் கொண்டு அதை வடிகட்டியினூடாகச் செலுத்தி, ஒரு எடை தெரிந்த அளவைக் கலத்தில் பெற்று, சாற்றின் எடையைக் கண்டுகொள்ள வேண்டும். சாற்றின் எடைக்குப் பதினைந்தில் ஒரு பங்கு சுத்தித்த இலிங்கமும் முப்பதில் ஒரு பங்கு கர்ப்பூரமும் எடுத்து அரைகருவியிலிட்டு தனித்தனியாகப் பொடித்துக் கொள்ள வேண்டும். பின் சாற்றை மண்ணகலில் விட்டு இலிங்கத்தூளைப் போட்டுத் துடுப்பினால் கலக்கிக் கொண்ட பின் அடுப்பேற்றி தீயிட்டுக் காய்ச்ச வேண்டும். சிறிது காய்ந்ததும் கர்ப்பூரத்தைச் சிறிது சிறிதாக தூவித் துடுப்பினால் துளாவி கலவைக் குழம்பு பக்குவமடைந்ததும் இறக்கி அளவைக் கலத்தில் எடுத்துக் கொண்டு எடையைத் தெரிந்துகொள்ள வேண்டும். (கலவை, மண் அகலின் சூட்டால் இறக்கிய பின்னும் சற்று கெட்டிப்படுமாதலால் பருவத்திற்கு சிறிது நேரத்திற்கு முன்பே அகலை அடுப்பைவிட்டு இறக்கிவிட வேண்டும். இவ்வாறு கவனித்துச் செய்யாவிடில் கலவை கெட்டிப்பட்டு இறுகலாகிவிடும்)

## தேர்வு:

அளவைக் கலத்தின் எடை - கிராம்

அளவைக்கலம் + பழச்சாறு எடை - கிராம்

பழச்சாறு எடை =

(அளவைக்கலம் + பழச்சாறு எடை)

- அளவைக்கல எடை

இலிங்கத்தின் எடை - கிராம்

கர்ப்பூரத்தின் எடை - கிராம்

அளவைக்கலத்தோடு குழம்பின் எடை - கிராம்

(அளவைக்கலம் + குழம்பு எடை) - அளவைக்கல எடை

= கிராம்

குழம்பின் எடை - கிராம்

**பயன் :**

1/4 -1 - நெல்லெடை வீதம் நாவில் தடவ வாந்தி, விக்கல், தாகம், வெப்பு முதலியன தீரும்.

## இளநீர்க் குழம்பு

*இளநீர், பசுவின்பால், எள் நெய் மூன்றும் வகைக்கு 250 மிலிட் எடுத்து ஒரு தூய்மையான கொதிகலத்தில் விட்டு அடுப்பேற்றி எரித்து அதில் நன்னாரி வேர், விலாமிச்சன்வேர், அதிமதுரம், சந்தனம், நெய்தல் கிழங்கு இவைகளின் சூரணம் வகைக்கு 15 கிராம் எடுத்துக் கலந்து எரித்துக் குழம்பு பக்குவமடைந்ததும் வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.*

**பயன்:**

*துளிக் கணக்கில் கண்களில் விட கண்ணிலுண்டாகும் வலி, விரணம் ஆகிய நோய்கள் தீரும்.*

## பதங்கம்

**இயல்:**

*இரசப் பொருட்களையோ இரசக் கலப்புள்ள பொருட்களையோ ஒரு கலத்தில் வைத்து அதனை மூடிச் சீலை செய்து எரித்து மூடியின் உட்புறத்தில் படியும் படிவை எடுத்துக் கொள்ளுதல் பதங்கம் எனப்படும்.*

**பயிற்சி 45**

## சாம்பிராணிப் பதங்கம்

**தேவையான சரக்குகள்:**

*பால் சாம்பிராணி, தீ.*

**தேவையான கருவிகள்:**

*அரைகருவி, கரண்டி, எடைகாட்டி, மட்கலம், காகிதத்தாள், தட்டு, நூல், முக்காலி, நெய் விளக்கு.*

## செய்முறை:

பதங்கம் செய்வதற்கு வேண்டிய அளவு பால் சாம்பிராணி எடுத்து அதை கல்வத்திலிட்டுப் பொடித்து சுரண்டி எடுத்து எடையைத் தெரிந்துகொண்டபின் ஒரு சிறிய மட்கலத்தில் போட்டுக் கொள்ள வேண்டும். காகிதத்தாளைக் கூம்பு வடிவத்தில் ஒரு முனை கூராகவும் மறுமுனை விரிவாகவும் இருக்கத்தக்கதாகச் சுருட்டிக் கோமாளிக் குல்லாய் போலச் செய்துகொள்ள வேண்டும். விரிவான பகுதி மட்கலத்தின் வாயை சுற்றிப் பொருந்தும்படி வைத்து ஒரு நூலால் காகிதக்கூம்பை நேராக வைத்துக் கட்டிவிட வேண்டும். நூலுக்குக் கீழ் எஞ்சி நிற்கும் பகுதியைக் கிழித்துவிட்டு கலத்தை முக்காலிமேல் வைத்து நெய் விளக்கை அதன் கீழ் வைத்துச் சிறு தீயில் எரிக்க வேண்டும். இப்போது கலத்தினுள் வைக்கப்பட்ட சாம்பிராணித் தூள் புகைந்து காகிதக் கூம்பின் உட்புறத்தில் ஒட்டிக் கொள்ளும். சாம்பிராணி முழுவதும் புகையும் வரை சிறு ஒலி கேட்டுக் கொண்டிருக்கும். இவ்வொலி கேட்காமல் நின்றதும் கலத்தை மெதுவாக அசைவில்லாமல் கழற்றி எடுத்து அதன் உட்புறம் ஒட்டியுள்ள பதங்கத்தைச் சேகரித்து எடுத்து ஒரு எடைதெரிந்த தட்டில் வைத்து நிறுத்தி எடையைக் கணித்துக் கொள்ள வேண்டும். இதுவே சாம்பிராணிப் பூ அல்லது பதங்கம் எனப்படும்.

## தேர்வு:

பால் சாம்பிராணித் தூளின் எடை - கிராம்

தட்டின் எடை - கிராம்

தட்டு + பதங்க எடை - கிராம்

பதங்க எடை = (தட்டு + பதங்க எடை) - தட்டின் எடை = கிராம்

## பயன்:

சாம்பிராணிப் பதங்கம் 1-2 நெல்லெடை வீதம் வெற்றிலையுடன் உண்டு வர தாதுவன்மை பெருகும். குளிர்சுரம் தீரும். மருந்துண்ணும் காலத்து இச்சாபத்தியம் இருக்க வேண்டும்.

**குறிப்பு:**

இதில் நெய் விளக்குக்குப் பதில் சாராய விளக்கை வைத்துப் பயிற்சி செய்து கொள்ளலாம்.

# திரிமூர்த்தி பதங்கம்

சுத்தி செய்த வீரம், பூரம், வெள்ளைப்பாடாணம் மூன்றும் சம எடைகளில் நிறுத்தெடுத்துத் தனித்தனியாக தூளாக்கிக் கலந்து ஒரு மட்கலத்தில் போட்டு அக்கலத்திற்கு மேல்மூடி கொண்டு மூடி, பொருத்து வாயில் சீலை செய்து கலத்தை அடுப்பேற்றி எரிக்க வேண்டும். எரித்து முடிந்ததும் அசையாது இறக்கி சீலையை நீக்கி மேல் மூடியினுள் படிந்திருக்கும் பதங்கத்தை எடுத்து மீண்டும் இதைக் கீழ்க்கலத்தில் வைத்து மேல் மூடிகொண்டு மூடி எரித்தெடுக்க வேண்டும். இவ்வாறு ஐந்துமுறை எரித்தெடுக்க திரிமூர்த்தி பதங்கம் கிடைக்கும்.

**பயன்:**

1/4 அல்லது 1/2 நெல்லெடை பதங்கத்தைப் பனைவெல்லத்திலாவது ஆமணக்கு நெய்யிலாவது கூட்டிக் கொடுக்க பட்சவாதம், கண்டமாலை, அரையாப்பு முதலிய பிணிகள் தீரும். மருந்துண்ணும் காலத்து உப்பு நீக்கிய உணவைக் கொள்ள வேண்டும். இப்பதங்கத்தைத் தொடர்ச்சியாக 3 நாட்களுக்குமேல் கொடுக்கக் கூடாது.

# செந்தூரம்

**இயல்:**

உலோகம், பாடாணம் உபரசப் பொருட்கள், உப்பு வகை இவைகளைத் தனியாகவோ, கலந்தோ எடுத்து சில சாறுகளிலாவது செயநீர்களிலாவது அரைத்தாவது புடமிட்டாவது எரித்தாவது வறுத்தாவது வெய்யிலில் வைத்தாவது சிவக்கும்படிச் செய்தெடுப்பது செந்தூரம் எனப்படும்.

செந்தூரங்களின் செய்முறைகளில் பல வகைகள் உண்டு. அவை எரிப்புச் செந்தூரம், குப்பி எரிப்புச் செந்தூரம்,

புடச்செந்தூரம், வறுப்புச் செந்தூரம் எனப்பலவாம். ஈண்டு செய்முறையால் வேறுபடும் சில எளிய செந்தூரங்களின் செய்முறைகள் விளக்கப்படுகின்றன. பயிற்சிகளில் செய்யமுடியாத பெருமுறைகள் பலவுண்டு. அவைகளைப் பெருமுறையில் மருந்து செய் நிலையங்களில் செய்யும்போது கண்டுகொள்ளலாம். நச்சுப் பொருட்களைக் கையாளும்போது மிக்க கவனம் வேண்டும். செந்தூர செய்முறைகளில் அடிக்கடி செய்யப்படும் செயல்கள் சீலை மண் செய்தல், புடமிடுதல் ஆகியன. சீலை செய்தல் முன்னரே விளக்கப்பட்டுள்ளது. நீண்ட துணித்துண்டில் நன்கு அரைத்த ஈரமான புற்று மண்ணைத் தடவி இரு கலங்களிலும் பொருத்துவாயைச் சுற்றி விடுதல் சீலை செய்தல் எனப்படும். இச்சீலை எத்தனை தடவைகள் சுற்றப்படுமோ அத்தனை சீலையென்று வழக்கில் வழங்கப்படும். செந்தூரம், பற்பம் முதலிய மருந்துகளைப் புடமிடும்போது மூன்று, ஏழு அல்லது அதற்கும் மேற்பட்ட சீலைமண் செய்தல் உண்டு. இவ்வாறு சீலை செய்த அகல்களை உலரவிட்டு பூமியில் ஒரு குழி தோண்டி அதில் வரட்டிகளைப் பாதியளவு நிரப்பி நடுவில் அகலை வைத்து மேலும் வரட்டிகளை அடுக்கி அதில் தீயிட்டு ஆறியபின் எடுப்பது புடமிட்டு எடுத்தல் எனப்படும். இது அளவால் காடைப்புடம், கவுதாரிப்புடம், கோழிப்புடம், பன்றிப்புடம், கஜபுடம் எனப்பலவகைப்படும். இக்காலத்தில் புடமிடுவதற்கு மின்சாரத்தால் இயங்கும் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அது சவுதாமுனி (மின்புடக்கருவி) என்றழைக்கப்படுகிறது.

மேற்கண்ட புட அளவு போலவே தீயினதின் அளவு கூறப்பட்டுள்ளது. தீயளவு எரிபொருளான கட்டையால், அளவிடப்படும். இத்தீயளவு தீபாக்கினி, கமலாக்கினி, கதலியாக்கினி, காடாக்கினி என்று சொல்லப்படும். செந்தூரமாவது பற்பமாவது நன்றாக முடிந்திருந்தால் அதில் விரல் வைத்து பார்க்க விரலின் கோடுகள் அதில் பதியும் அளவிற்கு அவை அணுத்துவம் அடைந்திருப்பதைக் காணலாம். செந்தூரங்கள் பொதுவாக சிவந்த நிறமுடையனவென்றாலும் அவை பல்வேறு வகையான நிறங்களுடையனவாக காணப்படும். கௌரி சிந்தாமணி போன்ற சில செந்தூரங்கள் கருஞ்சிவப்பு நிறமாக

இருக்கும். இவைகளைக் கறுப்பு என்றும் வழங்குவர். அன்னபேதி போன்றவற்றில் செந்தூரம் மாதுளம் பூ நிறத்துடன் இருக்கும். செந்தூரங்கள் அவற்றின் இயல்பான நிறத்தை அடையாவிட்டால் மேலும் அரைத்துப் புடமிட்டு எடுக்கலாம். நெருப்பிற்குப் போகாமல் செய்யப்படும் மருந்துகள் பச்சை வெட்டு என்று சொல்லப்படும்.

## முறை 1

# சுருக்கிட்டு அரைத்தெடுத்தல்

சரக்கை அகலில் இட்டு அனலின்மேல் காயவைத்து சாறு, பால் போன்ற நீர்த்துவப் பொருட்களைச் சிறிது சிறிதாக ஊற்றி சுருக்குக் கொடுத்து எடுத்து உலர்த்தி அரைத்துப் பொடியாக்கிக் கொள்வது சுருக்கிட்டு அரைத்தெடுத்தல் எனப்படும்.

## பயிற்சி: 46

# இலிங்கச் செந்தூரம்

## தேவையான சரக்குகள்:

இலிங்கம், ஆற்றுக்குமட்டிக்காய், நீர், தீ,

## தேவையான கருவிகள்:

வரகு வைக்கோல், கத்தி, நீண்ட சலாகை, அளவைக்கலம், எடைகாட்டி, வடிகட்டி அரைகருவி, கரண்டி, தட்டு, குப்பி, கலம், துணி, அகல், நிலநெய்அடுப்பு.

## செய்முறை :

இலிங்கத்தை வேண்டிய அளவு எடுத்துத் தாய்ப்பாலில் ஒவ்வொரு நாளும் பழைய பாலை நீக்கி புதுப்பால் விட்டு, மூன்றுநாட்கள் ஊறவிட்டு எடுக்கச் சுத்தியாகும். இவ்வாறாகச் சுத்தி செய்யப்பட்ட இலிங்கம் வேண்டியஅளவு எடுத்து அதை நிறுத்து எடை தெரிந்து கொள்ள வேண்டும்.

வரகு வைக்கோலைத் தரையில் பரப்பி ஆற்றுக் கும்மட்டிக் காய்களை அதில் வைத்து மேலும் வைக்கோல் கொண்டு மூடி அதில் தீயிட்டு வெந்ததும் சலாகையால் எடுத்து, மேற்றோல் விதை இவைகளை நீக்கி காயின் தசையை அரைகருவியில் வைத்து சற்று சிதைத்து ஒரு துணியில் வைத்துப் பிழிய சாறு பிரியும். இதை ஒரு கலத்தில் பெற்றுக்கொண்டு வடிகட்டியினூடாகச் செலுத்தி ஒரு எடை தெரிந்த அளவைக் கலத்தில் பெற்றுக்கொண்டு அதன் எடையைக் கணித்துக் கொள்ள வேண்டும். பின் நிலநெய்அடுப்பில் தீயேற்றி அதில் ஒரு மண் அகலை வைத்துச் சிறிது சூடானதும் சிறிதளவு சாற்றை அதில் விட்டு இலிங்கத்தை அச்சாற்றினுள் வைக்க வேண்டும். சாறு வெப்பத்தால் குறைந்து வரும்போது மீண்டும் மீண்டும் சாற்றைச் சிறிது சிறிதாக இலிங்கத்தின் மேல் ஊற்றிச் சுருக்குக் கொடுக்க வேண்டும். இவ்வாறு சாறு முடியும் வரை சுருக்கிட்டு அகலை அடுப்பை விட்டு இறக்கி ஆறியதும் இலிங்கத்தை எடுத்து நீரில் கழுவி உலரவிட்டு எடையைக் கண்டுகொண்டபின் அரைகருவியிலிட்டு நன்றாக அரைத்து விரலின் கோடுகள் பதியும் அளவுக்கு மெலியச் செய்து சுரண்டி எடுத்து எடை தெரிந்த ஒரு தட்டில் வைத்து நிறுத்து செந்தூரத்தின் எடையைக் கணித்துக் கொள்ள வேண்டும்.

## தேர்வு:

சுத்தி செய்த இலங்கத்தின் எடை - கிராம்

அளவைக் கலத்தின் எடை - கிராம்

அளவைக்கலம் + கும்மட்டிக்காய்ச் சாறு எடை - கிராம்

கும்மட்டிக்காய்ச் சாற்றின் எடை =

(அளவைக்கலம் + கும்மட்டிகாய்ச் சாறு எடை (- அளவைக்கல எடை

சுருக்கிட்டுப் பெற்ற இலிங்கத்தின் எடை - கிராம்

தட்டின் எடை - கிராம்

தட்டு + செந்தூர எடை - கிராம்

ஃ செந்தூர எடை - தட்டு + செந்தூர எடை - தட்டின் எடை

**பயன் :**

*1/2 - 1 நெல்லெடை வீதம் தேன் கூட்டிக் கொடுத்து வர குளிர் சுரம், வேறுவகை சுரங்கள், மேக நோய்கள் முதலிய பிணிகள் தீரும்.*

## குறிப்பு :

*இலிங்கத்தைத் தாய்ப்பாலில் சுருக்கிட்டெடுத்துப் பொடித்துக் கொள்ளுவதும், சூடன் சாம்பிராணிக் கற்கம் தடவிய சீலை சுற்றிப் பல தடவை எரித்தெடுத்துப் பொடித்துக் கொள்ளுவதும் உண்டு.*

## முறை: 2

# கியாழத்தில் அரைத்து உலர்த்தி எடுத்தல்

*சரக்குகளின் கியாழத்தில் கூறப்பட்ட நாளளவு வரை அரைத்துப் பின் நிழலில் உலர்த்தி மீண்டும் அரைத்து எடுத்துக் கொள்ளுவது 'கியாழத்தில் அரைத்து உலர்த்தி எடுத்தல்' எனக் கூறப்படுகிறது.*

## பயிற்சி 47

# படிகலிங்கச் செந்தூரம்

## தேவையான சரக்குகள் :

*படிகாரம், இலிங்கம், கடுக்காய்ப்பூ காட்டத்திப்பூ, நீர், தீ.*

## தேவையான கருவிகள் :

*அகல், நிலநெய்அடுப்பு, சலாகை, கொதிகலம், கலம், அரைகருவி, அளவைக்கலம், எடைகாட்டி, கரண்டி, வடிகட்டி, தட்டு.*

## செய்முறை :

*கடுக்காய்ப்பூ ஒரு பங்கு காட்டத்தில்பூ மூன்று பங்கு வீதம் நிறுத்தெடுத்து சிறிது சிதைத்து கொதிகலத்தில் போட்டு பதினாறு பங்கு நீர் நிறுத்துக் கலந்து நாலிலொன்றாகக் கியாழ முறைப்படிச் சுருக்கி வடிகட்டி எடுத்து அதன் எடையைத்*

தெரிந்துகொள்ள வேண்டும். சுத்தி செய்த இலிங்கம் ஒரு பங்கு, படிகாரம் எட்டு பங்கு நிறுத்தெடுத்து இரண்டையும் அரைகருவியிலிட்டு நன்றாக மைபோல அரைத்துப் பொடியாக்கிக் கொண்டபின் முன்செய்த கியாழத்தைச் சிறிது சிறிதாக விட்டு அரைக்க வேண்டும். கியாழம் முழுவதும் தீர்ந்ததும் கலவையை அப்படியே கல்வத்தோடு நிழலில் வைத்துவிட வேண்டும்.

கலவை நன்றாக உலர்ந்ததும் மீண்டும் அரைத்துச் சுரண்டி எடுத்து ஒரு எடை தெரிந்த தட்டில் வைத்து நிறுத்தி எடையைக் கணித்துக் கொள்ள வேண்டும்.

## தேர்வு :

| | | |
|---|---|---|
| கடுக்காய்ப்பூ (1பங்கு) எடை | - | கிராம் |
| காட்டத்திப்பூ (3 பங்கு) எடை | - | கிராம் |
| நீர் (16 பங்கு) எடை | - | கிராம் |
| கியாழத்தின் எடை | - | கிராம் |
| சுத்தித்த இலிங்கம் (1பங்கு) எடை | - | கிராம் |
| படிகாரம் (8 பங்கு) எடை | - | கிராம் |
| தட்டின் எடை | - | கிராம் |
| தட்டு + செந்தூரம் எடை | - | கிராம் |

ஃ செந்தூரத்தின் எடை = (தட்டு+செந்தூர எடை) - தட்டின் எடை

## பயன்:

இச்செந்தூரத்தை 3-5 நெல்லெடை வீதம் வெண்ணெயில் கூட்டிக்கொடுக்க சளிக்கழிச்சல், குருதிக் கழிச்சல், பெரும்பாடு முதலியன தீரும்.

## குறிப்பு :

படிகாரத்தை ஒரு அகலிலிட்டு அடுப்பேற்றி அது உருகிப் பொங்கி வரும்போது இலிங்கத்தூளை அதன் நடுவில் கொட்டி இரண்டும் கலந்த கலவையை எடுத்து அரைத்துக் கொள்வதும் இச்செந்தூரம் செய்வதில் ஒரு முறையாகும். இவ்வாறு செய்த படிகலிங்கச் செந்தூரத்தையும் மேற்கண்டவாறே பயன்படுத்தலாம். படிகலிங்கச் செந்தூரத்தை 'இலிங்கத்துவர்' என்றும் வழங்குவர்.

## தாய்ப்பாலில் அரைத்தெடுத்தல்

### முறை 3

சரக்குகளைத் தாய்ப்பால் விட்டு அரைத்துப் பின்பு பால் விடாமல் அரைத்து மைபோலப் பொடியாக்கி எடுத்துக் கொள்ளுவதைத் 'தாய்ப்பாலில் அரைத்தெடுத்தல்' என்பர். இது பச்சை வெட்டு மருந்தாகும்.

## சண்டமாருதச் செந்தூரம்

### தேவையான சரக்குகள் :

| | | |
|---|---|---|
| இலிங்கம் | - | 4 பங்கு |
| பூரம் | - | 2 பங்கு |
| வீரம் | - | 1 பங்கு |
| கெந்தகம் | - | 1 பங்கு |
| இரச செந்தூரம் | - | 1 பங்கு |
| தாய்ப்பால் | - | 9 பங்கு |

### செய்முறை :

சரக்குகளை அவைகட்குரிய முறையில் தூய்மை செய்து அளவுப்படி எடுத்துக் கல்வத்தில் ஒவ்வொன்றாகப் போட்டு அரைத்து, மை போலானவுடன் தாய்ப்பாலைச் சிறிது சிறிதாக விட்டு அரைக்க வேண்டும். தாய்ப்பால் முழுவதும் விட்டு அரைத்ததும் மீண்டும் அரைத்துக் கொண்டிருக்க கலவை உலாந்து வரும். கலவை நன்றாக உலர்ந்து பொடியாகும்வரை அரைத்துச் சுரண்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.

### பயன்:

1/2-1 நெல்லெடை செந்தூரத்தை அமுக்கராச் சூரணம். முக்கடுகுச் சூரணம் இவைகளில் ஒன்றிலாவது இரண்டிலுமாவது கூட்டித் தேன் கலந்து கொடுக்கச் சுரம், சன்னி, மேகக் கிரந்தி, கண்டமாலை, வாத நோய்கள், முதலியன தீரும்.

**குறிப்பு :**

*சிலர் வழக்கில் இச்செந்தூர அரைப்புக்குத் தாய்ப்பால் கிடைக்காவிட்டால் ஆட்டுப் பாலில், முட்டை வெண்கரு சேர்ந்த பசும்பாலில் அரைத்துக் கொள்வர். சிலர் தாய்ப்பால் துணையாகக் கூட்டி வழங்குவர்.*

# அரைத்து சூரிய புடம்வைத்துப் பெறுதல்

**முறை : 4**

*சாற்றால் சரக்குளை அரைத்துக் கல்வத்துடன் அப்படியே வெய்யிலில் வைத்துப் புகையும்போது எடுத்து மீண்டும் அரைத்துப் பொடியாக்கி எடுத்துக் கொள்வது 'அரைத்து சூரிய புடம் வைத்து பெறுதல்' எனப்படுகிறது.*

**பயிற்சி 48**

## சுயமாக்கினிச் செந்தூரம்

**தேவையான சரக்குகள் :**

| | | |
|---|---|---|
| *இரும்புப் பொடி* | - | *1 பங்கு* |
| *காந்தம்* | - | *2 பங்கு* |
| *இரசம்* | - | *4 பங்கு* |
| *கெந்தகம்* | - | *8 பங்கு* |

*சோற்றுக்கற்றாழை மடல், கடுக்காய்*

**தேவையான கருவிகள் :**

*இடிகருவி, சல்லடை, கத்தி, தட்டு,*

*அளவைக்கலம், கலம், எடைகாட்டி, அரைகருவி, கரண்டி, தட்டு.*

**செய்முறை :**

*அயப்பொடியை எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறப்போட்டு, மறுநாள் எள் நெய்யில் ஊறப்போட்டு எடுத்து வாணலியிலிட்டு வறுத்து கொள்ளுக் கியாழத்தில் தோய்த்தெடுக்கச் சுத்தியாகும்.*

காந்தக் கல்லைப் பழச்சாற்றிலாகிலும் காடியிலாகிலும் கொதிக்க வைத்து சாணப்பாலில் ஏழுதரம் தோய்த்தெடுக்கலாம். சிலர் காந்தத்தை வரகு வைக்கோலுடன் சேர்த்தெரித்து எடுத்துக் கொள்வர். இரசத்தை ஒட்டடை, வெல்லம், திரிகடுகு, மஞ்சள், கடுகு, செங்கல், உப்பு இவைகள் ஒவ்வொன்றாலும் அரைத்தெடுத்துக் கழுவிக் கொள்ளச் சுத்தியாகும். இரசத்தை முரட்டுத் துணியிலாவது கம்பளித் துணியிலாவது பல தடவை பிழிந்தெடுக்கலாம். கெந்தகத்தை நெய்விட்டு தீப்பற்றாமல் உருக்கிப் பசும்பாலில் ஏழு முறை தோய்த்தெடுக்கச் சுத்தியாகும். மருதோன்றிக் கற்கம் சேர்ந்த தயிரில் உருக்கி மாற்றி எடுப்பதும் ஒரு முறை.

கற்றாழை மடலின் இருபுறமுமுள்ள களையை நீக்கிவிட்டுப் பிளந்து சோற்றை மட்டும் தனியாகப் பிரித்தெடுத்து நிறுத்தி, ஒரு தட்டின் ஒருமுலையில் வைத்து வேண்டிய அளவு கடுக்காயை இடித்துச் சலித்து தூளாக்கி நிறுத்தி இதனுடன் கலக்க சாறு பிரியும். இச்சாற்றை வடிகட்டி எடுத்து எடை தெரிந்து கொள்ள வேண்டும்.

அயம், காந்தம், இரசம், கெந்தகம் ஆகிய சரக்குகளைச் சுத்தி செய்து எடுத்து அளவுப்படி நிறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். முதலில் கெந்தகத்தைக் கல்வத்தில் போட்டு அரைத்துப் பொடியாக்கி அதனுடன் இரசத்தைச் சிறிது சிறிதாக விட்டு அரைக்க இரண்டும் உறவாகி கருமை நிறப்பொடியாகும். இதனுடன் அயத்தையும் காந்தத்தையும் போட்டு அரைத்துக் கொண்டபின் கற்றாழைச் சாற்றைச் சிறிது சிறிதாக விட்டு அரைக்க வேண்டும். சாறு முழுவதும் தீர்ந்ததும் கலவை உலரும்வரை அரைத்துக் கல்வத்தை அப்படியே கலவையுடன் வெய்யிலில் வைத்து விட, சூரிய வெப்பத்தில் கலவை உலர்ந்து புகையும். பின் இதை மீண்டும் அரைத்துப் பொடியாக்கி எடுத்து எடைதெரிந்த தட்டில் வைத்து நிறுத்தி எடையைக் கணித்துக்கொள்ள வேண்டும்.

சிலர் சாற்றால் அரைத்த கலவையைச் சிறு வில்லைகளாகத் தட்டி தாமிரத் தகட்டில் வைத்து வெய்யிலில் வைப்பர். வெய்யிலில் வைக்கப்பட்டபோது இக்கலவையிலிருந்து கரிய புகை வெளிப்படும். இவ்வாறு புகை கிளம்புவதினால் இதற்குச் சுயமாக்கினிச் செந்தூரம் என்று பெயர்.

**தேர்வு:**

| | | |
|---|---|---|
| கற்றாழைச் சோற்றின் எடை | - | கிராம் |
| கடுக்காய்த் தூளின் எடை | - | கிராம் |
| கற்றாழைச் சாற்றின் எடை | - | கிராம் |
| சுத்தமான சரக்குகளின் எடை | - | கிராம் |
| காந்தம் | - | கிராம் |
| இரசம் | - | கிராம் |
| கெந்தகம் | - | கிராம் |
| தட்டின் எடை | - | கிராம் |
| தட்டு+செந்தூரம் எடை | - | கிராம் |

செந்தூர எடை = தட்டு+செந்தூர எடை - தட்டின் எடை
= கிராம்

**பயன் :**

1-2 நெல்லெடை வீதம் தேனிலாவது வெண்ணெயிலாவது கொடுக்க வாத குன்மம், பெருவயிறு, கழிச்சல் முதலிய நோய்கள் தீரும்.

# அவித்த நெல்லுக்குள் புடமிட்டெடுத்தல்

**முறை 5 :**

சரக்குகளைக் குப்பியலடைத்து மூடி அவித்துக் கொட்டிய நெற்குவியலுக்குள் புதைத்து வைத்து நெல் ஆறியதும் எடுத்து மீண்டும் அரைத்துக் கொள்ளுவது 'அவித்த நெல்லுக்குள் புடமிட்டெடுத்தல்' எனக் கூறப்படுகிறது.

## காடிக்காரச் செந்தூரம்

**தேவையான சரக்குகள் :**

காடிக்காரம், இலிங்கம், இரச செந்தூரம்

**செய்முறை :**

சரக்குகள் மூன்றும் சம எடையில் நிறுத்தெடுத்துக் காடிக்காரம், இரச செந்தூரம், இலிங்கம் மூன்றையும் தனித்தனியாக அரைத்துத் தூளாக்கிக் கொள்ள வேண்டும். ஒரு ஆடியாலான மூடியுள்ள குப்பியில் செந்தூரத்தைப் போட்டு அதன்மேல் பாதியளவு இலிங்கத்தூளைப் போட்டுப் பின் காடிக்காரத்

தூளையும் அதன்மேல் மீதமுள்ள இலிங்கத் தூளையும் கடைசியாக மீதமுள்ள இரச செந்தூரத்தையும் போட்டு மூடி, குப்பியைத் தோலால் மூடி நூல் கொண்டு வரிந்து கட்டிவிட வேண்டும்.

நெல்லை அவித்து ஓரிடத்தில் குவியலாகக் கொட்டி அது சூடாக இருக்கும்போது இக்குப்பியை அதினுள் புதைத்து நெற்குவியல் நன்கு ஆறியதும் எடுத்துக்கொண்டு குப்பியை மூடிக்கட்டிய தோலை நீக்கிவிட்டு மூடியைத் திறந்து உள்ளேயுள்ள சரக்குகளை எடுத்து மீண்டும் அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

**பயன்:**

இச்செந்தூரத்தில் 1/2-1 நெல்லெடை வீதம் தேன், இஞ்சிச்சாறு அல்லது துளசிச் சாற்றில் கூட்டிக் கொடுக்கச் சுரம், கழிச்சல், ஊழிநோய், வாதப்பிணிகள், பட்சவாதம் முதலான பிணிகள் தீரும்.

**முறை : 6**

## அரைத்து வறுத்தெடுத்தல்

சரக்குகளை அரைத்துப் பொடியாக்கி வறு ஓட்டிலிட்டு அடுப்பேற்றித் துளாவி வறுத்துச் சிவக்கச் செய்து எடுக்கும் முறையை 'அரைத்து வறுத்தெடுத்தல்' என்று கூறுவர்.

## அயவீரச் செந்தூரம்

**தேவையான சரக்குகள் :**

இரும்புப் பொடி, இரசம், வீரம், நவாச்சாரம்.

**செய்முறை :**

இரும்பின் பொடி, இரசம், வீரம், நவாச்சாரம் ஆகிய நான்கு சரக்குகளையும் தூய்மை செய்தெடுத்து ஒவ்வொன்றையும் சம எடையாக நிறுத்தெடுத்து முதலில் இரும்புப் பொடியை அரைகருவியிலிட்டு நன்றாக அரைத்துத் தூளாக்கிக் கொண்டு பின் மற்றைய சரக்குகளை ஒவ்வொன்றாகச் சேர்த்து அரைத்துக் கொள்ள வேண்டும். சரக்குகள் யாவும் நன்றாக மைபோலாகுமட்டும் அரைத்து, பின் அதைச் சுரண்டிச்

சேகரித்துக் கொண்டு ஒரு புதிய மண் சட்டியின் உட்புறத்தில் சில வெற்றிலைகளைத் தேய்த்து உலர்த்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஒன்றிரண்டு தடவை வெற்றிலை தேய்த்து உலர்த்திய மண் சட்டியை அடுப்பேற்றித் தீயிட்டு, சட்டியில் முன்பு அரைத்தெடுத்த தூளைப்போட்டு தென்னை ஈர்க்குகள் இரண்டு மூன்றை சேர்த்துக் கற்றையாகப் பிடித்து கொண்டு அதனால் துளாவி வறுக்க வேண்டும். இவ்வாறு வறுக்கும்போது அதிலிருந்து வரும் புகை மிக்க நெடியுள்ளதாக இருக்கும். இப்புகைக்கு எதிர்ப்புறமாக நின்று வறுக்க வேண்டும். இம்மருந்தை திறந்த வெளியில் அடுப்பை வைத்து வறுப்பது நன்று. மருந்தின் நெடி அடங்கிய பின் தூள் மாதுளம்பூ நிறத்தில் சிவக்கத் தொடங்கும். இவ்வாறு சிவந்ததும் சட்டியை அடுப்பினின்று இறக்கிச் செந்தூரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் வறுத்துக் கொண்டிருந்தால் அதன் நிறம் கருமை அடைந்துவிடும்.

**பயன்:**

*1/2-1 நெல்லெடை வீதம் தேனில் கூட்டிக் கொடுக்க வாதப் பிணிகள், சூலை, தோற்பிணிகள் முதலியன தீரும்.*

**முறை 7**

# அடுப்பில் எரித்து அரைத்தெடுத்தல்

*சரக்குகளைச் சாற்றில் அரைத்து பெரிய வில்லைகளாகச் செய்து வெய்யிலில் உலர்த்தி அதை ஒரு சட்டியில் வைத்து மேற்சட்டி கொண்டு மூடி பொருத்து வாயைச் சீலை மண் செய்து அடுப்பேற்றி எரித்துப் பின் அரைத்துத் தூளாக்கிக் கொள்ளுவதை 'அடுப்பில் எரித்து' அரைத்தெடுத்தல் என்பர்.*

# ஆறுமுகச் செந்தூரம்

**தேவையான சரக்குகள் :**

| | | |
|---|---|---|
| சுத்தித்த இரசம் | - | 5 பங்கு |
| கெந்தகம் | - | 9 பங்கு |
| காந்தம் | - | 7 பங்கு |
| இரும்புப்பொடி | - | 12 பங்கு |

| | | |
|---|---|---|
| இந்துப்பு | - | 4 பங்கு |
| வெங்காரம் | - | 8 பங்கு |

சுற்றாழை மடல், கடுக்காய்,

## செய்முறை :

தூய்மை செய்த சரக்குகள் ஒவ்வொன்றையும் அளவுப்படி நிறுத் தெடுத்துக் கொண்டு முதலில் கெந்தகத்தைக் கல்வத்திலிட்டு அரைத்துப் பொடியாக்கி இரசத்தைச் சிறிது சிறிதாக விட்டு அரைத்து உறவாக்கிக் கொண்டு மற்ற நான்கு சரக்குகளையும் ஒவ்வொன்றாகக் கலந்து நன்றாக அரைத்துக் கொள்ள வேண்டும்.

கற்றாழையின் மடலை வேண்டிய அளவு எடுத்து அதன் ஓரங்களிலுள்ள முட்களைக் கத்தியால் நீக்கிவிட்டு இரண்டாகப் பிளந்து சோற்றை எடுத்து ஒரு உயரமான விளிம்புள்ள தட்டின் ஒரு ஓரத்தில் வைத்து அதற்குத் தேவையான அளவு கடுக்காய்த் தோலை இடித்துச் சூரணமாக்கிக் கலந்து வடியும் சாற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கற்றாழைச் சாற்றை வடிகட்டி எடுத்து சிறிது சிறிதாக விட்டு அரைத்த பொடியை அரைக்க வேண்டும். கலவை நன்றாக மை போலாகி அதன் ஈரம் குறைந்ததும் கரண்டியால் வழித்தெடுத்துத் தட்டையும் வட்டமுமான ஒரு வில்லையாகத் தட்டி ஒரு தட்டில் வைத்து வெய்யிலில் வைத்துவிட வேண்டும்.

வில்லை நன்றாகக் காய்ந்ததும் இதை ஒரு மட்கலத்தினுள் வைத்து அக்கலத்தை மற்றொரு மட்கலத்தால் வாய்கள் பொருந்த மூடி, இரண்டு கலங்களின் பொருத்து வாயையும் மூடக்கூடிய அகலமும் கலங்களின் சுற்றளவு நீளமுமுள்ள நீண்ட துணித் துண்டுகளில் நீர்விட்டு அரைத்த புற்று மண்ணைத் தடவி முதலில் பொருத்து வாயைப் புற்று மண்ணால் பூசி மூடி, அதன்மேல் மண் பூசிய துணிகளைச் சுற்றிவிட வேண்டும். இவ்வாறு செய்வது 'சீலை மண் செய்தல்' எனப்படும். மூன்று சீலை மண் செய்ததும் இதை அப்படியே வைத்து உலர விட்டுவிட வேண்டும்.

சீலை மண் நன்றாக உலர்ந்ததும் இக்கலங்களை அடுப்பிலேற்றித் தீயிட்டு எரிக்க வேண்டும். மூன்று நாட்கள் விடாமல் எரித்து ஆறியபின் கலங்களின் பொருத்து வாயிலுள்ள சீலை மண்ணை நீக்கிவிட்டு மேற்கலத்தைத் திறந்து பார்க்க வில்லை சிவந்திருக்கும். இவ்வில்லையை அரை கருவியிலிட்டு நன்றாய் மை போல் அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

**பயன் :**

$^1/_2$-1 நெல்லெடை வீதம் செந்தூரத்தை, முக்கடுகுச் சூரணம், தேன் இவற்றில் கொடுத்துவர வாதப் பிணிகள், வெளுப்பு, கண்டமாலை, சூலை முதலிய பிணிகள் தீரும்.

**முறை :**

## நீர்ப்பொருள் விட்டரைத்துப் புடமிட்டெடுத்தல்

ஒன்றாவது அதற்கு மேற்பட்ட சாறுகளையாவது கியாழங்களையாவது வேறு நீர்த்துளிப் பொருட்களையாவது விட்டு சரக்கை அல்லது சரக்குகளை அரைத்து வில்லை தட்டி உலர்த்தி அகலில் வைத்து மற்றொரு அகல் கொண்டு மூடி சீலைமண் செய்து உலர்த்தி, குழியில் வரட்டிகள் அடுக்கி நடுவில் வைத்து எரித்தெடுத்து ஆறிய பின் பிரித்து வில்லைகளை அரைத்தெடுத்துக் கொள்ளுவதை 'நீர்ப்பொருள் விட்டரைத்துப் புடமிட்டெடுத்தல்' என்று கூறுவர்.

**பயிற்சி : 49**

## அன்னபேதிச் செந்தூரம்

**தேவையான சரக்குகள் :**

அன்னபேதி, காடிநீர், தீ.

**தேவையான கருவிகள் :**

எடைகாட்டி, அரைகருவி, அளவைக்கலம், கரண்டி, மண் அகல்கள் இரண்டு, துணி, அரைத்த புற்றுமண், வரட்டி, தட்டு.

**செய்முறை:**

அன்னபேதியை நீரிற் கரைத்து வடிகட்டி ஒரு கலத்தில் விட்டு அடுப்பேற்றிக் குழம்பு பதத்தில் எடுத்து ஒரு தட்டில் விட்டு வெய்யிலில் வைக்க உப்பாகும். இதை இவ்வாறு மூன்றுமுறை செய்து கொள்ளத் தூய்மையாகும். புது ஓட்டிலிட்டு வறுத்தும் எடுக்கலாம்.

சுத்தி செய்த அன்னபேதியைத் தேவையான அளவு நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு அரைத்துக் கொள்ள வேண்டும். ஒரு எடை தெரிந்த அளவைக் கலத்தில் காடிநீர் வேண்டிய அளவு எடுத்து, நிறுத்தி எடை கண்டுகொண்டு அதைச் சிறுகச் சிறுக விட்டு அன்னபேதியை நன்றாக அரைக்க வேண்டும். நன்றாக அரைபட்டதும் மீதமுள்ள காடி நீரை நிறுத்தி பயன்பட்ட காடியின் எடையைத் தெரிந்து கொள்ள வேண்டும். அரைத்த அன்னபேதியைச் சுரண்டி வழித்தெடுத்துச் சிறு வில்லைகளாகச் செய்து ஒரு அகலுக்குள் வைத்துக் காய விடவேண்டும். வில்லைகள் காய்ந்ததும் அவற்றை நிறுத்தெடுத்து அகலுக்குள் பரப்பி அடுக்கி மேலகல் கொண்டு மூடி பொருத்துவாயில் அரைத்த புற்று மண் பூசி மூன்று சீலமண் செய்து உலர்த்த வேண்டும்.

சீலை மண் காய்ந்ததும் ஒரு குழியில் இருபது வரட்டி அடுக்கி நடுவில் அகலை வைத்துத் தீயிட்டு விடவேண்டும். வரட்டி முழுவதும் எரிந்து புடம் ஆறியதும் அகலை எடுத்துப் பிரித்துப் பார்க்க வில்லைகள் சிவந்திருக்கும். இவற்றை அரைகருவியிலிட்டு அரைத்து எடைதெரிந்த தட்டில் வைத்து நிறுத்தி எடை தெரிந்து கொள்ள வேண்டும்.

**தேர்வு:**

| | | |
|---|---|---|
| அன்னபேதி எடை | - | கிராம் |
| எடுத்துக்கொண்ட காடிநீர் எடை | - | கிராம் |
| மீதமுள்ள காடிநீர் எடை | - | கிராம் |
| ஃ பயன்பட்ட காடிநீர் எடை | - | கிராம் |
| வில்லைகளின் எடை | - | கிராம் |
| செந்தூர எடை | - | கிராம் |

**பயன்:**

1-2 நெல்லெடை வீதம் தேனில் கொடுக்க ஊதல் நோய், வெளுப்பு, காமாலை முதலிய பிணிகள் தீரும்.

## காந்தச் செந்தூரம்

### தேவையான சரக்குகள் :

காந்தம், கற்றாழை மடல், விளாம்பட்டை, முருங்கைப் பட்டை, எலுமிச்சம்பழம் இவற்றின் சாறுகள்.

### செய்முறை :

காந்தத்தைப் பெருந்தீயிலிட்டு எரித்து கொள்ளுக்கியாழத்தில் பலமுறை தோய்த்து எடுக்கச் சுத்தியாகும். இதைக் கல்வத்திலிட்டு கற்றாழைச் சாற்றாலாட்டி வில்லை தட்டி அகலுக்குள் வைத்துச் சீலைமண் செய்து 20 வரட்டியில் புடமிட்டெடுத்துப் பின் விளாம்பட்டைச் சாறு, முருங்கைப் பட்டைச் சாறு, பழச்சாறு இவை ஒவ்வொன்றாலும் அரைத்து ஒவ்வொரு புடமிட்டு எடுக்கச் செந்தூரமாகும்.

**பயன்:**

1/2-1 நெல்லெடை வீதம் இச்செந்தூரத்தை தேனிலாவது வெண்ணெயிலாவது கூட்டிக் கொடுக்க ஐயசுரம், வளிசுரம், வெளுப்பு, ஊதல் நோய், காமாலை முதலிய பிணிகள் தீரும். குருதி வன்மை உண்டாகும்.

### முறை 9

## குப்பியிலடைத்து மணலில் புதைத்து எரித்தெடுத்தல்

சரக்குகளைத் தூய்மை செய்து தனியாகவோ அல்லது சாறுகள் கலந்தோ அரைத்துப் பொடி செய்து ஏழு சீலை செய்த குப்பியிலடைத்து ஒரு வாயகன்ற கலத்தில் மணல் நிரப்பி அதில் குப்பியின் கீழ்ப்பகுதியைப் புதைத்து வைத்து, கலத்தின் கீழே தீயிட்டு எரித்து எடுத்துக் கொள்ளுவது 'குப்பியிலடைத்து மணலில் புதைத்து எரித்தெடுத்தல்' எனக் கூறப்படுகிறது.

மணலுக்குள் இவ்வாறு வைத்து எரிக்கும் கருவியை 'வாலுகா எந்திரம்' என்பர். வாலுகம் என்பது மணல். இம்மணல் எரிப்பு பலவகைப்படும். சிலவற்றில் சரக்குள்ள குப்பி மூடப்பட்டும் வேறு சிலவற்றில் மூடப்படாமலும் எரிக்கப்படும். குப்பியின் சரக்குள்ள பகுதி சிலவற்றில் மணலுக்குள்ளும் வேறு சிலவற்றில் பெரிய கலத்தின் அடியிலுள்ள துவாரம் வழியாக வெளியிலும் வைக்கப்பட்டு எரிக்கப்படும்.

## குப்பிக்குச் சீலை செய்யும் முறை

செம்மண், களி, உமிக்கரி, வறுத்த நாட்டுக்கல் நார், சிறுமணல் இவைகளை ஒரெடையாய் எடுத்து நீர்விட்டு அரைத்து இவற்றின் கூட்டளவு பருத்தியின் பஞ்சு சேர்த்து நெகிழ அரைத்துக் குப்பியின் மேல் ஒரு மெல்லிய படையாகப் பூசி உலர்த்திக் கொள்ள வேண்டும். இது உலர்ந்ததும் மீண்டும் மீண்டும் பல தடவைகள் பூசி உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்து கொள்ளுவதால் தீயின் வெப்பத்தால் குப்பி வெடிக்கினும் மருந்து கெடாது. சிலர் அரைத்த புற்று மண் பூசி துணியைச் சுற்றி உலரவிட்டும் எடுத்துக் கொள்வர்.

## நாகரசச் செந்தூரம்

**தேவையான சரக்குகள் :**

நாகம் - 4 பங்கு

வாலை இரசம் - 2 பங்கு

கெந்தகம் - 1 பங்கு

கற்றாழை மடல், கடுக்காய்த்தூள்

**செய்முறை :**

சுத்தி செய்தெடுத்த நாகத்தை ஒரு வாற்கரண்டியிலிட்டுக் கரி நெருப்பில் வைத்து ஊத அது உருகும். அதில் வாலை இரசத்தைக் கொட்ட இவ்விரண்டும் கலந்து உறவாகிவிடும். இவ்வாறான நாகரசத்தைக் கல்வத்திலிட்டு அரைத்து அனுடன் கெந்தகம் சேர்த்தரைத்துக் கொண்டு, கற்றாழையில் கடுக்காய்த்தூள்

சேர்த்துச் சாறு பெற்று அச்சாற்றால் நன்றாக நெகிழ வரைத்துப் பின் சாறுவிடாமல் அரைத்துப் பொடியாக்கி ஏழுசீலை செய்த குப்பியிலடைத்து, ஒரு மட்கலத்தின் அடியில் குப்பியின் அடி நுழையத்தக்க துவாரம் செய்து அதில் குப்பியின் அடிப்பாகத்தை நுழைத்துச் சரக்குள்ள பகுதி கலத்துக்கு வெளியே இருக்கும்படி வைத்து, குப்பியின் வாய்வரை கலத்துக்குள் சற்றுப் பருமணலைக் கொட்டிக் கலத்தைத் தரையில் வைத்துச் சுற்றிலும் வரட்டி அடுக்கித் தீயிட்டு, புடம் ஆறியதும் மணற்புடக் கருவியைப் பிரித்துக் குப்பியினுள் உள்ள தூளை அரைத்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

**பயன்:**

*1/2-1.* நெல்லெடை வீதம் நெய்யிலாவது தேனிலாவது கொடுத்து வர மூலம், பவுத்திரம், மேகப்படை, ஆரம்ப நிலையிலுள்ள குட்டம் முதலியன தீரும். மருந்துண்ணும் காலத்து இச்சாபத்தியம் கடைப்பிடிக்க வேண்டும்.

## வெடி அன்னபேதிச் செந்தூரம்

### தேவையான சரக்குகள்

| | | |
|---|---|---|
| அன்னபேதி | - | 4 பங்கு |
| வெடியுப்பு | - | 1 பங்கு |

### செய்முறை :

சுத்தித்த சரக்குகளை எடுத்து பழச்சாறு விட்டு நன்றாய் அரைத்து சிறுவில்லைகள் செய்து காய்ந்ததும் அகலுக்குள் வைத்து சீலைமண் செய்து சிறுபுடமிட்டு எடுக்க வேண்டும். இவ்வாறு இருமுறை செய்ய செந்தூரமாகும்.

**பயன்:**

*1-2* நெல்லெடை தேனில் கொடுத்துவர சோபை, பாண்டு, காமாலை, பெருவயிறு, நீர்க்கடுப்பு ஆகியவை தீரும்.

# அயச் செந்தூரம்

**செய்முறை :**

சுத்தி செய்த அய அரப்பொடியை ஒதியம்பட்டைச் சாற்றில் மூன்றுநாள் அரைத்து சிறு வில்லைகளாகத் தட்டி காய்ந்ததும் அகலிலிட்டு சீலை செய்து பெரும் புடமிட்டு பின் நாவற்பட்டைச் சாற்றால் மூன்று நாள் அரைத்து மேற்படியே புடமிட்டு எடுக்க வேண்டும். இவ்வாறு மேலும் ஆறு தடவை செய்ய செந்தூரமாகும்.

**பயன்:**

1-2 நெல்லெடையைத் தேனில் கொடுத்துவர, வாயு, வாத, பித்த கபப்பிணிகள், சுக்கிலநட்டம், பாண்டு, சோபை ஆகியன தீரும்.

சில செந்தூர வகைகள் நிறத்தால் கருப்பாக இருப்பதால் அவைகள் 'கருப்பு' என்று அழைக்கப்படுகின்றன. பட்டுக்கருப்புச் செந்தூரம், கௌரி சிந்தாமணிச் செந்தூரம், கஸ்தூரிக் கருப்பு, தாளகக் கருப்பு ஆகிய மருந்துகள் கரு நிறமுடையன.

## முறை 10

# மணல்மறை புடமிட்டெடுத்தல்

சரக்குகளை அரைத்து சிறு சிறு பொட்டணமாகக் கட்டி ஒரு கலத்தில் பாதியளவு மணல் நிரப்பி அதில் இப்பொட்டணங்களை வைத்து மேலும் மணல் கொட்டி மற்றொரு கலத்தால், வாய் பொருந்த மூடிச் சீலைமண் செய்து, பெரும் புடமிட்டெடுத்து ஆறியதும், பொட்டணங்களை எடுத்துப் பொடியை, அரைத்து எடுத்துக் கொள்வது 'மணல் மறைபுடமிட்டெடுத்தல்' எனக் கூறப்படுகிறது.

# கௌரி சிந்தாமணி

**தேவையான சரக்குகள் :**

இரசம், கெந்தகம், வெங்காரம் மூன்றும் சம எடை, ஆமணக்கு நெய்

**தேவையான கருவிகள் :**

மட்கலம், துணி, தீ, மணல்

**செய்முறை**

சுத்தி செய்த சரக்குகள் மூன்றையும் சம எடைவீதம் நிறுத்தெடுத்து முதலில் கெந்தகத்தைக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துப் பின் இரசத்தைச் சிறிது சிறிதாக விட்டரைத்துக் கொள்ள கருமையான பொடியாகும். இதனுடன் வெங்காரத்தைக் கலந்து நன்கு அரைபட்டதும் சிறிது ஆமணக்கு நெய்விட்டுக் கலந்தரைத்து கொட்டைப் பாக்களவாக உருட்டிக் கொண்டு அவ்வுருண்டைகளை ஒவ்வொன்றாய் ஒரு கெட்டியான முரட்டுத் துணியில் வைத்து உலோகக் கம்பியால் கிழிபோலக் கட்டிக்கொள்ள வேண்டும். பின் ஒரு வாயகன்ற மட்கலத்தில் முக்காற்பங்கு மணல் கொட்டி அதில் இப்பொட்டணங்களைப் புதைத்து மேலும் மணல் கொட்டி மட்கலத்தை மற்றொரு கலத்தால் மூடிப் பொருத்துவாயில் அரைத்த புற்றுமண் பூசி மேலே சீலை மண் செய்துகொள்ள வேண்டும். ஒரு குழியில் வரட்டி அடுக்கி அதில் இக்கருவியை வைத்து மேலேயும் வரட்டி அடுக்கி இலகுபுடமாக போட வேண்டும். புடம் எரிந்து ஆறியதும் பிரித்து பொட்டணங்களை எடுத்து அதனுள் இருக்கும் தூளை எடுத்துக் கொள்ள வேண்டும். இத்தூள் பூலாம்பழம்போல கருநிறத்துடன் இருக்கும். (மறுபடியும் புடம் போடக்கூடாது)

**பயன்:**

1-2, நெல்லெடை வீதம் முக்கடுகுத் தூளும் தேனும் கூட்டிக் கொடுக்க சூலை, சுரம், குன்மம், வாயு முதலிய பிணிகள் தீரும். மண்டைச் சூலை, சுரம், குன்மம், வாயு முதலிய பிணிகள் தீரும். மண்டைச் சூலைக்கு மிகவும் பயன்படுகிறது.

## முறை 11

# நத்தைச் சதை சேர்த்தரைத்துப் புடமிட்டெடுத்தல்

உயிரினங்களின் பொருட்களால் சரக்கை அரைத்து வில்லை தட்டி உலர வைத்துப் பின் புடமிட்டு எடுக்கும்

செந்தூர வகைகள் பல உண்டு. தாளகத்தை நத்தைச் சதை சேர்த்தரைத்து வில்லை தட்டி அகலில் வைத்து மேலகல் கொண்டு மூடிச் சீலை மண் செய்து சிறு புடமிட்டெடுக்கக் கருப்பாகும்.

## தாளகக் கருப்பு

### தேவையான சரக்குகள்

*தாளகம், நத்தை*

### தேவையான கருவிகள்:

*அகல், எடைகாட்டி, நிலநெய் அடுப்பு.*

### செய்முறை:

*சுத்தி செய்த தாளகத்தை நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து அதனுடன் இரண்டு பங்கு நத்தைச் சதை சேர்த்தரைத்து ஒரு வில்லையாகச் செய்து கொள்ள வேண்டும். இவ்வில்லையை வெய்யிலில் உலர்த்தி எடுத்து ஒரு அகலுக்குள் வைத்து மேலகல்கொண்டு மூடிப் பொருத்து வாயில் அரைத்த புற்று மண் பூசி மேலே மூன்று சீலைமண் செய்து உலர்த்தி எடுத்துக் கொண்டு ஒரு குழியில் வரட்டி அடுக்கி நடுவில் அகல்களை வைத்து எரியூட்டி சிறுபுடமிட்டு ஆறியதும் பிரித்து எடுத்துக் கொள்ள வேண்டும். வில்லை கருப்பு நிறமாக இருக்கும். இதை அரைத்துத் தூளாக்கி எடுத்துக்கொள்ள வேண்டும்.*

### பயன்:

*1-2, நெல்லெடைவீதம் தாளகக்கருப்பை தேனிற் கூட்டிக் கொடுக்க புப்புசப் பிணிகளான காசம், இரைப்பு, ஐயசுரம், புப்புச சுரம் ஆகியவை தீரும்.*

## பற்பம்

### இயல் :

*உலோகம், உப்பு, உயிரிப் பொருட்கள் முதலானவற்றைத் தனியாகவோ பிற சரக்குகளைக் கலந்தோ சில சாறுகளிலாவது, செயநீரிலாவது அரைத்துப் புடம் போட்டாவது வறுத்து*

எரித்து ஊதியோ வெளுக்கும்படிச் செய்வது பற்பம் எனப்படும். பற்பத்தை நீறு, வெண்ணீறு என்றும் சொல்வர். செந்தூரம் சிவப்பாய் இருத்தல்போல பற்பம் வெண்மை நிறமாய் இருக்கும். சில பற்பங்கள் மங்கலான வெண்மை நிறம் அல்லது சிறு சாம்பல் நிறத்துடன் இருக்கும். தங்க பற்பம் மஞ்சள் சாயலுடன் இருக்கும்.

## முறை 1

## இளநீரில் காய்ச்சி உலர்த்திப் பொடித்தெடுத்தல்

சரக்கை இளநீர் கலந்து காய்ச்சி எடுத்துக் கழுவிக் கொண்டு மேலும் பலமுறை இவ்வாறே காய்ச்சி எடுத்து பொடித்தெடுத்துக் கொள்வது 'இளநீரில் காய்ச்சி உலர்த்திப் பொடித்தெடுத்தல்' எனக் கூறப்படுகிறது.

## பயிற்சி 50

## குங்கிலிய பற்பம்

### தேவையான சரக்குகள் :

வெள்ளைக் குங்கிலியம், இளநீர், நீர்.

### தேவையான கருவிகள் :

அரைகருவி, சுரண்டி, எடைகாட்டி, அளவைக்கலம், கலம், நிலநெய் அடுப்பு, தட்டு, கத்தி.

### செய்முறை :

வேண்டிய அளவு வெள்ளைக் குங்கிலியம் எடுத்து அதை நிறுத்தெடுத்து அரை கருவியிலிட்டு பொடித்துச் சுரண்டி எடுத்துக் கொதிகலத்தில் போட்டு, இளநீரைக் கத்தியால் சீவி வடித்தெடுத்து குங்கிலியத்தின் எடைக்கு நான்கு பங்கு நிறுத்தெடுத்து ஊற்றிக் கலத்தை அடுப்பேற்றி எரிக்க வேண்டும். இப்போது குங்கிலியம் உருகிக் கட்டியாகும். இளநீர் பாதியளவுபோல் சுண்டியதும் குங்கிலியத்தை எடுத்து ஒரு கலத்தில் நீர்விட்டு அதில் போட்டுக் கழுவி எடுத்து உலர்த்திக் கொண்டு மறுபடியும் பொடித்து முன்போலவே

புதியதாக நான்கு பங்கு இளநீர் விட்டு எரித்தெடுத்து மீண்டும் இவ்வாறு செய்தெடுத்துக் கொள்ள வேண்டும். மூன்று தடவைகள் இவ்வாறு எரித்தெடுத்து குங்கிலியத்தை நீரிற் கழுவி நன்கு உலரவிட்டு அநீரகருவியிலிட்டுப் பொடித்துச் சுரண்டி எடுத்து எடை தெரிந்த ஒரு தட்டில் வைத்து எடையைக் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும்.

**தேர்வு:**

வெள்ளைக் குங்கிலிய எடை - கிராம்

இளநீர் எடை - கிராம்

எரிக்கப்பட்ட முறைகள் - கிராம்

ஃபயன்பட்ட மொத்த இளநீர் - கிராம்

இளநீர் எடை =

எரிக்கப்பட்ட முறைகள்

தட்டின் எடை - கிராம்

தட்டு + பற்ப எடை - கிராம்

பற்ப எடை = (தட்டு + பற்ப எடை) - தட்டு எடை

நிற கிராம்

பயன் : 2-5. நெல்லெடை வீதம் வெண்ணெய், நெய், இளநீர் அல்லது நீர் பெருக்கிக் கியாழங்களில் கூட்டிக் கொடுக்க நீரருகல், நீர் எரிவு, வெண் தீட்டு முதலிய பிணிகள் தீரும்.

## முறை : 2

# சுண்ணாம்புக் கவசமிட்டுப் புடமிட்டெடுத்தல்

சரக்கைச் சுண்ண நீரில் தோய்த்தெடுத்து உலரவிட்டுப் புடமிட்டெடுத்து அரைத்துப் பொடியாக்கிக் கொள்ளுவதைச் 'சுண்ணாம்புக் கவசமிட்டுப் புடமிட்டெடுத்தல்' எனக் கூறுவர்.

**பயிற்சி 51**

## கர்ப்பூர சிலாசத்துப் பற்பம்

### தேவையான சரக்குகள் :

*கர்ப்பூர சிலாசத்து, கற்சுண்ணாம்பு, நீர்,*

### தேவையான கருவிகள் :

*கலம், அரைகருவி, சுரண்டி, பெரிய தட்டு, சிறு தட்டு, எடைகாட்டி, வரட்டி*

### செய்முறை :

*சிலாசத்தைப் பழச்சாறு, பசுவின் பால், இளநீர், சுண்ண நீர் இவற்றுள் ஏதாவதொன்றில் போட்டு எரித்து நீர்ப்பொருள் பாதியளவாக வற்றியதும் எடுத்து நீரிற் கழுவி உலர்த்திக் கொள்ளச் சுத்தியாகும்.*

*சுத்தி செய்த கர்ப்பூர சிலாசத்தைப் பலகையாக எடுத்து நிறுத்துக் கொள்ள வேண்டும். தேவையான அளவு கற்சுண்ணாம்பு எடுத்து கலந்து அதை சிலாசத்தின் மேற்பூசி ஒரு பெரிய தட்டில் வைத்து உலரவிட்டு எடுத்துக்கொண்டு, சுண்ணாம்புக் கவசமிட்ட சிலாசத்தின் எடையைக் கண்டுகொள்ள வேண்டும். நான்கு வரட்டி எடுத்து வரட்டிகளைக் கீழே பரப்பி அதன் நடுவில் கவசமிட்ட சிலாசத்துப் பலகையை வைத்து அதன் மேல் ஒரு வரட்டியும் இன்னொன்றைச் சிறு துண்டுகளாக உடைத்துப் பக்கங்களிலும் வைத்து வரட்டியால் தீயிட வேண்டும். வரட்டி முழுவதும் எரிந்து புடம் ஆறியதும் மேல் வரட்டியை நீக்கிச் சிலாசத்தை அப்படியே எடுத்து மேலாயுள்ள சுண்ணக் கவசத்தைச் சுரண்டி நீக்கிவிட்டு அரைகருவியில் வைத்து அரைத்துச் சுரண்டி எடுத்து ஒரு எடை தெரிந்த தட்டில் வைத்து நிறுத்தி எடையைக் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும். (பற்பம் நன்கு முடிவுறாதிருந்தால் அதைச் சுண்ணத் தெளிநீர் விட்டரைத்து ஒரே வில்லையாகச் செய்து இரண்டு வரட்டிகளுக்கிடையில் வைத்துப் புடமிட்டெடுக்கலாம்.)*

**தேர்வு :**

கர்ப்பூர சிலாசத்தின் எடை - கிராம்
கண்ணைக் கவசமிட்ட கர்ப்பூர
சிலாசத்தின் எடை - கிராம்
தட்டின் எடை - கிராம்
(தட்டு + பற்ப எடை) - தட்டின் எடை = கிராம்
ஃ பற்ப எடை - கிராம்

**பயன் :**

5-10 நெல்லெடை வீதம் வெண்ணெய், நெய் முதலியவற்றில் கொடுத்துவர நீரருகல், நீர் எரிவு, வெண் தீட்டு, மேகம், காங்கை முதலிய பிணிகள் தீரும்.

**முறை : 3**

## முட்டை வெண்கருவில் அரைத்துப் புடமிட்டெடுத்தல்

சரக்கை, முட்டை வெண்கருவிட்டு அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து அகலில் வைத்து மேலகல் கொண்டு மூடிச் சீலைமண் செய்து உலர்த்திப் புடமிட்டு எடுத்து அரைத்துப் பொடித்து எடுத்துக் கொள்வது 'முட்டை வெண் கருவில் அரைத்துப் புடமிட்டெடுத்தல்' எனக் கூறப்படுகிறது.

**பயிற்சி : 52**

## படிகார பற்பம்

**தேவையான பொருட்கள் :**

படிகாரம், கோழிமுட்டை,

**தேவையான கருவிகள் :**

அரைகருவி, கரண்டி, எடைகாட்டி, அளவைக்கலம் இரண்டு அகல்கள், துணி, அரைத்த புற்றுமண், தட்டு.

**செய்முறை :**

படிகாரம் தேவையான அளவு நிறுத்து எடுத்துக் கல்வத்திலிட்டு அரைத்துப் பொடியாக்கிக் கொள்ள வேண்டும்.

கோழிமுட்டையை ஒரு முலையில் உடைத்துத் துளை செய்து ஒரு எடை தெரிந்த அளவைக் கலத்தில் கவனமாகச் சாய்த்து வெண் கருவை மட்டும் விட்டுக் கொண்டு அதைச் சிறுகச் சிறுக விட்டு படிகாரப் பொடியை அரைத்து வில்லை தட்டி ஒரு தட்டில் வைத்து உலரவிட்டு, நன்கு காய்ந்ததும் நிறுத்தெடுத்து ஒரு அகலுக்குள் வைத்து மேலகல் கொண்டு மூடி, பொருத்து வாயில் அரைத்த புற்றுமண் பூசி அதன்மேல் மூன்று சீலை மண் செய்து உலரவிட்டு நன்கு காய்ந்ததும் பத்து வரட்டியைக் குழியில் பரப்பி நடுவில் அகல் வைத்து மேலும் பத்து வரட்டிகளை மேலே பரப்பி அடுக்கி எருவில் தீயிட வேண்டும். புடம் நன்கு எரிந்து ஆறியதும் அகலை எடுத்துச் சீலை மண்ணைப் பிரித்து வில்லையை எடுத்து எடை கண்டுகொண்டு அரைத்துப் பொடியாக்கிச் சுரண்டி எடுத்து எடை தெரிந்த தட்டில் வைத்து எடையைக் கணித்துக் கொள்ள வேண்டும்.

## தேர்வு :

| | | |
|---|---|---|
| படிகாரத்தின் எடை | - | கிராம் |
| வெண்கருவின் எடை | - | கிராம் |
| வில்லையின் எடை | - | கிராம் |
| புடத்திற்கான வரட்டிகள் | - | கிராம் |
| புடமிட்ட வில்லையின் எடை | - | கிராம் |
| பற்ப எடை | - | கிராம் |

## பயன் :

2-3 நெல்லெடை வீதம் வெண்ணெய் அல்லது நெய்யில் கொடுத்து வர, நீர் அடைப்பு, நீரெரிவு, வெட்டை, குருதி, அமுரி, பெரும்பாடு முதலிய பிணிகள் தீரும்.

## குறிப்பு:

ஒரு குடுவையில் வெண்ணெய் வைத்து அதன் நடுவில் படிகாரக் கட்டி ஒன்றை வைத்துக் குடுவையை மூடிச் சீலை மண் செய்து புடமிட்டெடுப்பினும் பற்பமாகும்.

## வெங்கார பற்பம்

*வெங்காரத்தையும் முட்டை வெண் கருவாலாட்டி வில்லை செய்து அகலுக்குள் வைத்துச் சீலைமண் செய்து புடமிட்டெடுத்து அரைத்துப் பொடித்து எடுக்கலாம்.*

**பயன்:**

*1-2. நெல்லெடை வீதம் பற்பத்தை வெண்ணெய் அல்லது நெய்யில் கூட்டிக் கொடுத்து வர நீரருகல், நீரடைப்பு, வெள்ளை முதலிய பிணிகள் தீரும்.*

**முறை 4**

## தேனில் போட்டுப் புடமிட்டெடுத்தல்

*ஒரு குடுவைக்குள் தேன் விட்டு அதில் சரக்கைப் போட்டு மூடிச் சீலைமண் செய்து புடமிட்டு எடுப்பது தேனில் போட்டுப் புடமிட்டெடுத்தல் எனக் கூறப்படுகிறது.*

## பவள பற்பம்

**தேவையான சரக்குகள்:**

*கொடிப் பவளம், தேன்,*

**தேவையான கருவிகள்**

*குடுவை, மூடி, எடைகாட்டி, அளவைக்கலம், துணி, அரைத்த புற்றுமண், வரட்டி, அரைகருவி, கரண்டி, தட்டு.*

**செய்முறை:**

*கொடிப்பவளத்தைப் பழச்சாற்றில் ஊறப்போட்டு, எடுத்து உலர்த்திக் கொள்ளச் சுத்தியாகும்.*

*சுத்தி செய்த கொடிப்பவளம் வேண்டிய அளவு நிறுத்து எடுத்து ஒரு குடுவைக்குள் போட்டு அதே எடை தேன் நிறுத்தெடுத்து ஊற்றிக் குடுவையை மூடிகொண்டு மூடி இடைவெளியில் அரைத்த புற்றுமண் பூசி சீலை மண் செய்து நீறான பவளத்தை எடுத்து அரைத்துப் பற்பத்தை எடை தெரிந்த தட்டில் வைத்து நிறுத்தி எடையைக் கணித்துக் கொள்ள வேண்டும்.*

**தேர்வு:**

| | | |
|---|---|---|
| சுத்தித்த பவள எடை | - | கிராம் |
| தேன் எடை | - | கிராம் |
| வரட்டி எண்ணிக்கை | - | எண் |
| பற்பத்தின் எடை | - | கிராம் |

**பயன் :**

1 - 3 நெல்லெடைவீதம் வெண்ணெய், நெய் அல்லது பாலில் கொடுத்து வர இருமல், இளைப்பு, சளிக்கழிச்சல், குருதி அழற்சி முதலிய பிணிகள் தீரும்.

**குறிப்பு:**

பவளத்தை வேறு பலவகைகளாலும் நீறாக்கிக் கொள்ளலாம். அவற்றுள் சில முறைகள் - பவளத்தைக் குடுவையில் போட்டு முன் தேன் விட்டது போல வெள்ளெருக்கன் பால் அல்லது முயலின் குருதி விட்டுக் குடுவையை மூடிச் சீலை செய்து புடமிட்டெடுக்கலாம்.

கொடிப் பவளத்தை முசுமுசுக்கை இலைக் கற்கும் அல்லது இலந்தை இலைக் கற்கத்தில் கவசம் செய்து புடமிட்டெடுக்கலாம்.

பவளப்புற்றையும் கொடிப் பவளம் போலவே புடமிட்டெடுக்க நீறும்.

**முறை : 5**

## இலைக்கற்கக் கவசம் செய்து புடமிட்டெடுத்தல்

சரக்கை இலைக்கற்கத்திற்கு நடுவில் வைத்துப் புடமிட்டெடுத்து அரைத்து எடுத்துக் கொள்ளுவது 'இலைக் கற்கக் கவசம் செய்து புடமிட்டெடுத்தல்' என்று கூறப்படுகிறது.

பயிற்சி : 54

# ஆமை ஓட்டுப் பற்பம்

## தேவையான சரக்குகள் :

ஆமை ஓடு, ஆடாதோடை இலை,

## தேவையான கருவிகள் :

அரைகருவி, கரண்டி, எடைகாட்டி, துணி, நூல், தட்டு, வரட்டி

## செய்முறை :

ஆமை ஓட்டைக் கற்சுண்ணமும் பூநீறும் சம எடை கலந்த தெளிநீரில் காயவைத்து முக்காற் பங்கு நீர் வற்றியதும் எடுத்துக் கழுவி உலர்த்திக் கொள்ளச் சுத்தியாகும்.

வேண்டிய அளவு சுத்தம் செய்த ஆமை ஓட்டை நிறுத்தெடுத்து அதை மூடக்கூடிய அளவு ஆடாதோடை இலை எடுத்துக் கல்வத்திலிட்டுச் சிதைத்தெடுத்து, அதன் எடையைக் கண்டுகொண்டு, அதனுள் ஆமை ஓடுகளைப் புதைத்து ஒரு துணியைச் சுற்றி நூல் கொண்டு வரிந்து கட்டி, ஐம்பது வரட்டியில் புடமிட்டு புடம் ஆறினபின் பிரித்தெடுத்து நீறான ஆமை ஓட்டைத் தனியாக எடுத்து அரைத்துப் பொடித்து எடை கண்டு கொள்ள வேண்டும்.

(ஆமையோடு நன்றாக நீறாமல் இருந்தால் அதை ஆடாதோடை இலைச்சாறு விட்டரைத்து வில்லைத் தட்டிக் காயவைத்து அகலுக்குள் வைத்து மேலகல் மூடிச் சீலைமண் செய்து புடமிட்டெடுத்து அரைத்துக் கொள்ளலாம்)

## தேர்வு :

| | | |
|---|---|---|
| ஆமையோட்டின் எடை | - | கிராம் |
| ஆடாதோடை இலைக் கற்க எடை | - | கிராம் |
| வரட்டி எண்ணிக்கை | - | எண் |
| பற்ப எடை | - | கிராம் |

**பயன் :**

*1-2, நெல்லெடை வீதம் பற்பத்தை பால் அல்லது தேனில் கொடுக்க மாந்தம், குழந்தைகளின் மாந்த பேதி, குன்மம் ஆகிய பிணிகள் தீரும்.*

**முறை : 6**

## பல சாறுகளில் அரைத்துப் புடமிட்டெடுத்தல்

*சரக்கை ஒரு சாற்றால் கூறப்பட்ட நாளளவு வரை அரைத்துப் புடமிட்டு எடுத்துப் பின் வேறு சாறுகளாலும் இவ்வாறே அரைத்துப் புடமிட்டெடுப்பது 'பல சாறுகளில் அரைத்துப் புடமிட்டெடுத்தல்' எனக் கூறப்படுகிறது.*

**பயிற்சி : 55**

# முத்துச் சிப்பி பற்பம்

### தேவையான சரக்குகள் :

*முத்துச் சிப்பி, ஆடாதோடை இலை, நொச்சி இலை, நிலப்பனைக் கிழங்கு,*

### தேவையான கருவிகள் :

*அரைகருவி, கரண்டி, எடைகாட்டி, இடிகருவி, வடிகட்டி, அளவைக் கலம், இரண்டு அகல்கள், துணி, அரைத்த புற்றுமண், தட்டு.*

### செய்முறை :

*முத்துச் சிப்பியைக் கற்சுண்ணாம்பும் பூநீறும் கலந்த தெளிநீரில் போட்டு எரித்து நீர் முக்காற்பாகம் சுண்டியதும் எடுத்த நீர்விட்டுக் கழுவி உலர்த்திக் கொள்ளச் சுத்தியாகும்.*

*சுத்தி செய்த முத்துச் சிப்பியை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு அரைத்துக் கொள்ள வேண்டும். ஆடாதோடை இலையை 'இடித்துப் பிழிதல்' முறைப்படிச் சாறு பிழிந்து வடிகட்டி நிறுத்தெடுத்து பயன்பட்ட சாற்றின் எடையைக் கணித்துக்கொள்ள வேண்டும். பின் கலவையைச் சாறு விடாமல் அரைத்து வில்லைகளாகச் செய்து தட்டில் வைத்து உலர்த்தி நிறுத்தெடுத்து அகலுக்குள் வைத்து மேலகல்*

கொண்டு மூடி இடைவெளியில் அரைத்த 'புற்றுமண் பூசி சீலை மண் செய்து காயவைத்து முப்பது வரட்டியில் புடமிட்டு எடுத்து ஆறியபின் பிரித்து வில்லைகளை எடுத்து எடைதெரிந்துகொண்டு கல்வத்திலிட்டு, அரைத்து முன் பயன்பட்ட சாற்றின் அளவு நொச்சி இலைச் சாற்றை 'இடித்துப் பிழிதல்' முறைப்படி பெற்று எடுத்து, பின் நிலப்பனைக் கிழங்குச் சாற்றாலரைத்துப் புடமிட்டு எடுத்து வில்லையை அரைத்துப் பொடியாக்கித் தட்டில் வைத்து நிறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

## தேர்வு:

| | | |
|---|---|---|
| முத்துச் சிப்பியின் எடை | - | கிராம் |
| பெறப்பட்ட ஆடாதோடைச் சாற்றின் எடை | - | கிராம் |
| மீதமுள்ள ஆடாதோடைச் சாற்றின் எடை | - | கிராம் |
| ஃ பயன்பட்ட ஆடாதோடை இலைச்சாறு | - | கிராம் |
| முதற் புடமிட்ட வில்லைகளின் எடை | - | கிராம் |
| நொச்சிச் சாறு எடை | - | கிராம் |
| வில்லைகளின் எடை | - | கிராம் |
| இரண்டாம் முறை புடமிட்டவில்லைகளின் எடை | - | கிராம் |
| நிலப்பனைக் கிழங்குச் சாற்றின் எடை | - | கிராம் |
| மூன்றாம் முறை புடமிட்ட வில்லைகளின் எடை | - | கிராம் |
| பற்ப எடை | - | கிராம் |

## பயன் :

2-4 நெல்லெடை வீதம் பற்பத்தை வெண்ணெய் அல்லது நெய்யில் கொடுத்துவர, மூலம், பவுத்திரம், காசம், இளைப்பு, குருதிக் காசம் முதலிய பிணிகள் தீரும்.

## குறிப்பு :

இப்பயிற்சியில் நிலப்பனைக் கிழங்கு கிடைக்காத விடத்தில் இரண்டு புடங்கள் மட்டும் போட்டெடுத்துக் கொள்ளலாம்.

முறை : 6

## சாற்றில் சுருக்கிட்டு மடியச் செய்து அரைத்துப் புடமிட்டெடுத்தல்

உலோகங்களில் சிலவற்றை உருக்கி அதன் உருக்கு முகத்தில் சாற்றைவிட்டு மடியச் செய்து, பின் அரைத்துப் புடமிட்டு எடுப்பது 'சாற்றில் சுருக்கிட்டு மடியச் செய்து அரைத்துப் புடமிட்டெடுத்தல்' எனப்படுகிறது.

பயிற்சி : 56

### நாக பற்பம்

**தேவையான சரக்குகள் :**

நாகம், கரிசாலை, கற்றாழைமடல், கடுக்காய்த்தூள்.

**தேவையான கருவிகள் :**

இருப்புச்சட்டி, சலாகை, இடிகருவி, வடிகட்டி, அளவைக்கலம், எடைகாட்டி, கலம், உயர்ந்த விளிம்புள்ள தட்டு, கத்தி, அகல்கள், துணி, அரைத்த புற்றுமண், வரட்டி, நிலநெய்அடுப்பு.

**செய்முறை :**

நாகத்தை நீண்ட வாற்கரண்டியிலிட்டு உலையில் வைத்து உருக்கி இலுப்பை நெய்யில் ஏழு தடவை சாய்த்தெடுக்கச் சுத்தியாகும். கரிசாலையை 'இடித்துப் பிழிதல்' முறைப்படிச் சாறு பிழிந்து வடிகட்டிக் கொண்டு அதன் எடையைத் தெரிந்துகொள்ள வேண்டும். சுத்தி செய்த நாகத்தை வேண்டிய அளவு நிறுத்தெடுத்து இரும்புச் சட்டியிலிட்டு நிலநெய் அடுப்பிலேற்றி தீயிட உருகும். நாகம் உருகி வரும் சமயத்தில் கரிசாலை சாற்றைச் சிறிது சிறிதாக அதில் ஊற்றி சலாகையால் துளாவ மடிந்து விடும். இவ்வாறு நாகம் மடிந்ததும் அதை ஆறவைத்து எடையைத் தெரிந்துகொண்டு அரைகருவியில் கொட்டி அரைத்துக் கொள்ள வேண்டும். மீதமுள்ள கரிசாலைச் சாற்றின் எடையைக் கண்டுகொண்டு பயன்பட்ட சாற்றைக் கணித்துக்கொள்ள வேண்டும்.

கற்றாழை மடலைத் துவர்ப்பி சேர்த்து சாறு எடுக்கும் முறைப்படி சாறு பெற்று வடிகட்டி சாற்றை நிறுத்தி எடை தெரிந்துகொண்ட பின் இதைச் சிறுகச் சிறுக விட்டு நாகத்தை அரைத்து நன்றாக அரைபட்டதும், சாறு விடாமல் அரைத்துச் சிறு வில்லை தட்டி உலர்த்த வேண்டும். மீதமுள்ள கற்றாழைச் சாற்றின் எடையைக் கண்டுகொண்டு பயன்பட்ட சாற்றின் எடையைக் கணித்துக்கொள்ள வேண்டும்.

வில்லைகள் நன்றாகக் காய்ந்ததும் எடை தெரிந்துகொண்டு அகலுக்குள் வைத்து சீலை மண் செய்து ஐம்பது வரட்டியில் புடமிட்டு எடுத்து அரைத்து எடை தெரிந்துகொள்ள வேண்டும். பின்னும் கற்றாழைச் சாற்றால் முன் போலவே அரைத்து இரண்டு புடமிட்டெடுத்து அரைத்து பற்பத்தின் எடையைக் கண்டுகொள்ள வேண்டும்.

## தேர்வு :

| | | |
|---|---|---|
| சுத்தி செய்த நாகத்தின் எடை | - | கிராம் |
| எடுக்கப்பட்ட கரிசாலைச் சாறு | - | கிராம் |
| மீதமுள்ள சாறு | - | கிராம் |
| ஃ பயன்பட்ட சாறு | - | கிராம் |
| மடிந்த நாகத்தின் எடை | - | கிராம் |
| எடுக்கப்பட்ட கற்றாழைச் சாறு | - | கிராம் |
| மீதமுள்ள சாறு | - | கிராம் |
| ஃ பயன்பட்ட சாறு | - | கிராம் |
| வில்லைகளின் எடை | - | கிராம் |
| முதற்புடத்தின்பின் பற்ப எடை | - | கிராம் |
| இரண்டாவது அரைப்பில் பயன்பட்ட கற்றாழைச் சாற்றின் எடை | - | கிராம் |
| வில்லைகளின் எடை | - | கிராம் |
| இரண்டாவது புடத்தின் பற்ப எடை | - | கிராம் |
| மூன்றாவது அரைப்பில் பயன்பட்ட கற்றாழைச் சாற்றின் எடை | - | கிராம் |
| கற்றாழைச் சாற்றின் எடை | - | கிராம் |
| பற்பத்தின் எடை | - | கிராம் |

**பயன் :**

*1 - 2 நெல்லெடை வீதம் வெண்ணெய், நெய் அல்லது தேற்றான் இளகத்தில் கொடுத்துவர மூலம், பவுத்திரம், தீவிர கழிச்சல், நீடித்த கழிச்சல் முதலியன தீரும்.*

**முறை : 8**

## அரைத்து எடுத்துக் கொள்ளுதல் (பச்சை வெட்டுப் பற்பம்)

*நெருப்பிற்குப் போகாமல் செய்துகொள்ளப்படும் பற்பத்தின் முறையில் அரைத்து எடுத்துக் கொள்ளுவது ஒன்று. இது பச்சை வெட்டு மருந்தாகும்.*

## வீர பற்பம் – (பச்சை வெட்டு)

**தேவையான சரக்குகள்:**

*வீர பற்பம் - (பச்சை வெட்டு)*

**செய்முறை :**

*மூன்றையும் சுத்தி செய்து சம எடை வீதம் நிறுத்தெடுத்து ஒவ்வொன்றாய் நன்கு பொடியாகும்வரை அரைத்துக் கலந்து அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.*

**பயன் :**

*1-2 நெல்லெடைவீதம் பனை வெல்லத்தில் கொடுத்துவர கட்டி, புண், கிரந்தி, சூலை, வெள்ளை, நச்சுக்கட்டிகள் முதலியன தீரும். 3 நாட்கள் மட்டும் கொடுக்க வேண்டும். மருந்துண்ணும்போது புளி விலக்கி வறுத்த உப்பு கூட்டிக்கொள்ள வேண்டும்.*

## கல்நார் பற்பம்

**செய்முறை :**

*கல்நாரை ஏழு நாட்கள், ஒவ்வொருநாளும் புதியதான பசு மூத்திரத்தில் ஊறவைத்தெடுத்து இடித்து மாவாக்கி பழச்சாறு அல்லது ஆடு தீண்டாப் பாளைச்சாறு விட்டு பத்துநாளரைத்து*

சிறுவில்லைகள் செய்து காயவைத்துப் பெரும் புடமிட பற்பமாகும்.

**பயன் :**

1-2 நெல்லெடையை நெய் அல்லது வெண்ணெயில் கொடுத்துவர மூத்திர அடைப்பு, வெள்ளை, பல்நோய் தீரும், பல் துலக்கவும் பயன்படுத்தலாம்.

## சிரிங்கி (கலைக்கோடு / மான் கொம்பு) பற்பம்

**செய்முறை :**

மான்கொம்பைச் சிறுசிறு துண்டுகளாக்கி ஒவ்வொரு நாளும் புதிய அகத்திக் கீரைச்சாற்றில் மூன்றுநாள் ஊறவைத்தெடுத்து, அதற்கு இரண்டு பங்கு ஏலத்தை கற்கமாக்கிக் கவசித்து காயவைத்து புடமிட்டெடுத்து மறுபடி குப்பைமேனிச் சாற்றாலரைத்து சிறு வில்லைகள் தட்டி உலர்த்தி அகலிலிட்டு புடமிட பற்பமாகும்.

**பயன் :**

1-2 நெல்லெடையை நெய் அல்லது வெண்ணெயில் கொடுக்க மார்பு நோய், எலும்புருக்கி, கணம், இருமல், அம்மைநோய் ஆகியவை தீரும்.

**குறிப்பு:**

கபநோய்களுக்கு முசுமுசுக்கைச் சாற்றில் நீற்றுவது நன்று.

தீவிர தமரக (இதய) வலிக்கு இப்பற்பத்துடன் பச்சைக் கற்பூரம் $^1/_4$-$^1/_2$ நெல்லெடை கலந்து கொடுக்க பலன் தரும். பலன் தரும்.

## சங்கு பற்பம்

**செய்முறை :**

சங்கைத் துண்டுகளாக உடைத்து எலுமிச்சம் பழச்சாற்றில் நான்கு நாள் ஊறவைத்துக் கழுவி எடுத்து தாமரை இலைக் கற்கத்துக்குள் புதைத்துக் காயவைத்து சிறுபுடமிட்டெடுத்து கல்வத்திலிட்டு பொடித்துக் கொள்ள வேண்டும்.

**பயன் :**

1-2 நெல்லெடையை பால், வெண்ணெய், நெய் ஏதாவதொன்றில் கொடுத்துவர குன்மம், சூலை, தோற்பிணிகள், கண்ணோய் தீரும். சன்னிக்கு துளசிச்சாற்றில் கொடுக்கலாம்.

## கட்டு

**இயல்:**

தாதுப் பொருட்களைத் தனியாகவோ அல்லது வேறு சரக்குகளைச் சேர்த்தோ புகைநீர், செயநீர், சாறு, கியாழம், குழிப்புடநெய் முதலியவற்றால் சுருக்குக் கொடுத்துக் கெட்டியாக்கி எடுத்துக் கொள்வதும் உருக்கியாவது, புடமிட்டாவது, எரித்தாவது கெட்டியாக்கி எடுத்துக் கொள்வதும் கட்டு எனப்படும். இதுதவிர சிறு சரக்குளைத் தனியாகவாவது பற்ப செந்தூரங்களாகச் செய்தாவது சாறு அல்லது தாய்ப்பாலில் அரைத்து உருட்டி, எடுத்துக் கொள்வது 'கட்டு' எனப்படுகிறது. இதை 'மாத்திரைக் கல்' என்றும் சொல்வர்.

## பூரக்கட்டு

இரச கர்ப்பூரத்தை ஒரே துண்டாக எடுத்து அதற்குரிய முறைப்படிச் சுத்தி செய்து எடுத்துக் கொண்டு மேலும் அதை மூன்று நாள் தாய்ப்பாலில் ஊறவைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொருநாளும் புதிய பால்விட்டுக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தெடுக்க பூரம் தூய்மையாகும். ஒரு அகலை அடுப்பேற்றிச் சிறு தீயிட்டு அதில் சிறிது துளசிச் சாறு விட்டு நடுவில் பூரக்கட்டியை வைக்க வேண்டும். சாறு சுண்டச் சுண்ட மேலும் சாறு விட்டுப் பல முறை சுருக்கிட்டு எடுக்க பூரம் கெட்டியாகிக் கட்டும்.

(வேறு முறை)

ஒரு பங்கு பூரக்கட்டிக்குப் பத்து பங்கு கர்ப்பூரம் எடுத்து இரண்டையும் சேர்த்தரைக்க மெழுகு போலாகும். இதை நூறு பங்காக்கி ஒரு பங்கை, பூரக்கட்டியை மூடக்கூடிய அளவு துணியில் தடவி, பூரக்கட்டியைப் போர்த்துச் சுற்றிக் கொளுத்திவிட வேண்டும். இவ்வாறே மீதமுள்ள தொண்ணூற்றொன்பது பங்கையும் செய்து பூரக்கட்டியை எரிக்க பூரம் கட்டும்.

தேனிலாவது பாலிலாவது இதை இழைத்துக் கொடுக்க வெள்ளை, வெட்டை, சூலை முதலியன தீரும். புளி, புகை, மது, மாது நீக்க வேண்டும்.

# வீரக்கட்டு

வீரக்கட்டியைச் சுத்தி செய்தெடுக்க அதற்குச் சம எடை கர்ப்பூரம் எடுத்துக்கொள்ள வேண்டும். காற்று அலையில்லாத இடத்தில் சுத்தமான தரையிலாவது ஒரு தட்டிலாவது பாதி கர்ப்பூரத்தை வைத்து அதன்மேல் வீரக் கட்டியை வைத்து மீதி கர்ப்பூரத்தை அதன்மேல் வைத்துத்தீயிட்டு, கர்ப்பூரம் எரிந்து முடிந்ததும் வீரத்தை எடுத்துக் கொள்ள அது மணியாய்க் கட்டிவிடும்.

(வேறு)

நெல்லிக்காய்க் கெந்தகம், சாம்பிராணி இரண்டும் சம எடை எடுத்து ஒரு வாற்கரண்டியில் போட்டு அனல்காட்டி உருகி வரும்போது, வீரக்கட்டியைப் போட்டுப் புரட்டி எடுத்துக்கொள்ளலாம். சன்னிகளுக்கு இழைத்துக் கொடுக்கலாம்.

# இலிங்கக் கட்டு

கர்ப்பூரம், சாம்பிராணி அரைப்பு தடவிய துணி சுற்றிப் பலமுறை எரித்தெடுத்துக் கொள்ள இலிங்கம் கட்டும்.

(வேறு)

தாய்ப்பாலில் சுருக்கிட்டெடுத்துக் கொள்ளலாம்

(வேறு)

நண்டுக் கொழுப்பில் சுருக்கிட்டுக் கொள்ளலாம்

(வேறு)

சுத்தி செய்த நல்ல இலிங்கக் கட்டி ஒன்று எடுத்து அதற்குப் பதினைந்து பங்கு செங்கொட்டையை எடுத்துக் கொள்ளவேண்டும். செங்கொட்டையைத் துண்டு துண்டாக நறுக்கி ஒரு சட்டியில் பாதிபோட்டு, நடுவில் இலிங்கக் கட்டியை வைத்து, மீதி செங்கொட்டையைப் போட்டு அடுப்பேற்றி எரிக்கும் போது, சட்டியினுள் தீயைக் காட்டினால் செங்கொட்டை தீப்பற்றிக் கொள்ளும். அனல் அடங்கிய பின் இலிங்கக் கட்டியை எடுத்துப் பார்க்க அது கட்டி இருக்கும். இதைத் தேனில் இழைத்துக் கொடுக்க சுரம் தீரும்.

(வேறு)

சாம்பிராணி, நெல்லிக்காய்க் கெந்தகம் இரண்டும் சம எடை எடுத்து அதை வாற்சுரண்டியில் வைத்து அனல் பிடிக்க உருகி வரும். இச்சமயம் இலிங்கக் கட்டியைப் போட்டுப் புரட்டி எடுத்துக் கொள்ள கட்டும்.

## உப்புச் கட்டு

தூய்மை செய்த சோற்றுப்பைக் கல்வத்திலிட்டு அரைத்து நன்றாக அழுத்திப் பிடிக்கக் கட்டியாக நிற்கும். இதற்கு இலந்தை இலைத் துளிர் கற்கத்தைக் கனமாகக் கவசம் செய்து அதன்மேல் ஏழு சீலைமண் செய்து பத்துபுடமிட்டெடுக்கக் கட்டும்.

(வேறு)

சோற்றுப்பைத் தூய்மை செய்து பிரண்டைச் சாற்றாலாட்டி உருண்டை செய்து ஒரு அகலுக்குள் பிரண்டைச் சாம்பல் நிரப்பி அதில் உப்புக் கட்டியை வைத்து மேலும் பிரண்டைச்

சாம்பல் நிரப்பி சிறு புடமிட்டெடுத்து பின் பிரண்டைக் கற்க கவசம் செய்து சீலை மண் செய்து பலமுறை புடமிட்டெடுக்கக் கட்டும்.

தேனில் இழைத்துக் கொடுக்க குன்மம், சூலை, முதலிய பிணிகள் தீரும்.

## தாளகக் கட்டு

தாளகத்தைச் சுத்திசெய்து கட்டியாக எடுத்து சிவகரந்தைச் சாற்றாலும் கரிசாலைச் சாற்றாலும் சுருக்குக் கொடுத்து எடுத்து அதற்கு வெடியுப்பை வெடிப்பு அடங்கும்வரை வறுத்துப் பழச்சாற்றில் அரைத்துக் கவசம் செய்து உலர்த்தி ஏழு சீலை மண் செய்து கோழிப்புடமிட உருகிக் கட்டும். தேனில் இழைத்துக்கொடுக்க சுரம், சன்னி தீரும்.

## இரசக் கட்டு

இரசத்தைத் தூய்மை செய்து ஒரு கலத்தில் ஊற்றி துருசு கலந்த நீருற்றி, நீர் குறையாமல் வைத்து எரித்து துருசுத்தூள் சுருக்கு கொடுக்க இரசம் வெண்ணெய் போலாகும். இதைக் கழுவி எடுத்து உருட்டி சிவகரந்தைச் சாற்றில் ஊறப் போட்டெடுத்து ஊமத்தங்காய்க்குள் வைத்துப் பலமுறை சுட்டெடுக்கலாம்.

(வேறு)

குப்பைமேனிச்சாறு, துருசு, உப்பு சேர்ந்த கலவையில் இரசத்தை விட்டு சிறிதுநேரம் கழித்தெடுக்க வெண்ணெயாகும். இதையும் முன்போலவே கட்டிக் கொள்ளலாம்.

(வேறு)

வெள்வங்கத்தை உருக்கி இரசத்துடன் கலக்க இரண்டும் உறவாகிக் கொள்ளும். இவ்வாறே நாகத்திலும் செய்தெடுத்துக் கொள்ளலாம்.

இதை மேலும் ஊமத்தங்காய்க்குள் வைத்துப் பலமுறை சுட்டாவது சிவகரந்தைக் கற்கத்துள் வைத்துப் பலமுறை புடமிட்டாவது எடுத்துக் கொள்ளலாம்.

**குறிப்பு:**

*சரக்குகள் நன்றாகக் கட்டினால் அதன் கனம் அதிகமாய் இருக்கும். கீழே எறிந்தாலும் உடையாது. நெருப்பில் புகையும் சரக்குகள் நெருப்பிற்கு ஓடாது நிற்கும். சில உருகி ஓடும்.*

மேலே கூறப்பட்ட வகையில் சரக்குளைக் கூட்டிக்கொண்டு அவற்றைப் பற்ப் செந்தூர செய்முறைகட்குப் பயன்படுத்தலாம்.

## உருக்கு

**இயல்:**

*உலோகம், பாடாணம் முதலியவற்றுடன் அதன் நட்புச் சரக்காவது பகைச் சரக்காவது கூட்டி மூசையிலிட்டு மூடிச் சீலை செய்து ஊதுலையில் வைத்து ஊதி எரித்து உருகச் செய்து ஆறியதும் எடுப்பது உருக்கு எனப்படும்.*

*புனுகு, வெங்காரம் இவை உருக்கினங்கட்கு ஆதி எனப்படுகிறது. இவற்றுடன் ஏதாவது சேர்த்து உருக்க சரக்குகள் எளிதில் உருகும்.*

## களங்கு

**இயல்:**

*சரக்குகளைச் சாறு, செயநீர், புகைநீர் இவற்றுள் ஒன்றால் சுருக்கிட்டுக் கொண்டு மூசையிலிட்டு ஊதி உருக்கி மணியாக்கி கொள்ளுவது களங்கு எனப்படும்.*

## பிரளய காலருத்திரன்

**தேவையான சரக்குகள் :**

| | | |
|---|---|---|
| செம்புத்தூள் | - | 4 பங்கு |
| தாளகம் | - | 4 பங்கு |
| பூரம் | - | 1 பங்கு |
| கர்ப்பூரம் | - | 1 பங்கு |
| வெங்காரம் | - | 1 பங்கு |

## செய்முறை :

சரக்குகளைச் சுத்தி செய்தெடுத்து மூசையிலிட்டு உலையில் வைத்து ஊதி எடுக்க அது உருகும். நன்றாக உருகி வந்ததும் எடுத்து ஆறவிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

## பயன்:

தேனில் 2- 3 தடவை இழைத்துக் கொடுக்க நச்சு சுரம், செரியாமைச் சுரம், ஊழிநோய் முதலியன தீரும்.

# சுண்ணம்

## இயல்:

இரசம், பாடாணம், உலோகம் ஆகிய சரக்குகளைத் தனியாகவோ அல்லது கலந்தோ சாறு, செயநீர் முதலியவற்றுள் ஒன்றால் அரைத்து புடமிட்டு எடுத்துக் கொள்வது 'சுண்ணம்' எனப்படும். சுண்ணம் நன்றாக முடிந்தால் காரத்தன்மையுடையதாகவும் வாயின் சளி சவ்வுப் பகுதியில் பட்டால் வேக்காடுண்டாக்கக் கூடியதாயும் இருக்கும். மஞ்சள் தூளில் சிறிது சுண்ணம் கலந்து நீர் விட கலவை சிவப்பாகும். மருந்து நன்றாக முடிந்துள்ளது என்று கொள்ளலாம்.

# வங்கச் சுண்ணம்

## தேவையான சரக்குகள் :

| | | |
|---|---|---|
| வெள்வங்கம் | - | 2 பங்கு |
| இரசம் | - | 2 பங்கு |
| அண்ட ஓடு | - | 2 பங்கு |
| வீரம் | - | 2 பங்கு |

கற்சுண்ணாம்பு, நீர், தீ

## செய்முறை :

சரக்குகளைச் சுத்திசெய்து அளவுப்படி எடுத்துக் கொண்டு வெள்வங்கத்தை ஒரு வாற்கரண்டியிலிட்டு அனலில் வைத்து உருக்கி கல்வத்தில் கொட்டி அதில் இரசத்தைக் கலக்கி அரைக்க இரண்டும் உறவாகிப் பொடியும். இதனுடன் அண்ட ஓட்டையும் வீரத்தையும் கலந்தரைத்துப் பின் கற்சுண்ணாம்பை நீரிற்கலக்கி அதன் தெளிநீரால் அரைத்து நன்றாக அரைப்பட்டதும் ஒரு வில்லையாகத் தட்டி உலர்த்தி மண்ணகலில் வைத்து ஊது உலையில் கரியிட்டு தீ மூட்டி அதில் வைத்து ஊத வேண்டும். அகல் தீயில் காய்ந்து சிவந்ததும் எடுத்துக்கொண்டு ஆறியதும் வில்லையை அரைத்துக் கொள்ளவேண்டும். நன்றாகச் சுண்ணமாகாதிருந்தால் மேலும் சுண்ணத் தெளிநீரிலாட்டிப் புடமிட்டுக் கொள்ளலாம்.

## பயன்:

$^1/_4 - ^1/_2$ நெல்லெடை வீதம் வெண்ணெய் அல்லது நெய்யில் கூட்டிக் கொடுக்க வெள்ளை, கீல்வாயு, நரித்தலை வாதம் முதலிய பிணிகள் தீரும்.

# கற்பம்

## இயல்:

மூலிகைப் பொருட்கள், தாதுப் பொருட்கள், உயிரினப் பொருட்கள் ஆகியவற்றை அவற்றுக்குரிய முறையில் கற்ப மருந்தாகச் செய்து கொள்ளுவது கற்பம் எனப்படும்.

இது நாள்தோறும் செய்துண்பது, முடித்து வைத்துண்பது என்று இருவகைப்படும். நாள்தோறும் செய்துண்ணும் கற்பங்கள் பெரும்பாலும் மூலிகைப் பொருட்களால் ஆனவை. இவை தேனூறல், பிட்டு, கற்கம், சியாழம், வற்றல், என்ற பல வடிவங்களில் இருக்கும். இளகம், செந்தூரம் போன்றவை மடித்து வைத்து உண்ணத் தக்கன. எடுத்துக்காட்டு - சேங்கொட்டை இளகம், பூரணச் சந்திரோதயம் அயபழக் கற்பம், போன்றவை. கற்பங்கள் உள் மருந்தாக மட்டுமின்றி பூச்சு, ஆக்கிராணம், முழுக்கு முதலான வெளியாட்சியாகவும் பயன்படுத்தப் படுவதுண்டு.

# அயக்கரிசாலைக் கற்பம்

**தேவையான சரக்குகள்:**

| | | |
|---|---|---|
| அயப்பொடி | - | 2 பங்கு |
| மண்டூரம் | - | 3 பங்கு |
| கரிசாலைச்சாறு | - | 30 பங்கு |
| பழச்சாறு | - | 20 பங்கு |

**செய்முறை ;**

சுத்திசெய்த அயப்பொடி இரண்டு பங்கு, மண்டூரம் மூன்று பங்கு எடுத்து ஒரு பாண்டத்திலிட்டு கரிசாலைச்சாறு இருபது பங்கு விட்டு வெய்யிலில் வைக்க வேண்டும். சாறு முழுவதும் உலர்ந்ததும் பழச்சாறு இருபது பங்கு விட்டு இவ்வாறே உலர்த்தி எடுத்துப் பின் கரிசாலைச் சாறு பத்து பங்குவிட்டு உலர்த்தி எடுத்து கல்வத்திலிட்டு நன்றாகப் பொடித்துக் கொள்ள வேண்டும்.

**பயன்:**

2-4 நெல்லெடைவீதம் தேன், நெய், பழச்சாறு அல்லது தயிரில் நாற்பது நாள் கொள்ள குருதிக் குறைவு, நரை முதலியன தீரும். வெளுப்பு, ஊதல் நோய், காமாலை, வன்மைக் குறைவு இவற்றுக்கும் வழங்கலாம். புளிப்பு நீக்க வேண்டும்.

# பூரணச் சந்திரோதயம்

**தேவையான சரக்குகள்:**

| | | |
|---|---|---|
| தங்கரேக்கு | - | 1 பங்கு |
| இரசம் | - | 8 பங்கு |
| கெந்தகம் | - | 16 பங்கு |
| பருத்திப் பூச்சாறு | | |
| கல்யாண முருக்கன் பூச்சாறு | | |

## செய்முறை :

கெந்தகத்தைக் கல்வத்திலிட்டு மைபோலரைத்து இரசத்தைச் சிறிது சிறிதாக விட்டு அரைத்துக்கொள்ள வேண்டும். பின் தங்கரேக்கை இதனுடன் கூட்டிப் பொடிபட அரைத்து பருத்திப் பூச்சாற்றால் இரண்டு நாள் அரைத்துப் பின் முள் முருக்கன் பூச்சாற்றால் இரண்டு நாள் அரைத்துப் பிறகு சாறுவிடாமல் அரைத்துப் பொடியாக்கி ஒரு காசிக் குப்பியில் அடைத்து மணற்புடக் கருவியில் வைத்து மூன்று நாட்கள் எரிக்க வேண்டும். இவ்வாறு எரித்து ஆறியதும் எடுத்து மீண்டும் அரைத்துப் பொடியாக்கிக் கொள்ள வேண்டும். இது செந்தூரமாகும்.

## பயன்:

1-2, நெல்லெடை வீதம் செந்தூரத்தை தேன் அல்லது கர்ப்பூராதிச் சூரணத்தில் கலந்து வெற்றிலையில் வைத்துக் கொள்ள சுரம், கபம், நீடித்த கழிச்சல், சூலை, குன்மம், மேகம், காமாலை, கடி நஞ்சு முதலியவை தீரும்.

கற்ப முறைப்படி உண்டுவர நரை திரை நீங்கும். காயம் கற்பமாகும். ஆயுளும் பெருகும்.

# சத்து

## இயல்:

மூலிகைப்பொருள், தாதுப்பொருள், உயிரியப் பொருள் ஆகியவற்றி லிருந்து அவற்றிலுள்ள சத்துக்களைப் பிரித்தெடுத்துக் கொள்வது 'சத்து' எனப்படும்.

சில மூலிகைகளிலிருந்து செம்பு, அயம் முதலியவற்றைப் பிரித்தெடுக்கலாம். அனேக மூலிகைகளைக் கொளுத்திச் சாம்பல் நீரில் கரைத்துத் தெளிவிறுத்து அதைக் காய்ச்சி உப்பு எடுக்கலாம். குப்பைமேனி உப்பு, பிரண்டை உப்பு என்பன இவ்வகையில் பெறப்படுன்றன. சீந்திலில் எடுக்கும் சர்க்கரை 'சீந்திற் சத்து' எனப்படும். பூநாகத்தைச் சாணத்தில் கலந்து உலர்த்தி எரித்து செம்புச் சத்து பெறலாம்.

# குரு குளிகை

**இயல் :**

வாலை இரசத்தையாவது பிற சரக்குகளையாவது கூட்டி மணிபோலச் செய்து கொள்ளுவது குரு குளிகை எனப்படும்.

# புது மருந்துகள்

சித்தர் மருந்துகளைச் சீராக்கிப் பெருக்கும் நோக்கத்துடன் பழைய ஏடுகளினின்றும், தமிழ் மருத்துவ வல்லுநர்களின் வழக்கு முறைகளினின்றும் பல மருந்துகளை அறிந்து அவற்றைச் செய்து பிணியாளிகளுக்கு வழங்கியதில் அவை நல்ல பலனைத் தருவதைக் கண்டு, அவற்றை மாற்றியும் புது வன்மையைப் பெருக்கியும் புது வடிவத்தில் பல நாட்கள் வைத்திருக்கும் வண்ணம் செய்து வழங்கப்பட்டன. ஞாலத்திற்கு அவைகளின் பயன் கிடைக்க வேண்டுமென்ற நோக்கில் அவற்றுள் சிலவற்றை ஈண்டு கூறப் புகுந்தோம்.

# பொடி வகை

## நச்சரிப்பொடி

**சேர்க்கை:**

| | | |
|---|---|---|
| குங்கிலிய பற்பம் | - | 30 கிராம் |
| சிலாசத்துப் பற்பம் | - | 10 கிராம் |
| வசம்பு | - | 10 கிராம் |
| வேங்கைப்பட்டை | - | 10 கிராம் |
| மூங்கிலுப்பு | - | 10 கிராம் |
| மஞ்சிட்டி | - | 10 கிராம் |
| பரங்கிச் சக்கை | - | 20 கிராம் |
| மரமஞ்சள் | - | 5 கிராம் |
| தேவதாரு | - | 5 கிராம் |
| அதிமதுரம் | - | 5 கிராம் |

நன்னாரி - 5 கிராம்

வாய்விடங்கம் - 5 கிராம்

**செய்முறை :**

குக்கில் பற்பம், சிலாசத்துப்பற்பம், நீங்கலாக ஏனைய சரக்குகளை இடித்துப் பொடியாக்கித் துணியில் சலித்து எடுத்து அத்துடன் பற்பங்கள் இரண்டையும் கலந்து விரவிக்கொள்ள வேண்டும்.

**ஆட்சி :**

600 முதல் 1000 மிகிராம் பொடியை நாளுக்கு இரண்டல்லது மூன்று முறையோ அல்லது தேவைக்கேற்றபடியோ வெந்நீரிலாவது பாலிலாவது கொடுக்கலாம்.

**குணம் :**

ஒவ்வாமை, காணாக்கடி, சிறுநச்சுக்கடி முதலியன தீரும்.

## பலாசுப்பொடி :

**சேர்க்கை**

பலாசு வித்து 10 கிராம்

வாய்விடங்கம் 10 கிராம்

வெண் மிளகு 10 கிராம்

மஞ்சள் 10 கிராம்

வெந்தயம் - 5 கிராம்

**செய்முறை :**

பலாசு வித்தின் மேற்றோல் போக்கிப் பருப்பெடுத்து மற்ற பொருட்களையும் கலந்திடித்து துணியில் சலித்துப் பொடியாக்கிக் கொள்ள வேண்டும்.

**ஆட்சி:**

600 முதல் 2000 மிகிராம் பொடியை மாலையில் நீரில் கொடுத்து, படுக்கைக்குப் போகுமுன் மலமிளக்கி மருந்தைக் கொடுக்க வேண்டும்.

**குணம்:**

குடற்கிருமிகள் மறுநாள் மலத்துடன் வெளியாகும்.

# நெய் வகை

## மத்தெருக்கு நெய்

**சேர்க்கை**

| | | |
|---|---|---|
| ஊமத்தன் இலைச்சாறு | - | 500 மிலிட் |
| வெள்ளெருக்கன் பூ | - | 200 கிராம் |
| பூங்கர்ப்பூரம் | - | 5 கிராம் |
| வேப்பெண்ணெய் | - | 250 மிலிட் |

**செய்முறை:**

ஊமத்தை இலையை 'இடித்துப் பிழிதல்' முறைப்படிச் சாறு பிழிந்து அதில் வெள்ளெருக்கன் பூக்கற்கம், வேப்பெண்ணெய் சேர்த்து ஒரு பீங்கான் கலத்தில் பூங்கர்ப்பூரத்தைப் பொடித்துப் போட்டு அதில் நெய்யை வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

**ஆட்சி:**

1 அல்லது 2 துளிவீதம் காதுத்துளைகளில் துளிக்கலாம்

**குணம்:**

செவிக்குலை, செவி எழுச்சி தீரும்.

## தும்பை நெய்

**சேர்க்கை:**

| | | |
|---|---|---|
| தும்பைப் பூச்சாறு | - | 2 மி. லிட் |
| வாதுமை நெய் | - | 30 மிலிட் |

**செய்முறை:**

தும்பைப்பூவை இடித்துப் பிழிந்து சாறெடுத்து வாதுமை நெய் கூட்டிப் பீங்கான் கலத்தில் விட்டெரித்து வடித்துக் கொள்ள வேண்டும்.

**ஆட்சி:**

மூக்கில் 1 அல்லது 2 துளிவீதம் துளிக்கலாம்.

**குணம்:**

மூக்கடைப்பு, பீனசம், நாசிகாபீடம் ஆகிய பிணிகள் தீரும்.

# பற்பம்

## கெந்திபவள பற்பம்

**சேர்க்கை :**

| | | | |
|---|---|---|---|
| தூய்மைசெய்த கெந்தகம் | - | 25 | கிராம் |
| பவளபற்பம் | - | 25 | கிராம் |
| ஆமையோட்டுப் பற்பம் | - | 25 | கிராம் |
| அண்ட யோட்டுப் பற்பம் | - | 25 | கிராம் |
| சிலாசத்துப் பற்பம் | - | 25 | கிராம் |
| வெள்ளை வெங்காயச் சாறு | - | 500 | மி.லிட் |

**செய்முறை :**

நெல்லிக்காய்க் கெந்தியை ஏழுமுறை தூய்மை செய்தெடுத்து அரைத்து ஏனைய பற்பங்களைக் கலந்தரைத்து வெள்ளை வெங்காயச் சாற்றைவிட்டு அரைத்து சாறு வற்றியதும் கல்வத்தோடு வெய்யிலில் காயவைத்தெடுத்து மீண்டும் அரைத்துப் பொடியாக்கிக் கொள்ள வேண்டும்.

**ஆட்சி:**

300 முதல் 600 மி.கிராம் பற்பத்தை வெந்நீரில் நாளொன்றுக்கு இரண்டுமூன்று முறையோ தேவைக்கேற்றபடியோ கொடுக்கலாம்.

**குணம்:**

நச்சு சுரம், சளிசுரம், அண்ணாக்குத்தூறு அழற்சி போன்ற நுண்கிருமிகளால் பரவும் பிணிகள் தீரும்.

## கரைசல் வகை

*பால்துத்த நீர்*

### சேர்க்கை

*பால்துத்தம் - 150 மி.கிராம்*

*பொரிகாரம் - 700 மி.கிராம்*

*வாலை நீர் (distilled water) - 30 மி.லிட்*

### செய்முறை :

*சரக்குகளை வாலை நீரில் கரைத்து பஞ்சினூடாக மூன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வடிகட்டிக் கொள்ள வேண்டும்.*

### ஆட்சி:

*1 அல்லது 2 துளிவீதம் கண்ணில் துளிக்கலாம்*

### குணம்

*கண்ணோய், கண்ணருகல் முதலிய கண்ணோய்கள் தீரும்.*

## காடிக்கார நீர்

### சேர்க்கை

*காடிக்காரம் 60 மி.கி. பன்னீர் 30 மி.லி.*

### செய்முறை:

*காடிக்காரத்தைப் பன்னீரில் கரைத்து, பஞ்சினூடாக மூன்று முறை வடிகட்டி எடுத்து மர நிறமுள்ள ஆடிக்குப்பியில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.*

### ஆட்சி:

*1 அல்லது 2 துளிவீதம் கண்ணில் துளித்து உப்புநீர் விட்டுக் கழுவிக் கொள்ள வேண்டும்.*

### குணம்:

*கண் அமர நோய் தீரும். பிறந்த குழந்தையின் கண்ணில் துளிக்க அமரம் ஏற்படுவதைத் தடுக்கும்.*

## உப்புநீர்

**சேர்க்கை:**

சோற்றுப்பு - 250 மிகிராம்

வாலைநீர் - 30 மிலிட்

**செய்முறை:**

*சோற்றுப்பை வாலை நீரிற் கரைத்துப் பஞ்சினூடாக மும்முறை வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.*

## ஆட்சி, குணம்:

*காடிக்கார நீர் கண்ணில் துளித்ததும் இவ்வுப்பு நீர் பெய்து கழுவி விட காடிக்காரத்தின் நச்சுத்தன்மை அடங்கும். (காடிக்காரம் முறியும் எனக் கூறலாம்)*

## தேன்வகை

## பூண்டுத்தேன் :

**சேர்க்கை :**

பூண்டுச்சாறு - 30 மிலிட்

தேன் - 30 மிலிட்

**செய்முறை:**

*அரைத்து வாட்டிப் பிழிதல்' முறைப்படி பூண்டுச்சாறு பெற்று அதனுடன் தேன்கூட்டிக் கலந்து கொள்ள வேண்டும்.*

**ஆட்சி:**

*மருந்து நனைத்த பஞ்சினால் தொண்டையில் பூசலாம்.*

**குணம்:**

*தொண்டை அழற்சி, அண்ணாக்குத்தூறு அழற்சி முதலியன தீரும்*

# கரிசாலைத் தேன்

**சேர்க்கை**

| | | |
|---|---|---|
| மஞ்சட்கரிசாலை | - | 100 கிராம் |
| கீழக்காய் நெல்லி | - | 60 கிராம் |
| நெருஞ்சில் | - | 40 கிராம் |
| தேன் | - | 450 மிலிட் |

**செய்முறை:**

மூலிகைப் பொருட்களை அரைத்துக் கற்கமாக்கித் தேன் கலந்து நீர்ச்சத்து குறையும்வரை அரைத்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

**ஆட்சி:**

5 முதல் 10 மிலிட் வீதம் நாளொன்றுக்கு மூன்று வேளை கொடுத்து வரலாம்.

**குணம்:**

காமாலை, ஊதல் நோய், முதலியன தீரும்.

# மேனித்தேன்

**சேர்க்கை**

| | | |
|---|---|---|
| வெள்ளருக்கன் பூ | - | 250 கிராம் |
| மிளகு | - | 50 கிராம் |
| குப்பைமேனிச்சாறு | - | 300 மிலிட் |
| கம்மார் வெற்றிலைச் சாறு | - | 450 மிலிட் |
| தேன் | - | 450 மிலிட் |
| கிராம்பு நெய் | - | 10 மிலிட் |

**செய்முறை:**

குப்பைமேனி, கம்மார் வெற்றிலை இவைகளை இடித்துச் சாறு பிழிந்து கொண்டு மிளகை இடித்துத் துணியில் சலித்துக் கொள்ள வேண்டும். வெள்ளெருக்கன் பூவை நீர்த்துவம்

குறைய அரைத்து அதனுடன் மிளகுத்தூள் சேர்த்து சாறுகளைச் சிறிது சிறிதாக விட்டு சாறு வற்றும் வரையும் அரைத்துக் கற்கத்துடன் தேன் கலந்தரைத்து எடுக்கும்போது கிராம்பு நெய் கலந்துகொள்ள வேண்டும்.

**ஆட்சி:**

5 முதல் 10 மிலிட் வீதம் நாளொன்றுக்கு மூன்றுமுறை அல்லது தேவைபட்டபோதெல்லாம் கொடுக்கலாம்.

**குணம்:**

கடுமையான அல்லது நீடித்த இரைப்பு, மூச்சுக்குழல் அழற்சி, காசம் முதலிய பிணிகள் தீரும்.

## வெங்காரத்தேன்

**சேர்க்கை**

| | | |
|---|---|---|
| வெங்காரம் | - | 1 பங்கு |
| தேன் | - | 10 பங்கு |

**செய்முறை:**

வெங்காரத்தைப் பொரித்து தேனுடன் கலந்து அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

**ஆட்சி குணம்:**

பஞ்சில் தோய்த்து தடவிவர வாய்ப்புண்கள் ஆறும்.

## பற்பசை:

**சேர்க்கை**

| | | |
|---|---|---|
| ஓம உப்பு | - | 3 பங்கு |
| புதினா உப்பு | - | 2 பங்கு |
| பூங்கர்ப்பூரம் | - | 1 பங்கு |
| கிராம்பு எண்ணெய் | - | 1 பங்கு |

**செய்முறை:**

தேனுடன் மற்றவைகளைக் கூட்டி அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

**ஆட்சி, குணம்:**

*பல்வலியுள்ள இடத்தில் தொட்டுப் பூசிவர பல்வலி தீரும்.*

## களிம்பு

**பயிற்சி 57**

*வங்க விரணக் களிம்பு*

**தேவையான சரக்குகள்**

| | | |
|---|---|---|
| வங்கச் செந்தூரம் | - | 2 பங்கு |
| மிருதார் சிங்கி | - | 2 பங்கு |
| இரசசெந்தூரம் | - | 1 பங்கு |
| இர்சகர்ப்பூரம் | - | 1 பங்கு |
| தேன் மெழுகு | - | 15 பங்கு |
| தேங்காய் எண்ணெய் | - | 30 பங்கு |

**செய்முறை:**

*மிருதார் சிங்கி, இரசசெந்தூரம், இரசகர்ப்பூரம் இவைகளைத் தனித்தனியாக அரைத்துப் பொடியாக்கி வங்கச் செந்தூரத்துடன் கலந்து விரவி அரைத்தெடுத்துக் கொள்ள வேண்டும். தேன் மெழுகைத் தேங்காய் போட்டு உருக்கிக் கலந்ததும் வடிகட்டி அதில் பொடிகளைத் தூவி நன்றாகக் கிளறி ஆறவிட்டுகெட்டியானதும் எடுத்துக் கொள்ள வேண்டும்.*

**பயன்:**

*புண்களுக்கும், படைகளுக்கும், காளான் படைகளுக்கும் மேலாட்சியாகத் தடவி வர குணமாகும்.*

**பயிற்சி 58**

## சிரங்குக் களிம்பு

**தேவையான சரக்குகள்**

| | | |
|---|---|---|
| கெந்தகம் | - | 4 பங்கு |
| இரசசெந்தூரம் | - | 2 பங்கு |

| | | |
|---|---|---|
| மிருதார் சிங்கி | - | 2 பங்கு |
| தேன் மெழுகு | - | 150 பங்கு |
| வேப்பெண்ணெய் | - | 90 பங்கு |
| நீரடி முத்து நெய் | - | 90 பங்கு |
| தேங்காய் எண்ணெய் | - | 50 பங்கு |

## செய்முறை :

கெந்தகம், இரச செந்தூரம், மிருதார் சிங்கி மூன்றையும் தனித்தனியாய் நன்றாயரைத்துப் பொடித்து பின் சேர்த்தரைத்துக் கொண்டு, எண்ணெய்களைக் கலந்து சூடேற்றி அதில் தேன் மெழுகை உருக்கிக் கலக்குச் செய்து இறக்கி, சற்று சூடாறியதும் பொடியைத் தூவி கெட்டியாகுமட்டும் கிளறி எடுக்க வேண்டும்.

## பயன்:

சிரங்கு, புண்கள், படைகள் இவற்றுக்கு மேலாட்சியாகப் போட்டுவர குணமாகும்.

## குறிப்பு:

அதிக சூட்டில் மருந்துப் பொடிகளைச் சேர்த்தால் களிம்புகள் நிறம் மாறிவிடலாம்.

களிம்புகளைத் தேவையான விடத்து தேங்காய் எண்ணெயில் குழைத்தும் போடலாம்.

சிறு குழந்தைகள் இதை வாயில் வைக்காதபடி எச்சரிக்கையுடன் பயன்படுத்த வேண்டும்.

எண்ணெயை ஒருபாத்திரத்தில் ஊற்றி மற்றொரு நீர் நிரம்பிய பாத்திரத்தில் அமிழ்த்தி நீரினூடாகச் சூடாக்குவது இவ்வகை மருந்துகள் செய்ய நல்லமுறையாகும்.

பயிற்சி 59

## தலைவலிப் பசைக் களிம்பு

**தேவையான சரக்குகள் :**

| | | |
|---|---|---|
| கிராம்பு நெய் | - | 1 பங்கு |
| ஓம உப்பு | - | 1 பங்கு |
| புதினா உப்பு | - | 1 பங்கு |
| பூங்கர்ப்பூரம் | - | 2 பங்கு |
| வெள்ளை மெழுகு | - | 4 பங்கு |
| தேங்காய் எண்ணெய் | | |

**செய்முறை:**

ஓம உப்பு, புதினா உப்பு இரண்டையும் கலந்தால் நீர்த்துவமாகி விடும். இதனுடன் பூங்காப்பூரத்தையும் கிராம்பு நெய்யையும் கலந்து வைத்திருந்து தேங்காய் எண்ணெயில் வெள்ளை மெழுகைச் சிறுசிறு துண்டுகளாக்கிப் போட்டு அடுப்பேற்றப்பட்ட மற்றொரு வாயகன்ற கலத்திலுள்ள நீரில் அமிழ்த்தி உருக்கிக் காய்ந்ததும் எடுத்து சேர்த்துக் கலந்து கொள்ள வேண்டும்.

**பயன்:**

தலைவலி, சுளுக்கு, அடிப்பட்ட வலிகள், வீக்கம் இவற்றுக்குப் பூசலாம். மார்புச் சளிக்கு நெஞ்சிலும் மார்பிலும் பூசி கம்பளியால் மூடிவிடலாம்.

## புறப்பயன் பொடி

**தேவையான சரக்குகள்:**

| | |
|---|---|
| கார்போக அரிசி, கருஞ்சீரகம், காட்டுச் சீரகம், நீரடிமுத்து, கொப்பரைத் தேங்காய், கசகசா, கெந்தகம் | -வகைக்குச் சம எடை |

**செய்முறை:**

சுத்தித்த சரக்குகளைத் தனித்தனியே இடித்துப் பொடித்துக் கலந்துகொள்ள வேண்டும்.

**பயன்:**

காடி அல்லது மோரில் அரைத்து பற்றிட வெண்குட்டம், படர்தாமரை, படைகள் ஆகியவை தீரும்.

## பூரப்பொடி

**தேவையான சரக்குகள்**

| | | |
|---|---|---|
| இரசகர்ப்பூரம் | - | 3 |
| மிருதார்சிங்கி | - | 1 |
| காய்ச்சுக்கட்டி | - | 1 |
| கடுக்காய்த்தோல் | - | 1 |

**செய்முறை:**

சரக்குகளைத் தனித்தனியாகப் பொடித்துக் கலந்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

**பயன்:**

ஆறாத புண்கள், கொருக்குப் புண் இவற்றுக்குத் தூவி வர குணமாகும். இதைப் பச்சை எண்ணெயில் கலந்துபோட்டு வர குழிப்புண்கள் ஆறும்.

# முப்பூ

தமிழருடைய பழங்கால சித்த மருத்துவச் சுவடிகளில் 'முப்பூ' என்ற சிறப்பானதொரு பொருள் பற்றி பலவிடங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளது. முப்பூ என்ற சொல்லினுக்கு 'மூன்று பூதியப் பொருட்களாலானது' என்றும் 'மூன்று உப்புக்கள்' என்றும் பொருள் கூறுவர். இதைப் பற்றிய கருத்துக்களும் இதன் செய்முறைகளும் குழப்பமடையச் செய்வதாகவே இருக்கின்றன. இதன்றி இதைப்பற்றிய மாறுபாடுடைய கருத்துக்கள் பழைய ஏடுகளிலன்றி இன்றைய மருத்துவரிடையேயும் நிறைய உலவுகின்றன. 'நான் முப்பூ முடித்துள்ளேன்' என்றும் 'எனக்கு முப்பூ பற்றிய விவரமனைத்தும் தெரியும்' என்றும் கூறுபவரும் இதை ஒரு பெருமைக்காகவே சொல்லித் திரிகிறார் அன்றி, ஆராயும்போது அவர்களும் இதுபற்றி நிறைய அறிந்தவர்களோ அல்லது இதை முடிக்கத் தெரிந்தவர்களோ இல்லை என்பது புலப்படும். இவர்களுள் ஒருவரையொருவர் ஏளனம் செய்வதும் மற்றவர் கூறுவது தவறென்று வாதிடுவதும் தாராளமாய்க் காணக்கூடியது. இவ்வாறான 'மாறுபட்ட கருத்துக்கள் முற்றுமுணர்ந்த ஞானிகளான சித்தரிடையேயும் இருந்துள்ளதென்பது அவர்களின் ஏடுகளைப் படிக்கையில் தெரிவதோடு வியப்படையவும் வைக்கின்றன. இந்த ஞானிகள் அவ்வாறு கூறிப்போந்தமைக்குக் காரணங்கள் இல்லாமலில்லை.

'முப்பூ' என்ற பொருள் சித்தருடைய மருத்துவத்தில் கண்மணி போன்றதாய் எண்ணப்பட்டது. இதைக்கொண்டு பற்பல செந்தூரங்களும் கட்டு களங்குகளும் எளிதாய் முடியும் என்பதோடு இதனால் செய்யப்பெற்ற மருந்துகள் மிக வன்மையுடையதாயும் இருக்கும் எனப்பட்டுள்ளது. இதையே பல பெரும் நோய்கட்கு மருந்தாய் வழங்கி அவற்றைத் தீர்த்துள்ளனர். அன்றியும் இதுவே குருமருந்தாய் வாதவேதியல் தொழில்களுக்கு ஆதாரமாய் இருந்து வந்துள்ளது. இது மற்றைய சாதாரண மருந்துபோல அனைவராலும் செய்யப்படக்கூடியதாய் விளக்கிக் கூறின் அதனாலேற்படும் விபரீதங்களை எண்ணியே சித்தர் இதனை மறைத்திருப்பர் என்று எண்ண இடமுண்டு. இதனாலேயே முப்பூ பற்றிக் கூறும் ஏடெல்லாம் அதன் , தன்மை, அதனுள் சேரும் பொருட்கள் ஆகியவைபற்றி மறைமொழியாகக் கூறுகின்றன. அதோடு ஒரு சித்தர் மற்றொருவர் உண்மை மறைத்தார் என்று

கூறுவதும் தான் அதே வேளையில் பரிபாஷையிலேயே தொடர்வதும் பல இடங்களில் காணலாம். முப்பூ பற்றிய விளக்கத்தை மறைப்பாக வைத்திருக்கவே சித்தர் இம்முறையைக் கையாண்டிருத்தல் வேண்டும் என்று கூறுவது அமையுமேயன்றி அந்த ஞானியருள் கருத்து வேறுபாடும் காழ்ப்புணர்ச்சியும் இருந்ததென்று கொள்வது முறையாகாது. இதை வலியுறுத்துமுகத்தான் வர்மநூற்களும் வாத வேதியல் நூற்களும் இம்முறையிலேயே எழுதப்பட்டிருப்பதும் அமைகிறது. இவையும் அறிவிலி கைக்கெட்டின் பெருந்தீங்கிழைக்கக் கூடியனவே. முப்பூ, வாதம், வர்மம் பற்றிய ஏடுகள் அனைத்தும் ஒருவர் எத்துணைப் பாண்டித்தியம் பெற்றவராயினும் ஒரு ஆசான் அல்லது குருவின் உதவியின்றி அறிந்துகொள்ள முடியாதனவாம். அவ்வாசானுக்கு தனது மாணவனைப் பற்றிய மிக்க நல்லதொரு எண்ணம் ஏற்பட்டாலன்றி இக்கலைகளை அறிவிக்கமாட்டார்.

இன்றைய நிலையில் கல்வி நிலை மிக மாறுபாடடைந்து உள்ளதால் முடிந்தவரை பல நூற்களையும் படித்து நாமே அவற்றின் கருத்துணர முயல்கிறோம். ஆனால் இது எவ்வளவுக்குப் பயனளிக்கக்கூடியது என்பது தெரியவில்லை. எனினும் இந்த மருத்துவர்கள் முப்பூ பற்றி நூலளவாவது ஓர் அடிப்படை அறிவு பெற்றிருத்தல் நன்றென்பதால் உணர்ந்த அளவு இங்கு அதுபற்றிக் கூறப்பெறுகிறது. இங்கு கூறப்பெறுபவை அனைத்தும் திட்டவட்டமானவை என்பது சிறிதேனும் எண்ண இடமில்லை. இதுபோன்ற வேறு கருத்துக்களும், மாறுபட்டவையும் கூட உண்மைப் பொருளாய் இருக்கலாம்.

## முப்பூவின் விளக்கம்

## வாத – வைத்திய முப்பூ

சித்தரின் பற்பல ஏடுகளையும் இன்றைய பல அறிஞருடைய நூற்களையும் பார்த்தும், பல சித்த மருந்து விற்பன்னர்களின் கூற்றுகளைக் கேட்டும் அறிந்ததில் முப்பூவைப் பற்றிய இக்கருத்துரை எழுதப்பட்டுள்ளதன்றி செய்தறிந்தேற்பட்ட அறிவினாலல்ல.

அகத்தியர் கலைஞானம்,

'சுண்ணமது நீறிற்றென்றால்
மஞ்சளிலே சிவக்க வேணும்'

என்று முப்பூவின் தன்மையைக் கூறுகிறது. இதையே 'போகர் 7000'

'பாலான சுண்ணமதை மஞ்சள் தன்னில்
பாய்ச்சினால் மஞ்சளது சிவந்து போகும்'

என்கிறது. அகத்தியரும் போகரும் இவற்றில் சுண்ணமெனக் குறித்தது முப்பூவையேயாம். முப்பூ சரியானபடி முடிந்தால் அதன் சோதனை இலக்கணம் இதில் சொல்லப்பட்டுள்ளது. ஒரு ஊசி நுனி தொடக்கூடிய மிகச் சிறிய அளவு முப்பூவை பெருமளவான மஞ்சள் அரைத்த கற்கத்தில் சேர்த்தால் அக்கற்கம் தனது மஞ்சள் நிறத்தைவிட்டு சிவப்பு நிறமாக மாற வேண்டும். சுண்ணாம்பு போன்ற ஏதேனும் காரப்பொருட்கள் மஞ்சளில் பட்டால் சிவக்கச் செய்வது அனைவரும் அறிந்த ஒன்றேயாகும். இதனால் முப்பூ காரத்தன்மையுடையது என்பது வெளிப்படை. இம்முப்பூவில் மிகமிகச் சிறிய அளவு பெரிய அளவிலான மஞ்சட் கற்கத்தை சிவக்கச் செய்யும் தன்மையுடையதால் முப்பூவானது கடுங்காரத் தன்மையுடையது எனக் கொள்ளலாம்.

(மஞ்சளில் காரத்தன்மையுடைய பொருட்கள் பட்டால் அது சிவக்கும். இவ்வாறு சிவந்ததில் அமிலத்தன்மையுடைய பொருளைச் சேர்த்தால் தன்னிறமடையும். இது ஆய்வகத்தில் மீண் செயலைக் காணப் பயன்படும் இலிட்மஸ் தாளைப் போன்றது. அமுரிநீரின் மீண் செயலைக் காண மஞ்சளைப் பயன்படுத்தும் முறை 'நந்தி' சித்த மருத்துவ திங்கள் இதழில் 1966ம் ஆண்டு எழுதி வெளியாகியுள்ளது)

இனி, முப்பூவின் பிற தன்மைகளாவன.

போகர் நூலில்

பழமையுடன் வைத்தியமும் வாதயோகம்
பலிக்குமடா முப்பூவின் மார்க்கத்தாலே என்றும்

காகபுசண்டருடைய நூல்

'ஆச்சடா உடம்பிலுள்ள வியாதி யெல்லாம்
அணுப்போல உண்டிடவே பறந்தே போகும்'

என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் முப்பூவே வாதம், வைத்தியம், போகம் எல்லாவற்றுக்கும் குருவாகும் என்று தெரிகிறது. 'அணுப்போல என்று புசண்டர் முப்பூவின் அளவைக் குறிப்பிடுவது அதன் ஆற்றலை விளக்கும். இதன்றி முப்பூ காயகற்பமாகவும் பயன்படும்.

இளமையுடன் முப்பகலும் முப்பூ வாலே
எழிலுடனே நீயுமொரு சித்த னாவாய்
நளபதியும் முப்பூவை உண்டபோது
நரைதிரையும் மாறுமல்லோ இராச னாமே'

என்று போகரும்.

'வாச்சடா தேகசித்தி அதிக மாச்சு
வத்துடனே கூடியுந்தான் வாழ வாச்சு'
என்று காகபுசண்டரும் கூறுகின்றனர்.

பிரக்ருதியால் உடம்பெடுத்து மாளும் உயிர்க்கு அதன் அழியாமை பொருட்டும் தளை (பாசம்) நீக்கல் பொருட்டும் அதன் உடலை அழியாத் தன்மையில் வைத்திருக்கக்கூடியதும் நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடென்னும் தன்மைகள் ஏற்படாமலும் செய்யக்கூடிய யோகத்திற்கும் காயகற்ப முறைக்கும் மாந்தர் பிணியுற்றபோது அப்பிணி போக்க பல பெரும் மருந்துகள் முடிப்பதற்கும் இம்முப்பூவே ஆதாரமானதொன்று என்று அறியலாம். சிதறி ஓடும் தன்மையுடைய திரவ வடிவுடைய மாழை (உலோகம்) யான இரசத்தைக் கட்டவும், குரு குளிகை, ககனக் குளிகை போன்றவை செய்வதற்கும் முப்பூ உதவும். இரும்பு, வெள்ளி, செம்பு போன்ற மாழைகளை பொன்னாக மாற்றும் வேதியல் முறைகளுக்கும் இதுவே முதற் பொருளாம்.

"வளமுடனே முப்பூவைக் கண்டபோது
வாகுடனே ஏமத்துக் குறுதி யாச்சு
- போகர்

'செயம்புகழும் மலைமரங்கள் செடிபூண் டெல்லாம்

செம்பொன்னாய்ச் செய்யும் பரமசிவச் சுண்ணமே'

அகத்தியர் பரிபாஷைத் திரட்டு

"வேதையென்ற வித்தையெல்லாம் கைக்குள் ளாச்சு"

-காகபுசண்டர்

என்று கூறுவதெல்லாம் இதனை மேலும் வலியுறுத்தும். சில ஆண்டுகளுக்கு முன் நவீன அறிவியலார், ஒரு உலோகத்தை மற்றொன்றாக மாற்றுவது முடியாதென்று கூறினர். ஆனால் தற்போது அவைகளின் அணு அமைப்பை மாற்றியமையச் செய்வதன்மூலம் இக்காரியம் செய்யக்கூடியது என்று கூறுகின்றனர். இன்றளவுள்ள உயர்வான நிலைக்கும்மேல் சித்தர் அறிவியல் இருந்துள்ளது என்பது இதனால் தெரிகிறது.

முப்பூ சேர்க்கையால் இரசத்தைக் கட்டிப் பின் சுண்ணமாக்கி மாழைகளின் (உலோகம்) உருக்குமுகத்தில் கொடுத்து அவற்றின் மாற்றுகளை உயர்த்திச் செம்பொன்னாக்கி இருக்கின்றனர். இவ்வாறான முறைகள் பல வாத நூற்களில் கூறப்பெற்றுள்ளன. இவ்வாத முறைகளும் மறைப்பாகவே சொல்லப்பட்டிருப்பதால் அவற்றின் கருத்தறிவது கடினம். பலர் பொருளீட்ட வேண்டுமென்ற பேரவாவினாலும் சிலர் இதன் உண்மையைக் காண வேண்டுமென்ற உந்தலினாலும் தம் கைப்பொருள் யாவும் இழந்துள்ளனர் எனினும் உண்மை கண்டிலர்.

(ஒரு துறவி கழுதைப்பாலிலும் துளசிச் சாற்றிலும் பதனம் பண்ணி ஆனந்தமூலிச் (கஞ்சா) சடைக்குள் வைத்துப் புகைத்து மாற்று உயர்த்திக் கொடுத்த, முற்காலத்திய செம்பினாலான கால் துட்டொன்று நண்பர் ஒருவரிடம் உள்ளது, வேதியலை நம்பச் செய்கிறது)

அடுத்து, வைத்தியத்தில் முப்பூவின் பயன் சிறப்பிடம் பெறுகிறது. மருந்தாக்கவும் மருந்தாகவும் முப்பூ பயன்படுவதோடு, முப்பூவினாலாக்கப் பெற்ற மருந்துகள் எளிதில் முடிவதோடு மிக்க வன்மையும் உள்ளனவாய் மிகப்பெரும் நோய்களையும் தீர்க்கும் தன்மையுடைத்து.

விராலி போன்ற சில மூலிகைகள் சாறு வராத இலைகளுடையன. இவற்றின் சாறு தேவைப்பட்டால் முப்பூவைப் பயன்படுத்தலாம். போகர்,

'மூலிகையாம் சாறுவராத் தழைக ளெல்லாம்

முப்பூவி வணுவளவு பட்டிட் டாக்கால்

கேலியாம் தழைகௌல்லாம் சமமாய்ப் போகும்'

என்று கூறுகிறார். சாறுவராத இலைகளில் அணு அளவு முப்பூவைச் சேர்த்து முறைப்படி பிழிய அவற்றின் சாறு பிரிந்து வடியும்.

செம்பு எவ்வளவு துலக்கினாலும் எப்போதும் களிம்புடனேயே இருக்கும். இதில் பசுவாகிய ஆன்மா எவ்வாறு பாசங்களான ஆணவம், கன்மம், மாயை போன்ற தளைகளோடு கட்டுண்டிருக்குமோ அதுபோலவே இதுவும் ஆகும் பாசங்களின்று நீங்கிய பசு பதியோடிணைந்து பேரொளிப் பிழம்பாய் முக்தியடைவது போலவே இச்செம்பு களிம்பறப் பெறின் பொன்போலாகும். செம்பில் களிம்பை நீக்குவதென்பது பசுவைப் பாசமாகிய தளையிலிருந்து மீட்பது போன்ற மிகக் கடினமானதொரு செயலாகும். இதனாலேயே பாசங்களைக் கூறப்புகுந்த ஆகம வழி நூற்கள் 'செம்பினிற் களிம்பு போல' எனக் கூறிப்போந்தன. தாமிரத்தின் களிம்பை முற்றிலுமாக நீக்குவதற்கும் முப்பூ பயன்படும்.

களிம்புறையும் லோகங்கள் ஐந்தும் தம்தம்

களிம்பற்றுப் படிகமதாய்க் காட்டுஞ் சுண்ணம்'

என்கிறது, அகத்தியர் பரிபாஷைத் திரட்டு.

முப்பூவின் மற்றொரு தன்மை பல உலோகங்களையும் பாடாணங்களையும் மாரணம் செய்வதாம். அயம், வங்கம் போன்ற உலோகங்கள் செந்தூர பற்பமான மருந்துகள் செய்யப்படுமுன் பொடியட வேண்டும். இவைகளை அப்படியே கல்வத்தில் இட்டாட்டினாலோ அல்லது அரத்தால் அராவினாலோ நுண்ணிய உலோகங்களை உருக்கியபின் அவை தமது தன்மையை விட்டு உடைபடக் கூடியதாயும் கல்வத்தில்

அரைபடக்கூடியதாயும் வெட்டையாக ஆகிவிடுகின்றன. இதன்றி எல்லாப் பொருட்களுக்கும் அவற்றின் தன்மையை மாற்றும் பொருட்டு எதிரிடைப் பொருளாயும் முப்பூ தொழிற்படும்.

இதையே போகர்,

மேலான சரக்குக்குக் கால னாகம்

மேன்மையுடன் சரக்கனைத்துங் கொல்லுந் தானே

என்று குறிப்பிடுகிறார். சில மருந்துகள் செய்யும்போது வீரம், இரசம் போன்ற பொருட்களை அப்படியே பயன்படுத்தாது அவற்றோடு நட்புபகைச் சரக்குளைச் சேர்த்து மாரணம் செய்தும் வலுவேற்றியும் பயன்படுத்தப்படும். இதற்காக சேரும் சரக்குகள் நட்பு பகை, ஆண் பெண், சிவசக்திச் சரக்குகள் என்று பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பொருளுக்கும் நட்பு பகைச் சரக்குகள் உண்டு. அவைகளை அறிந்தே இம்மருந்துகளை முடிக்க முடியும். ஆனால் முப்பூ எல்லாப் பொருட்களுக்கும் முதலில் பகைச் சரக்காய் அவற்றை மாரணித்து பின் நட்புச் சரக்காய் அவற்றுக்கு வலுவேற்றும் திறனுடையது.

பற்ப செந்தூரங்கள் சுண்ணம், கட்டு, களங்கு ஆகியவை முடிப்பதற்கு சாறு, செயநீர் போன்றவை பயன்படுகின்றன. இவற்றால் பற்ப செந்தூரங்கள் முடிய நீண்ட நாட்களாவதோடு மிக்க சிரமமும் இருக்கும். ஆனால் முப்பூவைச் சேர்த்தால் எளிதிலும் சில நாட்களிலும் ஆவதோடு தரத்தில் உயர்ந்ததாயும் மிக்க வலுப்பெற்றதாயும் அமையும்.

மேலும் காகபுசண்டர்

"இயம்புகின்ற பாடாண மெட்டுந் தன்னை
என்மகனே சுண்ணமதா யிசைக்குஞ் சுண்ணம்
பயம்பெறவே உபரசங்கள் நூற்றிரண்டு பத்து
பம்பரம்போ லாட்டிவைக்கும் பரமாஞ் சுண்ணம்"

என்றும்,

போகர்,

'கல்லுகளும் முப்பூவால் நீறிப் போகும்"

என்றும் பாடிச் செல்கின்றனர். இவற்றால் எட்டுவிதப் பாடாணங்களும் நூற்றுப் பன்னிரண்டு உபரசங்களும் நவரத்தினங்களான கற்களும் முப்பூவினால் நீறும் எனவும் அவை கடுங்கார பற்பங்களாயும் அவற்றினும் வன்மையான சுண்ணங்களாயும் ஆகும் என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

சித்தர்முறை மருத்துவத்தில் செந்தூரங்களைவிட பற்பங்கள் வலியன என்றும் பற்பங்களைவிட சுண்ணங்கள் வலியன என்றும் கூறப்பட்டுள்ளதுமன்றி நடைமுறையிலும் சுண்ணங்களான மருந்துகளும் கடுங்காரப் பற்பங்களும் மிகுந்த பலனைக் கொடுப்பது அனைவரும் அறிந்த ஒன்றேயாகும். இதன்றி சுண்ணத்தின் ஆயுட்காலமும் ஏனையவற்றைவிட அதிகமாம். செந்தூரம் எழுபத்தைந்து ஆண்டுகளும் பற்பம் நூறு ஆண்டுகளும் சுண்ணம் ஐநூறு ஆண்டுகளும், கடுங்காரச் சுண்ணங்களான, குருகுளிகை, பல நூறு ஆண்டுகளும் கெடாமலும் வன்மை குறையாமலும் இருந்து பயன்படத்தக்கவை. இதனாலும் காரப் பொருட்களே உயர்வானது என்று தெரியலாம். முன்னரே முப்பூ ஒரு கடுங்காரப் பொருள் என்று கூறப்பட்டது இங்கு நினைவுறுதல் நன்று.

அடுத்து இரசத்தைக் கட்டவும், குருகுளிகை, குருமருந்து ஆகியவை செய்யவும் முப்பூ பயன்படும் என்பது

அங்கயர்ந்து திரியாதே யந்தச் சூதம்
அணுகளவு மலையளவில் எடுத்துப் போட
விண்ணோந்து மேருவைப்போல் மாற்றுக் காணும்
வேதைகளின் துறைகோடி விள்ளொண் ணாதே

என்ற அகத்தியர் பரிபாஷைத் திரட்டு பாடலால் அறியப்படுகிறது.

இரசத்தை முதலில் கட்டாக்கி, பின்பு பலவித முறைகளால் குருச்சுண்ணமாக மாற்றி மருத்துவத்திலும் வேதையிலும் பயன்படுத்தலாம். இச்சுண்ணம் மிகச் சிறிய அளவில் வேறு மருந்துகளுடனோ அல்லது அதையே மிகச் சிறிய அளவிலோ கொடுக்க பல நோய்கள் தீரும். அன்றியும் உலோகங்களின் உருக்கு முகத்தில் இதைக் கொடுக்க அவற்றின் மாற்று உயரும். இரசசுண்ணம் செய்யவும் முப்பூ பயன்படும். முப்பூச் சுண்ணம் கடுகில் நாலில் ஒருபங்கை ஒருசேர் இரசத்தில் முறைப்படி சேர்த்துருக்க இரசம் சுண்ணமாகும்.

இரசத்தைக் கட்டியபின் அதனைப் பலவித தீட்சைகளுக்கு உட்படுத்தி குளிகையாகவும் ககனக் குளிகையாகவும் மாற்றலாம். ககனக் குளிகையை வாயிலடக்கிக் கொண்டால் ஆகாய வழியாகப் பறந்து செல்லலாம் எனப்பட்டுள்ளது. ஏனைய குளிகைகளை இடுப்பிலோ கழுத்திலோ அணிய மூச்சு அடங்கும் என்றும்; விந்து இறங்காது என்றும் கூறப்பட்டுள்ளது. இவைகளைச் செய்யவும் முப்பூ பயன்படும். திரளாத பெண்ணைத் திரளச் செய்யவும் முப்பூ பயன்படும்.

'வாலிபப் பெண் ருதுவானாள் முப்பூவாலே' என்கிறார் போகர். மேல்நாட்டு மருத்துவமுறைப்படி வயதடைந்தும் பருவமெய்யாத பெண்களுக்கு ஆர்மோன்கள் என்ற சுரப்பிகளின் சத்துக்களை வழங்குகின்றனர். மேலும் ரசமணியை பசு பால்கறக்கும் போது அதனுடைய திமிளில் வைத்தால் மேற்படி பசு பால் கறக்காது என்றும் கூறப்படுகிறது.

காயத்தை கற்றூணைப்போல் வைத்திருக்கவும் இறப்பை வெல்லவும் காயகற்பமாகத் தொழில் புரியும் எனப்பட்டுள்ளது. இதை

'வளமுடனே காயமது கற்றூ ணாகும்' என்றும்
'இளமையுடன் மூப்பகலும் முப்பூ வாலே
எழிலுடனே நீயுமொரு சித்த னாவாய்
நரைதிரையு மாறுமல்லோ இராச னாமே'

என்று போகர் நூலும்,

'விள்ளவே யங்கியுட சூதந் தண்ணில்
வெந்தயமவ் வளவெடுத்துப் பாதி போட
வெள்ளைநிறப் பால்திரண்டே உறைந்து நிற்கும்
வெள்ளமுதை மூன்றுதினந் தின்றா யானால்
கள்ளமன்று தேகந்தான் அருணன் போலாம்
காயசித்தி யோகசித்தி கைக்குள் ளாகும்
எள்ளளவும் பிசகில்லை ஊழி காலம்
இறப்பின்றிச் சூதமுண்டிருக்க லாமே'

என்று அகத்தியர் பரிபாஷைத் திரட்டும்

'வாச்சடா தேகசித்தி அதிக மாச்சு
பத்துடனே கூடியுந்தான் வாழ லாச்சு'

என்று காகபுசண்டர் பாடலும் கூறுகின்றன.

முப்பூவைக் கொண்டாவது முப்பூவும் இரசமும் சேர்த்துச் செய்யப்பட்ட குருவையாவது கொண்டு உடலைக் கல்லாலான சிற்பத்தைப் போலாக்கலாம். கல்லாலான சிற்பம் பல நூறாண்டுக்காலம் அழியாமல் இருக்கக் கூடியது. இதனாலேயே முற்காலத்தில் கோயில்களில் சிற்பங்களைக் கல்லாலேயே சமைத்துள்ளனர். முப்பூவை முறைப்படி உட்கொண்டால் உடல் அழியாத்தன்மை அடையச் செய்வதோடு இளமையும் ஆகி நரை, திரை ஏற்படாதிருக்கச் செய்யும். இதனால் பல நூற்றாண்டுகள் வாழலாம்.

இரசமும் முப்பூவும் சேர்த்துச் செய்யப்பட்ட குருச்சுண்ணத்தை வெந்தயத்தில் அரைப்பங்களவு ஒரு குவளை பாலில் போட அப்பால் உறைந்து விடும். இதை மூன்று நாட்கள் கொள்ள உடல் சூரியன் கதிர்போல ஒளிபெறும், காயம்சித்திக்கும், யோகம் கைவரப்பெறும், ஊழிக்காலம் வரை இருக்கலாம். ஆன்மா பாசங்கள் நீங்கப்பெற்று வீட்டுப்பேறெய்தி பேரின்பம் துய்த்திருக்கலாம்.

## ஞான — யோக முப்பூ

இதுவரை கூறப்பட்டவை யாவும் பெரிதும் வாத - வைத்திய முப்பூக்களைப் பற்றியவை. இவையன்றி ஞான முப்பூ அல்லது யோக முப்பூ என்றொருவகையும் சித்தர்களால் கூறப்படுகின்றது. இது மனித உடலில் இயற்கையாய் விளைவதென்று பலரும் கருதுகின்றனர். வாசிப் பயிற்சி (பிராணாயாமம்) ஆசனம் போன்ற யோகங்களின்மூலம் இம்முப்பூவை ஆக்கினை (லாடம், பிரம்மாந்திரம்) யில் சுரக்கச் செய்யலாம். இத்தானத்தில் சுவலி என்ற பிட்யூட்டரி சுரப்பி உண்டு என்பதாலும் இச்சுரப்பியின் சத்து மேற்கண்ட குணங்களுடையதாய் இருப்பதாலும் பலர் இதுவே யோக முப்பூ என்கின்றனர். இந்த யோகமுப்பூவினுக்கு அமுது சோமநீர், பூரணம், பால், அமிர்தம், அமுது, தீர்த்தம், சிவக்குடிலை, நீர், சுடர் என்பனபோன்று பல பெயர்கள் உண்டு.

'ஊறும் அருவி உயர்வரை உச்சமேல்
ஆறின்றிப் பாயும் அருங்குளம் ஒன்றுண்டு'

என்று திருமூலர் திருமந்திரமும்

'ஊறும் அமிர்தத்தை உண்டியுறப் பார்க்கில்
கூறும் பிறப்பறுக் கலாம்'

என்று ஔவை குறளும் இதைக் குறிப்பிடுகின்றன. தகுந்த ஆசனத்தில் இருந்து வாயுதாரனை (வாசிப்பயிற்சி, பிராணயாமம்) செய்து மூலக்கனலை மூட்டி குண்டலினி சக்தியை எழுப்பி ஆதாரங்களின் வழியாக அதை மேலேற்றிச் சென்று ஆக்கினையை அடையச் செய்ய ஞான (யோக) முப்பூ சுரக்கும். இவ்வாறு செய்வதற்கு அங்கிதாரனை என்றும் கூறப்படும். யோகமுப்பூ தேனைப்போல் சுழுமுனையில் ஒழுகும். இதை உண்டுகொண்டிருக்க அழியாப் பேரின்பம் உண்டாகும். இது வீடு, வீட்டுப்பேறு, மோட்சம், சிவகதி என்று பலவாறு கூறப்படும். இந்த யோக முப்பூ கார்ப்பு உப்புச் சுவைகளுடன் கூடியதாயும் பால், தேன், நெய் போலவும் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இதைச் சுவைத்த பேர்க்கு இறப்பு வருவதில்லை. பிறப்பறுத்து வாழலாம்.

'உண்டநீர் உனக்குள் பாய்ந்திடில்
சண்டனில்லை சாக்காடெய்துவதில் லைகாண்'

என்று திருவள்ளுவர் ஞானவெட்டியான் கூறுகிறது. இதையே ஔவை குறள்

'சூரியங் கடந்த சுடரொளியைக் கண்டால்

மரணம் பிறப்பில்லை வீடு' என்கிறது. இதனால் இம்முப்பூ

'பிறப்பிறப்பகற்றுமூலி' எனவும் வழங்கும்.

ஆக்கினையில் இவ்வாறு சொட்டும் மதியமுது தவிர அமுரி, பனிக்குடநீர், கன்னிப் பெண்ணின் காமக்களை (இது சாதாரணமாய்க் காணும் யோனிக் கசிவன்று, உணர்ச்சியுச்ச நிலையில் மகளிர் குறியிற் சொட்டும் நீர்த்துவப் பொருளாகும்) போன்றவைகளும் யோக முப்பூக்களாக பல சித்தர்களால் சொல்லப்படுகின்றன. இவற்றில் பல சுரப்பிச் சத்துக்கள் கலந்துள்ளனவாதலின் முன்னர் ஹார்மோன்களையே யோகமுப்பென்று சிலர் கூறுவது வலுப்பெறுகிறது. எனினும் முற்றாய் அறிந்தாலன்றி அதுவே என முடிவுகட்டுதல் ஆகா.

இனிவாதவைத்திய முப்பூக்களின் முக்கிய கூட்டுப் பொருட்களைப் பற்றி ஒரளவு கூறப்படுகிறது. வைத்தியம் என்பது வாதத்தின் (வேதையின்) வாயிலால் வந்ததென்பதே சித்தர்களின் வழி. வாதம் என்பது மாழைகளைப் பொன்னாக்குவது மட்டுமன்று. அழியும் தன்மையும் முதுமையும் அடைந்துவரும் பூத (பிராக்ருத) உடல் அழியாத் தன்மையினதாய் சாம்பவசரீரமாய் ஆக்கவும், இறப்பை வராது தடுக்கவும் நோய்கள் அணுகாது செய்யவும் கூட வேதியல் உதவும். (வேதிப்பது - பேதிப்பது - மாறுதல் அடையச் செய்வது) இவ்வாறு உடலை ஓம்பும் உபாயம் அறிந்தாலேதான் உயிரை நிலைபெறச் செய்ய முடியும். எவ்வித கேடுமில்லாத உடலில் தங்கினாலன்றி உயிரினால் இயமநியமாதிகளைச் செய்து பாசங்களை நீக்கியும் சித்துக்களை கைவரப் பெற்றும் பேரின்ப நிலையை உயிர் அடைய முடியாதாகிவிடும். இதனாலேதான் இதற்கிடையூறாக உள்ள பிணி, மூப்பு இவற்றைப் போக்க வைத்தியம் தோன்றியது. அன்றியும் உலோகங்களை உருக்கி அவற்றைச் செம்பொன்னாய்ச் செய்யும் வேதியல் கலைகளைச் செய்து ஆராயுங்கால் பற்பல உயர் மருந்துகள் பிறந்தன. இவை பெரும் பிணிகள் பலவற்றைப் போக்கப் பயன்பட்டதாலும் வாதத்திலிருந்துதான் வைத்தியம் தோன்றியதென்பர். இதனாலேயே "வாதிமகன் வைத்தியன்" என்று சொல்வது உண்டு. இதனால் வாதமுப்பூவினுக்கும் வைத்திய முப்பூவினுக்கும் பயன்படும் கூட்டுப் பொருட்கள் பெரும்பாலும் ஒன்றாகவே இருக்கின்றன. இன்னும் ஆராயப்புகின் வாதமுப்பென்பதும் வைத்திய முப்பென்பதும் ஒன்றேயாகும். இவை பொருள் வேறுபட்டால் அன்றி பயன் வேறுபாட்டாலேயே பெயர் பெறுகின்றன. முப்பூ வைத்தியத்தில் சேர்க்கப்பட்டால் அது வைத்திய முப்பூவாகும். அதுவே வாதத்தில் உபயோகப்படும்போது வாத முப்பூ என்று கூறப்படும் என்று உணரலாம்.

## முப்பூ செய்முறை

முப்பூ என்பது ஒரேமுறையில் செய்யப்படும் ஒரே பொருளல்ல. முப்பூவைச் செய்வதற்குப் பலவழிகள் உண்டு. ஒவ்வொரு முறையிலும் வேறுபட்ட கூட்டுப் பொருட்கள் சேருகின்றன. வெவ்வேறு சித்தர் வழிமுறையும் வெவ்வேறான

முறைகளில் முப்பூவைச் செய்திருக்கின்றனர். இவற்றின் செய்முறையில் மிக அதிகமாகப் பயன்படும் பொருள் பூநீறு ஆகும். பூநீற்றை பூமிநாதம், மாதுநாதம், சக்திநாதம், கரு, மதியுப்பு வழலை, சுத்த சுங்கை, பிரம்மகற்பம், சாகாமூலி, சவுக்காரம், நாதம், நிலவுப்பு, மண்ணுப்பு, ஆயினாதம், அன்னையுமைநாதம், சுயம்புநீறு, பிறப்பகற்று மூலி, கோவாஜுார் மண் என்பன போன்று பல பெயர்களால் சித்தர் நூல்களில் மறைப்பாகக் கூறப்பட்டுள்ளது. அகத்தியர் பரிபாஷைத் திரட்டில்

'கூறுவார் முதல்வழலை நிலவுப் பாச்சு
குறிப்பறிய வேண்டுமெனில் பூமி நாதம்
மாறுவார் காய்ச்சுவார் வழலை செய்வார்
மதியுப்புப் பிண்டமென்பார் ஆயி னாதம்
தேறுவா ரிதைத்தாமே சிவமா மென்று
செப்பியுந்தா வறியாக்கால் திறந்து சொல்வேன்
பேறுபெற நிலவுப்பே பூநீ றென்று
பேரிட்ட வகைபிரித்துப் பேசு வேனே

எனப்பட்டுள்ளது. திருவள்ளுவர் காயம், கற்பம், குளிகை, கரு, புளி, விந்து மூலப்புளி, சக்திநாதம், கருவண்டு, நேயமுப்பு, பூரணம், கற்பலேகியம், நாதம் போன்ற சொல்லாட்சிகளைக் கையாளுகிறார்

பூநீறு உவர் மண்ணுள்ள சிறப்பு நிலத்தில் விளையும் என்பதை வள்ளுவர் சிந்தாமணி

'நானிலத்தில் நாடெல்லா முவர்கடால்
கானீற்பூடு காடெல்லாம் நீநீறதே

என்று கூறுகிறது. மேலும்,

"உற்றுப்பார் சிவனிருந்த பூமி தன்னில்

ஒரு பூண்டு முளையாது உவருப் பாலே

அற்றுப்போ மருதநில மயானருத்தன்

அவனுடனே சக்தியடுத் திருந்த தாலே

முத்துப்போற் கொஞ்சனஞ்சஞ் சலமுண்டாச்சு

முழுமோச மில்லாமற் பசுமை யாச்சு

சித்திக்கும் பசுந்தமண்ணுந் தண்ணீர் சுண்டாற்

சிவனுப்பு நிலமுவராந் தெளிந்து பாரே

எனப்பட்டுள்ளதும் காணலாம். இதனால் பூநீறு பூக்கக்கூடிய நிலம் உவர் நிலமும் அதில் எந்த பூண்டும் முளைக்காது எனவும் அவ்விடத்தில் மயானருத்திரத்துடன் சக்தி கூடியதால் மிகச் சிறிய அளவில் நீர் கண்டு சதுப்பாய் இருக்குமிடமே பூநீறு விளையக்கூடிய இடம் என்பதும் தெளிவாகிறது.

இவ்வாறான இடத்தில் தை, மாசி, பங்குனி ஆகிய திங்களில் வரும் முழுமதி திதியில், ஞாயிற்றின் உதய காலத்துக்கு முன்னே பூநீறு கதிர்போல பூக்கும். இது பாவிகளுக்கும் தோஷிகளுக்கும் தெரியாது. சித்தர் பூநீறு எடுக்கும் விதியுணர்ந்து இவ்விடத்தில் வந்து பூநீற்றை எடுப்பர் என்பதை,

"மாசிபௌர் ணமியில் வந்தெடுப்பா ரந்தநிலம்

தோசிபல பாவிகட்குத் தோணாது - மாசியும்போய்

பைங்கூனி சித்திரையும் பௌர்ணமியில் சித்தர்வந்து

கங்குல் விடியாதமுன்பு காண்

திருவள்ளுவர் நவரத்தின சிந்தாமணியும்

"நல்லதை மாசிபைங்கூனியா லேதான்

நலமான பூநீறு எடுக்கும் காலம்

வல்லபமாய் பூநீறு விளைவி டத்தை

மகிழ்வாகக் கண்டுதை மாதந் தன்னில்

மெல்லவே தானேகி இடத்தைப் பார்த்து

வேணுமென்ற இடந்தனையும் குறிப்பிட்டேதான்

வல்லவே குடிசையொன்று கட்டிக் கொண்டு

காத்திருந்து பூநீற்றை எடுக்கக் கேளாய்"

என்று திருவள்ளுவர் கற்பமும்

'கேளேதான் சித்திரா பருவ மூன்றும்

கெணிதமுடன் பைங்கூனிக்கு முன்ன

தானேதான் அமாவாசை பூரண வட்டம்

நாள்தேடி பரிபாஷை தாமுணர்ந்து"

என்றும்

"போந்தமுடன் நிலாப்பருவந் தன்னில் சாமம்

பொங்கமுடன் நடுச்சாம வேளை தன்னில்

சாந்தமுடன் பிரணவத்தின் மாறல் கொண்டு

சட்டமுடன் பூநீறு மெடுப்பார் தாமே"

என்று போகர் நூலும் கூறுகின்றன. பூநீறு பூத்திருக்கும்போது குச்சியைப் போலும் கொக்கைப் போலவும் இருவகையாய் இருக்குமென்றும் அவற்றுள் முன்னது ஆண் பூநீறென்றும் பின்னது பெண் பூநீறென்றும் கூறப் படுகிறது.

## பூநீற்றின் பிறப்பு :

பூநீற்றின் பிறப்பு பற்றிப் பலவாறு நூற்களில் காணப்படுகின்றன. திருவள்ளுவர் ஞானவெட்டியான்

"காணீ ரோகதிரி சத்திரன் விந்தினால்

சோனை பாய்ந்து சுகாத்த நீரதாம்

பாணி யோடிப் பரிதி முகம்பட

தாவினி வெண்மைத் தாரணி தன்னிலும்

கோணி லிப்பூமி நாதமெழும்பிடும் என்னும்

வேனினி விந்துநா தமிதாண் டையே

மண்ணாரும் விண்ணாரும் சேர்ந்தா ராகில்

வாதமடம் வெளியாச்சு மாய்கை போச்சு' எனவும்

பல நூற்கருத்துக்களையும் திரட்டிப் பார்க்குமிடத்து பூநீற்றின் பிறப்பு கீழ்க்கண்டவாறு உணரப்படுகிறது.

முன்னரே கூறப்பெற்றதான பூநீறு விளையும் சதுப்பு நிலத்தில் இரண்டு முதல் ஐந்தடி ஆழத்தில் பூமியின் அண்டம் எனப்படும் அண்டக்கற்கள் காணப்படும். இது ஆயில்நாதம். பூமிநாதம், சக்திநாதம் என்றும் சொல்லப்படும். இவ்வண்டமானது சந்திரனின் கதிர்களான விந்துவால் (மதிவிந்து) கருவுறும். இவ்வாறு கருவுற்று பத்து மாதங்கள் சென்றபின் வருகின்ற (தை, மாசி, பங்குனி மாதங்களின்) முழுமதிநாளில் பூமி இக்கருவை உயிர்க்கும். இவ்வாறு பிறந்த குழவியே பூநீறாகும். எனவே பூநீற்றின் தாய் நிலமெனவும் தந்தை சந்திரன் எனவும் கொள்ளலாம்.

பூநீறு கருவில் வளர்ச்சியடையும்போது ஏழுவித மாற்றங்களைப் பெறுகிறது. இவை பூநீற்றின் கருக்கால ஏழு நிலைகளாகும்.

"மண்ணிலெழு பிறப்பாகும் பிரம்ம கற்பம்" என அகத்தியர் பரிபாஷைத் திரட்டு கூறுகிறது. இவ்வேழு நிலைகளையும் அதே நூல் விவரித்து கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

'விள்ளுமே யாதியிலே ஒளியு மாச்சு

வெந்தழலா மறுபிறப்பில் நீல மாச்சு

கள்ளமதா யிறப்பிறப்பு சிவப்பு மாச்சு

காங்கைகொண்டு மறுபிறப்பு வெள்ளை யாச்சு

துள்ளியது பின்பிறப்பு மஞ்ச ளாச்சு

தோகைதடிய னிறமாச்சு மறுபிறப்பில்

உள்ளபடி கடைசிஎழு பிறப்பிற் றாலு

மயர்கோழி முட்டைநிறம் படிக மாமே'

இப்பாடலால் பூநீறு ஆதியில் முதல் நிலையில் ஒளியாயும் பின் நீலம் சிவப்பு வெள்ளை மஞ்சள் மயிற்றோகை

நிறங்களை ஒவ்வொன்றாய் வரிசையாய் பெற்று ஏழாவது நிலையில் கோழிமுட்டையைப் போன்று படிகநிறம் பெறுமென்றும் கூறப்படுகிறது. இவ்வேழு நிலைகளையும் கடந்து முற்றிய பூநீறென்றும் குழவி பிறவி எடுக்கிறது. இக்குழவியின் ஆயுள் மிகச் சொற்பமாகும். நள்ளிரவில் பிறந்து சூரிய உதயத்தில் இறந்துவிடும். எனவே பூநீற்றை வாத வேதியனுக்காவது வைத்தியத்திற்காவது சேகரிக்க வேண்டுமெனின் அது உயிரோடிருக்கும்போதே சேகரிக்க வேண்டுமென்று அறிய வேண்டும். சூரிய உதயத்தின் பின்னர் இப்பூநீறு பல வித மாற்றங்களையடைந்து சவுக்கார உவர்மண்ணாய் ஆகி விடும். இது வண்ணானுக்கே உதவுமல்லால் வாதிக்கும் வைத்தியனுக்கும் பயன்படாது. இவை,

"பெற்றிட்ட பிள்ளைபிதா சந்திர னாச்சு

பிறந்தவுடன் மறுநாள்தா னிறந்து போச்சு

உற்ற உத யாதிதன்னில் பிறந்த பிள்ளை

உதவுமல்லால் செத்தபிள்ளைக் குயிர்தா னுண்டோ

இத்தனையும் பெற்றெடுத்த தாயின் கண்ணோ

எண்பத்தினாள் நாலாயிர லட்சமுயிர்க் கிசைந்தயோனி

சித்திபெற சிவத்தி யிரண்டுங் கூடிற்

சிவசிவா சகலசித்து சிக்குந்தானே'

என்ற உரோமரிஷி வகாரப் பாடலாலும் அறியப்படுகின்றன.

**சேகரித்தல்**

பூநீற்றை வாதியும் வைத்தியனும் சேகரிக்க வேண்டிய விதம் தனியானது. சாதாரணமாய் வீரியமான பூநீற்றை எடுத்து ஏதாவது கலத்தில் சேகரித்தால் அதன் வீரியமான உயிர் கெடுவதன்றி வேறு பல மாறுதலும் அடைந்துவிடும். இதை வீரியத்தோடு வைத்திருக்க சிப்பி அல்லது மூங்கிலாலான கரண்டியால் சேர்த்தள்ளி காடிநீர் அல்லது அன்னக்காடி நிறைந்த பீங்கான் பாத்திரத்தில் போட்டுக் கொள்ள வேண்டும். சில நாற்களில் பூநீறு விளையும் இடத்தைப் பார்த்தறிந்து குறித்துக்கொண்டு பூரணையின் முன் இரவில் அவ்விடத்தில்

மூங்கிலில் அறுத்தெடுத்த கீழே கணு அடைப்புள்ள துண்டுகளை வைத்துவிட, பொங்கி கதிர்போல் வரும் பூநீறு அதனுள் சேர்ந்திருக்கும் என்றும் கூறப்படுகிறது. 'வள்ளுவர் கற்பம்" என்ற நூலில்

'கேளேநீ எடுப்பதற்கு வகையைச் சொல்வேன்

கிருபையுடன் அந்நிலத்தில் பனிவி ழுந்தால்

தானேபார் நுரைபோலும் உப்புப் போலும்

தான்பூத்துக் கொண்டிருக்குங் கதிர்கா ணாமுன்

நாலேதான் காடியிலே எடுத்துப் போட்டு

நலமாக வேணுமட்டுஞ் சேர்த்துக் கொண்டு

கோளொன்று மில்லாமல் வெயிலில் வைக்க

கொடிய உப்புப் பூத்திருக்கும் பார்த்துக் கொள்ளே"

இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்ட பூநீற்றை எடுத்து நெடுங்காலம் வைத்திருக்கப் பத்திரப்படுத்துவதற்குச் செய்யப்படும் வழிமுறைகள் 'பூநீறு காய்ச்சல்' எனப்படும். இதில் பூநீறு போடப்பட்ட காடியுள்ள பாத்திரத்தை அப்படியே வெய்யிலில் வைக்க அதிலுள்ள நீர்த்துவம் ஆவியாகி உப்பு உறையும். இவ்வாறு உறைந்த உப்பில் மறுபடியும் காடிவிட்டுக் கரைத்து வடிகட்டி வெய்யிலில் வைக்க வேண்டும். இவ்வாறு பத்து தடவைகள் செய்து எடுக்கும் உப்பே சிறந்த பூநீறாயும் வாதவைத்தியத் தொழிலுக்கு உகந்ததாயும் வீரியத்துடன் இருக்கும். இது பத்தாம் காய்ச்சல் பூநீறாகும். இதற்குமேல் பூநீற்றுக்குச் செய்யப்படும் சுத்தி தீட்சை எனப்படும். மருந்தாக்குமுன் பூநீற்றைத் தீட்சை செய்து கொள்ள வேண்டும். பூநீற்றின் தீட்சை விதிகளும் வழிகளும் மிகப்பல உண்டு. இவை "தீட்சாவிதி" என சித்தர்களால் குறிப்பிடப்படுகின்றன. இத்தீட்சா விதிகளுள் மிக எளிமையான முறை, பத்தாங் காய்ச்சல் பூநீற்றை பனிநீரில் கரைத்து தெளிவை வடிகட்டி அத்தெளிவைக் காய்ச்சி குழம்பு பருவத்தில் இறக்கி சூரிய வெப்பத்தில் உலரச் செய்து பூநீற்றைப் பெறுவதாம். இம்முறையிலும் பத்துத் தடவைகள் செய்தல் வேண்டும். பனிநீருக்குப் பதிலாக சிலர் பூநீறு தீட்சைக்கு பழச்சாறு

அல்லது குமரிச்சாறு அல்லது பனிக்குடநீரே உதவும் என்றும் கூறுவர். தசதீட்சையும் முடிந்த பூநீற்றை முப்பூ செய்ய பயன்படுத்தலாம்.

## செயற்கை பூநீறு

பூநீறு இயற்கையாய் முன் கூறியவாறு உண்டாவதன்றி அதைச் செயற்கையாயும் விளையச் செய்யலாம். சீனநாட்டில் பூநீற்றைச் செயற்கையாய் விளையச் செய்வதாக போகர் கூறுகிறார். திருவள்ளுவர் செயற்கையாய் பூநீற்றை விளையச் செய்யும் முறையை விரிவாகக் கூறியுள்ளார். நல்ல உவர் மண் நிலத்தில் பூநீறு விளையக்கூடிய இடமாகப் பார்த்தறிந்து அதில் முதல் நாள் ஒருசாண் ஆழத்திற்கு ஒரு குழியைத் தோண்டி மண்ணை நீக்கிவிட்டு குழியில் நன்றாகக் கால்களால் அழுத்தி மண்ணை இறுகச் செய்து, அதன்மேல் பனிநீரைத் தெளிக்க வேண்டும். பின் அக்குழியில் காய்ந்த பனையோலைகளைப் போட்டு எரிக்க வேண்டும். இவ்வாறு மறுநாளும் அதற்கடுத்த நாளுமாய் மூன்று தடவை ஒவ்வொருநாளும் மேலும் ஒருசாண் ஆழம் மண்ணைத் தோண்டி மிதித்து, பனிநீர் தெளித்து பனையோலை போட்டெரிக்க வேண்டும். நாலாவது நாள் மண்ணைத்தோண்டாது மற்றவைகளைச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்து முடிந்த குழியில் ஐந்தாம்நாள் ஒரு அங்குல உயரத்துக்கு பூநீறு பூத்திருப்பதைக் காணலாம். இதை ஒரு கிளிஞ்சிலால் சேகரித்து காடி வைக்கப்பட்டுள்ள பீங்கான் பாத்திரத்தில் போட்டெடுத்துக் கொள்ள வேண்டும்.

தீட்சை முடிந்த பூநீற்றை பலவழிகளில் முப்பூவாக மாற்றலாம்.

'தாங்காத காரஉப்புஞ் சேர்த்து

சரியாகப் புடமிட முப்பூவு மாச்சே' என்று வள்ளுவர் கூறுவதால் காரசாரங்களை விதிப்படி இதனுடன் சேர்த்துப் புடமிட முப்பூ கிடைக்கும் என்றறியலாம்.

பூநீற்றைப் பற்றிய அனைத்து விவரங்களும் ஆராய்ந்தறியக் கூடியனவாகும். இதன் பிறப்பு வகை, இதில் சேர்ந்துள்ள ரசாயனக் கலவை, இதன் காய்ச்சல் தீட்சைவிதிகள் அனைத்தும்

பலவிதமாகக் கூறப்பட்டுள்ளவற்றில் ஒவ்வொரு முறையையும் தற்கால அறிவியல் கண்ணோட்டத்தோடு ஆராய்வது இன்றியமையாததாகும்.

## முப்பூவின் கூட்டுப் பொருள்கள்

பூநீற்றுக்கு அடுத்தபடியாகக் கூறப்படும் முப்பூவின் கூட்டுப் பொருட்களுள் சிறப்பிடம் பெறுவது அண்டக் கல்லாகும். இதைப் பற்றியும் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. பூநீறு விளையக் கூடிய இடத்தில் ஒன்றரை முதல் மூன்றடி ஆழத்தில் தோண்டிப் பார்க்க அண்டக்கல் கிடைக்கும். இதை,

நேர்த்தியுடன் பூநீறு விளைந்திடத்தில்

நினைவாகத் தான்தோண்டிப் பாரு பாரே

பாரேநீ மாதம்பத் தான கற்பம்

பண்பாக வேயிருக்கு மண்டக் கல்லு

நேரேதான் சத்தியுட நாத மாகும்

சேர்மையாய்க் களிதாருரைந் துகல் லாச்சு"

என்ற 'வள்ளுவர் கற்பம்' பாடல்களின் அடிகளால் அறியலாம். முன்னர் பூநீற்றின் பிறப்பு பற்றிக் கூறியவிடத்தில் சொல்லப்பட்டவையும் இங்கு நினைவு படுத்திக் கொள்ள வேண்டும்.

இதற்கு அடுத்தபடியாக முப்பூவிற்குப் பயன்படுவது கல்லுப்பாகும். இது கடற்குருவி, பாறையுப்பு, அப்பு, கன்னி, கங்கை, திராவகம் என்ற பல்வேறு பெயர்களாலும் கூறப்பட்டுள்ளது. இது கட லில் உண்டாகிக் கிடைப்பதென்பது, பலநூற்களிலும் அறியக் கிடக்கிறது.

தானான பாறையுப் பைச்சொல் லலென்றால்

சமுத்திரத்தில் பாறையிலே தானுண்டாகும்'

என்று அகத்தியர், கடலில் உள்ள பாறைகளில் இவ்வுப்பு உறைந்து காணப்படும் என்கிறார்.

திருவள்ளுவர் தனது ஞான வெட்டியானில்,

'கைப்புமாறிக் கடல்நுரைக் கட்டியும்
வைப்புகாணிது கடல்வாரிக் கல்லுப்பதே'

என்று கடலின் நுரையானது தனது கைப்புச் சுவைமாறி கட்டியாக உறைவதே இக்கல்லுப்பு என்கிறார். மேலும் இவர் தனது சிந்தாமணியில்

"முத்துச் சிப்பி முளைந்து படுக்கையில்
சுத்த வெள்ளை சுகாநிதங் காண்கிலார்
பற்று மில்லாப் பளிங்கெனும் போலதாய்
வித்துச் சாரம் விளங்குங் கல்லுப்பதே

என்று கடலின் அடியில் இது வெள்ளையாகப் பளிங்கு போல உறைந்து விழுந்து கிடக்கும் என்றும்

கல்லுப்பென்றால் கரைந்திடா நீரினில்"

என்று அது நீரில் கரையாது இருக்கும் என்றும் கூறுகிறார். ஒருகால் இக்கல்லுப்பு உறைந்து கட்டியாகிவிட்டதும் மேலும் மேலும் கடல் நீர் இதில் பட்டு அதின் உப்பு இதன்மேல் உறைந்து கொண்டே வருவதால் இது கடல் நீரில் கரையாமல் வளர்ந்துகொண்டே வரும் என்று இதனால் உணர வேண்டும்.

முன்னர் பூநீறாவது சக்தியின் (சமுத்திர) நாதமேயாகும் என்றும் இது சூரியன் கதிர் விந்துவால் கருவுறுகிறது என்றும் இதுவே முதற் பிறப்பு என்றும் கூறப்பட்டுள்ளது.

"அலைகடலி னுப்பன்றோ ஆயி னாதம்'
சிக்குகின்ற ஆயினுட நாதந்தானே
சிவகெண்டிக ஆகாசத் துருகண் ணீராம்
முக்கியமாய் முதற்பிறப்பு சமுத்தி ரத்தில்"

என்ற பரிபாஷை பாடல்களின் அடிகள் தெரிவிக்கின்றன.

## வெடியுப்பு :

இனி, முப்பூவின் மற்றொரு கூட்டுப் பொருள் வெடியுப்பாகும். இதற்கு பொட்டிலுப்பு, இணங்கி, காலுக்குமுடி, பருதிவிந்து, "மாமிசத்தின் கருவை விட்டால் மாளாதுப்பு", நிலவுப்பு என்று பல பெயர்கள் உண்டு. இது வைப்பு (செயற்கை) முறையில் மூன்று பங்கு ரவியுப்பும் இரண்டு பங்கு மதியுப்பும் சேர்த்துச் செய்யப்படுகிறது.

"அறையக்கேள் பொட்டிலுப்பு வெடியுப் பையா

வரகுரா சுடைசியென்ற வழலை யாகும்" என்றும்

"மூர்க்கமுள்ள ரவிவிந்து மதியின் விந்து

மூன்று பங்கு மிரண்டு பங்கு மாகக் கூட்டி"

என்றும் கூறும் அடிகளால் அதைத் தெரிந்து கொள்ளலாம்.

இதுவரை கூறப்பட்டவை தவிர கறியுப்பு, சீனாக்காரம், நவாச்சாரம் வீரம், சுண்ணம், காடிநீர், பழச்சாறு, குமரிச்சாறு, அமுரி, பனிநீர் போன்ற பிற பல பொருட்களும் முப்பூ செய்கையில் பயன்படுவதாகப் பல நூற்களிலும் கூறப்பட்டுள்ளன. இவைகள் அனைவரும் அறிந்த பொருட்களேயாதலாலும் இவற்றையும் விவரிக்கப்புகின் விரிந்து கொண்டே போகும் என்பதாலும் இத்துடன் நிறுத்தப் பெறுகிறது.

யோக முப்பூக்களாக எண்ணப்படுகின்றவைகளுள் பிரம்மந்திரத்தில் சொட்டும் சோமநீர் மிகச் சிறப்பினது. இது தவிர, அமுரி, பனிக்குடநீர், காமக்கனை, சுரப்பிகளின் சத்துநீர்கள் போன்றவையும் யோக முப்பூக்களாகும்.

## முப்பூ செய்தல் ஆய்வு

முப்பூவின் அறுதியிட்ட செய்முறைகள் இதுவரை அறியாதவைகளாகும். எனினும் முப்பூவின் செய்கை பற்றிய ஒரு அடிப்படைக் கருத்தை இங்கு கூறுவது நன்றென எண்ணுவதால் அறிந்த வரை சுருக்கமாகக் கூறுப்படுகிறது. இதுவும் திட்டமானதென்று கூறுவதற்கில்லை. முப்பூ பற்றிக் கற்போர் மென்மேலும் படித்து ஆய்வு செய்து உண்மைப் பொருளை அறிய முனையுமிடத்து இது ஒரு முதற்படியாய் உதவும் என்ற எண்ணத்திலே தான் இங்கு விளக்கப்படுகிறது.

சித்தர்களில் சிலர் பூநீறு ஒன்று மட்டுமே முப்பூ செய்யப் போதுமானது என்கின்றனர். பூநீற்றை முன்னர் விவரித்தபடி காய்ச்சல் தீட்சைகட்குட்படுத்தி பின்னர் பல்வேறு முறைகளில் முப்பூவை முடிக்கலாம் என்பது இவர்கள் கருத்து. அகத்தியர், முப்பூ செய்ய பூநீறு, அண்டக்கல், கல்லுப்பு, வெடியுப்பு ஆகிய நான்கு பொருட்கள் பயன்படும் என்று முன்னர் கூறிவிட்டுப் பின்பு மூன்று பொருட்களே முப்பூவின் கூட்டுப் பொருட்கள் என்கிறார். இவ்வாறு அவர் குழப்பமடையச் செய்வதற்கான காரணத்தையும் அவரே கீழ்வருமாறு விவரிக்கிறார். அது,

பாரப்பா நிலவுப்பு வெடியுப்புக்கு

பாடையென்ன ஒன்றல்லா லிரண்டு முண்டோ"

என்று நிலவுப்பென்பதும் வெடியுப்பென்பதும் ஒன்றே என்பதோடு,

தீர்க்கமாய் வெடியுப்பே சிவனு மாகும்

சிலநாளில் சக்தியென்றும் செப்பலாகும்

மர்மமாய்ச் சொன்னதல்லால் உப்பின் மார்க்கம்

வரையறுத்துச் சொல்லாத வகையே தென்றால்

மூர்க்கமுள்ள சித்தர் என்மேல் கோபஞ் செய்வார்

முடிவைத்தேன் இதனாலே முன்பின்னாக

பார்க்கின்ற பின்னைவறி வுடையவ னானாற்

தடுமாறாமல் நூல் முழுதும் பார்ப்பான் தானே"

என்று வெடியுப்புதான் சிவ உப்பாகும் என்றும், சிலநேரம் இதுவே சக்தி உப்பென்றும் கூறப்படும் என்றும், கூறுகிறார். சிவனும் சக்தியும் ஒன்றல்லால் இரண்டில்லை என்பதும் இறைவனின் அறிவு வடிவைச் சிவனென்றும் ஆற்றல் வடிவைச் சக்தியென்றும் உணரச் செய்யும் ஆகமக் கருத்தை இங்கு நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். முப்பூ பற்றி இவ்வாறு மாறுபடவும் முன்பின்னாகவும் மறைத்தும் சொல்லாமல் விளக்கமாகச் சொன்னால் மற்ற சித்தர்கள் கோபப்படுவார் என்றும் படிக்கின்றவன் அறிவுடையவனாக இருந்தால் இவ்வாறான குழப்பங்களுக்குத் தடுமாறாமல் நூல் முழுவதும் கற்றுத் தேர்ந்து உண்மைப் பொருளை அறியவேண்டும்

எனவும் அவர் குறிப்பிடுவது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது.

வேறு சில சித்தர்கள் பஞ்ச பூத உப்புக்களில் மூன்று கூடியதே முப்பூ என்கின்றனர். இம்மூன்றும் வாயு, தேயு, அப்பு அம்ச உப்புக்களாம். இவை மூன்றுமே வாத, பித்த, கபம் எனும் முத்தாதுக்களுக்கும் அடிப்படையானவை. பஞ்ச பூதங்களில் பிருதிவி (மண்) எல்லாப் பொருட்களையும் தாங்குவதாலும் ஆகாயம் (வெளி) எல்லாவற்றுக்கும் இடங்கொடுப்பதாலும் எஞ்சிய மூன்றே பொருட்களின் குணங்களை உருவாக்கக் கூடியன என்பதால் அவை மூன்றும் முக்கியமெனக் கொண்டுள்ளனர். இவை வாத, பித்த கபமாகிய முத்தாதுக்களையும் சமநிலையில் வைத்திருக்க உதவுவதால் யாவும் சரிநிலைப்பட இவைகள் பயனாகும்.

பஞ்சபூத உப்புக்களை வகுத்துக் கூறுகையில் சித்தரிடையே மாறுபட்ட விதிகளுண்டு. பெரும்பாலும் நவாச்சாரம் (வாயு) வெடியுப்பு (தேயு), படிகாரம் (அப்பு) மூன்றுமே கூறப்பட்டாலும் சில இடங்களில் வேறு உப்புக்களை இவைகளினிடத்தில் கூறலும் ஒன்றை மற்றொன்றினிடத்தில் கூறலும் காணப்படலாம். எவ்வாறாயினும் காற்று, தீ, நீர் ஆகிய மூன்று அம்சங்களையும் உடைய உப்புகளின் கூட்டாலானதே முப்பூ என்பதில் கருத்து வேறுபாடில்லை என்பதோடு வைத்திய விதிக்குப் பொருந்துமாறும் அமைந்துள்ளது சிறப்பான ஒன்றாகும்.

இன்னும் சில சித்தர்கள் தாவர பொருட்கள் சில முப்பூவை உண்டாக்கக் கூடியன என்று கூறுகின்றனர். அவை காளான் போன்றவையாம்.

முப்பூவின் தத்துவம் பற்றி ஆராய்ந்து நோக்குமிடத்து முதலில் இது ஒரு 'செயல் திறன் ஊக்கி' என்று தெரிய வருகிறது. பற்ப செந்தூரங்கள் கட்டு, களங்கு போன்ற மருந்துகளை எளிதாயும் விரைவாயும் முடிக்க இது பயன்படுகிறது. மருந்துகளுக்கு வன்மை கொடுப்பதுமன்றி நோய்களை மிகச் சிறிய அளவிலேயே எளிதாகக் குணமாக்குகிறது. கீழ்வகுப்பு உலோகங்களை மாற்று உயரச் செய்து செம்பொன்னாக்குகிறது. யோக முப்பூ உடலைக் காய கற்பமாக்கி நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடு என்னும் கேடுகளிலிருந்து காக்கிறது.

இவ்வளவு பண்புகள் உள்ள பொருளாக கூறப்பட்டுள்ளது முப்பூ என்ற ஒன்றேயாகும். இப்பண்புகளுக்கான அடிப்படைத் தத்துவம் என்னவென்று ஆராயுமிடத்து, அது சித்த மருத்துவ அடிப்படையிலேதான் விளக்கம் பெறுகிறதேயன்றி, நவீன அறிவியல் அடிப்படையில் விவரிக்க முடிவதில்லை. அவ்வாறு முயன்றாலும் இடையிடையே பல முரண்பாடுகள் ஏற்படுகின்றன. நவீன அறிவியல் இன்னும் வளர்ந்து கொண்டே வருகிறதன்றி வளர்ச்சி முற்றுப் பெறவில்லை என்பது, சித்தரின் தத்துவம் முடிவுக்கும் முடிந்த பொருளாய் எவ்வித நவீன அறிவியல் கருத்தையும் தன்னுள்ளடக்கிக் கொள்வதாய் இருக்கிறது என்பதே இதற்கான ஏதுவாம். பேறு காலத்தில் ஒரு பெண்ணின் கால்பெருவிரலில் மருந்தூட்டப்பட்ட நூலொன்றை விதிப்படி கட்டினால் எளிதாகக் குழந்தை பிறக்கும் என்றோ வடக்கே போகின்ற வேரை மருந்துக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றோ இன்னின்ன திதியில் இன்னின்ன இடங்களில் அமிர்தநிலை நிற்பதால் அவ்விடம் சத்திர (அறுவை) சிகிச்சை செய்யக்கூடாது என்றோ படிக்கும்போது நமக்குச் சிரிப்பு வருகிறது. ஆனால் சீனத்து அக்குபஞ்சர் முறைப்படி ஒருவனுக்கு மூர்ச்சையூட்டி கபால அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்ற செய்தி கேட்டதும் வியக்கிறோம். வர்மநூலில் இன்ன காலத்தில் (வர்மஸ்தானத்தில்) அடி அல்லது குத்து விழுந்தால் இத்தனைகாலம் மூர்ச்சையாயிருப்பான். இன்ன காலத்தில் ஊன்றி இளக்கித் தடவி மென் தீண்டாக்காலத்தில் அழுத்தி அடங்கல் செய்ய எழுந்திருப்பான் என்றெல்லாம் கூறப்படுவதை நாம் ஆராய்ந்து பார்ப்பதில்லை. இது போன்ற பல சித்தர் கோட்பாடுகளைக் கண்டறிந்தால் அவை உலகிற்கு நிச்சயமான நற்பலன்கள் பலவற்றைக் கொடுப்பதாயிருக்கும். இவ்வாறு கூறுவதினால் பிறநாட்டு அறிவியலிலோ மருத்துவ முறையிலோ வெறுப்படைய வேண்டும் என்பது பொருளல்ல. அறிவியலும் அதன் விளைவுகளும் மக்கள் நலத்துக்கெல்லாம் உடைமையாகும். எது எவர் கூறும் நற்கருத்தாய் இருந்தாலும் அதை எவரும் ஏற்பதே சிறப்பு. அதிலும் மருத்துவன் நோயுற்றோருக்கு அவருக்கேற்பட்டுள்ள வேதனையைக் குறைப்பதோடு நீடித்த நல்வாழ்வை ஏற்படுத்திக் கொடுப்பதிலுமே குறியாவதன்றி, என்னது அவரது என்ற சச்சரவில் ஈடுபாடுடையவனல்ல

என்பதை அறிய வேண்டும். எனவே சித்தருடைய கோட்பாடுகளாலும் அறிவியல் கருத்துகளாலும், உலகிற்கு ஏற்படக்கூடிய நன்மைகளை நோக்கமாகக் கொள்வதே சித்தர் அறிவியலை ஆராயும் ஒவ்வொருவரின் கடமையாகும். அது போலவே எந்த நாட்டு அறிவியலாய் இருந்தாலும் அது நம்மிடம் சேர்ந்த பிணியாளிக்கு உதவுமாயின் அதைப் பயன்படுத்திக் கொள்ளுவதிலும் எவ்விதத் தவறுமில்லை. இங்கு முப்பூவைப் பற்றிய விளக்கம் நவீன அறிவியல்படி அறிவுக்குப் புலப்படவில்லை என்பதாலேயே சித்தர் முறைப்படி கூறப்படுகிறது.

உலகும் உலகிலுள்ள பொருட்கள் யாவும் ஐந்து பூதங்களின் சேர்க்கையால் ஆனவை. அவையாவன ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி (விதை, வளி, தீ. நீர், மண்) என்பன. அனைத்தும் பஞ்சபூதமயமே என்பதை

'வாதத்தில் வெடியுப்பும் பஞ்ச பூதம்
 வன்மையாம் சவுக்காரம் பஞ்ச பூதம்
தீதற்ற செயநீரும் பஞ்ச பூதம்
 செயமான குருவுக்கும் பஞ்ச பூதம்
கோதற்ற சடத்துக்கும் பஞ்ச பூதம்
 குறியாகப் பழுப்பதற்கும் பஞ்ச பூதம்
காதத்த கலங்களுக்கும் பஞ்ச பூதம்
 காரியமாய் வாதமெல்லாம் பஞ்ச பூதம்'

என்று போகர் கூறுகிறார். இவ்வாறே மனித உடலும் இவ்வைந்து பூதச்சேர்க்கையாலானதேயாகும். இதனாலேயே யாக்கையின் தோற்ற ஒடுக்கத்தைப் பற்றிக் கூறப்புகுந்த சித்தர் நூற்கள் இதை மட்பாண்டத்தோடும் இறைவனைக் குயவனாகவும் விவரித்துள்ளன. மண்ணாலான பாண்டத்தில் ஐந்து பெரும் பூதங்களின் சேர்க்கையும் மிக வெளிப்படையாய் அமைவதே இதற்குக் காரணமாகும். எந்தெந்தப் பொருளிலும் இவ்வைம்பூதச் சேர்க்கை அதன் தோற்றத்தில் இவ்வளவு தெளிவாய்த் தெரிவதில்லை.

'நந்தவனத் திலோர் ஆண்டி - அவன்

நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி

கொண்டு வந்தானொரு தோண்டி - மெத்தக்

கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி'

என்று கடுவெளிச்சித்தரும்

மண்ணதை எடுத்து நீரால்

வகையுடன் பிசைந்து பாண்டம்

பண்ணியே கனலாற் சுட்டு

பாதையொன் பதுதான் விட்டே

அண்ணலார் வாய்வா காச

மடைத்தனைவம்பூதக் கட்டை

விண்ணமாம் நாகை நாதர்

விளையாட்டென் றறிவாய் நெஞ்சே'

என்று கணபதி தாசரும் (நெஞ்சறிவிளக்கம்) பாடுவதால் இதை அறியலாம். இதன்றி மனித உடல் பஞ்சபூதக் கூறுபாட்டாலானது என்பதை,

'அஞ்செழுத்தி லேபிறந்து அஞ்செழுத்தி லேவளர்ந்து

அஞ்செழுத்தை ஓதுகின்ற பஞ்சபூத பாவிதான்'

என்றும்

'இறைவனால் எடுத்தபாடத் தில்லையம் பலத்திலே

அறிவினால் அடுத்தகாயம் அஞ்சினால் அமைந்ததே'

என்றும் கூறும் சிவவாக்கியார் யோகநிலைப்பாடல் அடிகளாலும் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வைந்து பூதங்களிலும் மண்பூதம் எல்லாவற்றையும் தாங்குகிறது. ஆகாயபூதம் எல்லாவற்றுக்கும் இடங்கொடுக்கிறது. ஆகையால் இவை இரண்டும் பொருட்களுக்குப் பொதுவாய் இருக்கின்றன. ஏனைய மூன்று பூதங்களான வளி, தீ, நீர் ஆகிய மூன்றும் பொருட்களின் குணாதி தன்மைகளை

உருவாக்குகின்றன. வளி, அழல், ஐயம் என்கிற மூன்று உயிர்த்தாதுக்களையும் உண்டாக்கியவை இவைகளே. மனித உடலில் இவ்வுயிர்த் தாதுக்கள் 4:2:1 அல்லது 1:0.5: 0:25 என்ற விகிதத்தில் நன்னிலையில் தத்துவங்கள் அனைத்தும் தத்தம் நிலையில் இருக்கும்போது காணப்படும். இவ்விகிதத்தினின்றும் இவை கூடியோ அல்லது குறைந்தோ காணப்பட்டால் அது தத்துவங்களின் (மெய்ப்பாடு, கரு) இயல்பு பிறழ்ந்த நிலையாகும். இப்போது முத்தாதுக்களும் முக்குற்றங்கள் எனப்படும் இவ்வியல்புப் பிறழ்வு பிணிபட்ட நிலையில் காணப்படுகிறது. எனவே மனித உடல் நன்னிலையில் இருக்கச் செய்வதற்கும் பிணியுறச் செய்வதற்கும் இம்மூன்று பூதங்களே முக்கிய காரணம் என்பது வெளிப்படை. இம்மூன்று பூதங்களின் கூட்டும் செயலும் தத்தம் நிலையில் காணப்பட்டால் உடல் நன்னிலையில், பிணிபோன்ற கேடுகளற்றிருக்கும். இப்போது எந்த நுண்ணுயிரிகளும் மனித உடலைத் தாக்க முடியாததாக இருக்கும்.

இதனாலேயே

"மிகினும் குறையினும் நோய்செயு நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று"

என்று திருவள்ளுவர் குறளில் குறிப்பிடுகிறார்.

சித்தர் முறைப்படி நோய்தீர்ப்பு விதியாவது மாறுபட்ட வளி அழல் ஐயங்கள் (முக்குற்றங்களை) தத்தம் நிலைகளுக்குக் கொண்டு வருவதாகும். இதற்குக்கூடிய பூதாம்சத்தைக் குறைக்கவும் குறைந்த பூதாம்சத்தைக் கூட்ட வுமான மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. இப்பூதங்கள் எவ்வெப்பொருளில் எவ்வாறு அமைந்துள்ளன என்று அறிவதற்குச் சுவை நமக்கு வழிகாட்டியாகிறது. ஏனெனில் ஆறு வகைச் சுவைகளும் இவ்விரண்டு முக்கிய பூதங்களின் கூட்டுறவாலேயே பிறக்கின்றன. இவை,

மண்ணோடு வளி சேர்ந்தால் துவர்ப்பு,

தீ சேர்ந்தால் புளிப்பு

நீர் சேர்ந்தால் இனிப்பு

விண்ணோடு வளி சேர்ந்தால் கைப்பு

வளியோடு தீ சேர்ந்தால் கார்ப்பு

தீயோடு நீர் சேர்ந்தால் உப்பு

என்னும் இவைகளையறிந்து தக்க மருந்துகளைக் கொடுக்க பிணி நீங்கி வாதபித்த கபங்கள் தத்தம் நிலையை அடையும்.

முப்பூ தனித்தன்மை வாய்ந்த குணமுடையது. இதில் இம்மூன்று பூத அம்சங்களுமே உள்ளதால் எந்தப் பூத அம்சக் கூடுதல் குறைவையும் தன்னிலைப்படுத்தும். அவை கூடிய இடத்துக் குறைக்கவும் குறைந்த இடத்துக் கூட்டவும் செய்யக்கூடிய ஆற்றலுடையது என்றும் தெரிகிறது. பிணியானது எந்த ஏதுவால் வந்ததாயினுஞ் சரி, பிணியில் எவ்வித குறிகுணங்கள் காணப்பட்டாலும் சரி, முப்பூ அவைகளை மாற்றி குணத்தைக் கொடுக்கும்.

அடுத்து உலோகங்கள், பாடாணங்கள், கற்கள், உபரசப் பொருட்கள், தாவரப் பொருட்கள் ஆகிய அனைத்தையும் பற்பமாகவும் சுண்ணமாகவும் நீற்றுகின்ற ஆற்றல் முப்பூவினுக்குண்டு என்பது முன்னமேயே அறிந்தது. அதோடு முப்பூ தான்சேர்ந்த மருந்துகளுக்கு அதிக வீரியத்தையும் கொடுக்கக் கூடியது. இது ஒரு கடுங்காரச் சுண்ணப் பொருளாதலால் இது முடிகிறது. இராஜதிரவம் எனப்படும் அக்குவா ரீஜியா' மூன்று அமிலங்களின் கூட்டால் ஆனதும் அனேகமான உலோகங்களைக் கரைப்பதுமாகும். முப்பூ இதை விடவும் அதிக வீரியமுடைய காரப்பொருளாய் இருத்தல் வேண்டும். எனவேதான் எந்தப்பொருளையும் பேதப்படுத்தவும் இது பயன்படுகிறது. இக்குணத்தைக் கொண்டே உயர் மருந்துகளை முடிக்கவும், வேதையிலும் முப்பூவைப் பயன்படுத்தி இருக்கின்றனர்.

முன்னர் விளக்கம் பெற்ற மூன்று பூதங்களும் முப்பூவில் உண்டென்பதை உரோமரிஷியார்

'நடத்தையிந்த வாய்வு அங்கி •அப்பு மூன்றும்

நாதமென்ற சாதரத்தி வீறா லாச்சு'

என்று கூறுவதால் தெளியலாம். இங்கு இவர் 'நாதநீறு' என்று குறிப்பிடுவது பூநீற்றைக் கொண்டு முடிக்கப் பெற்ற முப்பூச் சுண்ணமாகும். இதில் வாய்வு, அங்கி, அப்பு (வளி, தீ, நீர்)

என்ற மூன்று பூதாம்சங்களும் உண்டென்று அவர் கூறுகிறார். இவை வேறு பல முப்பொருட்களோடும் ஒப்புமை கூறப்பட்டுள்ளது. உரோமரிஷியார் பாடலிலேயே இவற்றை ரவி, மதி, அங்கி (சூரியன், சந்திரன், நெருப்பு) என்றும் திரிகர்த்தாவான பிரம்மா, விஷ்ணு, சிவன் என்றும் கூறப்பட்டுள்ளதை

'கூறுகிறேன் வழலையின் தன்குறிப்பை மைந்தா
நிறைவான ரவிமதியு மங்கி மூன்றும்
நின்றுஅகண்டலத்தில் பிரம்ம விந்தாய்
மறைவான மூன்றதனால் உலக மாச்சு
வாய்வங்கி அப்புமன்றோ மகத்தாம் விந்தே
உறுகதிர் முச்சுடரோடு திரிகர்த்தா வாகி
ஓங்கிநின்ற பிரமசித்தி உண்மை மன்னோ'

என்ற பாடல் அடிகளால் அறியலாம்.

இவ்வாறு ஒப்பாகக் கூறப்படும் முப்பொருட்களாவன.

| | | |
|---|---|---|
| வாய்வு | அங்கி | அப்பு |
| வாதம் | பித்தம் | கபம் |
| பிரம்மா | விஷ்ணு | சிவன் |
| மதி 2 | ரவி 1 | அங்கி 3 |
| (சோம) | (சூரிய) | (அக்னி) |
| விண்ணுப்பு | மண்ணுப்பு | நீருப்பு |
| | (நிலவுப்பு) | |
| சாகாக்கால் | வேகாக்கலை | போகான்புனல் |
| (சாகாமூலி) | | |
| பிரம்மவிந்து 3 | மால்விந்து 2 | ஈசன்விந்து |
| சோமப்பால் 3 | கானற்பால் 2 | காமப்பால் 1 |
| பூநீறு | அண்டக்கல் | கல்லுப்பு |

| | | |
|---|---|---|
| மதி 1 | ரவி 1 | அக்னி 1 |
| நவாச்சாரம் | வெடியுப்பு | சீனாக்காரம் |
| இடகலை | பிங்கலை | சுழுமுனை |
| | (ஆக்கினை) | |
| பின்கலை | | இடகலை |
| | சுழுமுனை | |
| | மூன்றுபூ (உப்பு) | |
| | முப்பூ | |
| | முத்தாது | |

(குறியிடப்பெற்றுள்ள எண்கள் பாடல்களில் வரும் வரிசையைக் காட்டும்)

முடிவாக, முப்பூவைப் பற்றிக் கூறுகின்ற இடங்களில் ஒரே சொல் பல பொருட்களுக்குப் பயன்படுவது நிறையக் காணலாம். காட்டாக, 'பனிநீர்' என்ற சொல் பனித்துளிகளினின்று சேகரிக்கப்பட்ட நீர், மழை நீர், அமுரி, பனிக்குடநீர் போன்ற பொருட்களுக்கெல்லாம் கூறப்பட்டுள்ளது. அதுபோலவே 'நாதம்' என்ற சொல் பூநீறு, அண்டக்கல், கல்லுப்பு, பனிக் குடநீர் போன்றவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எந்த இடத்தில் அச்சொல் எந்தப் பொருளைக் குறிக்கிறதென்பது வல்லோர் வாயிலாகத் தெரிந்துகொள்ளக் கூடியதாகவே உள்ளது. அத்தகு வல்லார் காணாமை ஒரு பெருங்குறையாகும். எனினும் சித்தர் நூற்கள் பலவற்றை ஆய்வு நோக்கில் ஊன்றிப் படிக்கும்போது இவைகளை ஒருவாறு உய்த்தறிய முடிகிறது. இத்துறையில் மிக்க ஈடுபாட்டோடு ஆய்வு நடத்தினால் முப்பூவின் செய்முறையை பல சோதனைகளுக்குப் பின்னர் கண்டுபிடிக்க இயலும் என்று நம்புவதற்கும் இடமுண்டு. இந்நாள் வரைக்கும் முப்பூ பற்றிய கருத்துக்கள் நூலளவுள்ளதும் சொல்லளவுள்ளதுமாகவே உள்ளது. 'நான் முப்பூ முடித்துள்ளேன்' என்றும் 'எனக்கு முப்பூ பற்றிய விவரமனைத்தும் தெரியும்' என்றும் கூறுவாரும் அணுகிப்பார்க்குமிடத்து உண்மையாய் முப்பூ முடித்தார் இல்லையென்பது முப்பூ பற்றிய போதுமான விளக்கம் தர

இயலாதார் என்பதும் தெரியவரும். இதனாலேதான் இவ்வளவு கூறியும் திட்டவட்டமான முப்பூவின் செய்முறை இங்கு கூறப்பட முடியவில்லை.

எனவே,

> பார்க்கின்ற பிள்ளையறி வுடையவ னானாற்
> பதறாமல் நூல்முழுதும் பார்ப்பான் தானே'

என்று அகத்தியர் கூறியபடி, இதைப்பற்றி முழுதும் தெரிந்துகொள்ள விழைபவர்கள் சித்தர்களுடைய எல்லா நூற்களையும் தெளிவாகக் கற்று ஐயங்கள் ஏதுமின்றி பொருட்களை உணர்ந்து முப்பூவின் விளக்கத்தை அறிந்து இதன் செய்முறையை நடைமுறையாக்கினால் அதனால் உலகிற்கு நிச்சயமான பயன் ஏற்படும். வாதவேதியல் தொழில்களுக்கும் அதுபோன்ற பிறவுக்கும் இல்லாவிட்டாலும் மருந்துகளைச் செய்யவும் மருந்தாகவும் பயன்பட்டு, இன்றுவரை தீர்க்கக் கூடாததாக உள்ள நோய்களில் முப்பூ பயன்படுமாயின், நோயினால் அல்லலுறும் மக்கள் குலத்திற்கு அதனைவிடச் சிறப்பான ஒன்று வேறெதுவும் இருக்க முடியாது என்பது திண்ணமாகும்.

(குறிப்பு - எடுத்துக்காட்டாக பாடல்களை நிரப்புவது அறிவியல் நூலின் தற்கால நடைமுறைக்கும் வளர்ச்சிக்கும் அழகல்ல என்றாலும், இப்பாடத்தின் தன்மை நோக்கியே ஒருசில எடுத்துக்காட்டுகள் இதில் எழுதப்பட்டுள்ளன)

## பயிற்சி 60

# வைத்திய முப்பூ (எளிய முறை)

இது குருச்சுண்ணம் என்றும் கூறப்படும்.

**முறை:**

பூக்கச் செய்து பெறுதல்

**தேவையான சரக்குகள்:**

| | | |
|---|---|---|
| சுத்தி செய்த பூநீறு | - | 1 பங்கு |
| தாளிக்காத கற்சுண்ணம் | - | 1 பங்கு |
| பனிநீர் / சுத்தமான நீர் | - | 4 பங்கு, தீ |

## தேவையான கருவிகள் :

மட்பாண்டம், அடுப்பு, விறகு, துணி, மூங்கில் குச்சி, மூங்கில் தட்டு (மூடி), பனை ஓலை நறுக்கு, பீங்கான் பாத்திரம்.

## செய்முறை:

ஒரு மட்பாண்டத்தில் சுத்தி செய்த பூநீற்றைப் போட்ட பின்பு தாளிக்காத கற்சுண்ணாம்பைப் போட்டு நாலில் ஒரு பங்கு நீரை அதில் ஊற்றி சிறிதுநேரம் தட்டினால் மூடிவைத்திருந்து பின்பு மீதமுள்ள நீரையும் விட்டு மூங்கில் குச்சியினால் கலக்கிக் கொள்ள வேண்டும். இதை அடுப்பிலேற்றி இரண்டு கொதிவரும்வரை எரித்து இறக்கி வெய்யில்படும் இடத்தில் அசையாது வைத்து மூங்கில் தட்டால் மூடி வைக்க வேண்டும். மூன்று நாள் வரை அதைக் காலைதோறும் கலக்கிவிட்டு, நான்காம் நாள் மாலைமுதல் அக்கலவையின்மேல் நுரைபோலப் படியும் முப்பூவை பனை ஓலை நறுக்கினால் வழித்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்த வேண்டும். இம்முப்பூ பூக்கும்வரை வழித்து சேகரிக்கலாம்.

## பயன்:

இதில் சிறிதளவு (1:100) வேறு மருந்துகளில் கலந்து கொடுக்க அந்த மருந்துகளில் வீரியம் அதிகமாகி நற்குணத்தை விரைவில் கொடுக்கும். வீரம், பூரம் முதலிய பாடாணச் சரக்குகளை நெருப்புக்கு ஓடாமல் நீற்றவும் இதைப் பயன்படுத்தலாம்.

## தேர்வு:

| | | |
|---|---|---|
| பூநீறு எடை | - | கிராம் |
| கற்சுண்ண நீர் | - | கிராம் |
| பூத்த நாட்கள் | - | எண் |
| கிடைத்த வைத்திய முப்பூவின் எடை | - | கிராம் |

# சரக்குத் தூய்மை செய்முறைகள்

மூலிகையின் இலையாதிப் பொருட்கள், உலோக, இரச, உபரசப் பொருட்கள், உப்பு வகைகள், சீவப் பொருட்கள் ஆகிய எல்லாம் மருந்துகளில் சேர்க்கப்படுமுன் தூய்மை செய்யப்பட வேண்டும். சில முக்கியமான சரக்குகளின் தூய்மை முறைகள் இப்பகுதியில் விளக்கப்படுகின்றன.

## மூலிகைப் பொருட்கள்

### இலைகள் :

இலைகள் பெரிய அளவினதானால் அவைகளில் பழுப்பானவை, அழுகியவை, உயிரிகள் தின்றவை முதலியவைகளை நீக்கிவிட்டு, தூய துணியால் நல்ல இலைகளை துடைத்துக் காம்பு, நரம்பு நீக்கி எடுத்துக் கொள்ளலாம். சிறிய இலைகளைக் கிளையினின்று கொய்து நீரிலிட்டு அலம்பி நீரை நன்கு வடித்து எடுத்துக் கொள்ளலாம்.

### பூக்கள் :

பூக்களின் காம்பு, காம்பின் மேற்பகுதியில் பச்சை நிறமாக உள்ள பசுமி வட்டம், பூவின் நடுப்பகுதியிலுள்ள இலை வளையங்களான போலிகோன், குற்கோன் ஆகியவைகளை நீக்கி எடுத்துக் கொள்ள வேண்டும்.

### பட்டை :

மீத்தோலைச் சுரண்டிப் போக்கிக் கொள்ளச் சுத்தியாகும்.

### வேர் :

தூய நீரிற் கழுவி, வேரில் ஒட்டிய மண்போக்கி எடுத்துக்கொள்ள வேண்டும்.

### கிழங்கு :

நீரிற் கழுவி எடுத்து மேலுள்ள மீத்தோலைச் சீவிப் போக்கிக் கொள்ள வேண்டும். கிழங்கில் நரம்புகள் இருப்பின் அவைகளையும் நீக்கிக் கொள்ளலாம்.

**சுக்கு :**

மாச்சுக்காகத் தெரிந்தெடுத்து கற்சுண்ணத்தில் இதைச் சேர்த்துத் தாளித்துக் கழுவி எடுத்து மேற்றோலைச் சீவி நீக்கிக் கொள்ள வேண்டும் அல்லது மேற்றோல் சீவி சுண்ணாம்பு தடவி உலர்த்தி எடுக்கத் தூய்மையாகும்.

**அக்கராகாரம், மஞ்சள், சீந்திற்கொடி**

இவைகளின் மேற்றோலைச் சீவிப் போக்கி எடுத்துக் கொள்ளலாம்.

**வசம்பு :**

தணலிலிட்டு சுட்டு எரிந்ததும் மணலுக்குள் புதைத்து அனலை ஆற்றிக் கரியாக்கிக் கொள்ள வேண்டும்.

**கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் :**

இவைகளின் மேற்பகுதியை மட்டும் எடுத்துக்கொண்டு கொட்டையை நீக்கிக் கொள்ள வேண்டும்.

**சேங்கொட்டை :**

மூக்கு போன்ற பகுதியை அதன் பால் உடலிற்படாமல் வெட்டி எரிந்துவிட்டு சாணப்பாலில் அல்லது சாணம் கரைத்த நீரில் போட்டு கொதிக்க வைத்துக் கழுவி எடுத்துக் கொள்ள வேண்டும்.

**பரங்கிச்சக்கை, அமுக்கராக் கிழங்கு, நிலாவாரை :**

இவைகளை உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து பசுவின் பாலிற் பிட்டவியல் செய்து காயவைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

**புகையிலை :**

அகத்திக்கீரையின் நடுவில் வைத்து நீர்விட்டு எரித்தெடுத்துக் காயவைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

**கஞ்சா :**

விதை, காம்பு நீக்கிவிட்டு சோற்றுப்பு கலந்த நீரில் ஊறவிட்டுப் பிசைந்து நீரைப் பிழிந்துவிட்டு காயவைத்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

**நாபி :**

சிறுதுண்டுகளாக நறுக்கிப் பசுவின் நீரில் ஊறவிட்டு எடுத்து உலர்த்திக் கொள்ளலாம்.

**குரோசாணி ஓமம் :**

மணலில் போட்டு நன்றாய்த் தேய்த்துப் புடைத்து உமியை நீக்கிக் கொள்ள வேண்டும்.

**வாளம் :**

சாணம் கரைத்த நீரில் வேக வைத்து எடுத்துக் கழுவி மேலோட்டை நீக்கிவிட்டு, பழச்சாற்றில் ஊறவிட்டு விதைக்கதுப்புகளைப் பிளந்து முளையையும் சவ்வு போன்ற விதை இலைகளையும் நீக்கிப் பருப்பை உலர்த்தி எடுத்துச் சிறிது நெய்விட்டு வறுத்து எடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

**சிவதைவேர் :**

நரம்புகளை நீக்கிவிட்டு பாலில் வேக வைத்தெடுத்துக் காயவைத்துக் கொள்ள வேண்டும்.

**தேற்றான்கொட்டை :**

பசுவின் பாலில் ஊற விட்டெடுத்து நீரிற் கழுவி உலர்த்திக் கொள்ள வேண்டும்.

**கழற்சிக் கொட்டை :**

மேலோட்டை நீக்கிப் பருப்பை வெந்நீரில் கழுவி உலரவிட்டெடுத்துக் கொள்ள வேண்டும்.

**மிளகு :**

புளித்த மோரில் ஊறவைத்து வறுத்தெடுக்க வேண்டும்.

**திப்பிலி :**

பழச்சாற்றில் ஊறவைத்து உலர்த்தி எடுக்கலாம்.

**ஓமம், கருஞ்சீரகம் :**

சுண்ணத் தெளிநீரில் ஊறவைத்து உலர்த்தி எடுத்துக் கொள்ளலாம்.

**ஊமத்தை விதை :**

*நீரில் ஊறவைத்து உலர்த்தி எடுத்துக் கொள்ளலாம்.*

**கொம்பரக்கு :**

*நீரிற் போட்டு எரித்தெடுக்கச் சுத்தியாகும்.*

**குங்கிலியம் :**

*முப்பலைக் கியாழத்திலாவது இளநீரிலாவது எரித்தெடுக்கலாம்.*

**காயம் :**

*பொரித்தெடுக்கத் தூய்மையாகும்.*

**அபினி :**

*வெங்காயத்தைத் துளைத்து அதனுள் அபினியை வைத்துப் பொதித்து இரண்டொரு சீலை மண் செய்து வெங்காயம் கருகாமல் வேக வைத்தெடுத்துக் கொள்ளலாம்.*

## நீர்வகை

**தண்ணீர், வெந்நீர் :**

*தூய துணியினூடாகவாவது பஞ்சினூடாகவாவது வடிகட்டி எடுக்க வேண்டும்.*

**கழுநீர் :**

*முதற்றடவை அரிசி கழுவிய நீரை விட்டு மறுமுறை கழுவிய நீரைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.*

**பனிநீர் :**

*மெல்லிய துணியை நீரிற் கசக்கிப் பிழிந்து உலர்த்தி இரவில் நெற்பயிர், அறுகம்புல், இவைகளின்மீது விரித்து, சூரியன் எழுமுன் எடுத்துப் பிழிந்தெடுக்க வேண்டும். வாழை இலைகளில் துளை செய்து அதில் சேரும் பனிநீரை எடுத்துக் கொள்ளலாம்.*

**காடி :**

*சூரியனில் காயவைத்து அடியிற்படியும் வண்டல் நீக்கித் தெளிவை இறுத்துக் கொள்ள வேண்டும்.*

**விலங்குகளின் நீர் :**

*பசு, கழுதை, யானை முதலிய விலங்குகளின் நீரை மத்தினாற் கடைந்து, நுரை நீக்கித் துணியில் பலமுறை வடிகட்டி எடுத்துக் கொள்ளலாம்.*

**ஆட்களின் நீர் :**

*கலவியறியாத சிறு குழந்தைகளின் சிறு நீரை வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். தொற்று நோய்கள் ஏதும் இல்லாதது அறிந்து சிறுநீர் பெற்றுக் கொள்ள வேண்டும்.*

## பால், பாற்பொருள் :

**பசுவின் பால் :**

*கன்று குடித்தபின் மடியை நீர்விட்டுக் கழுவிக் கறந்து பால் நுரை அடங்கியபின் வடிகட்டிக் கொள்ள வேண்டும்.*

**வெள்ளாட்டுப் பால் :**

*பல தடவைகள் துணியில் வடிகட்டிக் கொள்ள வேண்டும். இதில் ஆட்டின் மயிர் நிறையக் கலந்திருக்கும்.*

**அமுதப் பால் (பிள்ளைப் பால்) :**

*இதில் கொஞ்சம் தும்பை மலரிட்டு வைத்து வடிகட்டிக் கொள்ளலாம். அல்லது நெருப்பனலிற் சூடாக்கிய வெள்ளிக் கிண்ணத்தில் பாலைவிட்டு உடனே வடிகட்டிக் கொள்ளலாம்.*

**தயிர் :**

*தயிரினின்று தோய்ந்த நீரைப் பிரித்து விலக்கிவிட வேண்டும்.*

**மோர் :**

*சிறிது சோற்றுப்புக் கரைத்துக் கொள்ளலாம்.*

**வெண்ணெய் :**

*தூய தண்ணீரில் பிசைந்து கழுவி சேர்த்தெடுத்துக் கொள்ள வேண்டும்.*

**நெய் :**

*வெண்ணெயை அடுப்பேற்றி அதிலுள்ள நீர் குறைய எரித்தெடுத்து வடிகட்டிக் கொள்ள வேண்டும்.*

## நெய்வகை

**தேங்கு நெய் :**

*இதற்குச் சமன் தேங்காயின் பால் விட்டுக் காய்ச்சி வடித்துக் கொள்ள வேண்டும்.*

**புங்கு நெய் :**

*இதற்குச் சமன் புங்கன் பால்விட்டுக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ள வேண்டும்.*

**இலுப்பை நெய் :**

*எழுத்தாணிப் பூண்டுக் கியாழம் கூட்டி எரித்து வடித்துக் கொள்ள வேண்டும்.*

**வேம்பு நெய் :**

*வேப்பம்பட்டைக் கியாழம் கூட்டி எரித்து வடித்துக் கொள்ள வேண்டும்.*

**ஆமணக்கு நெய், வாதுமை நெய் :**

*இவைகளைக் குப்பியிலடைத்து அதன் அடிபாகத்தை மணலுள் மறைத்து வைத்து சூரியனில் காயவைத்துத் தெளிவை வடித்தெடுத்துக் கொள்ள வேண்டும்.*

**பசுநெய் :**

*வெண்ணெயிலுள்ள நீர்த்துவம் சுண்ட எரித்து எடுத்துக் கொள்ள வேண்டும்.*

# உலோகங்கள்

**அயம் :**

அயப்பொடியைப் பழச்சாற்றில் மூன்று நாள் ஊறப்போட்டு எடுத்து கழுவிக் கொள்ளலாம். இவ்வாறு செய்தெடுத்த அயப்பொடியை எண்ணெயில் ஒருநாள் ஊறவைத்தெடுத்து இரும்புச் சட்டியிலிட்டு வறுத்துக் கொள்ளுக்கியாழத்தில் பலமுறை தோய்த்தெடுக்கத் தூய்மையாகும்.

அயத்தை உலையிற் காய்ச்சி, காடி, எள்நெய், பசுநீர், கொள்ளுக்கியாழம் இவை ஒவ்வொன்றிலும் 'மும்மூன்று முறை தோய்த்தெடுக்கச் சுத்தியாகும். இதே முறையில் எஃகையும் தூய்மை செய்து கொள்ளலாம்.

**எஃகு :**

உலையிலிட்டுக் காய்ச்சி வெள்ளாட்டின் பிச்சில் பலதடவை தோய்க்க வெட்டையாகி உதிரும், தூய்மையாகும்.

**கருவங்கம் :**

நொச்சிச் சாற்றில் மஞ்சட் பொடி கலந்து ஒரு உரலுக்குள் விட்டு வைத்து அதை திரிகல்லின் மேற்கல்லால் மூடி, காரியத்தை நீண்ட வாற்கரண்டியிலிட்டு உருக்கி, திரிகல்லின் மேலேயுள்ள துளை வழியாய் ஊற்றி ஆறியபின் எடுத்து மீண்டும் இவ்வாறே இருமுறை உருக்கிச் சாய்க்கச் சுத்தியாகும். இம்முறையில் செய்வதால் சீறினாலும் செய்பவர் மேலே படாமல் காக்கும்.

கருவங்கப் பொடியை நொச்சிச் சாற்றில் போட்டு வெய்யிலில் வைத்தெடுக்கவும் சுத்தியாகும்.

**காந்தம் :**

காந்தத்தைப் பொடித்துக் காடியில் அவித்தெடுத்துக் கழுவி உலர்த்திக் கொண்டு பின் கொள்ளுக்கியாழத்தில் அவித்துக் கழுவி உலர்த்திக் கொள்ளலாம்.

வரகு வைக்கோல் சேர்த்தெரித்து எடுத்துக் கொள்ளவும் சுத்தியாகும்.

பழச்சாறு, காடி, மோர் இவைகள் ஒவ்வொன்றிலும் மும்மூன்று நாள் போட்டு வெய்யிலில் வைத்துக் கழுவி எடுக்கவும் தூய்மையாகும்.

உலையிலிட்டுக் காய்ச்சி கொள்ளுக் கியாழத்தில் ஏழுமுறை தோய்த்துக் கழுவியும் எடுத்துக் கொள்ளலாம்.

## செம்பு :

செம்புத்தகட்டைச் சிறு துண்டுகளாக்கி சிவக்கக் காய்ச்சி கொள்ளுக் கியாழம், புளியிலைச் சாறு, கற்றாழைச் சாறு, மோர், பொன்னாங்காணிச்சாறு இவை ஒவ்வொன்றிலும் ஏழுதடவை தோய்த்து எடுக்கலாம்.

முருங்கையிலைக் கற்கம், கற்சுண்ணாம்பு இவைகளைக் கரைத்த நீரில் ஏழு தடவை காய்ச்சித் தோய்த்தெடுக்கவும் தூய்மையாகும்.

## நாகம் :

உரலுக்குள் இலுப்பை நெய்விட்டு வைத்து அதை திரிகல்லின் மேற்கல்லால் மூடி, நாகத்தை உருக்கிக் கல்லின் துளை வழியாய் விட்டு ஆறியதும் கழுவி எடுத்து மீண்டும் ஆறுமுறை உருக்கி ஊற்றிக் கழுவி எடுக்கச் சுத்தியாகும்.

இலுப்பை நெய்யைச் சட்டியில் விட்டு வைத்து நாகத்தை உருக்கிச் சாய்க்கலாம். இவ்வாறு செய்கையில் சீறலை அடக்க இரு நவாச்சாரக் கட்டிகள் சட்டியின் விளிம்புகளில் நெய்யைத் தொடுமாறு வைத்து உருக்கிச் சாய்க்க வேண்டும்.

## பொன் :

தங்கத் தகட்டிற்குச் செம்மண்ணைப் பூசி அகலிலிட்டு அடுப்பேற்றி வாட்டிக் கழுவி எடுக்க வேண்டும். இவ்வாறு ஏழுமுறை செய்யப் பொன் சுத்தியாகும்.

## மண்டூரம் :

மண்டூரத்தை இடித்துப் பொடியாக்கி ஒரு கொதிகலத்தில் போட்டு அதன்மேல் புளியிலையைப் போட்டு நீர்விட்டு வேகவைத்து ஆறியபின் இலையையும் பொடியையும் சேர்த்து

நன்றாய்த் தேய்த்துக் கழுவி உலர்த்தி இலையைப் போக்கி எடுத்து பசுநீரில் போட்டு எரித்துக் கழுவி எடுக்கச் சுத்தியாகும்.

**வெள்வங்கம் :**

கருவங்க சுத்தி முறைகளிலேயே இதனையும் சுத்தி செய்து கொள்ளலாம்.

**வெள்ளி :**

வெள்ளியை உருக்கி மணித்தக்காளிச் சாற்றில் மடியும் வரை சாய்த்தெடுக்கலாம்.

இவ்வாறே மகிழம் பூச்சாறு, குடியோட்டிப் பூண்டிலைச்சாறு பழுபாகற் கிழங்குச் சாறு இவைகளில் ஏதாவதொன்றிலும் சாய்த்தெடுக்கத் தூய்மையாகும்.

## பஞ்ச சூதம்

**இரசம் :**

இரசத்தைத் தூய முரடான துணியிலிட்டு ஆயிரம்முறை பிழிந்தெடுத்து ஒரு மட்கலத்திலிட்டு மூழ்கும்படி நீர் வார்த்து சிறு தீயில் எரிக்க வேண்டும். இவ்வாறு எரிக்கும்போது நீர் குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நீர் கருநிறமடைந்ததும் எடுத்துக் காடி நீரில் கழுவி எடுக்கச் சுத்தியாகும். இரசத்தை செங்கல் தூளிலும் மஞ்சட் சாற்றிலும் அரைத்தெடுத்து நீரிற் கழுவி குப்பைமேனிச்சாறு விட்டு எரித்தெடுத்துக் கழுவிக் கொள்ள சுத்தியாகும்.

**இரச செந்தூரம் :**

தாய்ப்பாலில் ஒருநாள் ஊறவைத்துக் கழுவி உலர்த்தி எடுக்கலாம்.

**இலிங்கம் :**

பிள்ளைப்பால், பழச்சாறு, மேனிச்சாறு இவைகளைச் சமனாய்க் கூட்டி இலிங்கத்தை அகலில் வைத்துச் சுருக்கிட்டு எடுக்கலாம்.

பிள்ளைப்பாலில் ஒருநாளும் பழச்சாற்றில் ஒருநாளும் ஊறவைத்து எடுக்கச் சுத்தியாகும்.

**பூரம் :**

இரச கர்ப்பூரத்தைப் பிள்ளைப்பாலிலும் பின் பூண்டு நெய்யிலும் சுருக்குக் கொடுத்து எடுக்கத் தூய்மையாகும்.

முசுமுசுக்கைச் சாற்றிலும் சுருக்குக் கொடுத்து எடுக்கலாம்.

கம்மார் வெற்றிலை, மிளகு இவைகளைக் கற்கமாக்கி நீரிற் கரைத்து அதில் பூரத்தைக் கிழிகட்டி துலாந்திரமாக அமிழும்படி தொங்கவிட்டு நீர் முக்காற்பாகம் சுண்டும்வரை எரித்தெடுத்து நீரிற் கழுவிக் கொள்ளத் தூய்மையாகும்.

**வீரம் :**

வீரக்கட்டிக்கு மிளகுக் கியாழம் விட்டு சுருக்குக் கொடுத்து பின் மிளகு கற்கத்தால் கவசம் செய்து ஒரு பாண்டத்தில் சோற்றுப்புடன் சிறு அளவு சூடன் கலந்து போட்டு அதற்குள் வைத்துச் சிறு தீயில் எரித்தெடுக்கலாம்.

இளநீரில் சிறிதளவு சூடன் கலந்து வீரக் கட்டியைக் கிழிகட்டி துலாந்திரமாக நீரிற் படாமல் எரித்தெடுக்கச் சுத்தியாகும்.

வீரக்கட்டியைப் பிள்ளைப்பால் அல்லது பசும்பால் விட்டு வெய்யிலில் வைத்து உலர்த்தி எடுக்கலாம்.

## பாடாணங்கள்

**அஞ்சனக்கல் :**

மாதுளம் பழச்சாற்றில் ஊற வைத்தெடுக்கலாம் அல்லது பழச்சாறு விட்டரைத்து வெய்யிலில் காய வைத்தெடுக்கலாம்.

புளியாரைச் சாற்றில் ஊற வைத்தெடுப்பதும் சுத்தியாகும்.

**கெந்தகம் :**

பசுவின் தயிரில் மருதோன்றி இலைக்கற்கத்தைக் கரைத்து ஒரு கலத்திலிட்டு அதன்வாயில் துணி விரித்து வேடுகட்டி அதன்மேல் கெந்தியைப் பரப்பி மேலே இன்னொரு சட்டியால் வாய் பொருந்த மூடிச் சீலை மண் செய்து, கீழ்க்கலத்தை மண்ணுக்குள் புதைத்து மேற்கலத்தின் மேல் நாலைந்து எரு அடுக்கி எரிக்க கெந்தகம் உருகிக் கலவைக்குள் சேரும். இதை

எடுத்து மீண்டும் இவ்வாறே ஆறு தடவைகள் செய்துகொள்ள சுத்தியாகும்.

கெந்தகத்தை ஒரு வாற்கரண்டியிலிட்டு அனலில் உருக்கிக் பசும்பாலிலாவது வாழைக்கூட்டை நீரிலாவது சாய்த்தெடுக்கச் சுத்தியாகும். இதை ஏழுமுறை செய்து கொள்ளலாம்.

## கௌரி :

பிள்ளைப்பாலில் மூன்றுநாள் ஊற வைத்தெடுத்து அகலில் வைத்துக் கொட்டைக் கரந்தைச் சாற்றால் சுருக்குக் கொடுத்து எடுக்கச் சுத்தியாகும்

## தாளகம் :

கற்சுண்ணாம்பின் இடையில் தாளகக் கட்டியை வைத்துப் பனங்கள்ளினால் தாளித்து எடுக்கலாம். இவ்விதம் பத்துமுறை செய்யத் தூய்மையாகும். பனங்கள்ளுக்குப் பதிலாகக் கழுதை நீரைப் பயன்படுத்தியும் சுத்தி செய்யலாம். சிறுவர்களின் சிறுநீர் விட்டும் தாளித்து எடுக்கலாம்.

## மனோசிலை :

மனோசிலையை இஞ்சிச்சாறு, பசுவின்மோர், பழச்சாறு ஏதாவதொன்றால் அரைத்து உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும். இதன்றி தாளகத்தின் சுத்தி முறைகளுள் ஏதாவதொன்றினாலேயே இதனையும் தூய்மையாக்கிக் கொள்ளலாம்.

காடி அல்லது வெள்ளாட்டு நீரில் கிழிகட்டி எரித்தெடுக்கவும் சுத்தியாகும்.

## மிருதார் சிங்கி :

இதனை வெள்ளாட்டு நீரில் காய்ச்சி எடுத்துப் பிள்ளைப்பாலிலும் வெள்ளாட்டுப்பாலிலும் ஊறவிட்டெடுக்கச் சுத்தியாகும்

## வெள்ளைப்பாடாணம் :

வெற்றிலையைப் பழச்சாறு விட்டரைத்து உலர்த்தி எடுத்து மீண்டும் இவ்வாறே ஆறு தடவை சேர்த்தெடுக்கச் சுத்தியாகும்.

கற்சுண்ணத்தினுள் புதைத்து பனங்கள்ளினால் தாளித்து எடுக்கலாம். அவுரிச்சாறு, வெள்ளெருக்கன் சாறு இவைகளில் சுருக்குக் கொடுத்து எடுப்பினும் சுத்தியாகும். இவ்வாறே வெப்பங்காய்ப்பால், எருக்கம்பால் இவற்றாலும் சுருக்கிட் டெடுக்கலாம்.

துணியில் சுற்றி வெள்ளாவியில் வைத்து ஏழு தடவை எரித்தெடுக்கச் சுத்தியாகும்.

## காரசாரம்

### இந்துப்பு :

இந்துப்பைக் காடியில் கரைத்து வடிகட்டி சூரியனில் காய வைத்தெடுக்க உறைந்து சுத்தியாகும்.

### கல்லுப்பு :

காடிநீரில் போட்டெடுத்துத் துடைத்து உலர்த்திக் கொள்ளச் சுத்தியாகும்.

### கறியுப்பு :

நீர், மழைநீர், காடி அல்லது வாழைக்கட்டை நீர்விட்டு கரைத்து வடிகட்டிக் காய்ச்சி, குழம்பு பக்குவத்தில் இறக்கிச், சிறிது சூடாய் இருக்கும்போது பழச்சாறு அல்லது மோர் சிறிதுவிட்டு வெய்யிலில் காய வைக்க உறையும். இவ்விதம் பலதடவை செய்துகொள்ளச் சுத்தியாகும்.

### சீனாக்காரம் :

நீரிற் கரைத்து வடிகட்டி காய்ச்சிக் குழம்பு பக்குவத்தில் இறக்கி உலர விட்டெடுக்கலாம்.

### சூடன் :

செங்கழுநீர்ப்பூச் சாற்றில் ஊறவைத்தெடுத்து உலர்த்திக்கொள்ள சுத்தியாகும்.

### நவாச்சாரம் :

பசுநீரில் கரைத்து வடிகட்டி எரித்துக் குழம்பு பக்குவத்தில் இறக்கி காயவைத்து எடுக்கலாம்.

நவாச்சாரத்தை வெந்நீரிற் கரைத்து வடிகட்டி வெய்யிலில் வைத்து நீர் சுவறும்படி செய்ய உப்பு உறையும்.

நவாச்சாரத்தின் வெகுட்டல் தன்மையைப் போக்க இதனைப் பத்திரப்படுத்தும்போது இதனுடன் குன்றிமணி வேர் சிறிது சேர்த்துப் போட்டு வைத்திருக்கலாம்.

## பச்சைக் கர்ப்பூரம் :

செங்கழுநீர்ப் பூச்சாற்றில் ஊறவைத்தெடுத்து உலர்த்தி எடுத்துக்கொள்ளத் தூய்மையாகும்.

## பூநீறு :

பூநீறுக்குப் பனி நீராவது தண்ணீராவது விட்டுக் கரைத்து அடித்துக் கலக்கி நுரை போக்கி வடிகட்டி வெய்யிலில் உலர்த்தி உறையச் செய்து எடுக்கத் தூய்மையாகும்.

## வளையலுப்பு :

காடிநீரில் ஊறவைத்து உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும். காடிநீரிற் கரைத்து வடிகட்டிச் சூரிய வெப்பத்தில் வைத்து உறையச் செய்தும் எடுக்கலாம்.

## வெங்காரம் :

நீர் வற்றும்படி பொரித்து எடுத்துக் கொள்ளத் தூய்மையாகும். இவ்வாறு பொரித்தெடுத்தது பொரிகாரம் எனப்படும்.

பழச்சாற்றில் அரைத்து உலர்த்தி எடுத்துக் கொள்ளலாம். இவ்விதமே காடியிலும் அரைத்து உலர்த்தி எடுக்கலாம்.

## வெடியுப்பு :

வெடியுப்புக்கு நான்கு பங்கு நீர்விட்டுக் கலக்கி மேலே மிதக்கும் அழுக்கான நுரையை வழித்தெறிந்து விட்டு வடிகட்டி அசையாமல் வைத்துத் தெளிவிறுத்து வெய்யிலில் காயவைத்து உறையச் செய்து எடுக்கச் சுத்தியாகும். முட்டைவெண்கருவிற்குப் பதிலாகப் பழச்சாறு சேர்த்தும் செய்து கொள்ளலாம்.

வெடியுப்பை நீர், மழைநீர், பனிநீர், கடல்நீர் வாழைக்கட்டை நீர் இவை ஏதாவதொன்றில் கரைத்து வடிகட்டிக் காய்ச்சிக் குழம்பு பக்குவத்தில் இறக்கி வெய்யிலில் வைத்து உறையச் செய்து எடுக்கலாம்.

**சவுக்காரம் :**

கோநீரில் பிட்டவியலாக அவித்து உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.

## மணிகள்

**பவளம் :**

பவளக்கொடி, பவளப்புற்று எதையேனும் பழச்சாற்றில் ஊறப்போட்டு நீரிற் கழுவி எடுக்கச் சுத்தியாகும்.

பேரீச்சங்கள்ளில் ஊறவிட்டுக் கழுவியும் எடுக்கலாம்.

பவளப்புற்றைப் பசுவின் பாலில் போட்டு எரித்தும் எடுத்துக் கொள்ளலாம்.

**முத்து :**

பசுவின் தயிரில் முத்தைப் போட்டு வெய்யிலில் வைத்து எடுத்துக் கொள்ள சுத்தியாகும்.

பழச்சாற்றிலாவது காடியிலாவது ஊறவைத்து நீர் விட்டுக் கழுவி எடுத்துக் கொள்ளலாம். இவ்விதமே புளியம்பழச்சாறு, சங்கம்பழச்சாறு இவைகளிலும் ஊற வைத்தெடுக்கலாம்.

## உபரசம்

**அப்பிரகம் :**

அப்பிரகத்தைக் காடியில் ஊறப்போட்டு எடுக்கச் சுத்தியாகும்.

அகத்திப் பூச்சாறு, காடி, எருக்கின் பூச்சாறு, இவை ஒவ்வொன்றிலும் ஊறவைத்தெடுத்துக் கழுவிக் கொள்ளவும். தூய்மையாகும்.

இதனை வெண்ணெய்போலச் செய்துகொள்வதையும் சுத்தி என்பர். அப்பிரகத்தை மூன்றுநாள் மோரில் ஊறவைத்தெடுத்து இடித்துப் பொடியாக்கி வாயில் துணி விரித்துக் கட்டி அதில் அப்பிரகப் பொடியைப் போட்டு அதற்குத் தக்க அளவு நெல்லையும் போட்டு சோறு வடித்த நீர் சிறிது சிறிதாக விட்டுப் பிசைய அப்பிரகப்பொடியும் வடிநீரும் கலத்திலுள் சேரும். இதைத் தெளியவைத்து நீரை இறுத்துவிட்டு அப்பிரகத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். இது அப்பிரக வெண்ணெய். அப்பிரக நவநீதம் அல்லது தானியாப்பிரகம் என்று சொல்லப்படும்.

## அன்னபேதி :

நீரிற் கரைத்து கெந்தகப் புளிப்பு சிறிதுவிட்டு வடிகட்டிக் காய்ச்சி குழம்பு பக்குவத்தில் இறக்கி உலரவிட்டெடுக்கச் சுத்தியாகும்.

## கர்ப்பூர சிலாசத்து :

பால்விட்டுக் காய்ச்சிக் கழுவி எடுக்கச் சுத்தியாகும். இவ்வாறே இளநீர், சுண்ணாம்புத் தெளிநீர் அல்லது பழச்சாற்றில் காய்ச்சி எடுத்துக் கொள்ளலாம்.

கற்றாழைச் சாற்றிலரைத்துச் சூரியனில் உலர்த்தி எடுத்துக் கொண்டாலும் சுத்தி ஆகும்.

## கல்நார், கல்மதம்

பசுநீரில் ஊறவைத்துக் கழுவி எடுத்துக் கொள்ளச் சுத்தியாகும். இவ்வாறே கழுதை நீரிலும் ஊறவைத்துக் கழுவி எடுத்துக் கொள்ளலாம். கல்மதத்திற்கும் இதுவே சுத்தி முறையாகும்.

## கற்சுண்ணாம்பு :

நீர்விட்டு தாளித்து எடுத்துச் சலித்துக்கொள்ளச் சுத்தியாகும். வேலிப்பருத்திச் சாறுவிட்டும் தாளித்து எடுக்கலாம்.

## காவிக்கல் :

இளநீரிலரைத்துக் கரைத்து வடித்து வெய்யிலில் வைத்து உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.

**துருசு :**

*நீரிற் கரைத்து வடிகட்டி சுண்டக்காய்ச்சி உலரவைத்து உறையச் செய்து எடுத்துக் கொள்ளச் சுத்தியாகும். பசுநீரில் கரைத்து வடிகட்டி எரித்து உறையச் செய்து எடுத்துக் கொள்ளலாம்.*

*பொரித்து எடுத்துக் கொள்வதும் துருசைத் தூய்மையாக்கும் முறைகளுள் ஒன்று.*

*தயிரில் ஊறவைத்து உலர்த்தி எடுத்துக்கொண்டாலும் தூய்மையாகும்.*

**நண்டுக்கல் :**

*கற்சுண்ணாம்பும் பூநீறும் கரைத்த கரைசலின் தெளிவெடுத்து அதில் நண்டுக் கல்லையிட்டு எரித்து கரைசல் சுண்டியதும் நீரிற் கழுவி எடுக்கச் சுத்தியாகும்.*

**பால்துத்தம் :**

*சிறுபிள்ளை நீரிலும் பசு நீரிலும் ஊறவைத்து உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.*

## ஜீவப்பொருட்கள்

**ஆமையோடு :**

*கற்சுண்ணாம்பும் பூநீறும் கரைத்த கரைசலின் தெளிவில் சேர்த்து எரித்து நீரிற் கழுவிக் கொள்ளுவதே இறகு வகைகளின் சுத்தியாகும்.*

**எலும்புகள் :**

*ஒவ்வொருநாளும் புதிய பசுவின் மோரில் போட்டு சூரியனில் ஐந்து நாட்கள் வைத்தெடுத்துப் பின் இரு நாட்கள் மோர் விடாமல் வெய்யிலில் காயவைத்து நீர்விட்டுக் கழுவி உலர்த்திக் கொள்ளச் சுத்தியாகும்.*

## குளம்புகள் :

விலங்குகளின் குளம்புகளைப் பொடியாக அராவி ஒவ்வொருநாளும் புதிய இளநீர்விட்டு ஐந்துநாள் வெய்யிலில் வைத்துப் பின் இளநீர் விடாமல் இரண்டுநாள் காயவைத்து கழுவி உலர்த்திக் கொள்ளச் சுத்தியாகும்.

## கொம்புகள் :

கொம்பைச் சீவிச் சிறு சிதலைகளாக்கி அகத்தியிலைச் சாற்றை ஒவ்வொருநாளும் புதியதாய் விட்டு ஐந்துநாள் சூரியனில் வைத்துப் பின் இரண்டு நாள் சாறு விடாமல் காயவைத்துக் கழுவி உலர்த்தி எடுத்துக் கொள்ளத் தூய்மையாகும்.

## சங்கு :

கற்சுண்ணாம்புக்குள் வைத்துத் தாளித்துக் கழுவி எடுக்கத் தூய்மையாகும். கற்சுண்ணாம்பு பூநீறு கரைசல் தெளிவில் எரித்தெடுத்துக் கழுவிக் கொள்ளலாம்.

## கந்தவகை :

ஒவ்வொருநாளும் புதிய பிள்ளைப்பால் விட்டு ஐந்துநாள் வெய்யிலில் வைத்துப் பின் பால்விடாமல் இரண்டுநாள் காயவைத்துக் கழுவி உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.

## தேன் :

ஒரு பாத்திரத்தில் தேனைவிட்டு அதை நீருக்குள் அமிழ்த்தி வைத்தெரித்து வடிகட்டிக் கொள்ளலாம்.

காய்ச்சிய ஓட்டைத் தேனிற் போட்டாவது, அனலிற் சூடாக்கிய வெட்டுக் கத்தியில் தேனைவிட்டு வடியச் செய்தாவது சுரசமாக்கிக் கொள்ளத் தேன் சுத்தியாகும்.

தேனில், நெல், மிளகு சேர்த்து பத்திரப்படுத்த வேண்டும்.

## பலகறை :

பழச்சாற்றிலாவது அரிசிக் காடியிலாவது ஊறவைத் தெடுத்துக் கழுவிக் கொள்ளத் தூய்மையாகும்.

நெருப்பனலில் சுட்டெடுத்துக் கொள்ளவும் தூய்மையாகும்.

**புனுகு :**

புனுகைப் பிளந்த ஈர்க்கால் தேய்த்து அதிற் கலந்துள்ள மயிரை நீக்கிக்கொள்ளச் சுத்தியாகும். மெல்லிய தூய துணியினூடாகப் பிழிந்தெடுப்பதும் வழக்கு.

துளை ஆடித்தட்டில் வைத்து நீர்விட்டு அலம்பி எடுத்துக் கொள்ளலாம்.

**பூநாகம் :**

மோரிலாவது பாலிலாவது உயிருள்ள பூநாகத்தை போட்டு வைக்க அது இவற்றை அருந்தி வயிற்றிலுள்ள மண்ணை வெளிப்படுத்திவிடும். பின் எடுத்து சுண்ணாம்பு நீர் தெளிக்க இறந்து விடும்.

**மயிர் :**

சிகைக்காய் கலந்த நீரில் கொதிக்க வைத்துக் கழுவி உலர்த்திக் கொள்ளத் தூய்மையாகும்.

**முட்டை ஓடுகள் :**

சோற்றுப்புக் கலந்த நீரில் போட்டு ஊறவைத்தெடுத்து எரித்து உட்புறமுள்ள சவ்வு நீக்கி நீரிற் கழுவி வெய்யிலிற் காய வைத்தெடுக்கச் சுத்தியாகும்.

**முத்துச்சிப்பி, மெழுகு :**

மெழுகைச் சிறு துண்டுகளாக்கி ஒரு கலத்திலிட்டு அதை வெந்நீருக்குள் அமிழ்த்தி உருகச் செய்து துணியினூடாக வடிகட்டி எடுக்கச் சுத்தியாகும்.

## மருந்தாளுமுறை

மருந்துகளை அளவுப்படியும், சில மருந்துகளைக் கலந்தும் பல்வேறு விதமாய் பிணியாளிக்கு விநியோகம் செய்யப்படுவதும், அம்மருந்துகள் பயன்படுத்தும் விதிகளை உணர்த்தலும் பிறவுமான பொருட்கள் மருந்தாளு கலையைச் சேரும். நோயாளியைச் சோதனைகள் செய்து நோயைத் திட்டவட்டமாகவோ முன்னோடியாகவோ கணிதம் செய்தபின்பு மருத்துவர் அந்நோயைத் தீர்ப்பதற்கான அல்லது குறிகுணங்களின் ீரத்தைக் குறைப்பதற்கான மருந்துகளைக் குறித்து

சீட்டெழுதுவார். இச் சீட்டெழுதுதலில் மருந்து யாருக்கென்றும் இன்னின்ன மருந்தை அளவுப்படியும் முறைப்படியும் இத்தனை வேளையாக உள், வெளிப்பயன் செய்ய வேண்டும் என்றும் அது கொடுக்கப்படுகின்ற வேளை, துணைமருந்து, பத்தியம் போல்வனவும் குறிக்கப்படும். மருந்துச் சீட்டு எழுதப்படுவது முழுமையானதாக இருக்க வேண்டும். மருத்துவரை அன்றிப் பிறர் அம்மருந்துகளை விநியோகம் செய்யுமிடத்தில் இம்மருந்துச் சீட்டு, மிக முக்கியமானதொரு இடத்தைப் பெறுகின்றது. இச்சீட்டு மருந்து விநியோகிக்கப்பட வேண்டிய எல்லாவித குறிப்புகளையும் கொண்டதாயிருந்தாலன்றி மருந்து விநியோகம் சிறப்பாகச் செய்ய முடியாமற் போகலாம். மருத்துவர் தம்மிடம் வரும் பிணியாளனுக்கு வெளியில் வாங்குவதற்காக எழுதிக்கொடுக்கும் சீட்டுகளும் முறைப்படி எழுதப்பட வேண்டும். அவரே மருந்துகளை விநியோகம் செய்யும் நிலையிருந்தால் அவற்றை அளவுப்படுத்திக்கொடுத்து பயன்படுத்து முறையைத் தெளிவாக விளக்க வேண்டும்.

## மருந்துச்சீட்டு எழுதுமுறை :

மருந்துச் சீட்டு மருத்துவரால் எழுதப்படும்போது முகப்பில் அது இன்னாருக்காக எழுதப்படுகிறதென்று தெரிவதற்காய் அப்பிணியாளியின் பெயர், வயது, பால் - ஆணா, பெண்ணா என்று குறிக்கப்படும்.

இதனை அடுத்து உள்ளது மருந்துச் சீட்டின் உடற்பகுதி ஆகும். இதில் கலக்கப்படுவதற்கான மருந்துகள் அல்லது குறிக்கப்படும் மருந்தும் அவைகளின் அளவும் அதனதன் எதிரே குறிக்கப்படும். பல மருந்துகள் வரிசையாகக் கலக்கப்பட்டு கொடுக்கப்படுவதற்காக எழுதப்பட்டால் கடினப் பொருட்கள் முதலிலும் நீர்மப் பொருட்கள் பின்னாலும் துணை மருந்து - அனுபானம் - கடைசியிலும் எழுதப்பட வேண்டும். பொதுவாய் நோய்க்கான நேர் மருந்து முதலிலும் அதற்கு இணையான அல்லது கூட்டு மருந்துகள் பின்னும் அம்மருந்துகளின் தன்மைகள், மாற்று மருந்து அதற்கடுத்தும் அனுபான மருந்து கடைசியிலும் எழுதப்படும்.

இதனை அடுத்த பகுதி மருந்து ஆளுகின்றவருக்கு அம்மருந்து எவ்விதமாய் செய்து எவ்வாறு கொடுக்க mg

வேண்டும் என்ற விதிகளைக் கூறும். இவைகளுள் முதலில் மருந்தின் அமைப்பு அது சூரணம், கியாழம், மாத்திரை போன்றவற்றுள் இன்ன வகையாகக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் அடுத்து இன்ன முறையாகச் செய்ய வேண்டும் என்றும் முடிவில் இன்ன அளவில் இத்தனை நாட்களுக்கென்றும் குறிக்கப்படும்.

இதற்கு அடுத்ததாக பிணியாளிக்கு அம்மருந்தை உட்கொள்ளுகிற அல்லது கையாளுகிற முறை அறிவுறுத்தப்படும். இது அல்லது என்று குறிக்கப்படும். இதில் மருந்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் (உட் கொளல் அல்லது புறப்பயன்) ஒரு முறைக்கான அளவு, மருந்தைப் பயன் படுத்தும் வேளைகளும் நேரமும், அதை வைத்துக் கையாளக் கூடிய அனுபானப் பொருள் - நீர், பால், வெல்லம், தேன் போன்றவைகளுள் ஏதாவது, புறப்பயனுக்கான மருந்தானால் உடலில் இடப்படும் பகுதியும் இடும் முறையும் குறிக்கப்படும்.

மருந்துக் குறிப்பு சீட்டின் இறுதியில் எழுதிய மருத்துவரின் பெயரும் ஒப்பமும் நாளுடன் எழுதப்படும்.

மருந்துச் சீட்டில் மருந்து வழங்கப்படும் பொருட்டு செய்வதற்கான முழு விவரமும், பிணியாளி அதைக் கையாளும் முறையின் முழு விவரமும் அடங்கி இருக்க வேண்டும். இவற்றில் எந்த நிலையிலும் சிறு ஐயம்கூட ஏற்படாதவாறு மருத்துவர் சீட்டெழுத வேண்டும். இவ்வாறு பலவானவை மருந்துச்சீட்டில் குறிக்கப்பட வேண்டுவதால் அவற்றுள் அனேகமானவை குறியீட்டுச் சொற்களாலும் குறிகளாலும் எழுதப்படும்.

மருந்துச் சீட்டில் எழுதப்படும் சில குறிகளும் குறியீட்டுச் சொற்களும் அவைகளின் பொருளும் பின்வருமாறு :-

| | | |
|---|---|---|
| mg | - | மில்லி கிராம், மி.கி. |
| G, gms | - | கிராம், கி. |
| ml | - | மில்லி லிட்டர், மி.லி. |
| L | - | லிட்டர், லி. |
| | - | சம அளவுகளில் |
| Make | - | செய்க |
| mix, m | | கலக்குக |
| add | - | சேர்க்க |
| gt, m | - | துளி, மினிம் |
| pulvis, pulv, choor powder | - | சூரணம் |
| mixt mixture | - | கலப்பு |
| Kudineer | - | கியாழம் |
| Par | - | பற்பம் |
| Chind | - | செந்தூரம் |
| Pill | - | குளிகை |
| B.D.brid | - | ஒருநாளைக்கு இருவேளை |
| T.D.S. tid | - | ஒரு நாளைக்கு மூன்று வேளை |
| q.i..d | - | ஒரு நாளைக்கு நாலு வேளை |
| St, Stat | - | உடனே |
| S.O.S | - | தேவைப்பட்டபோது |
| with | - | உடன் |
| without | - | இல்லாமல் |
| H.S, | - | at bed time, படுக்குமுன் |
| C.m | - | மறுநாள் காலை |

c n - மறுநாள் இரவு

| | | |
|---|---|---|
| ac | - | உணவுக்கு முன் |
| pc | - | உணவுக்குப் பின் |
| ic | - | உணவுக்கு நடுவில் |
| oh | - | ஒவ்வொரு மணிக்கொரு தடவை |
| Om | - | ஒவ்வொரு காலையும் |
| s, sig | - | அறிவுறுத்துக |
| ext | - | புறப்பயனுக்கு |
| C & D | - | சுத்தம் செய்து கட்டுக |
| Prim-m | - | அதிகாலையில் |
| Ana | - | of each |
| q.s. | - | quantity sufficient<br>தேவையான அளவு |
| p.a. | - | to the part affected |
| | - | பாதிக்கப்பட்ட பகுதியில் |

## மருந்தினளவு

பொதுவாய் ஒவ்வொரு மருந்தும் வேறான அளவுகளில் கொடுக்கப்படுகின்றன. மருந்தின் அளவு விதியை உள் மருந்துகளில் தவறாது கடைப் பிடிக்க வேண்டும். நூற்களில் மருந்தின் அளவு ஒரு முழு வளர்ச்சி அடைந்த ஆணுக்குக் கொடுப்பதற்கானதைக் குறிக்கும். நோயாளியின் வன்மை, நோயின் வன்மை ஆகியவற்றை அறிந்து இவ்வளவை மிகுதிப்படுத்தியோ குறைத்தோ மருத்துவர் வழங்கலாம். பெண்டிர், முதியோர், சிறுவர் ஆகியோருக்கு முழு அளவினும் குறைவானதாகக் கணக்கிட்டுக் கொடுக்க வேண்டும். பிணியாளியின் எடை விகிதப்படியோ வயது அளவுப்படியோ அளவைக் கணக்கிடலாம்.

ஒரு முழுவளர்ச்சி அடைந்த, 21 முதல் 60 வயது வரையிலுள்ள ஆணுக்கு 60 தனிம எடை மருந்தானால்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 வயதுக்குட்பட்டவருக்கு | - | 5 தனிமம் | - | $^1/_{12}$ |
| 1 - 2 வயதுவரை | - | 8 " | - | $^1/_8$ |
| 2-3 " | - | 10 " | - | $^1/_6$ |
| 3-4 " | - | 15 " | - | $^1/_4$ |
| 4-7 " | - | 20 " | - | $^1/_3$ |
| 7-14 " | - | 30 " | - | $^1/_2$ |
| 14-20 " | - - | 40 " | - | $^2/_3$ |

60க்குமேல்- $^4/_5$ அல்லது $^2/_3$ மிகுந்த முதிர்ச்சியில் $^1/_2$ என்று பொதுவாக நினைவில் கொள்ளலாம். எடையின் விகிதப்படி மரு.தளவை நிர்ணயிப்பதே சிறந்த வழியாகும். எனினும் சில மருந்துகள் எடை விகிதப்படி அளவுபடுத்த முடிவதில்லை.

மருந்தின் அளவு அது கொடுத்த உடனேயாகிலும் உடலில் ஏற்றுக் கொண்டபின்னாகிலும் ஏற்படுத்துகின்ற செயற்றிறனைக் கொண்டு கணிக்கப்படுகிறது. உடலில் தேவையற்ற கேடுகளை உண்டாக்காத அதிக அளவு கூடுதல் அளவு எனப்படும். ஒரே வயதும் ஒரே எடையுமுள்ள இருவருக்கு ஒரேயளவான மருந்து சமமான குணத்தைக் காட்டுமென்பதில்லை. மருந்துகளின் குணங்காட்டுந் தன்மை, வயது, எடை, பால், உடல் பலம், பழக்க வழக்கங்கள், மனநிலை, மருந்து ஏற்கப்படும் விரைவு செரிமான ஆற்றல் நோயின் தன்மை, உடற்கட்டு, தாது உறுப்புகள் போன்றவற்றின் நிலைமை, மருந்துகளின் தன்மை போன்ற பலவகையான ஏதுக்களால் மாற்றமடைகின்றன.

தெளியக்கூடிய மருந்துகளை அளிக்குமுன்னர் புட்டிகளை நன்றாகக் குலுக்கிக் கொள்ள வேண்டும்.

பெண்களுக்கு, அதே வயதுள்ள ஆண்களின் அளவில் மூன்றில் இரண்டு பங்கு போதுமானதாய் இருக்கும். எனினும் இவ்வளவுகள் பலநிலைகளில் வேறுபடுத்திக் கொடுக்கப்படலாம்.

மூசாம்பரம், பெருங்காயம் போன்ற கருப்பையைச் சுருங்கச் செய்யும் மருந்துகள் சூற்காலத்தில் கொடுக்கப்படக் கூடாது. கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் அவற்றின் அளவை மிகக் குறைத்து கருவை வெளியேற்றக் கூடாத அளவில் கொடுக்க வேண்டும். சிறு குழந்தைகளுக்கு அபினி கொடுக்காமல் விலக்குவது நலம். ஏனெனில் இது சிறு அளவில்கூட சிறுவர்களுக்கு மிகுந்த கேட்டை உண்டாக்கும். ஆனால் நாட்டின் சில பகுதிகளில் குழந்தைகளுக்கு அபினிப்பழக்கத்தை அவர்களின் வேலை செய்யும் தாய்மார்கள் ஏற்படுத்தி விடுகின்றனர். சில மருந்துகளின் பெரிய அளவைக்கூட குழந்தைகள் தாங்கிக் கொள்ளுகின்றன. அவை வெள்ளைப் பாடாணம், பூரம், கெந்தி, குரோசாணி ஓமம், ரேவல்சின்னி போன்றவையாகும்.

நம்பிக்கையுடன் ஆவலுள்ள பிணியாளி தாபமகற்றி மருந்துகளையும் இசிவகற்றிகளையும் நிறைந்த அளவிலும் ஏற்கலாம். இதுபோலவே அவரால் குருதி இழப்பையும் தாங்கிக் கொள்ள முடிகிறது. ஆனால் வெப்பமுண்டாக்கக்கூடிய தூண்டி மருந்துகளையும் இவர்கள் மிகச் சிறிய அளவிலேயே ஏற்பர். இதற்கு எதிர்மாறாயுள்ளவர்கள் வெப்பமுண்டாக்கும் தூண்டி மருந்துகளையும் பேதியுண்டாக்கும் மருந்துகளையும் நிறைய ஏற்றுக்கொள்வர். எனவே இவருக்கு இவ்வாறான மருந்துகள் குறைந்த அளவில் கொடுக்கப்பட்டாலே போதுமானது.

ஒருவருக்கு ஒரு மருந்து ஏற்கப்படுகிறதா அல்லது ஒவ்வாமைக் குறி குணங்கள் ஏற்படுமா என்று தெரிந்து கொள்வது மிக அவசியம். இரசமருந்துகள் அபினி கலந்த மருந்துகள் போன்றவை கொடுக்குமுன்னர் இதைக் கட்டாயமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறிருந்தால் அவருக்கெழுதும் மருந்துச் சீட்டில் இதை சிவப்பு மையினால் குறித்தல் நன்று.

நம் நாட்டவர் மேனாட்டவரைவிட குறைந்த அளவு மருந்துகளை ஏற்பதாகக் கண்டுள்ளனர். ஆனால் இது பேதியுண்டாக்கும் மருந்துகளில் மாறாக உள்ளது. ஆட்களின் இனம், அவரின் வயது, அவர் இடத்தின் வெப்ப தட்பநிலை ஆகியவையும் மருந்து ஏற்பதில் மாறுதலுண்டாக்குகின்றன.

இவை தவிர தனி ஒருவர் மற்றவரினும் பிரிக்க முடியாத அம்சங்களை உடையவராயினும்கூட அவருக்கு ஒருசில மருந்துகள் ஏற்காமல் இருக்கலாம். இதுவே ஒவ்வாமை எனப்படும். இதை வரையறுக்கும் விதிமுறைகளை நிர்ணயிக்க முடிவதில்லை.

சில வேளைகளில், சிலருக்கு கணித்துக் கொடுக்கப்பட்ட மிகச் சிறிய அளவு மருந்து மிகுந்த அதிகப்படியான குறிகுணங்களைக் காட்டலாம். பூரம், ரேவல் சின்னி, விஷமுங்கில், அபினி, நிலாவாரை, சுரப்பட்டை போன்றவைகள் இவ்வாறான குணங்காட்டும். பூரம், இரசம் போன்றவை அதி உமிழ்நீர்ச் சுரப்பையும், ரேவல் சின்னி வலிப்பையும் பூக்களின் மகரந்தம், மருந்துகளன்றி கத்தரி, மீன், கருவாடு, சில பழ வகைகள், காளான், வெள்ளரி, முட்டை போன்ற உணவு வகைகளும் ஒவ்வாமைக்கு எடுத்துக்காட்டாய் இருக்கக்கூடும். சிலருக்கு தொழுவங்களின் மணம், பூக்களின் மணம், சிறு பூச்சிக்கடிகள் போன்றவையும் பலமான ஒவ்வாமைக் குறிகளையுண்டாக்கும். சிலர் சிலவகை உணவுகளையோ தாங்கள் அருவருப்படையும் சுவை, மணங்களுள்ள மருந்துகளையோ உட்கொண்டால் ஓக்காளம், வாந்தி, மயக்கம் போன்ற பலவித குணங்கள் ஏற்படுத்துவதாக கூறுவர். உண்மையில் அவைகள் அக்குணங்களை ஏற்படுத்தாதபோதும் அது அவர் மனநிலையைப் பொறுத்து உண்டாகும் எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டெழுவதாகும். எனினும் இவ்வாறானவருக்கு அவ்வகைப் பொருட்களைத் தவிர்த்தல் நன்று.

பட்டணங்களிலும், நெரிசலுள்ள இடங்களிலும் வீட்டினுள்ளே அடைபட்டு வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள் சிற்றூர்களில் உள்ளவர் வெளி வேலைகளில் ஈடுபட்டவரைக்காட்டிலும் சிறு அளவு மருந்துகளையே ஏற்பர். கழிச்சலுண்டாக்கும் மருந்துகள் அதே மருந்துகள் எடுத்து பழக்கப்பட்டவருக்கு கூடிய அளவிலேயே வேலை செய்யும். சிலருக்கு வேலை செய்வதில்லை. எனவே அவ்வாறானவருக்கு அவ்வகை மருந்தை மாற்றி வேறுருபத்தில் கொடுக்க வேண்டும். ஆனால் வயிற்று உறுப்புகளின் அழற்சி நிலைகளில் பேதியுண்டாக்கும் மருந்துகளை விலக்க வேண்டும்.

இச்சைகளும் அன்புணர்வுகளும் மனநிலையை மாற்றக்கூடிய ஏனைய ஏதுக்களும் மருந்தின் செயற்றிறனை மாறுபடுத்தும். மருத்துவரிடம் ஏற்படும் மதிப்பும் நம்பிக்கையும் அதிக பலனைக் கொடுக்கக் கூடியது. எனவே மருத்துவர், எப்போதும் தம்மிடம் சேர்ந்த நோயாளியின் மனதில் நம்பிக்கையை முதலில் ஏற்படுத்தக்கூடியவாறு எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டும்.

சில மருந்துகள் தனியாகக் கொடுக்கப்படுவதைவிட வேறு சிலவற்றை சிலவற்றோடு சேர்த்துக் கொடுக்கப்பட்டால், சிறிய அளவிலேயே குணங்களைக் கொடுக்கின்றன. இவ்வகைக் குணம் குறிப்பிடும் அளவில் இருந்தாலன்றி மருந்துகளைக் கலந்து கொடுக்காமல் தனித்துக் கொடுப்பதே நன்று. இவையன்றி நட்பு பகைச் சரக்குகளறிந்தும் மருந்துகளை வழங்க வேண்டும்.

மருந்துகள் குறைந்தது முதல் கூடுதல் வரையிலான பல அளவுகளிலும் வெவ்வேறுவிதமான குணங்களை ஏற்படுத்துகின்றன. எனவே தேவையான குணத்திற்கேற்ப மருந்தை அளவுப்படுத்திக் கொடுக்க வேண்டும். எந்த ஒரு மருந்தானாலும். அது கொடுக்கப்படுகின்ற ஆளுக்குத் தக்கதாக அளவுப்படுத்த வேண்டுமல்லாது அம்மருந்துக்கு நூலில் குறிப்பிட்டுள்ள அளவையே மாற்றக் கூடாத முடிவானதாக கொள்ளக் கூடாது.

நோயின் தன்மை, காலம் போன்றவைகளும் மருந்தின் குண ஆற்றலைப் பெரிதும் பாதிக்கின்றன.

உடலின் பிணி நிலை, பிணியின் தீவிரம் ஆகியவைகளும் மருந்தின் குணத்தை மாறுபடுத்துகின்றன. இதுபோலவே உடலின் மாறுபட்ட நிலைகளும் செயல்களும், முக்கியமாகச் செரிமன உறுப்புகளின் உறுப்புக் கேடு, செயற் கேடுகள், மருந்தின் குணத்தைப் பெரிதும் பாதிக்கின்றன. இந்நிலைகளில் சுரமருந்துகள் குணங்காட்டாமலும், உடல் தேற்றிகள் அழற்சியை உண்டாக்குதலும் காணக்கூடியது.

உணவுகளும் மருந்தின் குணத்தைப் பாதிக்கின்றன. உடல்தேற்றி மருந்துகளும் கொழுப்புப் பொருட்களும் தாபமகற்றி மருந்துகளின் செயலைக் குறைக்கும். இரசக்கலப்பு மருந்துகள்

ஊக்கிகளின் இருப்பில் அதிகமாய்ப் பாதிக்கப்படுகின்றன. அய உப்புக்கள் தாவர அமிலங்களின் இருப்பில் செயலற்று விடுகின்றன.

மருந்து கொடுக்கப்படும் நேரம் அடுத்து முக்கியமான தொன்றாகும். உறக்கமுண்டாக்கிகள், வாந்தியுண்டாக்கிகள், வியர்வைப் பெருக்கிகள் போன்றவை படுக்கைக்கு ஒன்று அல்லது இரண்டு மணிநேரத்திற்கு முன்பு கொடுக்கப்பட்டால் சிறப்பாகச் செயல் புரிகின்றன. ஊக்கிகளும், தூக்கமுண்டாக்கிகளும் குடிப்பழக்கமுள்ளவர், களிப்பான பொருட்களை உட்கொண்டு பழக்கமுள்ளவர் ஆகியோரில் மந்தமாகவே செயற்படும். சிறுநீர் பெருக்கிகள் பகற்போது உடலைத் தன்னிலையில் வைத்துக் கொடுக்க நல்ல செயல் காட்டும். பிசின் தன்மையுள்ள மலம் போக்கிகள் படுக்குமுன் கொடுக்க நன்று. அதி துரித செயலாற்றலுள்ள உப்பு, நெய் வகைக் கழிச்சலுண்டாக்கிளை அதிகாலையில் தரலாம். சுரப்பட்டை வெறும் வயிற்றிலும் வெள்ளைப்பாடாணம் நிறைவயிற்றிலும், அமிலத் தன்மையுள்ளவை இருஉணவுகளுக்கு இடைவேளையிலும் நன்கு செயலாற்றுகின்றன.

அழற்சியுண்டாக்கக் கூடியதும் நச்சானதுமான மருந்துகள் - உப்புவகை, பாடாணம் தாமிரம், நாகம், அயம் போன்றவை செரிமானச் செயல் முடிந்தபிறகு கொடுப்பது நன்மை பயக்கும். இவை உணவின் போது கொடுக்க அவைகளின் செயல் குறைவுபட அல்லது தடைபடக்கூடும். குக்கி நீரை வீரம், துவர்ப்பிகள், சாராயம், போன்றவை செயலிழக்கச் செய்வதால் அவைகள் சீரண முடிவில் கொடுக்கப்படவேண்டும். தானியச் சத்து, மீன், நெய் போன்றவை உணவுடனோ அல்லது உணவுக்குப் பின்னோ கொடுக்கப்படலாம்.

ஒளி, காற்று, உடற்பயிற்சி ஆகியவைகள் மருந்தின் செயற்றிறனுக்கு உதவுவதோடு மருந்துகட்குத் துணையாகவும் செயலாற்றுகின்றன. மூடப்பட்ட காற்றில்லாத இருட்டறை உடல் தேற்றி மருந்துகளைப் பயனற்றதாக ஆக்கும். சிறுநீர் பெருக்கிகளை கடின உடல் உழைப்பும் பயிற்சிகளும் செயலற்றதாக்கும்.

காலத்தன்மை, பருவம் போன்றவைகள் மருந்தின் செயலை மாறுபடுத்துகின்றன. எந்தவித மருந்துமில்லாமலேயே சில நோய்கள் சில காலங்களில் குறைவதும் மற்றும் சிலவற்றில் கூடுவதும் காணலாம். சில மருந்துகள் வேனிற்காலத்தில் ஒரு அளவில் அதிக செயலாற்றலுடையதாயும் குளிர்காலத்தில் அதே அளவில் குறைந்த செயலாற்லுடையதாயும் இருக்கலாம்.

அடுத்து மருந்தின் தன்மையும் அமைப்பும் அதன் செயலைக் கட்டுப் படுத்துவனவாகின்றன. பொதுவாய் கடினங்களைவிட நீர்மங்கள் விரைவிலும் அதிகமாயும் பயன்தருகின்றன. சுரப்பட்டை, நிலவேம்பு முதலியன சூரண மாக வழங்கப்படுவதைவிட சியாழமாகக் கொடுக்கப்பட்டால் நல்ல பலனைத் தரும். நீரில் கரையாத மருந்துகளை குளிகை அல்லது சூரண ரூபத்தில் கொடுக்கலாம். குளிகைகள், பூநீறு, சவுக்காரம் போன்றவைகளின் இருப்பில் விரைவில் சிதைவுண்டு சிறப்பான குணம் காட்டுகின்றன. இதனாலேயே முப்பூ சேர்ந்த மருந்துகள் முன்னாள் மருத்துவர்களால் பெரிதும் விரும்பப்பட்டன. சூரணங்களைத் தேன், சர்க்கரைப் பாகு போன்றவைகளில் கலந்தாவது, உருள் கவசங்களில் பொதித்தாவது கொடுக்கலாம்.

மருந்தின் அருவருப்பான சுவையை மாற்றுவது பல வேளைகளில் அவசியமாகிறது. ஆமணக்கு நெய், மீன் நெய்கள் போன்றவைகளை மணமுள்ள பொருட்களோடு கலந்து கொடுக்கலாம். நிலவாகை போன்றவைகளைக் சியாழமாக்கி சர்க்கரை பால் கலந்து கொடுக்கலாம். கசப்பானவை களைத் துவர்ப்பிகளோடு கொடுக்க அச்சுவையை மறைக்கும். அதிமதுரம் பல மருந்துகளின் சுவையை மாற்ற பயன்படுகிறது. பேதி மருந்துகளுக்கு சுக்கு சேர்த்துக் கொடுக்க வயிற்றில் கடுப்பேற்படாது கழிச்சலுண்டாக்கும்.

இவ்வாறு பல ஏதுக்கள் மருந்தின் செயற்திறனை மாற்றக்கூடியனவாதலால் மருந்து அளவுபடுத்தப்படும்போது இவைகள் அனைத்தையும் கவனித்துச் செய்ய வேண்டும். மருந்துகள் ஆசன வழியாய்ச் செலுத்தப்பட்டால் சாதாரணமாக வாய்வழி அளவைப்போல இரண்டு பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு ஆளின் உணவுப் பழக்கம், குல, சமய

பண்பாடுகள், பொருளாதாரம், அவர் இருக்கும் நில அமைப்பு போன்றவைகளை மனதில் கொண்டு அவருக்கு அறிவுறுத்தும் மருந்துகளும் உணவுப் பண்டங்களும் அமைக்க வேண்டும். பிணியாளனின் நன்மையே முதல் எண்ணமாகக் கொண்டு இவற்றை ஏற்படுத்த வேண்டும்.

**மருந்து வழங்குமிடமும் வழங்குகையும் :**

மருந்தைப் பிணியாளர்களுக்கு விநியோகம் செய்கின்ற இடம் தனி மருத்துவரின் மருத்துவமனை அல்லது பெரிய மருத்துவ நிலையங்கள், அவற்றில் வருகின்ற ஆட்களின் எண்ணிக்கை போன்றவைகளினால் மாறுபட்ட பல அமைப்பு வகையாக அமைக்கலாம். ஈழநாட்டில் நாட்டு மருத்துவர்கள் மருந்து வழங்குமிடத்தைச் சிறப்பாக அமைப்பர். இவர்கள் மருந்துச் சரக்குகள் வைப்பதற்கு வசதியான பல அறைகளுள்ள பெட்டகங்களில் சுக்கு, மிளகு, கடுக்காய் போன்றவற்றையும் நிலவேம்பு, சுரைக்கொடி போன்றவற்றைத் தறித்துப் போட்டு அடையாளச் சீட்டொட்டி வைத்திருப்பர். மற்றொரு பகுதியில் வரிசையாக தைலங்களும் குளிகைகளும் சூரணங்களும் பிறவும் அதற்கென சாய்வான ஆடிக்கலங்களிலிடப்பட்டு மூடப்பட்டு அடையாளச் சீட்டொட்டப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். ஒரு உயரமான மேசையில் சரக்குகளை வெட்டக்கூடிய பாக்கு வெட்டி போன்ற கருவி இடது பக்கம் நிறுத்தப்பட்டும் வலது பக்கம் எடைகருவியும் வைக்கப்பட்டிருக்கும். கியாழச்சரக்குகள் பிணியாளிக்கும் பிணிக்கும் தக்கவாறு எழுதப்பட்டு விநியோகிப்பவரால் நிறுத்தெடுக்கப்பட்டு, தறிக்கப்பட்டு, காகிதப் பையில் பொட்டலமாக்கி, உறையில் கியாழம் செய்யும் முறை, அளவு போன்றவை எழுதப்பட்டுக் கொடுக்கப்படும்.

இவைதவிர இடிகருவிகள், அளவைக்கலங்கள், துடுப்பு, கரண்டிகள், சிறு கல்வங்கள் போன்ற பிற கருவிகளும் பலதர வெற்றுக்குப்பிகள், காகிதங்கள் போன்றவையும் அங்கு வைக்கப்பட்டிருக்கும்.

பொதுவாக மருந்து வழங்குமிடம் தேவையான அளவு விசாலமாயும் நல்ல வெளிச்சம் காற்றோட்டம் உள்ளதாயும் அமைய வேண்டும். உள்ளே பணிபுரியும் வழங்குநர் அன்றி பிணியாளிகள் அதனுள் வராதவாறும், வெளியில் நின்றே மருந்தைப் பெறக்கூடியவாறும் இதை அமைக்க வேண்டும். மருந்துகளையும் கருவிகளையும் 4 அடி உயர மேசைகளிலும் அதற்கும் மேலாக கைக்கெட்டுமுயரத்தில் அமைக்கப்படும் தட்டுகளிலும் வைத்துக் கொள்ளலாம்.

மருந்து வழங்குமிடத்தில் பொதுவாகக் கத்தி, தறிப்பான், இடிகருவி சிறுகல்வம், துடுப்பு, பீங்கான் அரைப்பான் எடைகாட்டி (மருத்துவத் தராசு), அளவைக் கலன்கள், பல அளவுக்குப்பிகள், பலவகைக் காகிதப்பைகள்,காகிதத் துண்டுகள் போன்றவை இருக்க வேண்டும்.

மருந்துப் பொருட்களை அவை எடுக்கக் கூடிய விதத்தில் அமைந்த கலங்களில் இட்டு பத்திரப்படுத்தி மூடி இட்டு வைக்க வேண்டும். எந்த மருந்துக் கலமும் அதிலடங்கிய மருந்தின் பெயர் எழுதப்பட்ட அடையாளச் சீட்டு ஒட்டப்படாது வைக்கக் கூடாது. அச்சீட்டில் அதில் வைக்கப்பட்ட மருந்தின் பயன்படு நாளளவும் (Date of Expiry) குறிக்கப்பட வேண்டும். அபினி, வெள்ளைப்பாடாணம், துருசு, வீரம் போன்ற நச்சுத் தன்மையுள்ளவைகளை சிவப்பு மையில் எழுத வேண்டும்.

அடையாளச் சீட்டு, கியாழம், தைலம் போன்றவை பட்டு விரைவில் சேதமாகலாம். இவ்வாறு சேதமானால் அவ்வப்போது அவற்றினிடத்தில் புதிதான சீட்டு ஒட்டப்படவேண்டும். சீட்டுத் தாளின் மீது மெழுகைத் தேய்த்து வைத்தால் சிறப்பானது.

மாத்திரைகள், குளிகைகள், பற்ப செந்தூர சுண்ணங்கள், சூரணங்கள் மெழுகு ஆகியவற்றை ஆடிக் கலன்களிலும் தைலம், நெய், தீநீர், கியாழம் ஆகியவைகளை வாய் குறுக லான புட்டிகளிலும், இளகம், களிம்பு, வெண்ணெய் ஆகியவைகளைச்

சீசாக்களிலும் வைக்கலாம். ஒவ்வொரு கலமும் அதிலிருந்து மருந்து எடுக்கப்பட்டவுடன் மூடப்பட வேண்டும். ஒரு மருந்து மற்றொன்று வழங்குகையில் அதனோடு கலக்காமல் இருக்க எல்லாவித முயற்சிகளும் எடுத்துக் கொள்ளல் அவசியமாகும்.

மருந்து வழங்குகையில் குளிகை, சூரணம், பற்ப செந்தூரம் ஆகியவைகள் தாள்களின் நடுவில் வைத்து ஒவ்வொரு வேளைக்கும் தனித்தனியாக பொட்டலமாக்கிக் கொடுக்கப்பட வேண்டும். செந்தூர பற்பங்கள் மிகச் சிறிய அளவினைதானால் அனுபானச் சூரணத்தை முதலில் தாளில் வைத்து அதன் நடுவில் பற்ப செந்தூரத்தை வைத்து மடக்கிக் கொடுக்கலாம். இவ்வாறு மருந்துகளை மடக்க நெய்த்தாள் சிறந்தது. அது இல்லாத இடத்தில் சுத்தமான தாளைச் சீராக வெட்டிப் பயன்படுத்தலாம்.

மருந்தின் அளவு மட்டுமின்றி அது பயன்படுத்தப்பட வேண்டிய நாளளவும் முக்கியமாகும். சாதாரணமாக தீவிர சிறுநோய்களுக்கு ஒருவேளை மருந்தே போதுமானதாய் இருக்கலாம். அனேக நோய்களுக்கு அவை தீருமட்டும் மருந்து கொடுக்கப்படலாம். சில மருந்துகள் வாரத்துக்கு ஒருதடவை அல்லது அதைப்போன்ற காலங்கட்கு ஒரு தடவை கொடுக்கப்படலாம். இவ்வாறன்றி தொடர்ந்து ஏழு, பதினைந்து, நாற்பது நாட்கள் கொடுப்பதும் உண்டு. பதினைந்து நாள் கொடுப்பது 'ஒருபட்ச மருந்து' என்றும் நாற்பது (சிலர் நாற்பத்தெட்டு என்பர்) நாள் கொடுப்பது 'ஒருமண்டல மருந்து' என்றும் கொள்ளப்படும். சில மருந்துகள் சில நாட்களுக்குக் கொடுக்கப்பட்டு இடையில் சில நாட்கள் நிறுத்தப்பட்டு பின்னர் கொடுக்கப்படும். இவ்வாறு செய்தல் மறுபத்தியம் வைத்தலாகும். பாடாண வகையும் பஞ்சசூதங்களும் உலோக வகை சேர்ந்த மருந்துகளும் சேராங்கொட்டை, அபினி போன்றவை குறிப்பிட்ட நாளளவு தனித்துக் கொடுக்கப்பட வேண்டியனவாகும். சில மருந்துகள் தமது குணங்களை ஏற்படுத்தியபின் மாறுதலடையாமலும், வெளியேற்றப்படாமலும் உடலில் தேக்கமடையக் கூடும். இவ்வகை மருந்துகளின்

நாளளவும் கவனித்துக் கொடுக்க வேண்டும். எல்லா மருந்துகளுக்கும் அவற்றின் அளவும் நாளளவும் ஏனைய விதிகளும் கூறப்பட்டிருக்கும். எனினும் மருத்துவர் தமது அனுபவத்தைக் கொண்டு இவற்றை மாறுபடுத்திக் கொள்ளலாம்.

தைலங்களும் நெய்களும், கியாழங்களும் வாய் குறுகலான மூடியுள்ள ஆடிக்குப்பிகளில் வழங்கலாம். பொதுவாய் உள்ளுக்குக் கொடுக்கப்படும் மருந்துகள் நிறமற்ற குப்பிகளில் கொடுக்கப்பட வேண்டும். இளகங்கள், மெழுகுகள் ஆகியவைகளை நெய்த்தாளிலாவது பொருத்தமான வாயகன்ற கலங்களிலாவது வழங்கலாம்.

மருந்துகள் கலந்து கொடுக்க வேண்டியிருந்தால் குளிகைகளைத் தூளாக்கியும் பற்ப செந்தூர சூரணங்களைக் கலந்தும் பீங்கான் பலகையில் வைத்துப் பிரித்து அளவுப்படுத்தி பொட்டலமாக்கிக் கொள்ளலாம். சிறு பொட்டலங்களை உறையிலிட்டு வழங்க வேண்டும்.

கியாழம், தைலம் ஆகியவைகளுக்கும் முடிந்தவரை ஏனைய மருந்துகளுக்கும் அடையாளச் சீட்டு இணைப்பது அல்லது ஒட்டுவது அவசியம்.

தைலமாவது, கியாழமாவது உள்ளுக்குக் கொள்ளுவதற்காய் கொடுக்கப்பட்டால், குப்பியின் பின்பக்கத்தில் ஒரு நீண்ட காகிதத்தை மருந்து உள்ள உயரத்துக்கும் அது எத்தனை பங்காக பிரிக்கப்பட்டு உட்கொள்ளப்பட வேண்டும் என்று மடித்து பக்கங்களில் முக்கோணமாக வெட்டப்பட்டும் ஒட்டப்படுதல் நல்லது, இவ்வாறு செய்யப்படுவதால் ஒவ்வொரு வேளைக்கான மருந்தையும் எளிதாக ஊற்றிக்கொள்ள முடியும்.

மருந்துகளுக்கு ஒட்டப்படும் அடையாளச் சீட்டு அம்மருந்து யாருக்கு உரியது என்றும், மருந்து இன்ன வகை - இன்ன மருந்து என்றும் - அது உட்கொள்ளப்படும் அளவு, வேளை காலம் போன்ற விவரங்களையும் உடையதாய் இருத்தல் வேண்டும். வெள்ளை எண்ணெய் போன்ற தெளிவடையும் மருந்துகளின் அடையாளச் சீட்டின் மேலே குலுக்கி ஊற்றவும் (Shake well before use) என்றும்

வெளிப்பயனுக்குப் பயன்படுத்துவனவற்றின் மேல் வெளியாட்சிக்கு மட்டும் (Ext. use only) என்று சிவப்பு மையிலும் குறிப்பிடப்பட வேண்டும்.

சிலவகை அடையாளச் சீட்டுகள் கியாழம் 90 மிலிட் மூன்று வேளைக்காக கொடுக்கப்படுவதற்கு

................................................................................................................................................

கியாழம்

திரு ....................அ.

வ. 39 பா-ஆ

(30 மிலிட்) மூன்றில் ஒருபங்கு வீதம் மூன்று வேளை உணவுக்குப் பின் கொள்ளவும்.

தேதி ஓம்.

................................................................................................................................................

தைலம் (வெள்ளை எண்ணெய், மூலகுடாரநெய்) உள்ளாட்சிக்கு வழங்குகையில்

---

தைலம் (30 மிலிட்)

குலுக்கி ஊற்றவும்

திரு...............ஆ

வ-18

பா-ஆ

முழு அளவையும் நாளை காலை வெறும் வயிற்றில் கொள்ளவும்

தேதி ஓம்.

................................................................................................................................................

இளகங்கள் போன்றவை கொடுக்கப்பட்டால்

................................................................................................................................................

இளகம்

திரு. வை ..........................................................

வ-30, பா-ஆ

இரண்டில் ஒருபங்கை காலை, மாலை உணவுக்குப் பின் இருவேளை சாப்பிடவும்.

தேதி

ஓம்.

...........................................................................................

செந்தூராதிகளுக்கு அநுபானமாக இளகங்கள் கொடுக்கப்பட்டால்

...........................................................................................

இளகம்

திரு. எ ..........................................................

வ-24 பா-ஆ

இரண்டில் ஒரு பங்கில் ஒரு பொட்டலம் மருந்தைப் பொதித்து காலை, மாலை உணவுக்குப்பின் இருவேளை சாப்பிடவும்.

தேதி ..............................................

ஓம்.

...........................................................................................

கியாழம் வெளியாட்சிக்குப் பயன்படுத்த

...........................................................................................

கழுவு நீர்

வெளியாட்சிக்கு மட்டும்

திருமதி இ..................................

வ.40 பா-பெ

சற்று சூடாக்கி புண்களைக் கழுவி சுத்தமான பஞ்சினால் துடைக்கவும்

தேதி



ஓம்.

.......................................................................................................................

கொப்புளி நீர்

புறப்பயனுக்கு மட்டும்

செல். ஈ.......................................................................................................

வ-10 பா-ஆ.கு.

இரண்டில் ஒருபங்கை வாயில் ஊற்றி சிலமணித் துளிகள் வைத்திருந்து கொப்புளிக்கவும்.

தேதி ஓம்.

.......................................................................................................................

தைலம் வெளியாட்சிக்கு

.......................................................................................................................

தைலம்

வெளிப்பிரயோகம் மட்டும்

திரு. உ.....................................

வ-48 பா - ஆ

சிறிது தைலத்தை வலது காலில் வலி உள்ள இடத்தில் தேய்த்து தடவி வெந்நீர் ஒற்றடமிடவும்

தேதி ஓம்.

.......................................................................................................................

புண்களுக்கு களிம்பு கொடுத்தால்

.......................................................................................................................

களிம்பு

வெளிப்பயனுக்கு மட்டும்

செல். ஏ...............................

வ-9, பா-ஆ.கு

புண்களைக் கழுவி ஈரமில்லாமல் துடைத்து விட்டு, சிறிது களிம்பை மேலே போடவும்

தேதி ஓம்.

..............................................................................................

சூரண செந்தூராதிகள் பொட்டலங்களாகக் கொடுக்கப்பட்டால் அவைகள் இடப்படும் உறைமேல்

..............................................................................................

செந்தூரம்

திரு ஐ.........................

வ-60,

பா-ஆ

ஒரு பொட்டலம் மருந்தைத் தேனில் குழைத்து, காலை, மதியம், மாலை ஆக மூன்றுவேளை உணவின்பின் சாப்பிடவும்

தேதி: ஓம்.

..............................................................................................

மாத்திரை உள்ளாட்சிக்கு

..............................................................................................

குமாரி ஒ.

வ-20,

பா-பெ

வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் இஞ்சிச் சாற்றில் குழைத்து. 4 மணிக்கொருதடவை கொள்ளவும்

தேதி ஓம்.

..............................................................................................

மாத்திரை வெளிப்பயனுக்கு மட்டும்

திருமதி ஒ.

வ-42,

பா-பெ

தேவையானபோது ஒருமாத்திரையை வெந்நீரில் இழைத்து நெற்றியில் பற்றிடவும்

தேதி ஓம்.

கியாழம் செய்வதற்குப் பொடிகள் அல்லது சிதைத்த மருந்துப் பொட்டலம் கொடுக்கப்பட்டால்

கியாழப் பொடி

திரு. ஔ. வ-30,

பால்-ஆ

பொடி முழுவதையும் 4 குவளை நீர் சேர்த்து கொதிக்க வைத்து ஒருகுவளையானதும் வடிகட்டி அதில் பாதிவீதம் காலை, மாலை இரண்டு வேளை கொள்ளவும்.

தேதி ஓம்.

நச்சுப்பொருட்களும் அளவு மிகுதியானால் தீங்கை உண்டாக்கும் பொருட்களும் சேருகின்ற மருந்துகளை வழங்கும்போது, அவற்றுக்கிடப்படும் அடையாளச் சீட்டில் 'கவனமாகப் பயன்படுத்தவும்' என்று குறிப்பது நன்மையானதாகும். அடையாளச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டால் அவற்றில் மருத்துவ நிலையத்தின் அல்லது மருத்துவமனையின் பெயரையும் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

# துணை மருந்து

ஒரு மருந்தை உட்கொள்ள, வசதியாகவும், அம்மருந்துக்கு குறிப்பிட்ட குணத்தைக் கொடுக்கவும், வீரியத்தை வலுப்படுத்தவும், மருந்துகளில் கைப்புச்சுவை, காரல், வாந்தியுண்டாக்கல், நச்சுத்தன்மை போன்ற கேடுகள் இருந்தால் அவைகளைப் போக்கவும் அவற்றோடு பெரும்பாலும் அனுபானப் பொருட்கள் சேர்க்கப்படுகின்றன. தண்ணீர், வெந்நீர், பால், மோர், நெய், தேன், வெல்லம், இஞ்சிச்சாறு, பழச்சாறு, வாழைப்பழம், வெற்றிலை, சியாழவகை, இளகவகை போன்ற பல பொருட்கள் துணை மருந்தாகக் கூட்டப்படுகின்றன. ஒரே மருந்து அனுபான வேறுபாட்டால் வெவ்வேறு நோய்களைத் தீர்க்கக் கூடியதாய் இருக்கலாம். பொதுவாகச் சுண்ணச் சத்துள்ள மருந்துகளைத் தேனில் கொடுப்பதில்லை. எனினும் சிலவேளை பற்ப சுண்ணங்கள் தேனிலும் அனுபானிக்கப்படலாம். அனுபானப் பொருட்கள் மருந்துக்கும் பிணிக்கும் தக்கனவாய்த் தீர்மானிக்கப்படும். அனேகமான மருந்துகளுக்கு அனுபானப் பொருட்களும் அனுபானத்தால் தீரும் பிணிகளும் நூற்களில் கொடுக்கப்பட்டிருக்கும். இவற்றின் அளவுகளைப் போதுமானதாக நிதானித்துக் கூட்டிக்கொள்ளலாம். எல்லா மருந்துகட்கும் முக்கடுகுச் சூரணம் அனுபானமாகும்.

# பத்தியம், உணவு

ஐம்பூதக் கொள்கைப்படி உணவே மருந்தாவதாலும் மருந்தே உணவாவதாலும் பொருட்களுக்கு நட்பு, பகையுண்டாவதாலும் மருந்துண்ணும் போதும் பத்தியம், உணவு போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது. இவை மருந்துகளுக்கும் பிணிகளுக்கும், பிணியாளியின் காலம், இருப்பிடத்தின் அமைதி, மருந்துண்ணுங்காலம் போன்றவைகளுக்குத் தக்கவாறு மாற்றப்படுகின்றன. இரசம், உலோகம், பாடாணங்கள் சில மூலிகைகள் போன்ற மருந்துகளுக்கு சிறப்பான பத்திய உணவு விதிகள் கூறப்பட்டுள்ளன. பிணிகளில் வாதநோய், தோல்நோய், சுரம் போன்றவைகளுக்குத் தனித்தனியாக ஆகும், ஆகாப் பொருட்கள் உண்டு. அவையாவும் அவ்வவ்விடங்களில் நூற்களில் காணப்படும்.

நம்நாட்டு மருத்துவ முறைப்படி உணவும் மருந்தும் நமது அன்றாட ஒழுக்கம், வாழ்வு, சமுதாய சமயச் சடங்குகள் இவற்றோடு தொடர்புள்ளதாய் இருக்கிறது. நமது உணவு ஆக்கும் முறைகள் பஞ்சபூத அமைப்பில் ஆறுசுவைகளை மனதிற் கொண்டே அமைகின்றன. அன்றியும் இம்முறைகள் ஒருவரையறைக்குள் அமைந்த அறிவியல் அடிப்படைக்குள் அடங்குவதையும் காணலாம். பிணியில் கேடுகளைக் கூட்டக்கூடியனவற்றை, மருந்துகளின் வன்மையினைக் குறைப்பனவற்றை, நீக்கியும் இவைகட்கு மாறானவற்றைச் சேர்த்தும் பத்திய உணவு விதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

உணவுகள் ஆக்கும்போது பருப்புவகைகள் வாயுவைப் பெருக்குவதால் அதைத்தணிக்க பெருங்காயமும், வாளைமீன் வாயுவை உண்டாக்குவதால் பூண்டும், இறைச்சிப் பொருட்கள் கவிச்சு நீக்கப்பட பெருஞ்சீரகமும் முட்டை செரியாக்குணமுண்டாக்குவதால் மிளகுத்தூளும், கருணையின் அமிலப் படிகங்கள் காரலையும் தினவையும் உண்டாக்குவதால் அவைகளை மாற்ற புளியும் சேர்க்கப்படுகின்றன. இதுபோலவே இரசாதி மருந்துகளின் செய்முறையிலும் வழக்கிலும் பனைவெல்லம், பால், வெற்றிலை போன்றவை பயன்படுகின்றன. வீரம், வெள்ளைப்பாடாணம் சேரும் மருந்துகள் அனேகமாக அவைகளின் கேட்டை முறிக்கக்கூடியதாய் மிளகு சேர்க்கப்படும்.

அகத்தி, புகையிலை போன்றவை மருந்துகளின் தன்மையை மாற்றுவதால் அவைகள் மருந்துண்ணுங்கால் நீக்கப்படும். சோகை நோயில் உப்பு குணமாவதைத் தடுத்து நோயை அதிகரிக்கச் செய்வதாலும் வாதப் பிணியில் வாழைக்காய், உருளைக்கிழங்கு போன்றவை வாயுவைப் பெருக்கி நோயைப் பலப்படுத்துவதாலும் தோலைப்பற்றிய நோய்களில், மீன், கருவாடு, கத்தரிக்காய் போன்ற கரப்பான் பொருட்கள் நோயை மிகுதிப்படுத்துவதாலும் அவைகள் அவ்வவ்விடங்களில் நீக்கப்படுகின்றன. சேராங்கொட்டை, தாமிரம் போன்றவை மிகுந்த சூட்டை உண்டாக்குவதால் அவைகள் தரும்போது பால் நிறைய அருந்தச் செய்யப்படுகிறது.

அனேகமான மருந்துகள் உண்ணுங்காலத்தில் போகம், வெறிப்பொருட்கள், ஆகியவை நீக்கப்பட வேண்டும்.

மருத்துவன்பாலும் மருந்தின்பாலும் முழு நம்பிக்கையுடன் பிணியாளன் இருத்தல் வேண்டும்.

## மருந்தூட்டும் புறவழிகள்

மிகச் சிறிய குழந்தைக்கு மருந்தூட்டுங்கால் அதற்கு நேராக மருந்தைக் கொடுப்பதன்றி, பாலூட்டுந்தாயின் மார்பகத்தில் மருந்துகளைப் பூசிக்கொடுப்பதும், பாலூட்டுந் தாய்க்கே மருந்தைக் கொடுத்து பாலின் வழியாக அதைக் குழவிக்குச் சேரச் செய்வதும் உண்டு. பால் உண்ணும் குழவிக்கு மருந்து கொடுக்கையில் அதன் தாய்க்கு உணவு விதியும் பத்தியமும் உண்டு. மந்தப் பொருட்களை உண்ட தாயின் பாலை அருந்திய குழவிக்கு மாந்தம் உண்டாவதால் பாலூட்டும் தாயின் உணவு மிக கவனமாகக் கொடுக்கப்பட வேண்டும்.

பிணியாளி சன்னி, மயக்கம், விஷக்கடிகளால் மூர்ச்சை போன்றவற்றில் மருந்து உட்கொள்ள முடியாத இடங்களில் நசியம், கலிக்கம் போன்ற வழிகளால் மருந்துகள் ஆளப்படுகின்றன. இவையன்றி குடோரியூன்றல் (கொத்திக்கட்டலும் கீறிக்கட்டலும்) முறையிலும் சில மருந்துகள் பயன்படுத்தப்படலாம். இதில் உடலின் மேல் பகுதியில் தோலில் கீறி அவ்விடத்தில் மருந்துகளை வைத்துக் கட்டுவதாகும். இவ்வாறு செய்வதால் மருந்து உடனடியாகக் குருதியில் கலந்து மிக விரைவில் குணங்காட்டும். குடோரிச் சிகிச்சை முறை மிகுந்த அவசர நிலைகளில் வெகுவாகப் பயன்படும். இதை விளக்குகின்றதும் இவ்வகையால் பயன்படும் மருந்துகளைப் பற்றியதுமான குடோரி வைத்தியம் என்ற நூல் தற்போது கிடைக்கவில்லை. எனினும் சில நூற்களில் ஆங்காங்கே இம்முறைச் சிகிச்சை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

# கொத்திக்கட்டலும் கீறிக்கட்டலும்

# (குடோரி மருத்துவமுறை)

மேனாட்டு மருத்துவமுறையில் தற்காலம் பல மருந்துகள் நேரடியாக குருதியிலாவது உடல் இழையங்களிலாவது செலுத்தப்படுகின்றன. இம்முறையாக மருந்தூட்டுவதில் பல நன்மைகள் உண்டு. இதில் மருந்துகள் எளிதாக உடலிற் சேரவும், விரைவாகப் பயன்தரவும், பிணியாளி அவ்வப்போது மருந்துகளை எடுத்துக் கொள்ளுகிற சிரமம் தவிர்க்கப்படவும் காணலாம், இதன்றி தீவரமானதும் கடுமையானதும் அவசரமானதுமான நிலைகளில் இம்முறையின் பயன் அளவிடற்கரியது. மயக்கம், மூர்ச்சை, அதிர்ச்சி, இறுதிக்கால கப அல்லது சன்னி நிலைகளில் இது அதிக பயன் தருகிறது. இம்முறைக்கு ஒப்பான முறை குடோரி மருத்துவமுறையாகும். இதில் உடலில் பலவித பொருட்களால் கொத்தியோ கீறியோ மருந்தை வைத்துக் கட்டலாம். தற்கால நாட்டு மருந்துவரிடையே இம்முறை பெரிதும் வழக்கற்று விட்டதாயினும் மிகச் சிறுபான்மையினர் இதனைச் செய்து வருகின்றனர். குடோரி மருத்துவ நூற்கள் இருந்துள்ளதைக் கேள்வி வாயிலாகவே அறியக் கிடைக்கிறது. எனினும் வேறு நூற்களில் இச்சிகிச்சை முறை பற்றிய செய்திகள் ஆங்காங்கே உள்ளதைக் காணலாம்.

## கருவிகள் :

இச்சிகிச்சை முறைக்கெனப் பயன்படுத்தப்பட்ட சிறப்பான கருவி குடோரி என்பதாகும். இது ஒரு சிறிய கோடரியின் அமைப்பிலும் ஏழரை அங்குல நீளமான பிடியுடனும் காற்பல எடையுடனும் இருக்கும் எனப்பட்டுள்ளது. இதை நாளங்களை அமுக்கி எழச்செய்து அவற்றில் வெட்டுண்டாக்கிக் குருதியை வெளியாக்கவும் பயன்படுத்தியுள்ளனர். (1) தற்காலம் சிலரால் பயன்படுத்தபடுகின்ற இக்கருவி ஏறத்தாழ அரை அடி நீளமான ஒரு தென்னை ஈர்க்கும், அதன் ஒருமுனையைப் பிளந்து கட்டப்பட்ட ஒரு கூரிய முனையுடைய உடைந்த கண்ணாடித்துண்டும் கொண்டதாகும். இதுதவிர கூரிய முனையுள்ள கத்திகளும், நெல்லும் இதற்குப் பயன்படுகின்றன.

முறை :

(அனேகமாக நெற்றி போன்ற இடங்களில்) தோலுக்கு அருகாமையிலுள்ள நாளங்கள் அழுக்கப்பட்டு விரிவடைந்து தோலுக்கு மேலாக விம்மச் செய்யப்பட்டு, குடோரியின் கூரிய முனை அதற்கு நேராய் இருக்கத்தக்கதாய் அதன் காம்பு தோலுக்கு நிறுதிட்டமாய் மறுமுனையால் பிடித்துக் கொள்ளப்பட்டு கூரிய முனைப்பகுதி வேண்டிய உயரத்துக்குத் தூக்கப்பட்டு சுண்டிவிடப்படுகிறது. இவ்வாறு செய்ததும் கூரிய முனை நாளங்களில் விரைந்து பாய்ந்து ஒரு காயத்தை உண்டுபண்ணி மேலே வந்து விடுகிறது. காயம் எவ்வளவு ஆழமாய் ஏற்பட வேண்டுமோ அதற்குத் தக்க இவ்வாறு சுண்டி விடப்படுதலின் உயரம் கணித்துக் கொள்ளப்படுகிறது. காயம் சிறிதாக இருக்க கூரான முனையும் பெரிதாயிருக்க அகலமான முனைகளும் உள்ள குடோரிகள் பயன்படுகின்றன. இவ்வாறு ஏற்படுத்தும் காயங்களின் மேலே மருந்துகள் வைக்கப்பட்டு கட்டிவிடப்படும். இது ஏறத்தாழ தற்கால முறைக்கு ஒப்பானதாகும். இதில் மருந்துகள் குருதியில் நேரடியாகக் கலக்கச் செய்யப்படுகின்றன.

இதே முறை உச்சியிலும், தசையுள்ள பகுதிகளிலும் செய்யப்படலாம். குடோரியின் கூரிய முனையைத் தேவையான உயரத்துக்குத் தூக்கி சுண்டி விடப்பட்டு காயமேற்படுத்தி மருந்துகள் அவ்விடங்களில் வைத்துக் கட்டப்படும்.

இன்னொருமுறையில் கூரிய கத்தியைப் பயன்படுத்தி தேவையான ஆழ நீளத்தில் தோலில் காயமுண்டாக்கி மருந்துகள் வைக்கப்படும்.

நெல்லின் கூரிய முனையால் தோலில் கீறலுண்டாக்கி மருந்தைத் தேய்ப்பதும் வைப்பதும் மற்றொரு முறையாகும்.

## குடோரி செய்யுமிடங்கள் :

பொதுவாக உச்சி அல்லது கபாலத்தின் மேற்பகுதியில் இம்முறை செய்யப்படலாம். இது மிக்க அவசரமான நிலைகளில் செய்யப்படும். இதன்றி கழுத்தின் பின்புறம் ஏற்ற வகையிலமைந்த தசைப்பகுதி, தோற்பகுதி ஆகியவற்றிலும் இம்முறை

கையாளப்படும். கண்ணில் ஏற்படும் நோய்களுக்கும் அவற்றோடு சேர்ந்த ஒருதலைவலி போன்றவற்றுக்கும் நெற்றியின் பக்கங்களிலுள்ள நாளங்களில் குடோரி செய்யப்படும்.

## குடோரி சிகிச்சைக்கான நோய்கள் :

அனேகமாக இச்சிகிச்சை முறை கடுமையான இறுதிநிலை மூர்ச்சைகளிலும், நாகம், விரியன்கடிகள், தேள்கொட்டு ஆகிய நச்சுக்களினாலேற்படும் மூர்ச்சைகளிலும், கடுமையான கண்ணோய்களிலும் கிரிகை, சாக்கை வலிப்பு போன்ற நோய்களிலும் வேறு வலிப்புகள் மூர்ச்சைகளிலும் செய்வதற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

## குடோரி மருந்துகளும் முறையும் பயனும்

மயில் துத்தம், பால்துத்தம் முதலியவற்றை குப்பைமேனிச் சாற்றால் அரைத்துச் செய்யப்பட்ட குளிகையை நெற்றியின் பக்கங்களிலுள்ள நாளத்தில் குடோரியால் ஊன்றி அவ்விடத்தில் வைத்துக்கட்ட கண்ணிலேற்படும் சிலனும் அதனோடு சேர்ந்த தலைநோவும் தீரும் (2)

துருசு, சூதம், மணிப்புங்கன் கொட்டை முதலியவை சேரும் சர்ப்பராஜ மயனம் என்ற மருந்தை உச்சியில் கத்தியால் கீறி வைத்துத் தேய்க்க பாம்புக்கடிகளினால் ஏற்பட்ட மூர்ச்சை தெளிந்து விடம் நீங்கும் (3)

நல்வேளையின் சாற்றை உச்சியில் கத்தியால் உண்டாக்கிய கீறலில் விட்டு ஒரு சட்டியில் அனல் வைத்துக் காட்ட நச்சுக்கடிகளின் மூர்ச்சை தெளியும். இதைக் கடிவாய் அல்லது கொட்டுவாயைக் கண்டு பிடிக்கவும் செய்யலாம் (4)

குடோரியை உச்சியில் ஊன்றி வேளைச்சாறும் சூதமும் கலந்து மத்தித்து முன்போலவேசெய்ய பாம்புக்கடியினால் ஏற்படும் மூர்ச்சை தீரும்.

பூண்டு, வசம்பு, எள்நெய் சேர்த்துச் செய்யப்படும் தைலத்தை உச்சியில் கீறித்தேய்க்க விரியன் கடி, தேள் கொட்டு விடம் நீங்கும் (4)

அழிஞ்சி விதைப்பருப்பு, முடக்கறுத்தான் இலை, உத்தாமணி இலை, பசும்பால் இவை சேர்த்துப் பெறப்படும் ஆதவநெய்யை

உச்சியிலும் கழுத்தின் பின்புறமும் குடோரியூன்றித் தேய்க்க பாம்புக்கடி மூர்ச்சை தீரும் (4)

புதிதான பசுஞ்சாணத்தை, உச்சியில் நெல்கொண்டு கீறி வைத்துக் கட்ட அனற்கிரிகை தீரும் (3)

மேற்கண்டவைகளால் குடோரி மருத்துவமுறை சித்த மருத்துவத்தில் பலவிதங்களில் பயன்பட்டுள்ளமை தெரியும். அதிகமாக, கடின பிணி நிலைகளிலேயே இது பயன்பட்டதை அறியலாம். இம்முறை பற்றிய ஆய்வுகளும் படிப்புகளும் இதை மறுபடியும் பயன்படச் செய்யக்கூடும். இவ்வாறானால் நாட்டு மருத்துவ முறைப்படி பலவித அதிர்ச்சிகள், வலிப்புகள், மூர்ச்சை போன்ற நோய்களும் நச்சு நிலைகளும் தீர்க்கப்படுவதற்கு எளிதாகிவிடும். சில நாட்டுமருத்துவர் நீங்காத தலைநோய்களில் குருதி வெளிப்படுத்த இம்முறையைக் கையாண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

**சான்றுகள்**

1) அகத்தியர் - சத்திராயுத வித்தை
2) அகத்தியர் - நயனவிதி
3) சித்தர் - சர்ப்ப ஆருடம்
4) சித்தர் - சித்தர் ஆருடம்
5) அகத்தியர் - கிரிகை நூல்

# மருந்துகளின் கேடுகள்

பல மருந்துகள் அளவும் நாளளவும் மிஞ்சியபோதும் சில ஒவ்வாமையாலும், சில அவற்றின் இயற்கையான கேடுண்டாக்கும் அல்லது நச்சுத்தன்மையாலும் பல தேவையற்ற குறிகுணங்களை உண்டாக்குகின்றன. உலோக பாடாண மருந்துகள் நன்றாக முடியாவிட்டாலும் மிக்க கேட்டை உண்டாக்கும்.

பொதுவாய் உடலில் தடிப்பு, தினவு போன்றவைகளும் வாய் மழுமழுப்பு, வாய்ப்புண், ஈறுகருத்தல், பேதியாதல், வாந்தியாதல், இரைத்தல், மயக்கம், மூர்ச்சை போன்ற பலவித குணங்கள் இதனால் ஏற்படலாம். சிலவேளைகளில் இறப்பு

கூட உண்டாவதுண்டு. இவைகளைப் பற்றியும் இந்நிலைகளை மாற்றும்முறைகளும் பொருட்களின் முறிவுபற்றிக் கூறப்படும் நூற்களில் காணப்படுகின்றன. அனேகமாக எல்லா மருந்துகளையும் அகத்தி, நிலம்புரண்டி, நஞ்சறுப்பான், அறுகன்புல், மிளகு, அவுரி, கரி போன்றவை மாற்றக்கூடியனவாய் உள்ளன.

தினவு, தடிப்பு, வெப்பம் போன்றவைகட்கு அறுகன்புல்லும் வெண்மிளகும் கியாழமிட்டுத் தரலாம். உலோகங்களின் கேட்டுக்கு நல்ல அயபற்பமும், அப்பிரகம் நன்கு முடியாததினால் உண்டான தீங்குக்கு நன்முறையில் முடிந்த அப்பிரகமும், வாய்பிடிக்கும் மருந்துகளுக்கு கருவேல், காய்ச்சுக் கட்டி போன்ற துவர்ப்பிகளும் சில நஞ்சுகளுக்கு அறுகு, அவுரி போன்றவையும் இதுபோல இன்னும் பலவும் முறிவுகளாகப் பயன்படும். ஒவ்வாத பேருக்கு மருந்தை உடனே நிறுத்தலும் மாற்று மருந்து கொடுத்தலும் வேண்டும். முடிந்தவரை ஒவ்வாத நிலையை முன்னரே கணிக்க முயல வேண்டும்.

## மருந்தூட்டுங்கால் ஒழுக வேண்டியன

### பஞ்சகற்ப முழுக்கு :

சுகமான நாட்களிலோ மருந்தூட்டம் முடிந்த பின்போ அடிக்கடி கஸ்தூரி மஞ்சள், மிளகு, வேப்பம் வித்து, கடுக்காய்த் தோல், நெல்லிப் பருப்பு ஆகிய ஐந்தையும் காராம் பசுவின்பால் விட்டரைத்து கொதிக்க வைத்து சூடாறியபின் தலையில் தேய்த்து முழுகிவர உடல் அசதி, இளைப்பு ஆகியவை ஏற்படாது. வமன, விரேசனம், கலிக்கம், எண்ணெய் முழுக்கு போன்ற ஒழுக்க விதிகளைத் தவறாது கடைப்பிடித்தல் நோய்கள் ஏற்படாதிருக்கச் செய்யும்.

## அரைப்பு வகை

| | | |
|---|---|---|
| தைலமுழுக்கிற்கு | - | சிகைக்காய், மணிப்புங்கு |
| பசுவின் நெய்க்கு | - | பச்சைப்பயறு |
| உடலுக்கு | - | உசில இலை |
| சொறி, தினவு | - | இலுப்பைப்பிண்ணாக்கு |

**எண்ணெய் முழுகில் விலக்க வேண்டியவை :**

வெண்பூசனி, பரங்கி, மா, தென்னைகளின் காய், கீரைத்தண்டு, அகத்தி, பாகல், கத்தரி, கொத்தவரை, எள், கொள்ளு, கடலை, கடுகு, புளி, தயிர், புகையிலை, பகல்தூக்கம், வெய்யில், காற்று, மீன், கோழி, போகம் போன்றவையாகும்.

## இச்சாபத்தியம்

இச்சிக்கின்ற பொருட்களை விலக்க வேண்டும் என்றும் இச்சை (போகம்) விலக்கப்பட வேண்டும் என்றும் கூறுவதுண்டு. பொதுவாய் மருந்தை முறிப்பனவும் கேடுண்டாக்குவனவும் நீக்கப்பட வேண்டும். இதில் வரால், குறவை, தேளி ஆகிய மீன்கள், உள்ளான், காட்டுப்புறா, காடை, கலைமான், வெள்ளாடு இவைகளின் இறைச்சிகள், பசும்பால், நெய், எலுமிச்சை, கடுகு, எள்நெய், பூசனி, கடலை, தேங்காய், மா, பலா, காயம், பூண்டு, கொள்ளு, பாகல், அகத்தி ஆகியனவாகும்.

மருந்துகளுக்கு உப்பில்லாப் பத்தியம் வைத்தால் அதே - அளவு நாட்கள் மருந்தை மட்டும் நிறுத்தி மறுபத்தியம் வைத்து முடிவில் வறுத்த உப்புகூட்டி பின்பு ஒமப்பாலும் அதன்பின் பசுவின் நெய்யும் தேய்த்து முழுக வேண்டும். இவ்வாறு முடிந்தபின்பே உப்பு கூட்ட வேண்டுமென்பது விதி.

மருந்துண்டபின் கொட்டைப்பாக்கு, சிறுநாகப்பூ, தேன், திராட்சிப்பழம், வெற்றிலைக்காம்பு, இலவங்கம், நெற்பொரி, பச்சைக் கர்ப்பூரத்தூள், பச்சரிசி ஆகியவைகளை வாயிலிட்டுக் கொள்ளலாம்.

வெடியுப்பும் மனோசிலையும் சேரும் மருந்துகளில் இவை இரண்டையும் சேர்த்து அரைக்கக்கூடாது. அவ்வாறு செய்தால் தீப்பற்றி வெடித்து பெரும் கேட்டை உண்டாக்கும்.

மருந்துகள் அனைத்தும் முக்கியமாக இரசப் பொருட்கள், உலோகம், பாடாணம், உப்பு, உபரசமும் மூலிகையில் நச்சுக்குணங்களை உண்டாக்கக் கூடியவைகளும் கண்டிப்பாக சுத்தி செய்யப்பட்டபின்பே மருந்துகளில் பயன்படுத்தப்பட

வேண்டும்.

வேறு கவனிப்புகள் தேவையான இடத்தில் அங்கங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளைக் கவனமாய் கருத்தில் கொள்ளவேண்டும்.

# நாட்டு மருத்துவங்களுக்குள்ள தற்கால இடர்பாடுகள்

நமது நாட்டு மருத்துவங்களான சித்த ஆயுர்வேத முறைகளுக்கு பழங்காலத்தில் இருந்த சூழ்நிலை இல்லாததாலும், நாகரிகம், கல்வி முறை மாறுபாடு, நமது மருத்துவக் கலையின் அமைப்பு போன்ற பல ஏதுக்களால் தற்காலத்தில் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இவ்விடர்கள் இம்மருத்துவர்களின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிப்பதாக இருக்கின்றன. முடிந்தவரையில் நாகரிக போக்குக்குத் தக்கவும் அறிவியலலைகளின் வளர்ச்சிக்குத்தக்கவும் நாட்டு மருத்துவங்களும் மாற்றியமைக்கப்படுகின்றன. இவ்வாறு செய்வதில் நன்மை தீமைகள் கலந்தே உள்ளனவாயினும் இதைத் தவிர்க்க முடியாத நிலை ஏற்படுகின்றது. இன்றைய அறிவியலுலகு ஆய்வகத்தின் திட்டமாக்கப்பட்ட கருத்துக்களையே ஏற்பதாய் இருக்கிறது. நாட்டு மருத்துவத்தில் பல பொருட்கள் இவ்வாறு செய்யப்படுவதற்கு இயலாதனவையாகும். அனேகமாய் அளவைப்படி அறிவால் தீர்மானிக்கப்படும் கருத்துக்களே மிகுதியாயும் நாட்டு மருத்துவங்களில் காணப்படுகின்றன. நாட்டு மருத்துவ முறைகளை நவீனப்படுத்துவதில் அறிஞரிடையே கருத்து வேறுபாடுகள் நிறைய உண்டு. எனினும் முடிந்தவரை மருத்துவக் கலைகளை பெருக்கிப் புதிதாக்கிக் கொள்ளுவதிலும் எந்தவகை அறிவியல் கருத்தும் ஏற்றுக்கொள்ளக்கூடியதானால் அவைகளைப் புகுத்திக் கொள்ளுவதிலும் தவறில்லை என்றே கொள்ள வேண்டும். இதை ஒப்புக்கொள்ள பரந்த நோக்கு தேவை. யான் எனதென்ற அகந்தை நீக்கி ஞாலத்தின் மக்களனைவரும் ஓரினம் என்ற நோக்கிலும் எந்த மருத்து வரானாலும் பிணியுற்றவரின் நலிவகற்றுதலும் மற்றோருக்கு நற்சுகவாழ்வு நீடிக்கச் செய்வதுமே தமது கடன் என எண்ணவேண்டும்.

நாட்டு மருத்துவங்களில் தாவர, தாது, சீவப் பொருட்களும் வைப்புப் பொருட்களும் மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன. இப்பொருட்களில் கோளகப்படாணம், சாத்திரபேதி போன்றன நூலளவில் காணப்படுகிறதேயன்றி உண்மையாகக் காணக்கிடைப்பதில்லை. இன்னும் சில பொருட்கள் மருந்து செய்ய தேவைப்பட்டபோது கிடைக்காதனவாயும், சில இருந்தும் வழக்கற்றுப் போனவையாயும் இருக்கின்றன. வைப்பு மருந்துகள் அவைகளின் செய்முறைக் கடினத்தன்மையால் யாராலும் செய்யப்படாது விடப்பட்டும் சிலரால் செய்யப்பட்டவிடத்து சரிவர முடியாமலும் இருப்பது காணலாம்.

கடின நோய்களைத் தீர்க்கக்கூடிய மருந்துகள் பலவற்றால் ஏராளமான மருந்துப் பொருட்கள் சேர்க்க வேண்டியுள்ளது. அத்தனை பொருட்களும் கிடைப்பது கடினமானதொன்றாகும். இவ்வாறு கிடைப்பினும் அவற்றுக்காகும் நாட்செலவு, பணச்செலவு, சிரமம் ஆகியவை அதிகம்.

நோய்களுக்கான மருந்துகளில் ஏழு நோய்களுக்கான பொது மருந்தும் அதன் உட்பிரிவுகளுக்கான சிறப்பு மருந்துகளும் கூறப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் செய்து வைத்திருப்பது முடியாததொன்று. எனவே பொது மருந்துகள் மட்டும் முன்னமே முடித்து வைத்திருந்தும் சிறப்பு மருந்துகள் அவ்வப்போது பிணியாளி வந்தபோது அவரின் பிணிக்குத் தக்க செய்து கொடுக்கப்படவும் வேண்டியுள்ளது. இதனால் மருத்துவர் மருத்துவத்தோடு மருந்து செய்வதிலும் கவனம் செலுத்திக் கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

தற்காலத்தில் வணிக வழியாக மருந்துப் பொருட்களில் மாற்றுப் பொருள் கலப்பும் போலிக்கலப்பும் மிக அதிகமாயுள்ளது.

புனுகு, ஜவ்வாது, கோரோசனை, குங்குமப்பூ, அம்பர் போன்ற விலையுயர்ந்த பொருட்கள் யாவும் கலப்படம் செய்யப்படுகின்றன. அரிசித் திப்பிலியில் அனேகமாய் யானைத்திப்பிலியும், ஏலரிசி போன்றவைகளில் காட்டுஏலம், சத்தெடுத்த ஏலரிசி போன்றவையும் மாற்றுப் பொருளாக ஆகின்றன. பலவேளைகளில் மிளகில் அந்திமந்தாரைவிதை, பப்பாளி விதை போன்றவையும் கடுகில் பேய்க்கடுகு அல்லது பிரமதண்டி விதைகளும் இதுபோல் இன்னும் பல

போலிப்பொருட்கள் கலக்கப்படுகின்றன. அனேகமான பொருட்களில் தரமற்றவைகள் நிரம்பவும் காணப்படுகின்றன. இவ்வாறான நிலைகளால் உண்டாக்கப்படும் மருந்து குறைந்த குணமுள்ளதாகவோ குணமற்றதாகவோ சிலவேளை தீக்குணங்களுள்ளதாகவோ ஆகிவிடுகின்றன. இவையன்றி, பொன், முத்து, பவளம் போன்ற பல மருந்துகள் முன்னிலும் பன்மடங்கு விலை கூடிவிட்டன.

ஒரே பொருளுக்கு வெவ்வேறிடங்களில் வெவ்வேறு பெயர்கள் வழக்கில் உள்ளன. பரங்கிப்பட்டை குமரி மாவட்டத்தில் சீனப்பாவு எனப்படுகிறது. இதன்றி சில பொருட்களுக்கு புதியதான பெயர்கள் சூட்டப்பட்டு வழங்கப்படுகின்றன. மனமுருக்கி அல்லது பால்பெருக்கி தற்காலம் சில இடங்களில் 'பிடில் இலைச் செடி' என்று வழங்கப்படுகின்றது. சாணிப்பூண்டு அல்லது கிணற்றடிப்பூண்டை சில இடங்களில் காந்திப் பூண்டு என்கின்றனர். போஸ்தக்காய் சில இடங்களில் கஷாயப்பட்டை எனப்படுகிறது. புதிதான மருந்துகள் சிலவும் நாட்டு மருந்தில் கலந்துள்ளன. சிங்கோனாப் பட்டை. சுரப்பட்டை என்ற பெயரில் வழங்கப்படுகிறது. இதன்றி கிளிசரின், சோடா பைகார்ப், மக்னீசியம் சல்பேட் போன்ற வேறு பல புதுப்பொருட்கள் சிலரால் கையாளப்படுகின்றன. நறுவிலாஞ்சிக்குடம், இருவேலி, கடுக்காவாலி, சனிஞாயிறு போன்றவை சில இடங்களிலுள்ள மருத்துவர்களால் மட்டுமே கையாளப்படுகின்றன. இன்றும் சில வேளைகளில் ஒருபெயர் பல பொருட்களைக் குறிப்பதாக உள்ளது. பிரம்மி தமிழ்நாட்டில் நீர் பிரம்மியையும் வடநாட்டில் வல்லாரையையும் குறிக்கிறது. காயப்பச்சிலை என்பது தொழுகண்ணி, அரிவாள் மனைப்பூண்டு, நீர்மேல் நெருப்பு போன்ற பல மூலிகைகளைக் குறிக்கிறது. ஒரு சரக்கு பலவிதங்களில் உள்ளதும் அவைகளில் சிறப்பான வகை கிடைக்காததும் ஏனைய தரங்குறைந்த வகை கலக்கப்படுவதும் நிறைய மருந்துகளில் காணலாம். இவையாவும் தரப்படுத்தி தனிப்பெயரால் அல்லது வேதியல், தாவர நூற் பெயர்களால் கூறப்படும் மருந்துப் பண்பியல் - நூற்களும் போதுமானதாய் இன்னும் கிடைக்கவில்லை.

நூற்களில் கூறப்படுகின்ற பலபொருட்கள் பொருளே இன்னதென்று அறியக் கூடாதனவாய் உள்ளன. வெண்சாரை, கருநெல்லி போன்றவற்றுக்கு அவரவர் தம் மனப்படி பொருள் கொள்ளுகின்றார். பிண்டம் என்பது சிசு என்று சிலரால் கொள்ளப்படுகிறது. அது உண்மையில் பூநீறு விளையுமிடத்திலுள்ள அண்டக்கல்லே என்பர் சிலர், கங்கை நீர், பனிநீர் போன்றவைகளும் இவ்வாறே மாறிப் பொருள் கொள்ளப்படுகின்றன. இரசத்தின் வகைகளாகக் கூறப்படுகின்றவை காணக்கிடைக்காத நிலையில் உள்ளன.

முப்பூ போன்ற மருந்துகளும் பரம்பரையாகப் பலரால் செய்யப்படும் வர்மத்தைலங்களும் வேறுபல உயர் மருந்துகளும் இதுவரை பலரால் மறைபொருளாகவே வைக்கப்பட்டு வருகின்றன. பல மருந்துகள் செய்முறையில் பரிபாஷையால் மறைத்துக் கூறப்பட்டுள்ளன. இவைகளால் பல சிறந்த மருந்துகள் மக்கள் அனைவருக்கும் கிடைக்க முடியாமற் போய் விடுகிறது.

இந்நாளைய மருத்துவரை முன்புள்ளவரின் இலக்கணப்படி அமைக்க முடிவதில்லை. மருந்து செய்யவும், மருந்தைக் கொடுக்கவும் நாளும் திதியும் பார்த்துக் கொடுக்கவும் கூடுமானதாய் இல்லை. மருத்துவர் சோதிடம், பஞ்சபட்சி, சரநூல் போன்ற பல கலைகளைத் தெரிந்தவராய் இருத்தல் அவசியம் என்பது தற்கால நடைமுறைக்குக் கடினம். இன்று பல மருத்துவர் மேனாட்டு மருத்துவர்போல நடக்க முயலுகின்றனர். இதனால் அவர்கள் மருந்து செய்கலையை முற்றுமாக கைவிடுகின்ற நிலை ஏற்படுகிறது. தற்காலத்தவரால் மருந்துகளைத் தேடி காடுமலையெல்லாம் போக முடிவதில்லை. பண்டைக்காலத்தில் மருத்துவர் தாமே பல மூலிகைகளைத் தேடிச்சென்று விதிப்படி அவற்றைப் பறித்துப் பயன்படுத்தினர். தற்போது மருந்து செய்யும் நிறுவனங்களினாலும் பிறராலும் செய்யப்படுகின்ற மருந்துகளைப் பயன்படுத்தும் நிலையே பெரிதும் உள்ளது. அன்றியும் மருத்துவரில் பலர் தமது செயலைச் சேவையாகச் செய்யாது அதைத் தொழிலாக மாற்றிக் கொண்டு விட்டனர். இதற்கு தற்கால நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக அமைகின்றன.

நாட்டு மருத்துவத்தில் முக்கியமாகப் பயன்படுத்தப்படும் கஞ்சா, அபினி, வீரம், வெள்ளைப்படாணம், மான் கொம்பு, மயிலிறகு, கஸ்தூரி போன்றவைகள் அவை பெறப்படும் வழியாலும் பயன்படுத்தும் வழியாலும் உண்டாக்கும் இழப்புகளைக் கொண்டு தடை செய்யப்படுகின்றன. இன்னும் சில பொருட்கள் இறக்குமதி, அன்னியச் செலாவணிச் சிக்கல்களால் இறக்குமதி குறைத்து கிடைப்பதரிதாகின்றன. உலாந்தாலிங்கம், காசூல் கடுக்காய் போன்றவை இவ்வகையாகும்.

துருசு, வீரம் போன்றவை முன்னர் கிடைத்தனபோல அல்லாமல் தற்காலம் இரசாயன நிறுவனங்களால் செய்யப்பட்டுக் கிடைக்கின்றன. பழங்காலத்தில் கிடைத்தவைகளும் இவ்வாறு ரசாயன முறைகளால் செய்யப்படுபவையும் தன்மையிலும் குணத்திலும் வேறுபடுவதால் முன்னர் அதற்குக் கூறப்பட்ட குணங்கள் மாறுபடுகின்றன. காடிக்காரம், பால் துத்தம் போன்றவற்றிற்குப் பதிலாக வேறு பொருட்கள் பயன்படுத்தப் படுகின்றன.

இவ்வாறு பல பொருட்கள் தேவையின் மிகுதியாலும் இயற்கையாய் கிடைப்பது குறைந்து வருவதாலும் மாறுபடுத்தப்பட்டு பயன்படுத்தப் படுகின்றன.

நாட்டு மருந்துகளின் தத்துவங்கள் இன்றைய அறிவியல் கருத்துக்களால் விளங்கக் கூடாமலும் சில புரிந்து கொள்ள முடியாமலும் இருக்கின்றன. அடிப்படைத் தத்துவங்களில் பல அனுமானத்தாலும் ஆகமத்தாலும் மட்டுமே கொள்ளப்படுகின்றன. காண்டலால் நிறுவப்படுகின்றவை மட்டுமே கொள்ளக் கூடியதாய் இருந்தால் பல கருத்துக்களைத் தவறெனக் கூறவும் இடமுண்டாகிறது. பல கருத்துக்களுக்கு ஏன் எதற்கென்ற விளக்கம் முன்னவர்களால் கொடுக்கப்படவில்லை. இவை விவரிக்கின், நிறைய உள்ளதை உணரலாம்.

தற்கால கல்வி நிலையும் கற்பிப்போர் நிலையும் முற்காலத்து நடைமுறைக்குப் புறம்பானது. இதனாலும் நாட்டு மருந்துகளுக்கு பல தடைகள் உண்டாகின்றன. முன்னர் செய்முறை கைமுறை பாகங்களாலும் அனுபவ முறையிலுமே கல்வி இருந்துள்ளது. தற்காலம் அவை பல பிரிவுகளால் வகுக்கப்பட்டு பாடங்களாக ஆக்கப்பட்டுள்ளன. இவற்றில்

செய்முறைகள் குறைந்துவிடும் வாய்ப்பு ஏற்படுகிறது. பல மருத்துவர்கள் தாம் பெற்ற அனுபவத்தையும் தாங்கள் வழிமுறையாய் கையாளும் முறைகளையும் மற்றவர்களுக்கு தெரிவிக்க மறுக்கின்றனர். மருத்துவக்கல்வியில் மருத்துவங்களிலுள்ள கற்பம், வர்மம், உயர் மருந்துகளான கட்டுவகை அறுவை முறைகள் போன்ற அனைத்தையும் அறிந்தவர்களும் குறைந்து வருகின்றனர்.

நாட்டு மருத்துவங்களில் காணும் மருந்து முறைகள் எண்ண முடியாத அளவில் நிறையக் காணப்படுகின்றன. இவைகளில் விருப்பமானதையே அவரவர் செய்து பயன்படுத்துகின்றனர். அனைத்து மருந்து முறைகளையும் ஒருவர் தெரிந்து வைத்திருப்பதென்பது முடியாத செயலாகும்.

தற்காலம் முன்போலன்றி நவீன மருத்துவக் கருவிகளும் ஆய்வகங்களும் நிறைய ஏற்பட்டுள்ளதால் அவைகள் நோயைக் கணிக்கவும் மருத்துவம் செய்யவும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறான முறையில் செய்யப்படும் நோய்கணிப்பிற்கும் நாட்டு மருந்திலுள்ள மருந்து குணத்துக்கும் தொடர்பற்று விடுகிறது.

தோடம், கணம் போன்ற பல நோய்களை நவீன மருத்துவத்தில் திட்டமான கணிப்பிற்குள் கொண்டு வருவதும் கடினம். முன்னோர்கள் செய்தது போல நாடியை அறிந்து நோயைக் கணிப்பது கூடுமானதாக இல்லை. உணவு முறைகளும் பழக்க வழக்கங்களும் தொழில்களும் இருப்பிட அமைதியும் மனித உடலின் வன்மையும் மாறுபட்டு வருவதால் மருந்துகளில் சில பயனற்றும் சில வேறு குறி குணங்களைக் காட்டவும் செய்கின்றன. சில மருந்துகள் நூலில் சொல்லிய அளவில் கொடுக்கப்பட்டால் போதுமானதாக இல்லாமல் இருப்பதும் சில அந்த அளவுகளில் பல தீக்குணங்களை உண்டுபண்ணுவதையும் காணலாம்.

நாட்டு மருத்துவத்தில் கூறப்பட்டுள்ள அறுவை மருத்துவமுறைகள், அறுவைக் கருவிகள், குடோரியூன்றல் போன்றவை வழக்கிழந்து விட்டன. முற்காலத்தில் கண்ணிலேயே பலவித அறுவைச் சிகிச்சைகள் செய்துள்ளதும் போர்க்களத்தில் தைத்தல், பிறபொருள் நீக்கம் போன்ற பல அறுவைத் தொழில்

செய்துள்ளதும் சான்றுகள் வாயிலாகவே அறிகிறோம். என்பு முறிவைக் கட்டுதல் கூட ஒரு சிலரிடமே நடைமுறையில் இருந்து வருகிறது. அட்டை விடுவது காலப் போக்கில் மறைந்து வருகிறது. அறுவைக் கருவிகள் பற்றிய விளக்கம் மட்டும் காணப்படுகிறதேயன்றி அவைகள் வழக்கில் இல்லாமற் போய்விட்டன. கொத்திக்கட்டல், கீறிக்கட்டல் போன்ற குடோரிச் சிகிச்சை முறையும் மறைந்து விட்டது.

பழங்கால மருத்துவக் கலைகள் வாய்மொழியாகவே வந்துள்ளதன்றி அனைத்தும் எழுதப்படவில்லை. மிகப் பிற்காலத்தில்தான் ஏடுகளில் எழுதும் முறை ஏற்பட்டுள்ளது. இவ்வாறானதால் பல பொருட்கள் எழுதப்படாமலேயே விடப்பட்டுள்ளது. நாட்டு மருத்துவத்தில் உடற்கூற்றியல், அறுவை விதிகளும் முறைகளும், மகப்பேறு மருத்துவம் போன்ற பலவற்றுக்கு நூற்களில்லாமை இதனாலாகும். இதன்றி எழுதப்பட்ட பல சுவடிகளும் பிற்காலத்தில் கவனிப்பாரற்றும் இயற்கையாலும் அழிந்துள்ளன. இவ்வாறு பாண்டவைப்பு, குடோரிநூல் ஆகியவை கிடைக்காமல் போய்விட்டன. சில நூற்களின் பொருள் தெரிய அதே சிறிய வேறு நூல் தேவைப்படுமிடத்தில் அவை கிடைக்காமல் போகின்றன. இவ்வாறான தொடர்பு நூல் அழிவினால் பல மருந்துகளின் செய்முறைகளில் பல மாறுபட்ட கருத்து வேறுபாடுகள் உண்டு. இன்னும் சில நூற்களில் பின்வந்தவர்கள் எழுதிச் சேர்த்த பல பிற்சேர்க்கைகள் காணப்படுகின்றனவாதலால் பல ஐயங்கள் எழுகின்றன.

மருத்துவப் பாடமனைத்தும் முன்முறைப்படி பாடல்களாக எழுதப்பட்டதால் அவற்றில் விவரித்தும் விளக்கியும் சொல்லுகின்ற நிலைமை இல்லாமல் விளக்க வேண்டிய நிலை காணுகிறது. பல பாடல்களில் சுருக்கமாகக் கூறப்படும் பொருட்கள் விவரிக்கப்பட வேண்டியுள்ளன. கண்ணில் நாக படலத்தை விலசங்கொண்டு உரி என்றும், கண்காசத் தைக் குத்திப்போக்கு என்றும் கூறப்படுகிறதேயன்றி அதை எவ்வாறு செய்யவேண்டும் என்று முறையாகக் கூறப்படவில்லை. மேலும் பாடல்களின் பரிபாஷைகளும் இலக்கிய முறைகளும் கையாளப்பட்டுள்ளதால் அவைகளின் பொருளை அறிவது கடினமாகிறது. தேரையருடைய யமகத்தில் ஒரு வெண்பாவில் அடங்கும் பொருள் மிக

அதிகமாகும். இதை விருத்தியுரையின்றி அறிவது கூடாத தொன்றாகும். இக்காலத்திலும் பழைய பாடல்களை மேற்கோளாகக் காட்டி அவற்றுக்குப் பொருள் எழுதும் நிலையே உள்ளதன்றி இக்கால முறைப்படி பாடமாக எழுதும் நிலை இன்னும் உருவாகவில்லை.

இன்றைய மக்களின் மனநிலை மருந்துகளைப் பொறுமையோடு பயன்படுத்தும் வகையில் இல்லை. நோயானால் இரண்டு மாத்திரை அல்லது ஒரு ஊசி மருந்து எடுத்துக்கொண்டு அப்போதைக்கு குணமாக்கிக் கொள்ள வேண்டுமென்ற அவசர நிலையே அதிகமானவரிடம் காணப்படுகிறதன்றி கியாழம் தயாரித்து உண்பது, பற்று, வேது போன்றவைகளைச் செய்து கொள்ளுவது ஆகியவைகளுக்கு பொறுமையற்றவராய்க் காணப்படுகின்றனர். சிலர் பற்று போடுவதையும் தைலங்கள் தடவிக் கொள்ளுவதையும் கூட வெறுக்கின்றனர். இன்னும் சிலர் மருந்துகளின் வாடையைக் கூட தாங்காதவராய் உள்ளனர்.

சில நாட்டு மருத்துவர்கள் மக்களை ஏமாற்றும் வழிமுறைகளைக் கையாளுகின்றனர். சிலர் ரொக்கம் எடுப்பதாகவும், மாந்திரீகம் செய்வதாகவும், பிசாசு ஓட்டுவதாகவும் கூறி பிணியாளிகளைப் பயப்படும்படி செய்து பணம் சேர்க்க நினைக்கின்றனர். சிலர் மருத்துவமுறைகளுக்கு அப்பாற்பட்ட விளம்பரங்கள் செய்கின்றனர். சிலர் தான் மட்டுமே முழுதுமாக அறிந்தவன் என்ற மமதை கொண்டவராய் இருக்கின்றனர். மருத்துவமே அறியாத சிலர் தலையீடும் மருத்துவக் கலையைக் கெடுப்பதாய் உள்ளது.

அனைத்துக்கும் மேலாக பழங்கால நூற்கள் கிடைக்காமையும் கிடைத்தாலும் வாங்கிப் பயன்படுத்தாமையும் காணப்படுகிறது. இன்றைய நிலைகளுக்கேற்ப பல புதிது புதிதான நூற்கள் எழுதி வெளிவரும் வாய்ப்பு குறைவாக உள்ளது. அறுதியிட்ட மருத்துவக் கலை நூற்கள் பல இயல்களிலும் தெளிவாக வெளிவரும் நிலை உருவாக வேண்டும். மருந்துப் பொருட்களினதும் மருந்துகளினதும் தர நிர்ணய விதிமுறைகளும், முழுமையான மருந்துகளின் செய்முறை அலகுகளுமடங்கிய நூற்களும் இல்லாத நிலை மாற வேண்டும்.

நாட்டு மருத்துவமுறைகள் ஆய்வு செய்யப்படும்போது நவீன முறைகள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டாலும், தெரியாதவற்றையும் ஆய்வுக்குட்படுத்த முடியாதவற்றையும் தவறு என்று ஒதுக்கி விடாமல் அவற்றினைப் பின்வருபவர் ஆய்வு செய்து முடிவு செய்ய விட்டுவிடல் நன்று.

மருந்துகள் செய்யுங்காலும் மருத்துவத்தின் பிற நிலைகளிலும் மேற்கண்ட தடங்கல்களையும் இடர்ப்பாடுகளையும் மனதிற்கொண்டு முடியுமானவரை அவைகளை நீக்கிக்கொள்ள முனைவதும் முடியாதவிடத்து மாற்றியமைத்துக் கொள்ளுவதும் மருத்துவக்கலை வளர்ச்சியடைய வழி வகுக்கும் என்று நம்புவதற்கு இடமுண்டு.

# சரக்குக் கூட்டுப்பெயர் விளக்கம்

| | |
|---|---|
| திரிகடுகு | - சுக்கு, மிளகு, திப்பிலி |
| திரிகந்தம் | - அகில், சந்தனம், தேவதாரு |
| திரிசாதம் | - ஏலம், இலவங்கம், இலவங்கபத்திரி |
| திரிசுகந்தம் | - சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு |
| திரிபத்திரி | - இலவங்கப்பத்திரி, சாதிபத்திரி, தாளிசபத்திரி |
| திரிபலை | - கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் |
| திரிமஞ்சள் | - மஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள் |
| திரிலவங்கம் | - கிராம்பு, அகில், சண்பகப்பூ |
| திரிலவங்கப்பூ | - கிராம்பு, சண்பகப்பூ, சிறுநாகப்பூ |
| திரிமூலம் | - சித்திரமூலம், நறுக்குமூலம், திப்பிலிமூலம் |
| திரிநிம்பம் | - வேம்பு, கருவேம்பு, நிலவேம்பு |
| முச்சீரகம் | - சீரகம், கருஞ்சீரகம், காட்டுச்சீரகம் |
| முக்கூட்டுநெய் | - எள்நெய், முத்துநெய், பசுநெய் |
| குளவிந்தம் | - மஞ்சள், கரிமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், பூசு மஞ்சள் |
| சதுர்சாரம் | - ஏலம், இலவங்கம், இலவங்கப்பட்டை, சிறு நாகப்பூ |
| சதுர்சாரம் | - உமிரிச்சாரம், நவச்சாரம், சத்திச்சாரம், சங்குச்சாரம் |
| சவர்ப்பலம் | - சீதேவியான் செங்கழுநீர், செங்குவளை, நெய்தல் |
| மூலச்சதுர்வர்க்கம் | - பிரண்டைக் கிழங்கு, சாரணைக்கிழங்கு, மால் கிழங்கு, புளிநரளைக் கிழங்கு |
| ஐங்காயம் | - சுக்கு, மிளகு, கடுகு, பூண்டு, காயம். |
| (வேறு) | - காயம், கடுகு, ஓமம், வெந்தயம், வெள்ளுள்ளி |
| ஐங்கோலம் | - கருஞ்சீரகம், கடுகு, ஓமம், நிம்பவித்து, இலுப்பைவித்து |

பஞ்சகாயம் - திரிபலை (3), காயம் வெங்காயம்

பஞ்சகாரகம் - காயம், கடுகு, வெள்ளுள்ளி, வெங்காயம், வெந்தயம்.

பஞ்சகவியம் - பால், வெண்ணெய், தயிர், கோமயம், சாணம்

பஞ்சகாரம் - சவுக்காரம், சீனிக்காரம், பொரிகாரம், படிகாரம், பிரிகாரம்

பஞ்சர்சம் - இரசம், வீரம், பூரம், இலிங்கம், இரசசெந்தூரம்

பஞ்சகாரம் - சவகசாரம், எவட்சாரம், சத்திச்சாரம், கதலிச்சாரம், உவர்ச்சாரம்

பஞ்சதிரவியம் - ஏலம், சீரகம், கிராம்பு, சண்பகம், கோட்டம்

பஞ்சபூதச் சரக்கு - தாரம், வீரம், கௌரி, வெள்ளை, இலிங்கம்

பஞ்சபேதி - அன்னபேதி, சாத்திரபேதி, மாங்கிசபேதி, பரிசபேதி

பஞ்சமூலம் - சுக்கு, பேரரத்தை, சித்திரமூலம், செவ்வியம், திப்பிலிமூலம்

பஞ்சமூலி - வெள்ளெருக்கு, மாவிலங்கை, புனல் முருங்கை, சித்திரமூலம், வேலிப்பருத்தி

பஞ்சமோகினி - கோரோசனை, குங்குமப்பூ, கஸ்தூரி, புனுகு, பச்சைக் கர்ப்பூரம்

பஞ்சலவணம் - இந்துப்பு, வெடியுப்பு வளையலுப்பு, கல்லுப்பு, கறியுப்பு

(வேறு) - அமுரிஉப்பு, கறியுப்பு, கந்தவுப்பு, கல்லுப்பு, உழலையுப்பு

பஞ்சகோலம் - சுக்கு, மிளகு, செவ்வியம், கொடிவேலி, கடுகு

பஞ்சவர்க்கம் - சிறுநாகப்பூ, ஏலம், இலவங்கம், சாதிக்காய், கர்ப்பூரம்

பஞ்சமதி - சாதிக்காய், சாதிபத்திரி, ரோகன், ஓமம், வசுவாசி

| | | |
|---|---|---|
| பஞ்சவாசம் | - | ஏலம், இலவங்கம், சிறுநாகப்பூ, சாதிக்காய், கர்ப்பூரம் |
| பஞ்சவேம்பு | - | நல்வேம்பு, மலைவேம்பு, நிலவேம்பு, கறிவேம்பு, சிவனார்வேம்பு |
| பஞ்சலோபம் | - | திரிகடுகு (3), கடுகு, செவ்வியம் |
| பஞ்சபாஷாணம் | - | லிங்கம், தாரம், வெள்ளை, கௌரி, |
| பஞ்சாலைக்காரம் | - | பூவரசப்பட்டைச் சாம்பல், நீர் முள்ளிச்சாம்பல், நாயுருவிச் சாம்பல், புளியன் புறணிச்சாம்பல், கீரைத்தண்டுச் சாம்பல் |
| மென்பொடிப் | | |
| பஞ்சாங்கம் | - | திரிகடுகு (3) இலவங்கம், தாளிசப்பத்திரி |
| ஆறரிசி | - | வெட்பாலையரிசி, விளாவரிசி, கார்போகரிசி, ஓமவரிசி, உருளையரிசி, அருணாவரிசி |
| சத்தவருக்கம் | - | நன்னாரி, நெல்லி, விலாமிச்சை, வெட்டிவேர் இலவங்கப்பத்திரி, முந்திரிப் பழம், பேரீச்சம்பழம் |
| அட்டலோகம் | - | பொன், வெள்ளி, நிமிளை, இரும்பு, காந்தம், துத்தநாகம், மண்டூரம், தாமிரம் |
| அட்டசூரணம் | | |
| அட்டவருக்கம் | - | திரிகடுகு (3), ஓமம், இந்துப்பு, சீரகம், கருஞ்சீரகம், காயம். |
| தசபாஷணாம் | - | பரங்கிப்பாஷாணம், கௌரிபாஷாணம், சவ்வீர பாஷாணம், தொட்டிப்பாஷாணம், வெள்ளைப்பாஷாணம் ,<br>கீமுறுகற்பாடாணம், குதிரைப்பல் பாடாணம், மூங்கிற்பாஷாணம், சங்குப் பாஷாணம், நாகபாஷாணம். |
| தசமூலம் | - | சிற்றாமுட்டி, பேராமுட்டி, முன்னை, பெருவாகை .<br>வெங்குமிழி, குவளை, புன்னை, நெருஞ்சி, கண்டங்கத்திரி, சிறுவழுதலை. |

தசமூலம் (வேறு) - கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிற்றாமல்லி, பேராமல்லி, நெருஞ்சில், கூவிளை, பெருங்குமிழ், தழுதாழை, பாதிரி, வாகை.

பதினெண்மூலம் - சித்திரமூலம், எருக்கு, நெருஞ்சி, முருங்கை முள்ளடி, மாவிலிங்கம், சங்கங்குப்பி, தழுதாழை, குவளை, கண்டங்கத்திரி, பாதிரி, வில்வம், இராசவேசுமுத்து, இருமல்லி, தூதுவளை, சுக்கு, சித்தாமல்லி, கரந்தை

★★★★★★★★★

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை வெளியிட்ட நூற்பட்டியல்

| வ. எண். | நூல்களின் பெயர் |
|---|---|
| 1. | குணபாடம் மூலிகை |
| 2. | குணபாடம் தாது சீவவகுப்பு II - III |
| 3. | நோய்களுக்குச் சித்த பரிகாரம் பாகம் 1 |
| 4. | நோய்களுக்குச் சித்த பரிகாரம் பாகம் 2 |
| 5. | நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டு பாகம் 1 |
| 6. | நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டு பாகம் 2 |
| 7. | சித்த மருத்துவம் சிறப்பு |
| 8. | மகளிர் மருத்துவம் |
| 9. | நோயில்லா நெறி |
| 10. | சட்டம் சார்ந்த மருத்துவமும் நஞ்சு மருத்துவமும் |
| 11. | சித்த வைத்தியத் திரட்டு |
| 12. | சூல் மருத்துவம் |
| 13. | சித்தர் அறுவை மருத்துவம் |
| 14. | குழந்தை மருத்துவம் |
| 15. | பதார்த்த குண சிந்தாமணி |
| 16. | வர்மத் தொகுப்பு |
| 17. | நஞ்சு முறிவு நூல் |
| 18. | உடல் தத்துவம் |
| 19. | பிள்ளைப்பிணி மருத்துவம் - பாகம் 1 |
| 20. | பிள்ளைப்பிணி மருத்துவம் - பாகம் 2 |
| 21. | சித்த மருத்துவம் (பொது) |
| 22. | யூகி வைத்திய சிந்தாமணி |
| 23. | தேரையர் யமக வெண்பா பாகம் 1 |
| 24. | கடுக்காய் வல்லாரையின் தனி மாண்பு |
| 25. | நல்வாழ்விற்கு ஓர் நல் மருத்துவம் |
| 26. | பிணி உடற் பொருள் தேர்வக ஆய்வு முறைகள் |
| 27. | தோற்றக் கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும் |
| 28. | சித்த மருத்துவாங்கச் சுருக்கம் |
| 29. | உடற் கூறு |
| 30. | புலிப்பாணி வைத்தியம் |

| | |
|---|---|
| 31. | சரக்கு சுத்தி செய்முறைகள் |
| 32. | நோயும் மருந்தும் |
| 33. | அரிய சித்த மருத்துவ முறைகள் |
| 34. | மூலிகை விளக்கம் |
| 35. | சித்த மருத்துவ அகராதி - பாகம் 2 |
| 36. | சித்த மருத்துவ அகராதி - பாகம் 3 |
| 37. | அகத்தியர் வைத்திய சிந்தாமணி |
| 38. | அகத்தியர் இரண நூல் |
| 39. | சித்த மருத்துவத்தில் வர்ம பரிகாரமும் சிகிச்சை முறைகளும் |
| 40. | சித்த மருத்துவ சிந்தாமணி |
| 41. | வைத்திய மூலிகை விரிவகராதி |
| 42. | மருந்து செய் முறைகள் |
| 43. | அகத்தியர் மருத்துவம் |
| 44. | சித்த மருந்தாக்கியல் விதிகளும் செய்முறைகளும் |
| 45. | அனுபவ வைத்தியம் கைமுறை |
| 46. | பல சாத்திரம் |
| 47. | புலிப்பாணி கற்ப தீட்சை |
| 48. | தேரையர் வைத்திய காவியம் |
| 49. | ஆவியளிக்கும் அமுத முறை சுருக்கம் பாகம் 1 |
| 50. | ஆவியளிக்கும் அமுத முறை சுருக்கம் பாகம் 2 |
| 51. | தேரையர் வைத்திய காவியம் |
| 52. | கோரக்கர் மருத்துவம் |
| | **Siddha Medical Books in English** |
| 1. | A Compendium of Siddha Doctrine |
| 2. | Introduction to Siddha Medicine |
| 3. | Simple Home Remedies |
| 4. | Hospital of Siddha Pharmacopoeia in Indian Medicine |
| 5. | History of Siddha Medicine |
| 6. | Siddhars Science of Longevity and Kalpa Medicine |
| 7. | Siddha Principle of Social & Preventive Medicine |
| 8. | Siddha Materia Medica - Part II |
| 9. | **Tamil to English Dictionary of Medicine Chemistry, Botany & allied Science** |
| | T.V. Sambasivam Pillai Part I |

| | |
|---|---|
| | T.V. Sambasivam Pillai Part II |
| | T.V. Sambasivam Pillai Part Vol. II Part I |
| | T.V. Sambasivam Pillai Part Vol. II Part II |
| | T.V. Sambasivam Pillai Part Vol. III |
| | T.V. Sambasivam Pillai Part Vol. IV Part I |
| | T.V. Sambasivam Pillai Part Vol. IV Part II |
| | T.V. Sambasivam Pillai Part Vol. V |
| 10. | Theraiyar Maha Karisal |
| 11. | Anuboga Vaidya Navaneetham - Part I |
| 11. | Anuboga Vaidya Navaneetham - Part II |
| 13. | Pathartha Guna Cintamani |
| 14. | Special Medicines in Siddha |
| 15. | Principles of Diagnosis in Siddha |
| 16. | Siddha Medicine General (Part I) |
| 17. | Line of Treatment in Siddha (Part I) |
| 18. | Siddha Toxicology |

## ஆயுர்வேத நூல்கள் (தமிழில்)

| | |
|---|---|
| 1. | அஷ்டாங்க சாரி சங்கிரகம் |
| 2. | சரக சம்ஹிதை பாகம் 1 |
| 3. | சரக சம்ஹிதை பாகம் 2 |
| 4. | சரக சம்ஹிதை பாகம் 3 |
| 5. | சுசுருத சம்ஹிதை பாகம் 1 |
| 6. | சுசுருத சம்ஹிதை பாகம் 2 |
| 7. | ஆயுர்வேத மருத்துவ வரலாறு |
| 8. | பதார்த்த விஞ்ஞானம் |

## நூல்கள் கிடைக்கும் இடங்கள்

இயக்குநர்,
இந்திய மருத்துவம் மற்றும்
ஓமியோபதித் துறை,
அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி 044 - 26143500 /
26216244 / 26281563
Ext - 3675

முதல்வர்,
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை
திருநெல்வேலி 627 002.
தொலைபேசி 0462 - 2572736 /
2572737 / 2572738